# இலக்கியம்

விசேட மலர் 2013




பதிப்பாசிரியர்

**எஸ். முரளிதரன்**

உதவி பதிப்பாசிரியர் மற்றும் பக்க வடிவமைப்பு

**எஸ். சிவநேசன்**

# இலக்கியம்

# இலக்கியம்

அரச இலக்கிய விழா – விசேட மலர் 2013

பதிப்பாசிரியர்
**எஸ். முரளிதரன்**

உதவி பதிப்பாசிரியர் மற்றும் பக்க வடிவமைப்பு
**எஸ். சிவநேசன்**

வெளியீடு
**கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு**

அனுசரணை
**கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**அரச இலக்கிய குழு**

இத்தொகுதியிலுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள்
அனைத்துக்கும் அவ்வவ் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாகும்.
எவ்வகையிலும் அவை கலாசார அமைச்சினதோ.
கலாசார திணைக்களத்தினதோ,
அரச இலக்கிய குழுவினதோ பொறுப்பாகமாட்டா.


தலைப்பு : இலக்கியம்: அரச இலக்கிய விழா நிமித்தம் வெளியிடப்படும் விசேட மலர் 2013

பிரதம ஆசிரியர் : எஸ். முரளிதரன்

ஆலோசகர் : ஜெயசுமண திசாநாயக்க

வெளியீடு : கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு
8ம் மாடி, 'செத்சிறிபாய', பத்தரமுல்ல.

அனுசரணை : கலாசார அலுவல்கள் திணைக்களம்
அரச இலக்கிய குழு

அச்சு : பாஸ்ட் அட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
165, தேவானம்பியதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2682223

## இலங்கை கலைக்கழகம்

பேராசிரியர் காலோ பொன்சேகா - தலைவர்

பேராசிரியர் சமந்த ஹேரத் - நிறைவேற்று உறுப்பினர்

கலாநிதி ரோஹண வீரசிங்க - நிறைவேற்று உறுப்பினர்

கலாநிதி சோமரத்ன திஸாநாயக - நிறைவேற்று உறுப்பினர்

விஸ்வநாதன் சதானந்தம் - நிறைவேற்று உறுப்பினர்

கமல் பீ. திஸாநாயக - செயலாளர்

## அரச இலக்கிய குழு

ஜயசுமன திஸாநாயக - தலைவர்

வண. பேரா. கோன்கஸ்தன்ன ஆனந்த நாஹிமி - உறுப்பினர்

பேராசிரியர் திஸ்ஸ காரியவசம் - உறுப்பினர்

பேராசிரியர் சமந்த ஹேரத் - உறுப்பினர்

கலாநிதி பிரனீத் அபேசுன்தர - உறுப்பினர்

பர்சி ஜயமான்ன - உறுப்பினர்

திம்பிரியாகம பண்டார - உறுப்பினர்

பேராசிரியர் அநுர விக்கிரமசிங்க - உறுப்பினர்

பேராசிரியர் குசுமா கருணாரத்ன - உறுப்பினர்

கலாநிதி சந்திரா அமரசேகர - உறுப்பினர்

சுகத் வடகெதர - உறுப்பினர்

எஸ். முரளிதரன் - உறுப்பினர்

பேராசிரியர் ரத்னசிரி அரங்கல - உறுப்பினர்

## கலாசார திணைக்கள அலுவலர்கள்

ஏ.எம்.ஏ. பண்டார

செயலாளர் – அரச இலக்கிய குழு

மானெல் திஸாநாயக்க

இணைச் செயலாளர் – அரச இலக்கிய குழு

எஸ். சிவநேசன்

ஆவண உதவியாளர்

# நுழைவாயில்

இலங்கை மக்களின் நுண்கலைகள், நிகழ்த்து கலைகள், படைப்பிலக்கியங்கள், கட்புல மற்றும் செவிப்புல கலைகளை சரிவர இனங்கண்டு அவற்றின் தரத்தினை மேம்படுத்தி தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் அங்கீகாரத்தை ஏற்படுத்த அரசுக்கு அனுசரணையயாக 1952யிலிருந்து இலங்கைக் கலைக்கழகம் செயற்படுகின்றது.

அக்கலைக் கழகம் 5 உப குழுக்களை கொண்டதாக கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தோடு செயற்பட்டு வருகின்றது.அவ்வாறான ஓர் உபகுழுவான அரச இலக்கிய குழு அமைச்சின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தோடு கைகோர்த்து நடாத்தும் அரச இலக்கிய விழாவின் போது 'சாஹித்திய' எனும் மும்மொழிகளில் தரமான ஆக்கங்களைக் கொண்டு சிறப்பு மலரை வெளியிடுவது ஒரு மரபு.

அந்த மரபில் ஒரு சிறந்த மாற்றம் 2011 இலக்கிய விழாவின் போது நிகழ்ந்தது. அது தான் இந்த 'இலக்கியம்' எனும் தனியே தமிழில் வெளிவரும் விசேட மலர். 2013ம் ஆண்டும் இது சாத்தியமாவது குறித்து பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். தனியாக தமிழில் மலர் அமையவேண்டும் என்பதற்காக குரல் கொடுத்த செயற்படுத்த பேருதவி செய்த இலக்கிய குழுவின் தலைவர் திரு. ஜயசுமண திசாநாயக்கவை தமிழ் சமூகம் சார்பாக நன்றியறிதலோடு இவ்வருடமும் போற்றுகிறேன்.

மிகக் குறுங்கால அவகாசமே கிடைத்த வேளையில் தேவையான ஆக்கங்களை தந்துதவிய புலமையாளர்களுக்கும் அவற்றைப் பெறுவதற்கும் செயல்வடிவம் கொடுப்பதற்கும் தனது பல்வேறு கடமை நெருக்கடிகளுக்கு மத்தியில் உதவிய கலாசார திணைக்களத்தின் எஸ். சிவநேசனுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர் வருங்காலத்தில் இம்முயற்சி மேலும் வலுப்பட உங்கள் அரவணைப்பை வேண்டுகிறேன்.

**சு. முரளிதரன்**
பிரதம ஆசிரியர்

## பொருளடக்கம்

01. தமிழாய்வு வளர்ச்சியில் தனிநாயக அடிகளாரின் முன்னோடி முயற்சிகள் 11

பேராசிரியர் செ. யோகராசா

02. இலங்கைத் தமிழ் இலக்கியங்களில் தேசியச் சிந்தனைகள் 23

பேராசிரியர் துரை. மனோகரன்

03. ஈழத்து இலக்கிய வரலாற்றில் இரகுவம்மிசம் 35

கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன்

04. இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் சிறுவர் பாடல்களின் செல்நெறி 55

ச. லலீசன்

05. பின் காலனிய இலக்கியம் ரஞ்சித் தர்மகீர்த்தியின் 'அஹஸ பொலவ லங்வெலா' சிங்கள இளைஞர் நாவலை முன்னிறுத்தி... 64

மேமன்கவி

06. புவியீர்ப்புக்கு வெளியே புறப்பட்டுப் போன பொருள் சாருமதியின் அறியப்படாத மூங்கில் சோலை: ஒரு விமர்சனக் குறிப்பு 72

பெருமாள் சரவணகுமார்

07. தேன் மொழி அல்லது இளம் பரிதி 82

இரா. சடகோபன்

08. ஈழத்து இலக்கிய செல்நெறியில் முற்போக்குச் சிறுகதைகளின் சுவடுகள் 89

லெனின் மதிவானம்

09. ஈழத்து முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் செந்தமிழ்ச் சொற்கள் 102

அல்ஹாஜ் எம்.எம். உவைஸ் எம்.ஏ.

10. சிங்கள நாவல் இலக்கியத்தில் வரலாற்றுப் பதிவுகள் - ஓர் அறிமுகம் 121

எஸ். முரளிதரன்

11. இரவிற்குள் ஓர் பாணம் - பங்களாதேஷ் சிறுகதை 127

மூலம்: சப்னம் நதீயா - தமிழாக்கம்: எம். ஹிருஷாலினி

12. எமது வரலாறு எழுதுமுறைக்கான புதிய பார்வை 140

ந. இரவீந்திரன்

13. சி. பன்னீர்செல்வத்தின் கவிதைகளில் ஜென்ம பூமியும் ஜீவித பூமியும் 148

சாரல்நாடன்

# தமிழாய்வு வளர்ச்சியில் தனிநாயக அடிகளாரின் முன்னோடி முயற்சிகள்



**பேராசிரியர் செ. யோகராசா**

1.தனிநாயக அடிகளாரது ஆய்வுமுயற்சிகளின் அடிப்படை அம்சம், தமிழ்மொழியினதும் தமிழ் இலக்கியங்களினதும் தொன்மையையும் சிறப்புகளையும் முக்கியத்துவத்தையும் சர்வதேசமயப்படுத்துவதாகும். இன்னொரு விதமாகக்கூறின், உலக அறிஞர்களுக்கு அவற்றைத் தெரியப்படுத்தி அத்திசையில் அவர்களை ஆற்றுப்படுத்துவதாகும். அடிகளார் பின்வருமாறு கூறியிருப்பது இதற்குச் சான்றாகின்றது.[1]

'இந்திய வரலாற்று நூல்களை நோக்குமின். Discovery of India என்றும் History of Indian என்றும் History of Indian literature என்றும் பலபல புனைந்து வெளிவரும் ஏடுகளை நோக்குமின், மாக்ஸ்முல்லர், வின்றர்னிம்ஸ் போன்றவர் முதலாய் வடமொழி இலக்கியத்தின் பெருமையையே விரித்துக்கூறுவர். அவ்விந்திய இலக்கியங்களின் வரலாற்றிலே, தமிழ் இலக்கியத்தைப் பற்றியோ திராவிட நாகரிகத்தைப் பற்றியோ ஒரு சொல்லேனும்

ஒரு குறிப்பேனும் ஒரு கருத்தேனும் காணக்கிடையா. இந்தியப்பண்பு, இந்திய நாகரிகம், இந்தியக் கலைகள் இந்திய மொழிகள் என அவர் பொழிவனவெல்லாம் திராவிடப் பண்பு, திராவிட நாகரிகம், திராவிடக் கலைகள் திராவிட மொழிகள், இவற்றையே அடிப்படையாகக் கொண்டவை. ஆயினும் பல்லாண்டுகளாக நடுவுநிலை கடந்தோர் பலர் இவ்வுண்மையை மறைத்தும் திரித்தும் ஒழித்தும் நூல்கள் யாத்தமையின், இன்று இவ்வுண்மையை எடுத்துக்கூறுவது தானும் மக்கள் மனதில் ஐயம் விளைவிப்பதாக இருக்கின்றது. அங்ஙனம் எடுத்துக்கூறுவதற்குத் தமிழராகிய நாமும் நமது இந்திய மொழிகளிலேதானும் நம் தமிழைப் பற்றிய உண்மைகளை இதுகாணும் கூறினோம் அல்லேம்'.. இன்று இத்தமிழைக் கோயிலில் நிகழும் தமிழ் விழா, உலகில் தமிழ் நாட்டின் பெருமையையும் தமிழ்மொழியின் பெருமையையும் நிலை நாட்டும் புதியதோர் இயக்கத்தை உண்டாக்கவல்லதாயின், 'நன்மை பல பயக்கும் நன்றொண்டைச் செய்தோமாவோம்.'

மேற்கூறிய நோக்குடன் வெளிப்பட்ட அன்னாரது ஆய்வு முயற்சிகள் தமிழாராய்ச்சி வளர்ச்சிப் பின்புலத்தில் முன்னோடி முயற்சிகளாக அமைந்துள்ளன. இவற்றை விளக்குவதே இவ் ஆய்வின் நோக்கமாகின்றது.

2.1. மேற்கூறிய அடிப்படையில் நோக்கும்போது முக்கியமான முதல் முழு ஆய்வு முயற்சியாகத் திகழ்வது Nature in Ancient Tamil Poetry (1952) என்பதாகும். இவ் ஆய்விற்கான அவசியம் பற்றி அடிகளார் பின்வருமாறு கூறியிருப்பது கவனத்திற்குரிய விடயமாகின்றது.[2]

'புதிய உலகின் விடிவு காலமாகக் கருதப்படும், கீப்ரு தீர்க்கத்தரிசிகள், கிரேக்க தத்துவ அறிஞர்கள், சீன அறிஞர் கன்பூசியஸ் போன்றவர்கள் வாழ்ந்த கி.மு. ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகளிலேயே தமிழ் இலக்கியம் உலக உண்மைகளைப் புதிய நோக்கில் வெளிப்படுத்தின. இந்தக் காலக்கட்டம், தொல்காப்பியர் காலமும், இரண்டாவது சங்க காலமும் ஆகும். இத்தகைய சிறப்புக்குரிய தமிழின் பெருமை உலகளாவிய நிலையிலுள்ள அறிஞர்கள் கண்ணில் படவில்லை. அந்த முயற்சியை யாரும் மேற்கொள்ளவில்லை. சமஸ்கிருதத்திற்கு ஒரு மாக்ஸ்முல்லர் (Max Muller) கிடைத்தது போல் தமிழுக்கு ஒருவர் கிடைக்கவில்லை. மேலை நாட்டு அறிஞர்கள் 'தென்னிந்தியாவில் ஒரு பழமையான மொழி உள்ளது.' என்று மட்டுமே

சுட்டுகின்றனர். இந்தியா என்றால், கங்கை, ஜமுனா சமவெளி பரப்புகளை மட்டுமே கருதுகின்றனர். இந்தியப் பண்பினை அறிவதற்குச் சமஸ்கிருத மொழிப் பயிற்சி மட்டும் போதும் என்று கருதுகின்றனர். மேலை நாடுகளில் வெளிவந்துள்ள இந்திய இலக்கிய வரலாற்று நூல்களிலும், தமிழுக்குத் தகுந்த இடமும், புகழும் அளிக்கப்படவில்லை. எனவே, இக்குறைகளைப் போக்கும் வகையில், தமிழின் சிறப்புக்களைச் சான்றாதாரங்களுடன் அறிஞர்கள் ஒத்துக்கொள்ளும் வகையில் எடுத்துச் சொல்ல வேண்டியது முக்கியமான தேவையாகக் கருதப்படுகிறது. அதனால் அத்தலைப்பைத் தேர்ந்தெடுப்பதற்கான கட்டாயம் ஏற்பட்டது'

மேற்கூறிய ஆய்வு நூலில் சங்க இலக்கிய நூல்களில் இயற்கை இடம்பெற்றிருக்கும் முறைமை, தமிழருக்கு இயற்கையுடனிருந்துவந்துள்ள உறவு, சங்கக் கவிதை மரபுகளில் இயற்கை பெறும் முக்கியத்துவம், (இயற்கையை தொடர்பு) பழங்காலத் தமிழரது வரலாற்றுப்பின்புலத்தில் நீதிநெறிகள் பெற்றிருக்குமிடம் முதலியன ஆராயப்பட்டுள்ளன.

அறிவியல் பார்வைக்கு முதன்மை கொடுக்காத அன்றைய ஆய்வுச்சூழலின் பின்னணியில் நோக்கும்போது அறிவியல் நோக்குடன் வெளிப்பட்ட முதல் ஆய்வாகவும் இது அமைந்துள்ளனது. ஆய்வுத்தரத்தினை பேண முற்பட்ட முதல் ஆய்வாகவும் காணப்படுகின்றது. தர நோக்கினை ஒப்பியல் அணுகுமுறைக்கு முதன்மை அளித்த முதல் ஆய்வாகவும் மிளிர்கின்றது.

2.2. பழந்தமிழ் இலக்கியங்கள் தொடர்பாக உருவான ஆய்வுக் கட்டுரைகளும் பலவுள்ளன. இவற்றிற்கு எடுத்துக்காட்டாக, 'சங்க இலக்கியச் சிறப்பியல்புகள்' என்ற ஆய்வுக் கட்டுரை சங்க இலக்கியத்தினூடாக வெளிப்படும் என்றே உலகம், பரந்த மனப்பான்மை, நீதிக்கருத்துக்கள், கல்வியறிவு, இலக்கியச் சுவை, இயற்கை நாட்டம், உள்ளதை உள்ளவாறே கூறுதல் முதலான விடயங்களை ஒப்பியல் நோக்குடன் வெளிப்படுத்துகின்றது.

'Tolkappiyam, the Earliest Record, என்ற ஆய்வுக்கட்டுரையில், தொல்காப்பியம், நிலவியல் சமூகவியல், மானுடவியல், பண்பாடு, சூழலியல், உளவியல் ஆகியவற்றின் கருவூலமாக திகழ்வது பற்றி அலசப்படுகின்றது. மேலும் மெய்பாட்டியியல் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் இன்றைய உளவியல்

கோட்பாட்டிற்குப் பொருந்தும் வண்ணம் காணப்படுகின்றது என்பது இவ்வாய்வில் நிறுவப்பட்டுள்ளது.

2.3. பழந்தமிழ்க்கல்வி முறைமை பற்றிய ஆய்வுகளில், உலகக்கல்வி முறைமை (கிரேக்கம், இலத்தீன்), இந்தியக்கல்விமுறை ஆகியனவற்றின் பின்புலத்தில் பழந்தமிழ்க் கல்வி முறையின் சிறப்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன. பழந்தமிழ் இலக்கியம் பற்றி இவ்ஆய்வுகள் கல்வியல் துறை சார்ந்திருப்பதும், இவ்விதத்தில் முன்னோடி முயற்சிகள் என்பதும் கவனத்திற்குரியன.

மேலும் பழந்தமிழ்ச் சமூகத்தின் கல்வியாளர்கள் என்ற விதத்தில் பாணர்கள், புலவர்கள் ஆகியோரின் முக்கியத்துவமும், சமண, பௌத்த கல்வி முறைமை பற்றி ஆய்வுகளும் இன்றுவரை முக்கிய கவனிப்பைப் பெற்றுள்ளன.

மேற்கூறிய விடயங்கள் Educational Thought in Ancient Tamil Literature என்ற முனைவர் பட்ட ஆய்வில் விரிவாகப் பேசப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தொடர்பில் வீ.அரசு பின்வருமாறு கூறியிருப்பதும் கவனத்திற்குரியது:[3]

'உலகில் உருவான தொல் பழம் நாகரிகங்களுக்கும் அவற்றில் உருப்பெற்ற கல்வி முறைக்குமான வரலாற்று ஒப்பாய்வு மிக அவசியமாகும். பேராசிரியர் இந்நூலில் உள்ள முதற்கட்டுரையில் (பழந்தமிழ் இலக்கியமும் பண்டைய இந்தியக் கல்வியும்', க-ர்) இதனைத் தொடக்கி விவரித்துள்ளார்.'

மேற்கூறிய கருத்தினை இன்னொரு இடத்திலும் இன்னொரு விதமாக வீ.அரசு வற்புறுத்தியுள்ளார். அது வருமாறு:[4]

'கல்வி ஒப்பாய்வியல் (Comparative Education) ஐரோப்பியப் பின்புலத்தில் முன்னெடுக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டு, நமது கல்வி ஒப்பாய்வியலை பேராசிரியர் நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்.'

2.4. பழந்தமிழ் இலக்கியங்களில் வெளிப்படுகின்ற தத்துவம் தொடர்பான ஆய்வுகளும் கவனத்திற்குரியவை. இத்தகைய ஆய்வுக்கட்டுரைகளுள்

ஒன்றுதான் 'சங்க இலக்கியத்தில் காணப்படும் தத்துவ வளர்ச்சி' என்ற கட்டுரையில், உலகத் தத்துவ உருவாக்கப் பின்புலத்தில் பழந்தமிழ் இலக்கியங்களில், குறிப்பாக, மணிமேகலை, திருக்குறள் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள தத்துவக் கருத்துக்கள் ஆழமான பார்வைக்குட்பட்டுள்ளன் மேலைத்தேய திருக்குறள் ஆய்வாளர்களின் கருத்துக்களும் ஒப்பிட்டுப் பேசப்பட்டுள்ளன. இவ்விதத்தில், A seminal Period of Indian Thoughts and Roman Stoicism ஆகிய கட்டுரைகளும் கவனத்தை ஈர்ப்பவை.

இவ்வாறே மனிதநேயம் பற்றியும் பல கட்டுரைகளில் அடிகளார் ஆய்வு செய்துள்ளார். இவ்விதத்தில் Aspects of Tamil Humanism, Tamil Humanism – The Classical Period, The Humanistic Ideals, The Humanistic scene ஆகிய கட்டுரைகள் முக்கியமானவை முன்னோடி முயற்சிகள் எனத்தக்கவை.

தத்துவம் தொடர்பான மேற்குறிப்பிட்ட ஆய்வுகளும் முன்னோடி முயற்சிகளேயாம்.

2.5. தமிழர் பண்பாடு தொடர்பான ஆய்வுகளின் தொடக்கமாகவும் அடிகளாரின் கட்டுரைகள் அமைந்துள்ளன. இவ்விதங்களில் Tamil Cultural Influences in South East Asia, 'தமிழ்ப்பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும்' ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவற்றுள், முதற்கட்டுரையில் உலகிலும் இந்தியாவிலும் பண்பாட்டின் தோற்றம் பற்றிக்குறிப்பிடுவதோடு அப்பின்னணியில் தமிழர் பண்பாட்டின் சிறப்புப் பற்றியும், தென் ஆசிய நாடுகள் பலவற்றில் (உ – ம்: கம்போடியா, தாய்லாந்து, யாவா, யப்பான்) அவை பரவியிருப்பது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

2.6. ஊடகவியல் சார்ந்த ஆய்வுகளுக்கும் அடிகளின் ஆய்வுகள் பங்களிப்பை நல்கியுள்ளன. Tamil Manu scripts in European Libraries என்ற ஆய்வு இவ் விதத்தில் மிக முக்கியமானது போர்த்துக்கல், வத்திக்கான் ஆகிய நாடுகளின் நூலகங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நூல்கள் பற்றிய தகவல்களை முதன் முதலாக வெளிப்படுத்தும் இவ்ஆய்வு, ஊடாக அச்சு ஊடக வரலாற்று உருவாக்கம் தொடர்பான தேடலுக்குப் பல தகவல்களை வழங்குகின்றது. இவ்விதத்தில் அடிகளாரின் இத்தகைய முயற்சியும் முன்னோடி முயற்சியேயாகும்.

தமிழில் முதன் முதல் அச்சேறிய நூல்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளே. இங்கு கவனத்திற்குட்படுகின்றன. இக்கட்டுரைகள் அடிகளாரது ஆய்வுத் தேடல்களுள் மிகுந்த முக்கியத்துவமுடையவை. ஏனெனில், ஐரோப்பாவின் பல நாடுகளிற்கும் சென்று மிகுந்த அர்ப்பணிப்புடன் தேடிய பின்பே அச்சேறிய ஆரம்ப கால நூல்கள் கிடைத்திருக்கின்றன. இவ்விதத்தில் First Book Printed in Tamil Manscripts in European Libraries முதலியன முக்கியமான ஆய்வுகளாகின்றன. இவற்றினூடே முதன்முதல் தமிழில் வெளியான நான்கு நூல்கள் பற்றி-Cartilha (1554), Doctrina Christamar linguna Malaur Tamil (தம்பிரான் வணக்கம் 1577), Doctrina Christam (கிரீசித்தியானி வணக்கம், 1574) Flos Sanotorum (திருத் தொண்டர் திருமலர் 1586) - முதன் முதலாகவும் ஆதார பூர்வமாகவும் அறிய முடிந்துள்ளது. (இவற்றுள் தம்பிரான் வணக்கம் என்ற தமிழ் நூலே இந்தியாவில் முதன் முதலாக அச்சில் வெளிவந்ததென்கிறார் அடிகளார்). தமிழில் அச்சு ஊடக வரலாறு பற்றி எழுதுமொருவர் அதன் ஆரம்பகால வரலாறு பற்றியும், அச்சு ஊடக வரவு இந்தியாவிலே கல்வியிலும் சமூதாயத்திலும் ஏற்படுத்திய மாற்றங்கள் பற்றியும் அறிவதற்கு இத்தகைய நூல்கள் வரவும் வரலாறும் பேருதவி புரிகின்றன. ஆக, இவ்விதத்தில் ஊடகவியல் துறையிலும் முன்னோடி முயற்சி ஈடுபட்டவராக அடிகளாரை இனங்காண முடிகின்றது.

2.7. அடிகளாரின் ஆய்வுகளுள் சில உளவியல் துறை ஆய்வுகளோடும் தொடர்புபட்டுள்ளமை கவனத்திற்குரியது. உதாரணமாக, The Humanistic Ideals என்ற கட்டுரையில், (உளவியலில் முக்கியம் பெறும்) 'ஆளுமை' சார்ந்த விடயங்கள் பழந்தமிழ் இலக்கிய நூல்களிலும், தமிழ்ச்சமூகத்திலும் வெளிப்பட்டிருப்பது பற்றி ஆராயப்படுகின்றது. இங்கும் ஒப்பியல் பார்வை இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

2.8. அகராதியியல் இன்று தனித்துறை என்று கூறுமளவிற்கு தமிழ் ஆய்வு வளர்ச்சியில் முக்கியம் பெற்று வருகின்றது. அவ்வாறெனில் இத்துறை சார்ந்த ஆய்வு வரலாற்றின் ஆரம்பகால முன்னோடி என்று கூறக்கூடிய விதத்தில் இத்துறைசார்ந்த முக்கியமானதொரு ஆய்வு அடிகளரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதுதான் An tae De Proenea's Tamil – Portuguese Dictionary – 1679 என்ற தலைப்பிலான ஆய்வாகின்றது.

2.9. மேற்கூறியவற்றைத் தொகுத்து நோக்கும்போது, அடிகளார் ஆய்வுகள் தமிழாய்வு (உ - ம்: இலக்கியம், இலக்கணம்) என்ற நிலையிலிருந்து தமிழியலாய்வு (உ - ம்: பண்பாடு, தத்துவம், உளவியல், கல்வி, சமூகவியல், ஊடகம்) என்ற திசைநோக்கிச் சென்றிருப்பது புலப்படுகின்றது. ஆக, இவ்விதத்திலும் அதாவது தமிழியல் முன்னோடி – என்ற விதத்திலும் அடிகளார் தமிழ் ஆய்வு வளர்ச்சியில் முக்கிய இடம் பெறுகின்றார் என்பது அழுத்தியுரைக்கப்பட வேண்டியதாகும்!

3.1. மேற்கூறிய, அடிகளாரின் அனைத்து ஆய்வு முயற்சிகளும் ஆரம்பத்தில் கூறியவாறு உலக நாடுகளிலுள்ள பிறமொழி ஆய்வாளர்களை மனங்கொண்டு நிகழ்த்தப்பட்டன என்பதே எமது கவனத்திற்குரியது. இவ்விதத்தில் – அடிகளாரின் முயற்சிகள் தமிழியல் ஆய்வுகளைச் செய்வதுடன் மட்டும் நின்றுவிடவில்லை என்பதும் சமூகச் செயற்பாட்டாளராகவும் வெளிப்படுகின்றார் என்பதும் முக்கிய கவனிப்பிற்குரியன. ஆதலின் அவைபற்றி நோக்குவதும் அவசியமாகும்.

3.2. தனிநாயக அடிகளார் சில போது ‘தமிழ்த்தூது தனி நாயக அடிகளார்’ என்று அழைக்கப்படுவதுண்டு. இதற்கான முக்கிய காரணம் தமிழ்மொழியின், தமிழ் இலக்கியத்தின்சிறப்புகளை உலக, நாடுகளுக்கு அறிமுகம் செய்யும் நோக்குடன் உலக நாடுகள் பலவற்றிற்கும் வெவ்வேறு காலப்பகுதிகளில் ஐந்து தடவைகளளவிலே இடம்பெற்ற உலகப் பயணங்களின்போது பின்வரும் நாடுகளுக்கு அடிகளார் சென்றிருக்கின்றார்: அமெரிக்கா, அல்ஜீரியா ஆர்சென்ரைனா, ஆபிரிக்கா, ஆஸ்திரியா, இங்கிலாந்து, இத்தாலிக்கா இந்தோனேசியா, ஈரான், உகண்டா, உருருவே, எகிப்து, எதியோப்பியா கம்போடியா, கிறீஸ், கென்யா, சப்பான் சிலி, சிங்கப்பூர், சீனா, செர்மனி, செனகல், சோவியத்நாடு, சுவிஸ், சூடான், சுவீடன், தாய்லாந்து, துருக்கி, நார்வே, பர்மா, பிரான்சு, பின்லந்து, பிறேசில், பெல்சியம், போர்த்துக்கல், மலேசியா மொறிசியஸ், லெபனான், வியட்னாம், ஸ்பெயின் ஜமேய்க்கா முதலியன. இத்தகைய நாடுகள் சிலவற்றிலே இந்தியவியல் தமிழியல் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவும் அடிகளார் காரணமாக இருந்துள்ளார்.

3.3: தமிழ்த்தூது ஒருபுறமாக, அடிகளார் வெளியிட்ட Tamil Culture என்ற ஆய்வு இதழின் வரவும் கவனிப்பிற்குரியது.

அதாவது, உலகப் பயணங்களின்போது பிறநாட்டுத் தமிழாய்வளர்கள் தமிழ் ஆராய்ச்சி இதழொன்றை வெளியிட வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டமையாலும் அத்தகைய ஆய்வாளர்களை ஒருங்கிணைப்பதற்காவும் ஒருமுகப் படுத்துவதற்காகவும் வளப்படுத்துவதற்காகவும் Tamil Culture என்ற ஆங்கில இதழை அடிகளார் வெளியிட்டு (1952) 15 ஆண்டுகள் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. இவ் ஆய்வுகளில் பல்வேறு சாடுகளைச் சார்ந்த 129 அறிஞர்களால் 276 கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

Tamil Culture நின்றுபோன பின்னர் Journal of Tamil Studies என்ற இன்னொரு ஆய்விதழ் அடிகளாரின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டமை (1969) குறிப்பிடத்தக்கது. ஈராண்டுகள் மட்டும் வெளிவந்த நான்கு ஆய்விதழ்களிலும் மொத்தம் 31 கட்டுரைகள் வெளிவந்துள்ளன, எழுதியோருள் 24 பேர் வெளிநாட்டினராவர்

3.4. உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் ஏற்பட வழிவகுத்த அடிகளாரின் முயற்சியினால் இன்றுவரை ஐந்து மாநாடுகள் நடைபெற்றுள்ளன. இவற்றுள் நான்கு மாநாடுகள் அடிகளாரின் காலத்தில் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மலேசியாவில் நடைபெற்ற முதல் மாநாடு பற்றி ஆர்.கி. ஆஷர் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பது இவ்வேளை நினைவிற்கு வருகின்றது:5

'உலகத்தமிழ் மாநாடுகள் இனி எங்ஙனம் நடைபெற வேண்டும் என்பதற்கு மலேசிய மாநாட்டின் மூலம் அடிகளார் வழிகாட்டி விட்டார் பாட்டைபோட்டு விட்டார்' பேராசிரியர் வி.செல்வநாயகம் இவ்வாறு கூறியிருப்பதும் கவனத்திற்குரியதே: '.............இம்மாநாட்டின் வாயிலாகத் தமிழ் தொடர்பான ஆராய்ச்சிகள் நடத்தவும் அறிஞர்கள் அடிக்கடி சந்தித்து ஆய்வு நடத்தவும் சரியான வழியைச் சமைத்துவிட்டார் அடிகளார். இதுவே அவரது உயர் பணியின் உச்சமாகும்'

அன்றைய யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு. வித்தியானந்தன் தனது தலைமையுரையிலே பின்வருமாறு பேசியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது:[6]

'இதுவரை அடிகள் நடாத்திய நான்கு மாநாடுகள் மூலம் அவர் சாதித்தவை யாவை? (i). தமிழ் மொழி – இலக்கியம் பற்றியெல்லாம் ஆராயும் உரிமை, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்க்கு மட்டுமே உரியதென்ற தப்பான எண்ணத்தைத் தவிடு பொடியாக்கினார். (ii). தமிழ் இலக்கணம், இலக்கியம் பற்றிய ஆராய்ச்சியே தமிழாராய்ச்சி என்ற தவறான கருத்தை மாற்றித் தமிழ் மக்களின் மொழியியல், வரலாறு, மானுடவியல், சமயம், தத்துவம், தொல்பொருள், பிறநாட்டார் தொடர்பு, தமிழர் பண்பாடு, கலைகள் என்பன போன்ற பல் துறைகளிலும், விரிந்து பரந்தது தமிழியல் ஆய்வு என்ற உண்மையை நிலை நாட்டினார். (iii). அடிகளாரின் முயற்சியால், தமிழ் மொழியியல், தொன்மை, இலக்கியத்தின் சிறப்பு, பண்பாட்டின் பெற்றி பற்றிய பல உண்மைகள் வெளியாயின. (iv) பிறநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ் ஒரு பாடமாக வைக்கப்பட்டுள்ளது. (v). பல்கலைப் பேராசிரியர்கள் தமிழ் ஆராய்ச்சியில் தலைப்பட்டுள்ளனர். (vi). ஒரு காலத்தில் மேலைப் பல்கலைக்கழகங்களில் தெய்வீக சமத்கிருதம் பற்றியும், இந்தோ ஆரிய மொழிகள் பற்றியுமே ஆய்வு நிகழ்த்தி வந்தனர். இன்றோ அந்நிலை அடியோடு மாறித் தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாடு, சமூகம் பற்றியெல்லாம் ஆய்வு கொள்ளும் நிலை உருவாகி வளர்ச்சி பெற்றுள்ளது. (vii). அப்போதெல்லாம் வணிகப் பெருக்கம், சமயப் பிரசாரம், அரசியல் செல்வாக்கிற்காகவுமே தமிழைக் கற்றனர் இப்போதோ, தமிழ் மொழயின் தகைமை, செழுமை அறியவும் ஆராய்ச்சிக்காகவுமே தமிழ் கற்கத் தலைப்பட்டுள்ளனர். (viii). மொழிகளில் சிறந்த, செழுமையான தமிழை அறியாது, இந்திய நாட்டின் இதயத்தை – தமிழ்த் திருநாட்டின் அடிப்படைப் பண்பினை – கலைகளை – அறியமுடியாதென உணர்ந்தே தமிழைப் பயிலச் செய்தார்.'

3.5.இவ்வாறே உலகத் தமிழாராய்ச்சி மன்ற உருவாக்கத்திலும் அடிகளாரின் பங்கு கணிசமானது. 1964ல் அடிகளாரது அயராத உழைப்பின் அறுவடையாக உருவான இம்மன்றம் 1964 இல் அனைத்துலகத் தமிழராய்ச்சி மன்றமாக பரிணமித்தது. உலகில் எவ்வெத் தமிழத் துறைகளில் ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றதோ அங்குள்ள நாடுகளிலுள்ள அறிஞர்களை ஒன்று சேர்ப்பதே இம் மன்றத்தின் முதனிலை நோக்கமாகியது. இம்மன்றம் தொடங்கிய நாள் முதல் தாம் மரணிக்கும்வரை அதன் செயலாளராகச் செயற்பட்டார் அடிகளார். (அடிகளாரின் மறைவின்பின் அம்மன்றச் செயற்பாடுகளில் தளர்ச்சி ஏற்பட்டதென்பது வேறுவிடயம்)

3.6. மாநாடுகளை நடத்தும் பொருட்டு மன்றம் உருவாக்கப்பட்டமை ஒருபுறமிருக்க,

மாநாடு காலம் தவிர்ந்த இடைக்காலங்களில் ஆய்வாளர்கள் சந்திக்கும் பொருட்டாக உலகத்தமிழராய்ச்சி நிறுவனம் (IITS) ஒன்றும் அடிகளாரால் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஆற்றிவரும் பன்முகப்பணிகளுள் வருடந்தோறும் நூல்கள் வெளியிடுவது முக்கியமானதெனலாம்.

4. இதுவரை கூறியவற்றைத் தொகுத்து நினைவுகூர்கின்றபோது தமிழாய்வு வளர்ச்சியில் அடிகளாரின் முன்னோடி முயற்சிகளாக, பின்வருவனவற்றை இனங்காணமுடிகின்றது:

- தமிழாய்வு என்பதனை தமிழாய்வு என்ற நிலையிலிருந்து தமிழியலாய்வு என்ற நிலையை அடையச்செய்தமை.
- அத்தகைய தமிழாய்வு சார்ந்த பல துறைகளிலும் (உ-ம்: சங்க இலக்கியம், கல்வி, பண்பாடு, தத்துவம்) முன்னோடியாகத் திகழ்ந்தமை.
- முதன்முதலாக, தமிழாய்வினை அறிவியல் முறையிலும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டும் அணுகியமை.
- ஒப்பியலாய்வு முறையை முதன்முதலாகத் திறன்பட மேற்கொண்டமை.
- ஆய்வாளராக மட்டுமன்றி பல விதங்களிலே சமூகச் செயற்பாட்டாளராகவும் விளங்கி உலக அறிஞர்கள் பலரை தமிழ்மொழி நோக்கியும் தமிழிலக்கியம் நோக்கியும் ஆற்றுப்படுத்தியமை: இவ்வழி ‘தனிநாயகம்’ ஆக இன்றுவரை விளங்குகின்றமை.

அடிக்குறிப்புக்கள்

1. தனிநாயக அடிகளார், (1952) தமிழ்த்தூது, தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, ப. 8.
2. Thaninayagam, Xavier,s (1963), Nature Poetry in Tamil, The Classical Period, Singapore, P.P. VII & VIII.
3. சேவியர் தனிநாயக அடிகள், பேராசிரியர், மொழியாக்கம் த.ம.ந.மனோகரன், (2009) பண்டைத் தமிழ்ச்சமூகத்தில் கல்வி, மாற்று, சென்னை, ப. 8
4. சேவியர் தனிநாயகம் அடிகள், பேராசிரியர், மே,கு.நூ.ப. 9

5. விமலானந்தம் மது.ச.பேராசிரியர், 1998 உலக அரங்கில் தமிழ், அனைத்துலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. மே.கோ, பக்.72 – 73

உசாத்துணை நூல்கள்

i) மூல நூல்கள்

தனிநாயக அடிகளார் (1952) தமிழ்த்தாது, தமிழ் இலக்கியக்கழகம், தூத்துக்குடி

Thani Nayagam, Fr.Xavier, (1960) Research in Tamil Studies: Retrospect & Prospect, தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும், தந்தைசெல்வா அறங்காவற்குழு, யாழ்ப்பாணம்

Thaninayagam, Xavier, & (1963), Nature in Tamil Classical Period, Singapore

தனிநாயக அடிகளார் (1963) ஒன்றே உலகம், பாரிநிலையம் சென்னை

1. தனிநாயக அடிகளார் (1968), அயல் நாடுகளில் தமிழ் (IITR), கோலாலம்பூர்
2. Collected papers of Tamil Nayagam Adigal (1995), International Institute of Tamil studies Madras
3. தனிநாயக அடிகளாரின் சொற்பொழிவுகள் (1999), உலகத்தமிழாராய்ச்சி மன்றம், சென்னை
4. சேவியர் தனிநாயகம் அடிகள், (2009) பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் கல்வி, மொழியாக்கம் ந.மனோகரன், மாற்று, சென்னை

ii) ஆய்விதழ்கள் - Tamil Culture

1. Ancient Tamil literature and the study of Ancient Indian Education,

   Vol.V.No.I.January 1956

12. Language Rights in Ceylon, 217, Vol. V No.3, July 1956
13. Reginal Nationalism in Twentieth Century Tamil Literature, 1 Vol.X.No.1, Jan-Mar 1963
14. Seminal Period of Indian Thought, 4, Vol.VI, No.1, January 1957
15. Seminal Period Indian Thought, 235,Vol No.3, July 1957
16. (Dr. R.P.) Sethu Pillai – An Appreciation, 248, Vol.VI.No.3 July 1957
17. Tamil Cultural influence in Southeast Asia, 203, Vol.IV No.3,July 1955
18. Tamil Culture – Its Past, Its Present and Its Future – with Special Reference to Ceylon, 341, Vol. IV, No.4 October 1955
19. Tamil Development and Research Council, 1, Vol.VII, No.1 Jan-Mar 1958
20. Tamil Manuscripts in European Libraries, 219, Vol.VII, Nos.3&4, ctober 1954
21. Tamils said it all with flowers, 164, Vol.II No.2 April 1953
22. This Journal of Academy, 1, Vol.IV No.1, January 1955
23. Vocabulary and Content of Tamil Primers and First Readers, 208, Vol. VIII No.3 July – Sept 1959

துணை நூல்கள்

- சுப்பிரமணிய அய்யர், ஏ.வி.(1959) தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, அமுத நிலையம் பிரைவேட்லிமிட், சென்னை.
- விமலானந்தம், மது,ச. பேராசிரியர் (1998) உலக அரங்கில் தமிழ். அனைத்துலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
- சண்முகதாஸ். ஆ. பேராசிரியர். (1998) இலங்கைப் பேராசிரியர்களின் தமிழ்ப்பணிகள், பூபாலசிங்கம் பதிப்பகம், கொழும்பு.
- இரபிசிங், ம.செ, முனைவர் (1999) தனிநாயகம் அடிகளாரின் ஆய்வுகள் உலகத்தமிழராய்ச்சி, நிறுவனம், சென்னை
- இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்த்திறனாய்வாளர்கள் (2005)
- ப – ர்: முனைவர் ப.மருதநாயகம் முனைவர் சிலம்பு நா.செல்வராசு காவ்யா.
- சிவத்தம்பி, கா, பேராசிரியர் (2010), ஈழத்தின் தமிழிலக்கியச் சுடர்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை

# இலங்கைத் தமிழ் இலக்கியங்களில் தேசியச் சிந்தனைகள்



பேராசிரியர் துரை. மனோகரன்

தமிழ்நாட்டினை அடுத்துத் தமிழர் அதிகம் வாழும் நாடாகவும், தமிழ்மொழி இலக்கியவளத்துடன் வளர்ந்துவந்துள்ள நாடாகவும் விளங்குவது இலங்கை. கி. பி. 14 ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையின் தமிழ் இலக்கிய வளரச்சி தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வந்திருக்கின்றது. கி. பி. 13 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தில் (ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்) இருந்து தொடர்ச்சியான தமிழ் இலக்கிய வரலாற்றை இந்நாடு கொண்டிருக்கின்றது. தமிழ் தனது செழுமை குன்றாமல் காலந்தோறும் இலங்கையில் வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது. இலங்கைத் தமிழர்களினது தாய்நாடு என்ற முறையில், இலங்கையில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் தேசியச் சிந்தனைகளையும் வெளிப்படுத்தி வந்திருக்கின்றன. யாழ்ப்பாண மன்னர் காலம் முதலாக இச்சிந்தனைகளின் வளர்ச்சியைக் காணமுடிகிறது. இக்கட்டுரை யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்

காலம் முதலாக இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் இலங்கைத் தமிழ் இலக்கியங்களில் தேசியச் சிந்தனைகள் இடம்பெற்றுள்ளவாற்றினை நோக்குகிறது.

இலங்கைத் தமிழ் இலக்கியங்களில் முதன்முதலில் தேசியச் சிந்தனைகளின் பரம்பல் யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தில் இருந்தே ஆரம்பம் பெறுகின்றது. தேசிய உணர்வினைத் தமது இலக்கியங்கள் வாயிலாக மக்கள் மனங்களில் பாய்ச்சும் முயற்சியை இலக்கியவாதிகள் மேற்கொண்டிருந்தனர் என்பதனை இது இனங்காட்டுகின்றது. யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தில் தோன்றிய நூல்களில், தணகைலாச புராணத்தில் இடம்பெறும் ஈழமண்டலச் சருக்கம், திருக்கரைசைப்புராணத்தில் இடம்பெறும் இலங்கைச் சருக்கம், கதிரைமலைப்பள்ளில் மூத்தபள்ளி இலங்கையின் வளத்தைக் கூறும் பகுதிகள் முதலானவை இலங்கை என்ற தேசிய உணர்வின் வெளிப்பாடுகளாக அமைந்தவையாகும்.

தக்ஷணகைலாசபுராணம் திருக்கோணேஸ்வரம் பற்றிய மிகப் பழைய தலபுராணமாக விளங்குகின்றது. சிங்கைச் செகராசசேகரனால் இந்நூல் பாடப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இந்நூலில் உள்ள ஏழு சருக்கங்களில் ஈழமண்டலச் சருக்கம், நூலாசிரியரின் தேசிய உணர்வினைப் புலப்படுத்துகின்றது.

இப்புராணத்தில் இடம்பெறும் ஈழமண்டலச் சருக்கத்தில் காணப்படும் 39 செய்யுட்களும் இலங்கையின் பெருமையைப் பாடுவனவாக அமைந்துள்ளன. இலங்கையின் இயற்கையழகு, இதன் சிறப்பு என்பன அழகிய முறையில் எடுத்தியம்பப்படுகின்றன. பொன்மலையெனப் பெயர் கொண்ட மேரு மலையின் முடிகளில் ஒன்றே ஈழநாடாக அமையப்பெற்றது. இவ் ஈழநாட்டில் ஒளிமிக்க பல்வகை இரத்தினங்களும் பரவிக்கிடப்பதால் அனைத்து வளங்களையும் தரும் நீர் வயல்களில் அமைதியாகப் பாய்வதால், இலங்கும் இயல்பு கொண்ட ஈழம் இலங்கையெனப் பெயர் கொண்டது என நூலாசிரியர் தெரிவிக்கிறார்.

*'அமைந்த பொன்மலை ஆதலின் அப்பெயர்*
*சமைத்த ஈழம் இதென்று தழீஇயதால்*
*இமைத்த மாமணி எங்கும் இலங்கலால்*
*உமைத்த நீர்வயல் ஊரும் இலங்கையே'*

என்பது அப்பாடல். இன்னொரு பாடலில், நாட்டின் பல இடங்களிலும் வாழைமரங்கள் கனிதருகின்றன. புரவலர்கள் புலவர்களுக்கு வெள்ளையானைகளைப் பரிசாக வழங்குகின்றனர். அதனால், புலவர்கள் தேவலோகத்தில் உள்ள கற்பகத்தை நாடாது, ஈழநாட்டினை நோக்கிவருகின்றனர். இத்தகைய பெருமை கொண்ட ஈழத்தில் இந்திரன் மலர்மாலையணிந்து உலவுகின்றான். அவனது வருகையால் அமுதத்தேன் எங்கும் பரந்து இனிமையூட்டுகின்றது. இத்தகைய சிறப்புகள் கொண்ட ஈழம் இந்திரனின் நாட்டைப் போல் சிறப்புற்று விளங்குகின்றது என்று கூறப்படுகின்றது. பிறிதொரு பாடலில், ஈழநாட்டிற்கு வந்த புலவர்கள் பெருமைமிகு இலங்கையையும் தேவலோகத்தையும் சீர்தூக்கிப் பகுத்து ஆராய்ந்தபோது, செழுமையில் சிறிது குறைந்தபோதிலும், மிகுந்திருந்த அளவிட முடியாத நவமணிகளாலும் பொன்னாலும் புகழாலும் உயர்வுற்றிருந்ததனைக் கண்டனர். தேன் நாட்டில் சாவாமருந்தாய் அமுதம் இருந்தாலும் .ஈழநாட்டின் புகழுக்கு அத்தேவர் நாடு ஈடுகொடுக்க இயலாது தோற்றுவிட்டது. என வியந்தனர் என்று குறிப்பிடப்படுகிறது. அந்த அழகிய பாடல் பின்வருமாறு அமைந்துள்ளது.

*'மறுகெலாம் அரம்பை வெள்ளை*
*வாரணம் புலவர் மல்கப்*
*பெறுதலால் கற்பகத்தில் பிறங்கலால்*
*நிறங் கொள் ஈழம்*
*உறுதலால் வாசவன் தார்*
*உலவலால் அமுதின் சாலை*
*துறுதலால் இலங்கை நவ*
*சுரேந்திர நாட தொக்கும்.'*

இலங்கையின் சிறப்பை எவ்வெவ் வகைகளால் குறிப்பிட முடியுமோ, அந்த அளவுக்கு அதனைப் பெருமைப்படுத்தியுள்ளார், நூலாசிரியர். இவற்றின் மூலம் நூலாசிரியரின் தேசியச் சிந்தனைகளை உணரமுடிகின்றது.

யாழ்ப்பாணத் தமிழ்மன்னர் காலத்தில் தோன்றிய இன்னொரு தலபுராணமான திருக்கரைசைப் புராணம் திருகோணமலைக்கு அருகில் மகாவலிகங்கைக்கரையில் அமைந்துள்ள கரைசை என்ற இடத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவபிரானைப் போற்றுவதாக விளங்குகிறது. இந்நூலின் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. நூலாசிரியர் உமாபதி சிவாசாரியாரின்

சீடராகவோ அல்லது அவரது பரம்பரையைச் சார்ந்த ஒருவராகவோ இருக்கக்கூடும் என அறிஞர் சிலர் கருதுவர். இந்நூல் இலங்கைச் சருக்கம், கங்கைச் சருக்கம், தாபனச் சருக்கம், பூசைச் சருக்கம் ஆகிய சருக்கங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. இலங்கைச் சருக்கம் நூலாசிரியரின் தேசியச் சிந்தனைகளைப் புலப்படுத்துகின்றது.

இலங்கையின் சிறப்புகளை நூலாசிரியர் அடுக்கிக் கொண்டுசெல்லும்போது, ஒரு பாடலில் பல்வேறு ஆரவாரங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அவற்றில் ஒருவகையாக ' வாயறாத் தமிழின் ஆர்ப்பும்' என்று குறிப்பிடுகிறார். உண்மையினின்றும் நீங்காத தமிழின் ஆரவாரமும் இலங்கையில் நிலவியது என்பதை அவ்வாறு கூறியுள்ளார். இன்னொரு பாடலில் இலங்கையில் வாழும் மக்கள் இனிய செந்தமிழ் அறிவினால் சங்கப்புலவர்களை ஒப்பார்கள். பல்வகை யாழிசையைப் பாடும் திறமையினால் வித்தியாதரரை ஒப்பார்கள். குதித்துப் பாயும் தேன்போன்ற சுவையையுடைய கவிதைகளைப் பாடும் திறத்தால் அகத்தியமுனிவரை ஒப்பார்கள் என நூலாசிரியர் கூறியுள்ளார்.

*'இதத்த செந்தமி ழறிவினாற் சங்கரை யேய்ப்பார்*  
*விதத்த யாழிசைப் பாடலால் விஞ்சையர் நிகர்வார்*  
*குதித்த தேன்சுவைக் கவிதையாற் குறுமுனி போல்வார்*  
*மதித்த நீர்வளப் பண்ணைசூ ழப்பதி மாக்கள்'*

என்பது அப்பாடல். இப்பாடலிலும் நூலாசிரியரின் தேசிய ரீதியிலான சிந்தனையைப் புரிந்துகொள்ளலாம்.

யாழ்ப்பாண மன்னர் காலத்தில் தோன்றிய பொதுமக்கள் சார்புச் சிற்றிலக்கியமாகவும், இலங்கையில் தோன்றிய முதல் பள்ளு நூலாகவும் விளங்குவது, கதிரைமலைப்பள்ளு. இந்நூல் கி. பி. 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகலாம் என்று கருதப்படுகின்றது. இந்நூலை ஆக்கியவரும் யாரென்பது தெரியவில்லை. கதிர்காம முருகனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டதாக இது விளங்குகின்றது. இந்நூலில் இடம்பெறும் பாத்திரங்களில் ஒன்றான மூத்தபள்ளி மாவலிகங்கைவயற் பள்ளி எனக் குறிப்பிடப்படுகிறாள். இப்பாத்திரத்தைப் பயன்படுத்தி, கதிரைமலைப்பள்ளு ஆசிரியர் இலங்கையின் வளத்தைப் பலவாறு சிறப்பித்துக் கூறுகின்றார். எடுத்துக்காட்டாகச் சில செய்யுள்களை நோக்கலாம் :

*'எங்கும் மாமணி விற்பொலி யுங்கதி*
*ரெங்குந் தாமரை யன்னம் படுமலர்*
*மங்குறாத வளந்திக ழுந்திரு*
*மாவலி கங்கை நாடெங்கள் நாடே.'*

*'அணி யிளங்கதி ராயிர முள்ள*
*வருக்கன் போய்க்குட பாலிடை மேவ*
*மணி கொணர்ந்து மணிவிளக் கேற்றிடு*
*மாவலி கங்கை நாடெங்கள் நாடே.'*

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நூலாசிரியர் இலங்கையின் சிறப்பை விதந்தோதுகிறார்.

சிலப்பதிகாரக் கதையை அடியொற்றி ஆக்கப்பட்ட கண்ணகி வழக்குரை என்ற காவியம், இலங்கையையும் உள்ளடக்கிய கதையம்சத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது. சகவீரன் என்ற சிறப்புப் பெயர் கொண்ட ஐந்தாம் செகராசசெகரன் என்ற சயவீரசிங்கையாரியன் (கி.பி. 1370 - 1417) இக்காவியத்தைப் பாடினான் என்று கருதப்படுகின்றது. வரம்பெறுகாதை முதல் குளிர்ச்சிக்காதை வரை பதினொரு காதைகளைக் கொண்டு விளங்கும் இந்நூலில் கப்பல் வைத்த காதை, கடலோட்டுகாதை என்பன இலங்கையோடு தொடர்புடையனவாக அமைந்துள்ளன. தமது காவியத்தின் கதையோட்டத்தில் இலங்கைக்கும் இடம்கொடுக்கவேண்டும் என்ற தேசியச் சிந்தனை இவ்வாறு அவரைச் செயற்படவைத்தது எனலாம்.

ஒல்லாந்தர் காலத்தில் தோன்றிய பறாளை விநாயகர்பள்ளைப் பாடியவர், சின்னத்தம்பிப்புலவர். அந்நூலில் இடம்பெறும் மூத்தபள்ளி என்னும் பாத்திரம் ஈழமண்டலப்பள்ளி எனக் குறிப்பிடப்படுகின்றாள். அவள் வாயிலாக இலங்கையின் நாட்டுவளத்தையும், நாட்டின் சிறப்பையும் பேசவைக்கிறார், நூலாசிரியர். எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடல்களைக் குறிப்பிடலாம் :

*'மஞ்ச ளாவிய மாடங்க டோறும்*
*மயில்கள் போன்மட வார்கணஞ் சூழ*
*மஞ்ச ரோருகப் பள்ளியில் வான்சிறை*
*யன்ன வன்னக் குழாம்விளை யாடுந்*

*துஞ்சு மேதி சுறாக்களைச் சீறச்*
*சுறாக்க ளோடிப் பலாக்கனி கீறி*
*யிஞ்சி வேலியின் மஞ்சளிற் போய்விழு*
*மீழ மண்டல நாடெங்க ணாடே.'*

இலங்கையின் இலக்கியவாதிகள் சந்தர்ப்பம் கிடைக்கும்தோறும் தமது தேசியச் சிந்தனைகளைப் புலப்படுத்தத் தவறுவதில்லை என்பதை பறாளை விநாயகர் பள்ளில் இடம்பெறும் இத்தகைய பாடல்கள் உணர்த்துகின்றன.

ஆங்கிலேயர் காலத்தில் வாழந்த சில புலவர்களும் தமது படைப்புகள் வாயிலாகத் தமது தேசியச் சிந்தனைகளைப் புலப்படுத்தியுள்ளனர். அவர்களுள் ஒருவராக மட்டுவில் ம. க. வேற்பிள்ளை (1846 – 1930) விளங்குகிறார். இவர் பாடிய ஈழமண்டல சதகம் இலங்கை பற்றிய குறிப்பிடத்தக்க நூலாகும். இலங்கையின் பெருமையைத் தனியான நூலாகப் பாடவேண்டும் என்ற நோக்கில் எழுந்த முதல் முன்னோடி நூலாக ஈழமண்டல சதகம் விளங்குகிறது. இந்நூலில் இலங்கையின் விசேடம், முக்கிய திருத்தலங்கள், யாழ்ப்பாணத்தின் சிறப்பு, ஆறுமுகநாவலர், பொன்னம்பலபிள்ளை ஆகியொரின் பெருமை முதலானவை இடம்பெறும் செய்யுள் ஒன்றின் ஒருபகுதி பின்வருமாறு :

*'முப்பத்து முக்கோடி தேவர்க்கு முதல்வனாய்*
*மூவுலக வேந்தர்வேந்தாய்*
*முந்திந் திரற்காக வேதேவ தபதிமுன்*
*மூதறிவி னிற்றந்ததும்*
*ஒப்பற்ற விருநிதிக் கிழவற்கு நீள்கால*
*முறுராச தானியாகி*
*யுற்றது மிலங்கையெனின் மற்றிதற் கிணையாக*
*வொன்றிங் குரைக்கவுளதோ.'*

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து பிரக்ஞைபூர்வமான முறையில் தேசியச் சிந்தனைகள் வளரத் தொடங்கியமையை ஈழமண்டலச் சதகம் இனங்காட்டுகிறது.

ம.க. வேற்பிள்ளை போன்று ஈழமண்டலச் சதகம் பாடிய இன்னொருவர், அல்வைக் கணபதிப்பிள்ளை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய அவர் 1930 வரை வாழ்ந்தவர். 'சந்ததமு மீழவள நாட்டி னியல்பிங்

கியம்புகவி வாழவருட் கண்வழங்கவா' என்று காப்பில் பாடிய கணபதிப்பிள்ளை, இலங்கையின் சிறப்புகளையும், தலங்களையும், மன்னர்களையும், கவிஞர்களையும், ஞானிகளையும் அழகாகப் பாடியுள்ளார்.

*'கண்ணிற் கருத்திற் புகுத்தவொண் ணாக்கரு ணாகரனை*
*யெண்ணிற் புகுத்து புனனாடன் கேட்ப விராவணனை*
*விண்ணிற் புகுத்து ரகுராமன் சீர்முற்றும் வேட்டகம்பன்*
*மண்ணிற் புகுத்தமுன் வைத்தது மீழநன் மண்டலமே'*

என்ற பாடல், அல்வைக் கணபதிப்பிள்ளையின் கவித்துவத்தை வெளிப்படுத்தும் ஒரு பாடல்.

பாரதியின் சமகாலத்தவரான பாவலர் துரையப்பாபிள்ளை (1872 – 1929) யின் பாடல்களிலும் தேசியச் சிந்தனைகள் இடம்பெற்றுள்ளமையைக் காணலாம். அவரது எங்கள் தேசநிலை என்ற தலைப்பில் அமைந்த பாடல்கள். அவரிடத்து இயல்பாகவே காணப்படும் தேசியச் சிந்தனைகளை அழுத்தமாக வெளியிடுகின்றன. தேசிய சுதந்திரம் பற்றிய அவரது சிந்தனையைப் புலப்படுத்துவதாக அவரத பின்வரும் பாடல் விளங்குகின்றது.

*'சுயராஜ்யம் சுயராஜ்யம் என்றசத்தம் – எங்கும்*
*தொனிக்குதே எங்கள்காது களில்நித்தம்*
*நயமாகச் சனங்களை அதற்கேசித்தம் – செய்ய*
*நாம்காணே மெங்குமேது மாயத்தம்.'*

எங்கள் தேசநிலையில் இடம்பெற்றுள்ள இறுதிப்பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

*' எல்லோரும் நல்லாயிருக்கவேண்டும் – இகம்*
*இயன்றது போலிய லவும்வேண்டும்*
*கல்லாத வர்கல்வி கற்கவேண்டும் – எல்லாம்*
*கவினுறு சமாதான மாகவேண்டும்.'*

சமத்துவமும், சமாதானமும் நிலவி, நாட்டுமக்கள் அனைவரும் நன்கு வாழவேண்டும் என்ற நல்நோக்கைப் பாவலர் துரையப்பாபிள்ளை இப்பாடலில் முன்வைத்தள்ளார். தேசியரீதியிலான சிந்தனையை அவரது பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த புலவர்களில் தேசியரீதியிலான சிந்தனைகளை வெளிப்படுத்தியவர்களாகச் சோமசுந்தரப்புலவர் (1878 – 1953), முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி (1896 – 1951), ப. கு. சரவணபவன் (1909 – 1949) முதலியோர் விளங்குகின்றனர். இருபதாம் நூற்றாண்டில் எழுச்சிபெறத் தொடங்கிய தேசிய எழுச்சி தொடர்பான சிந்தனைகளை இவர்களின் பாடல்களில் காணலாம்.

சோமசுந்தரப் புலவரின் இலங்கைவளம் தொடர்பான பாடல்களில், இலங்கையின் இயற்கையழகும், நாட்டின் சிறப்பும் விதந்துகுறிப்பிடப்படுகின் றன. எடுத்துக்காட்டாக, இரண்டு பாடல்களை நோக்கலாம்.

*'சீரான எந்நாடு மெப்பதியு மூரும்*
*சேர்வான தாவரமும் மாமரமுங் காவும்*
*பேரான கனிமரமும் பெருமரமுந் தாவில்*
*பெட்பாரும் பெண்ணைகளும் வாழையொடு மேவி*
*நேராக ஓரிடத்து நிலையாகக் காண*
*நிலமடந்தை வைத்தென நின்றுபய னுதவும்*
*பேராத னைப்புதிய நந்தவன மகவைப்*
*பேணியமு தூட்டிமகா வலிகங்கை பெருகும்.'*

*'அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி*
*அன்பொடு சிவாயஎன அருணீறு பூசி*
*முதிருமன் பால்நெஞ்ச முருகவிழி யருவி*
*முத்துதிர மெய்ப்புளக மூரவுரை குளறப்*
*புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை சூடிப்*
*பொருவில்கந் தாசுகந் தாவென்று பாடிக்*
*கதிரைமலை காணாத கண்ணென்ன கண்ணே*
*கர்ப்பூர வொளிகாணாக் கண்ணென்ன கண்ணே.'*

இலங்கை வளத்தைக் குறிக்கும் சோமசுந்தரப்புலவரின் இப்பாடல்கள், அவரது தேசியச் சிந்தனையின் வெளிப்பாடாக அமைந்துள்ளன.

முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி இயற்றிய மணித்தாய் நாடும் மரதனோட்டமும் என்ற நூல் மரதனோட்டக் கவிதைப் போட்டியில் முதற்பரிசைப் பெற்றது. இந்நூலில் இலங்கையின் பெருமைகளைப் பலவாறு

எடுத்தியம்புகின்றார், நூலின் ஆசிரியர். சற்றுக் கடினமான நடையில் நூல் ஆக்கப்பட்டிருந்தபோதிலும், மு. நல்லதம்பியின் தேசியரீதியான சிந்தனைகளை நூல் முழுவதும் பரக்கக் காணலாம்.

*'சீர்பூத்த விலங்கையெனுந் திருத்தாயி*
*னியற்கைவளன் சிறப்பக் கூறிப்*
*பார்பூத்த பெருமையொடு பண்டைநா*
*ளவளிருந்த பான்மை கூறி*
*நேர்பூத்த சுதந்திரமிங் கவளடைந்த*
*வரலாறு நெறியிற் கூறி*
*ஏர்பூத்த மரதனெனு மோட்டமுநன்*
*றியம்பிடுவா மியையுமாறே'*

என நூலின் பாயிரத்தில் கூறப்பட்டுள்ளது. இந்நூலில் அமைந்துள்ள பிறிதொரு பாடலில் அவரின் தேசியச் சிந்தனையின் வெளிப்பாட்டையும், கவிச்சுவையையும் அனுபவிக்கலாம்.

*'பூமணக்குஞ் செழுநறவின் பொலியுமலி யழகொழுகு*
*காமணக்கும் புகழ்நாடு காண்பமெனக் காமர்வண்டு*
*பாமணக்கு முரற்சியொடு பண்டைவினைப் பயன்கொழுமத்*
*தேமணக்கும் படிபிறந்து திகழ்வதெங்கள் திருநாடு.'*

இலங்கை எவ்வாறு எதிர்காலத்தில் சிறந்துவிளங்கவேண்டும் என்ற தமது எதிர்பார்ப்பையும் முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அழகாகக் குறிப்பிடுகின்றார்.

*'ஒருதேய மக்களெலா மோரிலங்கை*
*நோக்கிமிக வுயர்தல் வேண்டும்*
*பிரிவேது மடையாமல் வினைசெயலி*
*னொத்துழைப்பைப் பெருக்கல் வேண்டும்*
*பெரியார்மற் றெளியரெனப் பிணங்காமற்*
*பொதுநலத்தைப் பேணல் வேண்டும்.'*

இலங்கைவாழ் மக்கள் எல்லோரும் ஐக்கியத்துடன் வாழவேண்டும் என்பதையும், ஒற்றுமையாய் ஒத்துழைத்துச் செயற்படவேண்டும் என்பதையும்,

பெரியோர் சிறியோர் என்ற பேதமின்றி பொதுநலத்தைப் பேணி நடக்கவேண்டும் என்பதையும் நல்லதம்பி தமது பாடலில் வலியுறுத்திக் கூறுகின்றார். போட்டி ஒன்றுக்காக எழுதப்பட்ட நூலாயினும், மு. நல்லதம்பியின் தேசியச் சிந்தனைகளை அது நன்கு பிரதிபலிக்கிறது.

ப. கு. சரவணபவனும் தேசியரீதியில் தமது சிந்தனைகளை வெளியிட்ட ஒரு கவிஞராவர். இவ்வகையில் அவரது ஈழமாதா திருப்பள்ளி எழுச்சியும் ஈழநாட்டுக் குறமும் குறிப்பிடத்தக்கவை. ஈழமாதா திருப்பள்ளி எழுச்சியில் இடம்பெறும் பாடல் ஒன்று பின்வருமாறு :

*' புத்த பிரானடிப் புண்ணிய ரெங்கே*
*போற்றிய வீர செயக்கொடி யெங்கே*
*முத்தமி ழானவெம் மும்முர செங்கெ*
*மூர்த்தியெங் கேதல தீர்த்தமெங் கேயோ*
*சத்திய மீகை முதற்படை யெங்கே*
*தானமெங் கேவீர மானமெங் கேயோ*
*எத்தனை காலமிவ் வின்னலில் வாழ்வோம்*
*ஈழமாதா பள்ளி எழுந்தரு ளாயே.'*

இப்பாடல் இன்றைய காலகட்டத்தில்கூட அர்த்தபுஷ்டி கொண்டதாக விளங்குகிறது.

சரவணபவனின் ஈழநாட்டுக் குறம் அவரின் இலங்கை பற்றிய தேசியச் சிந்தனையின் பிறிதொரு பிரதிபலிப்பாக விளங்குகிறது.

*'செந்தமிழுஞ் சிங்களமு மாயவிரு தோழி*
*சேவைசெய்யும் இராசகன்னி ஈழமெங்கள் தேயம்*
*இந்தியரெம் அக்கைமக்கள் என்றணைக்கும் அம்மை*
*வந்தனையல் லாதெமக்குச் சிந்தனைவே றில்லை'*

என்ற பாடலில் இலங்கையின் தேசியமொழிகளான தமிழும், சிங்களமும் பெறும் முக்கியத்துவத்தை அழகாகக் குறிப்பிடுகிறார்.

மரபுரீதியான சில இலக்கிய வடிவங்களூடாகப் புதுமைநாட்டமும், சமகாலச் சிந்தனையுணர்வும் கொண்ட புலவர்கள் சிலர், பத்தொன்பதாம்

நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து புதுவகை இலக்கியங்களைப் படைக்க முற்பட்டனர். இத்தகைய புலவர்களுக்கு முன்னோடியாகக் கொள்ளத்தக்கவர், வரகவி சுன்னாகம் முத்துக்குமார கவிராசர் (1780 – 1851) ஆவர். காலத்தின் தேவைக்கேற்ப, அந்நியர் ஆட்சியில் ஏற்பட்ட கலாசார, சமூக முரண்பாடுகளையும் எளிமையான முறையில் பாடியுள்ளார். தேசியச் சிந்தனையை உள்ளடக்கியனவாக அவரது பாடல்கள் அமைந்துள்ளன.

இருபதாம் நூற்றாண்டிலிருந்து இலங்கைத் தமிழ் இலக்கியங்களில் தேசிய ரீதியிலான சிந்தனைகள் ஆழ, அகலம் பெற்று வளர்ச்சியடையத் தொடங்கின. தேசிய ரீதியிலான இலக்கியச் சிந்தனை, இலங்கைத் தமிழ் இலக்கியத்தைத் தனியாக இனங்காட்டத் தொடங்கியது. இத்தகைய தேசியரீதியான சிந்தனை வளர்ச்சியுடன் மண்வாசனை கமழும் இலக்கியங்கள் படைக்கப்படத் தொடங்கியதைக் காணலாம். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலேயே இதற்கான ஊற்றினைக் கண்டுகொள்ளமுடிகின்றது.

1940 களிலிருந்து பிரக்ஞைபூர்வமாகத் தேசியம், மண்வாசனை முதலான கருத்துகள் வளர்த்தெடுக்கப்படுவதைக் காணமுடிகின்றது. 1950 களில் இவை முற்போக்கு இலக்கியக் கோட்பாட்டுடன் இணைவதைக் காணலாம்.

இலங்கைத் தமிழ் இலக்கியவாதிகள் மத்தியில் நீண்டகாலமாகத் தேசியச் சிந்தனைகள் இடம்பெற்று வந்துள்ளமையை யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலம் முதலாக நோக்க முடிகிறது. இலங்கையின் நவீன இலக்கியங்களும் தேசியச் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் முறையில் படைக்கப்பட்டு வந்தள்ளன. அதேவேளை, இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து பேரினவாதச் சிந்தனை கொண்ட அரசியல்வாதிகளின் செயற்பாடுகளினால், தமிழ்த் தேசிய உணர்வு அரசியல் ரீதியாகவும், உளவியல்ரீதியாகவும் வளரத்தொடங்கியுள்ளது. இன்றையநிலையில் அது தவிர்க்கவியலாததாகவும் விளங்குகிறது. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட வளர்ச்சிநிலையாகவும் அது விளங்குகிறது.

உசாத்துணை நூல்கள்

இரகுபரன், க. (2009) திருக்கரைசைப் புராணம், கொழும்பு : இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கந்தையா. வி. சி. (1968) கண்ணகி வழக்குரை, காரைதீவு : காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கம்.

சதாசிவம், ஆ. (தொகுப்பு) (1966) ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், கொழும்பு : சாதித்திய மண்டலம்.

சிவத்தம்பி, கா. (1978) ஈழத்தில் தமிழ் இலக்கியம், சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.

சிவலிங்கராஜா, எஸ். (2009) ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி (மூன்றாம் பதிப்பு), கொழும்பு : குமரன் புத்தக இல்லம்.

நடராசா, க. செ. (2008) ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி (இரண்டாம் பதிப்பு மீளச்சு), கொழும்பு : குமரன் புத்தக நிலையம்.

நடராசா, கு. ஓ. ஊ. (1970) ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு, கொழும்பு : அரசு வெளியீடு.

பத்மநாதன், சி. (பதிப்பு) (1995) தணைகைலாசபுராணம் (பகுதி 1) கொழும்பு : இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

மனோகரன், துரை. (பதிப்பு) (1996) கதிரைமலைப்பள்ளு, கொழும்பு : இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.

மனோகரன், துரை. (1997) இலங்கையில் தமிழ் இலக்கிய வளரச்சி, கண்டி : கலைவாணி புத்தக நிலையம்.

மனோகரன், துரை. (1999) பள்ளு இலக்கியமும் பாமரர் வாழ்வியலும், கொழும்பு : இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.

மனோகரன், துரை. (2004) ஈழத்து இலக்கிய தரிசனம், பேராதனை.

வேலுப்பிள்ளை, ஆ. (2009) ஈழத்துப் பழைய இலக்கியங்கள் வரலாற்றுத் தேடல், கொழும்பு : குமரன் புத்தக இல்லம்.

ஜம்புலிங்கம்பிள்ளை, சே. வெ. (பதிப்பு) (1956) பறாளை விநாயகர் பள்ளு, மூன்றாம் பதிப்பு, சென்னை.

# ஈழத்து இலக்கிய வரலாற்றில் இரகுவம்மிசம்



கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன்

'யாழ்ப்பாணம் ஒரு சிறு நூலையேனும் செய்குநரில்லாத தேசம்' எனக்கூறிய நரசிங்கபுர வீராசாமி முதலியாருக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்திய ஆறுமுகநாவலர், ஈழத்துப் படைப்பாற்றல் வளத்தை எடுத்துக்காட்டிய நூல் வரிசையில் ஹேமாத்திரிகற்பம் எனும் நூலை அடுத்து இரண்டாவதாக விளங்குவது இரகுவம்மிசமே ஆகும். மஹாவித்துவான் என்று சிறப்பிக்கப்படுகின்ற அரசகேசரியால் இயற்றப்பட்ட இந்நூல் யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் தோற்றம்பெற்றது.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை, ஈழத்துப் பூதந்தேவனாரிலிருந்து தொடங்குவது மரபு. எனினும் அவர் காலம் முதலாக கி.பி. 13 ஆம் நூற்றாண்டுக் காலம் வரை அவ்விலக்கிய வரலாறு தொடர்ந்தமைக்கான நூற்சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே இடையீடின்றித் தொடரும் இலக்கிய வரலாற்றின் ஆரம்பமையமாகவும், சோதிடம்,

வைத்தியம், தலவரலாறு முதலியன குறித்த நூல்கள் பல தோற்றம் பெற்ற காலமாகவும் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தையே கொள்ளமுடிகிறது. இக்கால கட்டத்திலே செகராசசேகரமாலை போன்ற சோதிடநூல்களும், செகராசசேகரம், பரராசசேகரம் போன்ற வைத்தியநூல்களும் தோற்றம் பெற்றன. இலக்கிய நூல்களாகக் கொள்ளமுடியாத செய்யுட் தொகுப்புகளாக விளங்கிய இவற்றின் தோற்ற காலத்தை அண்மித்தே தலபுராணமான தக்ஷிண கைலாச புராணம், நாட்டாரிலக்கியச் சார்புநூலான கண்ணகி வழக்குரை முதலியன. அக்கால ஈழத்தவரின் இலக்கியவளத்தைப் புலப்படுத்த வல்லனவாகத் தோற்றம்கொண்டன. இத்தகையதோர் இலக்கியச்சூழல் நிலவிய காலப்பகுதியிலேயே அரசகேசரியின் இரகுவம்மிசம் படைப்பாக்கம் பெற்றது.

## II

இரகுவம்மிசம் காவியத்தின் ஆசிரியரான அரசகேசரி யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஆரியச்சக்கரவர்த்திகளின் மரபினர் என்பது பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்ட விடயமாகும். எனினும், இவர் எவ்வுறவு முறையில் அரச வம்சத்தவராகிறார் என்பது குறித்த கருத்து முரண்பாடுகள் தொடர்ந்துகொண்டுள்ளன. கி.பி 1591ஆம் ஆண்டு முதல் 1616ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தை அரசாண்ட எட்டாவது பரராசசேகர மன்னனின் சகோதரரே அரசகேசரியென போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் குவேரோஸ் குறிப்பிட்டுள்ளார். ஆனால், யாழ்ப்பாண வைபவமாலை நூலோ கவிஞரை எட்டாவது பரராசசேகரனின் மருகர் என்கிறது. 'பரநிருபசிங்கத்தின் மைத்துனனும் பரராசசேகரன் மருமகனுமாகிய் அரசகேசரி யென்பவன் இரகுவம்ச மென்னும் நூலை வட மொழியிலிருந்து மொழி பெயர்த்துப் புராண நடையாகப்பாடி திருவாரூரிலே கொண்டுபோய் அரங்கேற்றிப் பெருங் கீர்த்தியடைந்தான்' என்கிறது யாழ்ப்பாண வைபவமாலை.

இதன்படி அரசகேசரியின் காலம் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியாக அல்லது பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பமாக இருத்தல் வேண்டும். 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' எழுதிய குமாரசுவாமிப் புலவரோ அரசகேசரியைப் பதினைந்தாம் நூற்றாண்டவர் என்கிறார். அரசகேசரி வரலாறு குறித்துக் கூறும் கணேசையர் கவிஞர் காலம் 16 ஆம் நூற்றாண்டில் பிற்பகுதி என்பர். பரராசசேகரன் எனும் பட்டப்பெயரைக் கொண்டிருந்த புவிராஜ பண்டாரத்தின்

மருமகன் கா கோ என்றும் அவனுடைய தம்பி எதிர்மன்னசிங்கன் என்றும் எதிர்மன்னசிங்கனின் இன்னோர் தமையன் அரசகேரி என்றும் எடுத்துக்காட்டும் ஞானப்பிரகாசர், குவேரோஸ் கூற்றுப்படி கவிஞரின் காலம் பதினாறாம் நூற்றாண்டின் நிறைவும், பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கமும் என்பர். இதனைப் பின்வந்த வரலாற்றாய்வாளர் பலரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

III

அரசகேசரியின் இரகுவம்மிசம் காவியத்தின் மூலம் வடமொழியில் காளிதாச மகாகவியால் எழுதப்பட்ட இரகுவம்மிசமே ஆகும். வடமொழியில் பஞ்ச மஹா காவியங்களுள் ஒன்றான இரகுவம்சம் 19 சருக்கங்களையும் 1569 செய்யுட்களையும் உடையது.

திலீபன், இரகு, அயன், தசரதன், இராமன், குசன் முதலிய 29 இரவிகுல மன்னர்தம் வரலாற்றைச் சொல்லுவது.

அரசகேசரியாரின் தமிழ்க்காவியமோ, பொதுக்காண்டம், சிறப்புக்காண்டம், பொதுச்சிறப்புக்காண்டம் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது இருபத்தாறு படலங்களையும் 2444 பாடல்களையும் உடையது. இன்று கிடைக்கும் பிரதிகளின்படி இக்காவிய உள்ளீடுகளைப் பின்வருமாறு காட்டலாம்.

| | | |
|---|---|---|
| காப்பு | – | 1 |
| பாயிரம் | – | 9 |

பொதுக்காண்டம்

| | | |
|---|---|---|
| ஆற்றுப்படலம் | – | 26 |
| நாட்டுப்படலம் | – | 64 |
| நகரப்படலம் | – | 75 |
| அரசியற்படலம் | – | 22 |
| குறைகூறுபடலம் | – | 74 |
| தேனுவந்தனப்படலம் | – | 122 |
| இரகுவுற்பத்திப்படலம் | – | 59 |
| யாகப்படலம் | – | 105 |
| திக்குவிசயப்படலம் | – | 277 |

| | | |
|---|---|---|
| அயனுதயப்படலம் | - | 55 |
| அயனெழுச்சிப்படலம் | - | 139 |
| மாலையீட்டுப்படலம் | - | 129 |
| கடிமணப்படலம் | - | 85 |
| மீட்சிப்படலம் | - | 121 |
| இரகுகதியுறுபடலம் | - | 47 |
| இந்துமதி பிறப்புநீங்குபடலம் | - | 96 |

சிறப்புக்காண்டம்

| | | |
|---|---|---|
| தசரதன் சாபமேற்றபடலம் | - | 125 |
| திருவவதாரப்படலம் | - | 56 |
| சீதைவனம்புகுபடலம் | - | 157 |
| இலவணன்வதைப்படலம் | - | 108 |
| சம்புகன் வதைப்படலம் | - | 53 |
| அவதார நீங்குபடலம் | - | 71 |

பொதுச்சிறப்புக்காண்டம்

| | | |
|---|---|---|
| குசன் அயோத்திசெல்படலம் | - | 108 |
| வாகுவலயப்படலம் | - | 104 |
| முடிசூட்டுப்படலம் | - | 123 |
| குலமுறைப்படலம் | - | 33 |

காவியப் பொருண்மையைப் பொறுத்தரை மூல காவியத்தை அப்படியே அரசகேசரியார் முழுமையும் பின்பற்றி விடவில்லை. வடமொழிக் காவியத்தின் இடையில் இராமன் சரித்திரம் விரிவாகக் கூறப்பட்டிருப்பது போல தமிழ்க்காவியத்தில் கூறப்படவில்லை. இவ்வாறே, 19 ஆம் சருக்கம் கூறும் அக்கினி வர்மன் வரலாறு தமிழ்க் காவியத்தில் இல்லை.

தசரத குமாரனாகிய இராமனுடைய சரிதம் தமிழ் இரகுவம்மிசத்திலே கூறப்படாமைக்கான காரணத்தை நூலாசிரியரே குறிப்பிட்டுள்ளார்.

*பொற்றாமரை மானொழியாது பொலியு மார்ப*
*வெற்றாழு மேனி ரகுராம சரிதை யாவுங்*
*கற்றார் கவியின் பெரிதாந் தமிழ்க் கம்பநாட*
*னுற்றாங் குரைத்தா னுரையாதன வோதுகிற்பாம்.*

எனும் பாடலில் கவிஞர் கூறியிருப்பதன்படி, கவியிற் பெரிய கம்பநாடன் இராமனின் சரிதத்தை மிகச் சிறப்பாக, இராமாயணம் என்னும் பெயரில் பாடி வெளிப்படுத்தியிருப்பதனால் மீள அக்கதையைக் கவிதையாகச் செய்ய கவிஞர் விரும்பவில்லை என்பது புலனாகிறது. இதிலிருந்து கம்பராமாயணம் குறித்த கவிஞரின் நிறைவுணர்ச்சியும் அதனை மேவி இராமகதையைப் பாடிவிட முடியாது என்னும் யதார்த்தச் சிந்தனையும் வெளிப்படுகின்றன.

வடமொழிக் காவியத்தின் பத்தொன்பதாவது சருக்கம் கூறும் ஒழுக்கங்குறைந்த அக்கினி வர்மனின் வரலாற்றைத் அசரகேசரியாரின் தமிழ்க்காவியத்துள் காணமுடியாமைக்கான காரணத்தை உறுதிபட அறிந்துகொள்ள இயலவில்லை. இப்பகுதியைக் கவிஞர் தமிழ்ப் படுத்தினாரென்றும், இல்லையென்றும் இரு வேறு கருத்துகள் உள. நிறைவுப் படலமாக இன்று கிடைக்கப்பெறுகின்ற குலமுறைப் படலத்தின் இறுதிப்பாடலாக அமைந்திருக்கும்,

*கலைப்படா நின்றவிக்கு வாகுவின் மரபின் காட்சித்*
*தலைப்படா நின்ற வேந்தர் தம்பெருந் தகைய நீதி*
*வலைப்படா னாகி நல்லோ ரறிவெனும் வாய்மை தன்னு*
*ணிலைப்படா விவன்றன் வெய்ய நீர்மையை நிகழ்த்து கிற்பாம்*

பாடலில், 'நிகழ்த்துகிற்பாம்' எனக் கவிஞர் குறிப்பிட்டிருப்பதனால் காவியம் இந்தளவில் முற்றுப்பெறவில்லை எனும் கருத்தை க.செ. நடராசா முன்வைத்துள்ளார்.

'இந்நூலில் குலமுறைப் படலத்திற்குப் பின்னுள்ள சரித்திரங்களும் அக்காலத்தில் இவரால் மொழிபெயர்த்துப் பாடப்பட்டன என்பது கர்ண பாரம்பரியம். 'நல்லோ ரறிவெனும் வாய்மை தன்னு னிலைப்படா விவன்றன் வெய்ய நீர்மையை நிகழ்த்துகிற்பாம்' என்னும் குலமுறைப் படலத்திறுதிச் செய்யுளானும் அஃதுண்டென்பது துணியப்படும். அகப்பட்ட பிரதிகளொன்றினுங் காணப்படாமையாற் பிற்காலத்திற் சிதைந்தன போலும்.'

என்கிறார் இரகுவம்மிசத்தின் முதற் பதிப்பாசிரியர் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை. இதனை ஏற்றுக்கொண்டால், வடமொழி மூலநூல் கூறும் கதைப்பகுதி அனைத்தையும் பாடும் விருப்புக்கொண்டிருந்துள்ள கவிஞர் பாடி நிறைவு செய்த நிறைவுப் பகுதியாகிய அக்கினிவர்மன் காவியப்பகுதி நமக்குக் கிடைக்கவில்லை என்ற முடிவுக்கு வருதல் முடியும்.

## IV

இரகுவம்மிசம் முதலிய பெருநூல்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் தோற்றம் பெற்றமைக்கு அக்கால அரசியல் மற்றும் கல்விச் சூழலே காரணமாயிருந்ததென்பது தெளிவு. இம்மன்னர் காலத்தில் இலக்கியப்படைப்ப ாக்கத்திற்குரிய உன்னத கல்விப்புறச்சூழல் முன் எப்பொழுதும் இல்லாதபடிக்கு யாழ்ப்பாணத்தில் விளங்கியிருந்தது. கவிஞர்கள், அறிஞர்களுக்கு ஆரியச்சக்கரவர்த்திகள் மிகவும் ஆதரவளித்துள்ளனர். யானை, பொற்பந்தம், காசு, பொன், கெண்டிகை முதலியவற்றைத் தகுதியறிந்து மன்னர் தம்மை நாடிவந்த புலவர்களுக்கு வழங்கி வந்துள்ளனர். இதனால் தமிழ்நாட்டிலிருந்தும் பல புலவர் பெருமக்கள் யாழ்ப்பாணத்தை நாடி வந்துள்ளனர். இவ்வாறு கவிஞர்கள் சங்கமிக்கின்ற கல்விபயில் சூழல் அக்காலத்தில் ஈழத்துத் தமிழ்ப்பகுதிகளில் விளங்கியிருந்துள்ளதை அறியமுடிகின்றது.

14ஆம் நூற்றாண்டளவில் தலைசிறந்த அறிஞர் பலர் பெருநூல்கள் பலவற்றை மாணாக்கர்களுக்குக் கற்பித்து வந்தமையையும் அறிந்துகொள்ள முடிகின்றது. 'வேதமும் உபநிடதமும் சிவாகமபுராணம் முதல்விரிநூல் யாவும் சோதிடமும் மந்திரமும் உணர்ந்து உணராதவர் தெளியச் சொல்லவல்லோன்' என்று போற்றப்படுகின்ற சைவராசபண்டிதர் பல ஆற்றல்மிக்க மாணாக்கர்களை உருவாக்கியிருந்துள்ளார். இவ்வாறான கல்விச்சூழற் காலத்தில், ஆதரவுமிக்க அரசர்களும் அமைதியானமுறையில் நாட்டை நிர்வகித்து வந்தமையால், ஓரளவுக்கு தமிழ்நாட்டுச் சோழராட்சியை ஞாபகப்படுத்தும் புறச்சூழல் அப்போது ஈழத்தில் நிலவியது. இவ்விணைப்பின் செழுமையான திரட்சியாகவே கைலாசபுராணம் முதலிய நூல்களின் தோற்றத்தைக் கொள்ளமுடிகிறது. எவ்வாறு சோழராட்சிக்குப் பின்னான குழப்பம்மிகுந்த நாயக்கராட்சி காலத்தில் படைப்புகள் இருண்மையையும் கடுமையையும் நோக்கி நகர்ந்தனவோ அவ்வாறே ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சிக்கால முடிவுப்பகுதிக் குழப்பங்களின் மத்தியில் தோன்றிய இரகுவம்மிசமும் அமைந்ததெனக்

கொள்ளலாம். இதற்கு அக்காலத் தமிழ்நாட்டு இலக்கியப்போக்கின் தாக்கமும் மிக முக்கியமான காரணமாக இருந்திருக்கிறது.

இவ்விடத்தில், பெருநூல் இயற்றப் புகுந்த அரசகேசரியார் ஏன் வடமொழிக் காவியத்தைத் தழுவி நூல் செய்ய முனைந்தாரெனவும், குறிப்பாக இரகுவம்சத்தை ஏன் தேர்ந்தெடுத்தாரெனவும் அக்கால சமூக, அரசியல் மற்றும் இலக்கியப் பின்புலத்தில் சிந்திப்பது பயனுள்ளதாகும்.

கதைகளை வடமொழியிலிருந்தும் பெற்றுக்கொண்ட இராமாயணம், பாரதம் முதலிய தமிழ்க் காப்பியங்களின் வழியில் கவிஞர் தமது நூலை ஆக்கத் திட்டமிட்டிருக்கலாம். அக்கால ஈழத்து, தமிழகத்துக் கல்விச் சூழலில் வடமொழியும் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தது. குறிப்பாக, ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வடமொழி நூல்களை தமிழாக்குகின்ற பெருவழக்குக் காணப்பட்டுள்ளது. செகராசசேகரன் வடமொழிச் சோதிடத்தைத் தமிழில் நூல்செய்யுமாறு பணித்ததனால் சோமசர்மா செகராசசேகர மாலையைப் பாடினார். வடமொழி ஆயள்வேத ஏட்டுப்பிரதிகளை இந்தியாவிலிருந்து பெறுவித்து அவற்றைத் தமிழ்ப்படுத்தும் முயற்சிக்கு மன்னர்கள் உதவி வழங்கியுள்ளனர். மேலும் அரசகேசரி போன்று மன்னர் வம்சத்தைச் சார்ந்த செகராசசேகரன் தமிழிலும் வடமொழியிலும் பாண்டித்தியம் பெற்று விளங்கியதோடு தென்கயிலாய மான்மியத்தை (சிலர் மச்சகேச்சுரப் புராணம் என்பர்) கைலாசபுராணம் எனத் தமிழ்ப்படுத்தினான். ஆரியச்சக்கரவர்த்திகள் அரண்மனையில் வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் முதலிய பல்வகை நூல்களின் ஒப்பீட்டுப் பிரதிகள் சேர்க்கப்பட்டு இருமொழிப் பயிற்சியாளர்களால் அவை ஆராயப்பட்டன. மேலும், ஆரியச்சக்கரவர்த்திகள் குல மன்னர்கள் பலருக்கும் வடமொழிப்பயிற்சி இருந்துள்ளது. (பத்மநாதன்,சி., 2004) இவ்வாறு அரசகேசரி உருவாகிய அப்போதைய ஈழத்துச் சூழலில் வடமொழி நூல்களைப் பெயர்த்துத் தமிழில் பாடுகின்ற பெருவழக்கு காணப்பட்டுள்ளது. இதைப்போற்றி வந்த மன்னர் பரம்பரையில் வந்தவராதலால் அரசகேசரியையும் இது பாதித்திருக்குமெனலாம்.

இவ்வாறே, அக்கால – விஜயநகர நாயக்கர் காலத் – தமிழகத்திலும் வடமொழியைப் போற்றிப் பேணுகிற தன்மை காணப்பட்டது. இம்மன்னர் தமது தாய் மொழியாகிய தெலுங்கையும் தமிழையும் வடமொழியையும் சம அளவுக்குப் போற்றி வளர்த்தனர். இவ்வேளையில் திருநெல்வேலிப் பகுதியில் சிற்றரசர்கள்

போல ஒதுங்கிவாழ்ந்து ஆட்சிபுரந்து வந்த பாண்டிய மன்னர்களும் பெரிதும் இலக்கியப்பணிகளில் ஈடுபட்டு வந்தனரென்பதும் கருதத்தக்கது. குறிப்பாக அதி வீரராம பாண்டியன், கூர்ம புராணம், இலிங்க புராணம், காசி கண்டம், வாயு சங்கிதை, மதனக் கேவை, நைடதம் ஆகிய நூல்களை / பகுதிகளைத் தமிழ்ப்படுத்தியமை இவ்விடத்தில் ஞாபகம் கொள்ளத்தக்கது. தமது கல்விப் பராயத்தைப் பெரும்பாலும் தமிழ்நாட்டிற் களித்த அரசகேசரியாருக்கு இத்தகைய பின்புலத்தின் தாக்கமும் இருந்திருக்குமென எதிர்பார்ப்பதிலே தவறில்லை.

இரகுவம்மிசம், குமாரசம்பவம், மேகதூதம், ருதுசம்ஹாரம் முதலிய நூல்களை படைத்த மஹாகவி காளிதாசர் கி.பி. நான்காம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவர் என்று ஆய்வாளர்கள் இன்று தெரிவிக்கின்றனர். வடமொழி இலக்கியவுலகில் பெருஞ் செல்வாக்குச் செலுத்திய இரகுவம்மிசம், குமாரசம்பவம் முதலிய காவியங்களுக்கான மீளெழுச்சி பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டதாக வடமொழி இலக்கிய வரலாறு குறித்து எழுதிய பலரும் குறிப்பிட்டுள்ளனர். இதற்குப் பிரதான காரணம் அம் மகாகாவியங்களுக்கு, மல்லிநாதர் என்பார் எழுதிய உரைகளேயாம். அவரது நுட்பஞ்செறி உரையினால் காளிதாச மகாகவியின் காவியங்கள் அதி உன்னத இலக்கியஸ்தானத்தில் வைத்துப் போற்றப்படலாயின. இவ்வாறு மல்லிநாதருடைய காலத்தையொட்டி முதலில் வடமொழி சிறப்புற்றிருந்த பகுதிகளிலும் பின் தென்பிராந்தியங்களிலும் இரகுவம்மிசம் முதலியன மீளக் கொண்டாடப்பட்ட நிலையை அடைந்திருக்க வேண்டும். இத்தகைய காலச்சூழலில் காவியம்பாடும் விருப்புக்கொண்டிருந்த அரசகேசரியாரை இரகுவம்மிசத்தின் மீளெழுச்சி வசப்படுத்திற்று எனக் கொள்ளமுடியும்.

இரகுவம்மிசத்திலே பாண்டிய நாட்டுத் தொடர்புடைய பரம்பரையினரான அரசகேசரியாருக்குப் பற்று ஏற்படுவதற்கு, இக்காவியத்தில் பாண்டியர் விதந்தெடுத்துக் கூறப்பட்டுள்ளமை காரணமாக இருந்திருக்கலாமென ஆய்வாளர் கூறியுள்ளனர். எனினும் இவ்வாறு கொள்வதும் நேரியதாக அமையாதெனவே கருத முடிகிறது. வடமொழிக் காவியத்தில் பாண்டியரை விதந்துகூறும் பகுதியை மொழி பெயர்க்கும்போது இத்தகைய விருப்புடையவராக அரசகேசரியார் இருந்திருந்தால் மூலநூலை விடவும் தமது நூலில் பாண்டியரை அதிகமாகச் சிறப்பித்திருக்க வேண்டும்.

ஆனால், அவ்வாறு இல்லையென்பதை அவதானிக்க முடிகிறது. வடமொழிக் காவியத்தில் ஆறாவது சருக்கத்தில் இந்துமதி சுயம்வரம் பற்றிக் கூறுமிடத்து, சுயம்வரத்திற்கு வருகை தந்திருந்த பாண்டிய மன்னன் குறித்து காளிதாசர் பின்வருமாறு புகழ்ந்திருக்கக் காணலாம்.

'கழுத்தில் முத்துமாலைகளைத் தரித்து உடலில் சிவந்த சந்தனத்தைப் பூசிக்கொண்டிருக்கும் இப்பாண்டிய மன்னன் இளஞ்சூரியனின் செந்நிறக் கதிர்கள் பட்டுத்தாழ்வரை சிவந்து, அருவிகளுடன் விளங்கும் இமயமலைபோல் இருக்கிறார்.

விந்தியமலை உயர்ந்து வளர்ந்தபோது அதை வளரவொட்டாமல் தடுத்தவரும், கடல்நீரை மிச்சமின்றிக் குடித்தவருமான அகஸ்த்யர், பாண்டிய மன்னரை அவப்ருதஸ் ஸ்நானமுடிவில் அன்பினாலே நீர் ஸௌகர்யமாக ஸ்நானத்தைச் செய்து முடித்தீரா எனக் கேட்கிறார்.

"தான் இல்லாத பொழுது ஜனஸ்தானத்தைப் பாண்டியர் எதிர்த்து அழித்து விடுவாரோ என்று பயந்து ராவணன், பரமசிவனைத் தோத்திரஞ்செய்து 'பிரம்மசிரஸ்' என்ற அஸ்திரத்தைப் பெற்றுள்ள பாண்டியருடன் சமாதானஞ் செய்துகொண்டு இந்திரலோகத்தை வெற்றி கொள்ளச் சென்றான்."

'தென் திசைக்குச் சமுத்திரம், ரத்தினங்கள் பதித்துள்ள ஒட்டியாணம் போலுமுள்ளது. அத்தென் திசையை, நற்குலத்தில் தோன்றிய இவர் முறைப்படி ஆண்டு வருகிறார். ஆகவே நீ இவ்வாசரைக் கலியாணம் செய்து கொண்டால் ஏற்கனவே இவருக்கு மனைவியாயுள்ள பூமியுடனும் தென்திசையுடனும் சேர்ந்து நீயும் இவருக்கு மனைவியாகலாம்.'

இவ்வாறு தொடர்ந்து ஆறு சுலோகங்களில் மூலநூலில் பாண்டிய மன்னனதும் அவன் குலத்தவரதும் சிறப்புகள் கூறப்பட்டிருக்கிற பொழுதும், மொழிபெயர்த்த அரசகேசரியாரோ சுயம்வரத்திற்கு வந்திருந்த (அயனைத் தவிர்ந்த) மற்றைய மன்னர்களுக்குப் பாடியுள்ளது போல இப்பாண்டியனுக்கும் ஒரு பாடலையே அமைத்துள்ளார். "சிவபிரானது கண்டத்தில் புகாத அமிர்தத்தை ஒத்த சொல்லாகிய கடல் விளங்குகின்ற தமிழ்ப்பாஷையினது செல்வச் சிறப்பை உள்ளவன் சேடனால் துதிக்கப்படும் புத்தி நுட்பத்தை உடையவன் அசுவமேத யாகம் செய்துள்ளவன் தேவர்களும் மதிக்கும் திருவாலவாய் என்னும் நகரத்தையுடையவன் இப்பாண்டிய அரசன்" என்கிறது அரசகேசரியார் பாடல்.

ஆய்வாளர்கள் சொல்லியுள்ளது போன்று பாண்டியரின் தொடர்பு பற்றியே பாண்டியரைச் ஓரளவு சிறப்பிக்கும் இரகுவம்மிசத்தை பாட அரசகேசரியார் முற்பட்டவராய் இருந்திருந்தால், வடமொழிக் காவியத்தை விடவும் பாடலின் தொகையாலும் புகழ்ச்சிப் பொருண்மையாலும் தமது காவியத்தில் பாண்டியரை அவர் பாராட்டியிருத்தல் வேண்டும். ஆனால் அவ்வாறு அவர் பாடவில்லை. ஆறு சுலோகங்களில் காளிதாசர் சிறப்பிக்கும் பாண்டியர் பெருமையை, அரசகேசரியார் ஒரு பாடலிலேயே பாடி மற்றைய மன்னர் வரிசையிலேயே அமைத்துச் செல்கிறார். இதனால், இரகுவம்மிசத்தைப் பாண்டியர் தொடர்புபற்றி அரசகேசரியார் பாடப்புகுந்தார் என்று கொள்வது பொருத்தப்பாடுடையதாக இல்லை.

இரகுவம்மிசத்தை வடமொழியிலிருந்து தமிழாக்கும்படி கேட்டது பரராசசேகரனானால் அவ்வாறு கூறியதன் பின்னணியில் ஏதேனும் சிறப்புக் காரணம் இருக்க வேண்டுமெனக் கருதும் ஆ. வேலுப்பிள்ளை தெரிவித்துள்ள காரணங்களுள் பின்வருவன முக்கியமானவை.

1. பாண்டியர் மேலாதிக்கத்திலிருந்து விடுபட்டுத் தனியாட்சி செலுத்தவிழைந்த ஆரியச் சக்கரவர்த்திகள் தமது குலத்திற்கு தெய்வீக உரிமைத் தொடர்பு கற்பிக்க முனைந்தமை.

2. இரகுவம்மிச வரலாற்றுச் செய்திகளுக்கும் ஆரியச்சக்கரவர்த்திகளது குல வரலாற்றுச் செய்திகளுக்குமிடையில் சில ஒப்புமைகளைக் கண்ட பரராஜசேகரன், இவ்வரலாறு எதிர்கால மன்னர்க்கு வழிகாட்டியாக விளங்க வேண்டுமெனக் கருதியமை.

இவற்றுள் முதற்காரணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதே. இதனாலேதான் போலும் செகராசசேகரமாலையின் சிறப்புப் பாயிரத்தில்,

*பூசனை செய்மி னீரெனக் கருணை புரிந்தவர் தங்களி லிருவர்*
*காசினி தாங்கும் படிவரங் கொடுத்துக் கமழ்செழுந் துளபமா லிகையு*
*மாசறு சுருதி யாரிய வேந்தென் றணிமணிப் பட்டமுங் கொடுத்து*
*தேசுறு குடையு மொற்றையும் வெற்றித் திகழ்விடைத் துவசமு நல்க.*

என இராமரே இராமேஸ்வரத்தைப் பூசிக்கவென நியமித்தோருள் இருவருக்கு சூரியவேந்துப் பட்டம் கட்டினார் எனும் கதை கூறப்பட்டுள்ளது.

இது ஆரியச் சக்கரவர்த்திகள் தமது குலத்துக்குத் தெய்வீகத் தொடர்பைக் கற்பிக்கத் தொடங்கியமைக்குச் சான்றாகிறது.

ஆனால், சூரியவேந்தரது வரலாற்றின் தொடக்கப்பகுதியை நோக்கியே இரகுவம்மிசத்தைப் பாடுமாறு பரராசசேகரன் தூண்டினான் எனும் இரண்டாவது எடுகோள் அத்துணைப் பொருத்தமானதாகப் படவில்லை. 'அவனுடைய தந்தை திலீபன் முனிவர் ஆச்சிரமத்திலே மந்தை மேய்ப்பவனாக இருந்தான் என்னும்போது, இரகு, திக்குவிசயன் செய்த சக்கரவர்த்தியாக மாறியது எத்தகைய உயர்ச்சி என்பது புலப்படும். 13 ஆம் நூற்றாண்டுப் பிற்பகுதியிலே படைத்தலைவராக இலங்கைக்கு வந்த ஆரியச்சக்கரவர்த்தி குலம் பதினான்காம் நூற்றாண்டுத் தொடக்கத்திலே சுதந்திரத் தனியரசு நடத்தத் தொடங்கிவிட்டது' என்கிறார் ஆ. வேலுப்பிள்ளை. ஆனால் தமது புத்திரப் பேற்றுக்காகத் திலீபன் முனிவரது ஆசிரமத்தில் காமதேனுப்பசுவின் கன்றாகிய நந்தினியை ஆதரித்து மேய்த்தானே தவிர அவனும் உண்மையில் பெருமன்னனே என்பதைக் மனங்கொள்ள வேண்டும்.

எனவே, இவ்வகையில் பொருத்தப்பாடு காண்பதிலும் பார்க்க ஆரியச் சக்கரவர்த்திகளது கல்வி, கலை நடவடிக்கைகள் மற்றும் போர் வெற்றிகள் ஆகியவற்றோடு இயையக்காண்பதே பொருத்தமிக்கதாகிறது. 'ரகு என்பது கலைக்கடலையும் பகைக்கடலையும் கடக்கவல்லவன் என்னுங் காரணம் பற்றி வந்த பெயர். இலக் – கடத்தல், உ – ஒரு பெயர் விகுதி. லகரம் ஒற்றுமைபற்றி ரகரமாய் இரகு என நின்றது.' என குமாரசாமிப் புலவர் கூறியுள்ள குறிப்பு இவ்விடத்தில் நோக்கத்தக்கது. இவ்விரு சிறப்புகளும் இரகு முதலிய மன்னரிடத்து விளங்கியதுபோல, ஆரியச் சக்கரவர்த்திகள் பலரிடமும் விளங்கியிருந்தன. பகைவரை அடக்கிப் பல வெற்றிகளைப் பெற்ற அதேவேளை கவிதைக் கலையில் வல்லவர்களாகவும் அவர்கள் விளங்கிப் பெருநூல்கள் ஆக்கியளித்தனர் என்பதும், இதனால், இயைபுகருதி இரகுவம்மிசத்தின் கதையை ஆரியச் சக்கரவர்த்திகள் குலத்தில் வந்த அரசகேசரி பாடும் ஊக்கம் பெற்றிருக்கலாமென்பதும் கருதத்தக்கனவே.

மேலும், இச்சக்கரவர்த்திகள் தம்மைச் சூரியகுலத் தோன்றல்களாகக் காணவேண்டிய தேவையொன்றும் அக்காலத்தில் இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை. சரசுவதிமாலை நூற்பாயிரம் 'கதிரவன் மரபில் வந்தோன் பாமாலை சூடு மீளிப் பராக்கிரம வாகு பூபன்' என நாலாம் பராக்கிரமபாகு

மன்னனை சூரியகுலத்தவனாகப் போற்றுகிறது. எனவே, யாழ்ப்பாணத்தில் அரசோச்சிய ஆரியச் சக்கரவர்த்திகள் தம்மையும் சூரியகுல மன்னர்களாக இனங்காண்பதில் விருப்புக் கொண்டிருந்துள்ளனர். இதன் ஒரு நிறைவாக்கமே இரகுவம்மிசத்தின் தோற்றமெனலாம். காவியத்தில் காணப்படும்

*பார்த்திபர் தமக்கு நேரொன் றொழிவுறா பகரிற் பாரிற்*
*பார்த்திப னிகர்ப்ப தல்லான் மற்றுண்டோ பணியு மன்ன*
*பார்த்திபர் நிகர்ப்பர் கங்கை யாரியன் பதுமத் தாள்சேர்*
*பார்த்திப ரினையன் னானைப் பார்த்திப னிகர்ப்ப னன்றே.*

காணப்படும் பாடலில், பரராசசேகரனை இரகு ஒப்பான் எனக் கூறப்பட்டுள்ளது. இது சூரிய குலத்தவரோடு ஆரிய குலவேந்தர்களை மிகவும் நெருக்கமாக்கி இணைக்கும் ஓர் உத்தியாகக் கவிஞராற் கையாளப்பட்டுள்ளது.

இரகுவம்மிச காவியத்தைத் தமிழாக்கும்படி கூறியது பரராசசேகரன்தான் எனக்கொள்வதும் ஆய்வுக்குரியதே.

*இன்ன காதை யியன்ற விரும்பொருட்*
*டுன்னு செஞ்சொற் றுகடபு தூய நூல்*
*பன்னு செஞ்சொற் பரராச சேகர*
*மன்ன னின்ப மனங்கொள வாய்ந்ததே.*

என்பது அரசகேசரியின் கூற்று. ஆசிரியர் கூற்றுப்படி பரராசசேகரன் அனுவதித்தான் என்பதே தெரியவருகிறது. இதற்கு நேரடியாகப் பொருள் காண்பதாயின் அரங்கேற்றத்தின்போது முன்னிலையில் வீற்றிருந்த பரராசசேக மன்னன் இந்நூலை ஏற்றுக்கொண்டான் என்றே கொள்ள முடியும். 'பன்னு செஞ்சொல் பரராசசேகர மன்னன் இன்பம் மனங்கொள வாய்ந்தது - சொல்லுகின்ற செஞ்சொற்களையுடைய நூலை அறிந்த பரராசசேகர மகாராசன் இன்பத்தோடு அங்கீகரித்தலால் சிறப்புற்றது' என்றே கணேசையர் பொருள் கண்டிருப்பதும் கருதத்தக்கது. ஆனால் நூல் அரங்கேற்றம் இடம்பெற்றது தஞ்சாவூர் இரகுநாத நாயக்கர் அரசசபை என்று கருதப்படுவதனால் பரராசசேகரன் அரங்கேற்றத்தின்போது நேரிரிருந்து கேட்டு அனுவதித்தான் என்பது பொருத்தமில்லையென க.செ. நடராசா போன்றோர் கருதுவர். இதனால் அவர்கள் நூல் செய்யும்படி கோரியவனே பரராசசேகரன்

எனப் பொருள் காண்பர். எனினும் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் நல்லூரில் கல்விமான்கள் சபை கூட்டப்பட்டமையாலும், அச்சபையிலும் இரகுவம்மிசம் அரங்கேற்றப்பெற்றதென அறிஞர் சிலர் கூறியுள்ளமையாலும் (இளங்குமரனார், இரா., 2005) நல்லூர் அரங்கேற்றத்தின்போது பரராசசேகர மன்னன் உடனிருந்து கேட்டு நூலை அங்கீகரித்தான் எனக் கொள்வதே பொருத்தமானதாகும்.

## V

அடுத்து, அரசகேசரியாரின் கவித்துவம் குறித்து நோக்குதல் அவசியமானது. 'செந்தமிழ்க் காப்பியங்களுள்ளே, சென்னோக்குப் பொருணோக்குத் தொடைநோக்கு முதலியவற்றாற் சிறந்து விளங்குவது கம்பராற் செய்யப்பட்ட இராமவதாரமொன்றுமே என்பது அறிஞர் யாவர்க்கும் ஒப்ப முடிந்த தொன்றேயாம். அதனோடடுத்துச் சிறப்பு வாய்ந்தது இந்த இரகுவம்மிசமே' என்கிறார் கணேசையர். கம்பராமாயணத்திற்கு அடுத்த வரிசைக் காப்பியங்களுள் அரசகேசரியாரின் இரகுவம்மிசத்தை வைப்பது குறித்த அபிப்பிராய பேதங்கள் நிச்சயம் இருக்கும். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் மற்றும் பெரியபுராணம் முதலிய காப்பியங்களை விட முதன்மை வழங்குவதும் அவற்றோடு ஒப்பக்கொள்ளுவதும் ஆய்வுக்குரியனவே.

ஈழத்து அறிஞர்கள் குறித்து பெருமிதங் கொள்ளும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இரகுவம்மிசம் செய்த அரசகேசரியாரை இனித்த கவிதைகள் தந்த கவித்துவ சாமர்த்தியங் கொண்டோர் வரிசையில் வைக்கவில்லை என்பது அவதானத்துக்குரியது.

'சபாபதி நாவலரும் அரசகேசரி போலவே ஒரு மகா வித்துவான். இந்தப் பெரிய மகாவித்துவான்களைப் புலவர் வரிசையில் எடுத்துச் சொல்ல நான் விரும்பவில்லை. கவித்துவ சாமர்த்தியம் வாய்ந்தவர்களால் இனித்த கவிகள் செய்தவர்களையே புலவர் வரிசையில் வைத்துக் கொள்ள விரும்புகிறேன். வித்துவான்களைப் பற்றிச் சொல்லுதற்கு வேறொரு வித்துவ வரிசையை வைத்துக்கொள்ளலாம்.'

என்கிறார் பண்டிதமணி. இவர் கூற்றுப்படி இரகுவம்மிசம் அத்துணைக் கவித்துவ முக்கியத்துவம் உடையதன்று.

எனினும், இரகுவம்மிசப் பாடல்களிற் கணிசமானவை கவித்துவம்மிக்கனவாகக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. வடமொழி இரகுவம்மிசத்தில் காணப்படாது தமிழ்க் காவியத்திற் காணப்படும் ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகரப்படலம் ஆகியவற்றில் அரசகேசரியாரின் கவித்துவ உளத்தை தரிசித்தல் சாலும். உதாரணமாக ஒரு பாடலைக் காணலாம்.

*பச்சடைப் பதுமத் தாதி பாங்குறப் பாய்காற் பாணி*
*நிச்சய மருத்துச் செய்ய நீலங்க ணோக்கி நெக்க*
*வச்சில தேரை வாய்விட் டாற்றமெல் லணையினாய*
*கச்சப வெரிந்மீ தேறிக் கம்புசூல் கழிக்கு மாதோ.*

இப்பாடலில், சங்கு கருவொன்றை ஈனும் காட்சியினைக் காட்டப்புகும் கவிஞர், இதற்கு கர்ப்பணித்தாயின் மருத்துவமனைப் பிரசவக் காட்சியை உருவகம் செய்துள்ளார். 'சங்கு, பசிய இலைகளையுடைய தாமரை மலராகிய தாதி பக்கத்தில் பொருந்த, பாய்கின்ற கால்வாயிலுள்ள நீர் உண்மையாக மருத்துவஞ் செய்ய, நீலங்கள் பார்த்து மனம்நெகிழ, அங்குள்ள சில தேரைகள் வாய்விட்டுப் புலம்ப மெல்லிய அணைபோலக் கிடக்கின்ற ஆமையின் முதுகில்மேல் ஏறிக் கருவை ஈனும்' எனும் காட்சிச் சித்திரிப்பு அரசகேசரியாரின் கற்பனையாற்றலை வெளிப்படுத்துகிறது.

இத்தகைய கவித்துவச்சிறப்பைக் காளிதாசனின் காவியத்திற் காணப்படாத ஆற்றுப்படலம் முதலியவற்றிலேதான் காணமுடிகிறது என்று சொல்வதற்கில்லை. பெரும்பாலும் உவமைகள் முதலிய அணிகளை மூலகாவியத்தின் வழிநின்று அவ்வாறே கவிஞர் பயன்படுத்தியிருக்கின்போதும் சில இடங்களில் காளிதாசனுக்கு வேறுபட்டு நடந்திருக்கவும் அவ்விடங்களிலும் கவித்துவத்தை வெளிப்படுத்தியிருக்கவும் காணலாம். உதாரணமாக இரகு கதியுறுபடலத்தில் தனது மகனான அயனுக்கு அரசாட்சியை வழங்கியதன் பின்பான இரகுவின் அறிவுரைப்பகுதியை எடுத்துக்காட்டலாம். மூலகாவியத்திற் காணப்படாதபோதும் அரசுரிமை பெற்ற புதிய மன்னனாகிய அயனுக்கு, இரகு சிறந்த அறிவுரைகள் வழங்கும் பகுதியை அரசகேசரி அமைத்தமைக்கு அரசாளும் வம்சத்தில் உதித்து அரசநீதி போன்றவற்றை அரசகேசரி அறிந்திருந்தமையும், கம்பராமாயணத்தில் இராமனுக்கு வசிட்டன் அறிவுரை வழங்கிய பகுதி முதலியவற்றைக் கற்றறிந்திருந்தமையும் காரணங்களாகலாம்.

எவ்வாறாயினும் இவ்விடத்தும் அரசகேசரியாரின் கவித்துவம் புலப்படுகிறது என்பது பின்வரும் பாடல்களால் நிரூபணமாகிறது.

*நந்தன வளர்த்தி நன்னர் நல்லறச் சிவைக ளூன்றித்*
*தந்திர முதல வாறு தடம்பணைப் போக்கி நீதிச்*
*செந்தளி ரீன்று சாம முதலிய சிறந்த நான்கு*
*பைந்தரு மூன்று சித்திப் பலநனி பயக்கு மன்றே.*

*அங்கமோ ரேழு மங்க மானனந் தூதர் வேய்கள்*
*செங்கணாய்ந் தடக்க றானே தெறப்படா வரணஞ் சீர்சால்*
*பங்கமின் மதியே பற்றும் படையென வுணர்ந்து கோடி*
*துங்கவெங் கரட வேழச் சுடர்மணி முடியி னார்க்கே.*

வடமொழிக் காவியத்தின் வழிநின்று பெரும்பான்மையும் செல்லும் கவிஞர் இடையிடை மூலநூலில் காட்டப்படாத காட்சிகளையும் விடயங்களையும் வெளிப்படுத்தியிருப்பதன் மூலம் தமது தனித்துவமான கவித்துவத்தை வாசகர்கட்கு உணர்த்த விழைந்துள்ளார் எனலாம். இதற்கு மாலையீட்டுப் படலம் மிகச்சிறந்த உதாரணமாகும்.

தாம் இப்படலத்தில் கூறுவதற்கென எடுத்துக்கொண்ட சுயம்வர மணத்தின் சாயலை முன்னமே இயற்கைக் காட்சிகளில் தற்குறிப்பேற்றமாய்க் கவிஞர் அமைத்துக்காட்டும் பாடல்கள், அவருடைய கற்பனையாற்றலை நன்கு புலப்படுத்துகின்றன. இந்துமதியின் சுயம்வரக் காட்சியில் இடம்பெறும் மன்னர்அறிமுகம் போன்றவற்றைக் காளிதாசன் வழிநின்று கூறும் அரசகேசரியார் காட்டும் இவ்வியற்கைக் காட்சியை காளிதாசனின் மூலத்தில் காணமுடியவில்லை. எனவே, இப்பகுதி அரசகேசரியாரின் சொந்தக் கைவண்ணத்தைக் காட்டவல்ல இடமாகிறது.

சுயம்வரம் நடக்கும் அன்றைக்கு மணப்பெண்ணாய் அத்தேசத்துப் பெருவீதி அலங்கரிக்கப்பட்டிருக்கிறதாம். கஸ்தூரி கலந்த நீரில் குளித்து, மாலை, பொற்கொடிக, கலவைச்சாந்து ஆகியவற்றையும் ஆடை, ஆபரணங்கள் பலவற்றையும் அந்த மணப்பெண் அணிந்திருக்கிறாள். பசிய வாழைகளே அம்மணப்பெண்ணின் தொடைகள். பொற்கொடிகளே அவளது கைகள். நீண்ட கமுகே அவள் கழுத்து, மணி பதித்த நிறைகுடங்களே முலைகள். கோபுரவாசலே புகழப்படும் முகம். மாடங்கள் மீது படிந்துள்ள மேகங்களே அவளின் கூந்தல்.

கலவைச் சாந்தையும் ஆபரணங்களையும் பொடிகளையும் இரத்தினங்களையும் பிறவற்றையும் ஏந்தி நிற்கின்றனவும் இசை ஒலிப்பனவுமாகிய சின்னஞ்சிறு வீதிகளெல்லாம் இப்பெருவீதி மணப்பெண்ணின் தோழிகளாய் அவளைத் தழுவி அழைத்து வருகின்றன.

இவ்வேளையில் பொற்கொடிகள் பூசி மண அலங்காரத்தோடு சூரியனாகிய மணமகன் திருமண மண்டபத்திற்கு வர வேதியர்கள் மந்திரம் ஓதத் தொடங்கினர். சங்கு ஆரவாரித்து ஒலித்தன. விளங்கும் மாணிக்கமாகிய அக்கினிக்கு முன்னால் மெல்ல மணப்பெண்ணின் கரத்தை மணமகன் தீண்ட, அங்கு கூடிநின்ற பெண்கள் சிவிறி நீராய்ப் பன்னீரைத் தெளித்து ஆனந்தித்தார்கள்.

இவ்வாறு அன்று அதிகாலை, மக்கள் தமது நகரை அலங்கரித்துப் பொடிகளும் நீரும் தூவி, நிறைகுடம் வைத்து சுயம்வரத்திற்கு வருவோரை வரவேற்கப் புரிந்த ஆயத்தச்செயற்பாடுகளை, வீதிப்பெண்ணைக் கரம் பற்றிய சூரிய மணமகனின் திருமண நடவடிக்கைகளாய் காட்சிப்படுத்தும் பின்வரும் பாடல்கள் அரசகேசரியாரின் கற்பனையாற்றலைக் காட்ட வல்லன.

*தண்ணறு நானநீர் படிந்து தாமமுஞ்*
*சுண்ணமுங் கலவையுந் துதைந்து சூழ்துகில்*
*வண்ணவான் கலன்பல புனைந்த மாமணப்*
*பெண்ணெனப் பொலிந்தது பெரிய வீதியே.*

*வரம்பில விலைமணிக் கலிங்கம் வவ்விய*
*வரம்மையொண் குறங்குபொன் னணிந்த நீள்கொடி*
*கரம்புது மணியணிக் கவின்கொள் கந்தர*
*நிரம்புமுத் தரும்பிய நெடிய பூதமே.*

தமது ஆறாவது சர்க்கத்தில் காளிதாசர் கூறியுள்ள இந்துமதி சுயம்வரப் பகுதியை அரசகேசரியார் மாலையீட்டுப் படலமாகக் காவியத்தில் அமைத்துத் தந்துள்ளார். மூலத்தில், அயன் சுயம்வர மண்டபத்திற்குச் செல்லுகின்ற காட்சி விபரித்துச் சொல்லப்படாமல் வெறுமனே ஒரேயொரு சுலோகத்தில் மட்டும் கூறப்பட்டுள்ளது. கம்பராமாயணம் முதலிய பாரகாவியங்களில் உலாவியற் படலம் முதலியன தலைமக்களது உலாவைச் சிறப்பித்திருப்பதையும், தமது சமகாலத்தில் இறைவர் உள்ளிட்ட நாயகர்களை சிறப்பித்துப் பாடும்

உலாப் பிரபந்தங்கள் தனியே தோற்றம் பெறத் தொடங்கியிருப்பதையும் அவதானித்திருக்கவல்ல அரசகேசரியார் மூலத்தில் விரிவாகச் சொல்லப்படாதபோதும் அயன் சுயம்வர மண்டபத்தை அடைவதை ஓர் உலாவாக கவித்துவத்தோடு சித்திரிக்கப் புகுந்துள்ளார்.

*புல்லப் போன புணர்ப்பாதைக்*
*கொல்லப் போன குழைச்சோதி*
*செல்லப் போமி னெனச்சேணிற்*
*சொல்லப் போன தொடைக்கானம்.*

சுயம்வர மண்டபத்திற்குச் செல்லவரும் அயனை காணவெனவும் தழுவவெனவும் இளம்பெண்கள் உள்ளிட்ட பலரும் வீதியெங்கும் நிறைந்திருப்பதான காட்சியை உயர்வு நவிற்சியாய்க் காட்டுகிறார் கவிஞர். இவ்வாறு நெருங்கி மிதிபட்டுவரும் மக்களை நெறிப்படுத்தவென ஒழுங்கமைப்புப் பணிகளைச் செய்கின்ற இரு சேவகர்களைத் தமது கற்பனையில் கவிஞர் காட்டும் காட்சியைத் தரும் இப்பாடல், எளிமையான நடையிலும் கவித்துவத்தை வெளிப்படுத்த வல்லவர் அரசகேசரியார் என்பதை நிரூபிக்க வல்லது. 'அயனைத் தழுவப்போன சூழ்ச்சியுடையவர்களாகிய மகளிரை அவனுடைய குண்டலத்தில் எழுந்த ஒளி கொல்லச் சென்றது போலச் சென்றது. அவனுடைய மாலையினின்றும் எழுந்த மணமானது தூரப்போங்கள் என்று தூரத்திலே சொல்லப்போவது போலச் சென்றது' எனப்பொருள்படும் இப்பாடலில் மக்களை விலத்தும் இரு பணியாளர்களாக அரசரின் குண்டலஒளியும், மார்புமாலையின் வாசமும் தற்குறிப்பேற்ற அணியாகச் சொல்லப்பட்டுள்ளன. இதன்மூலம், மானுடப் பணியாளர்கள் சென்று விலத்த முடியாத அளவுக்கு மக்கள் கூட்டம் நிரம்பியிருந்தது என்பது குறிப்பால் உணர்த்தப்படுகிறது. எனினும் இந்த அளவில் இக்கவிதையின் பொருண்மை நின்றுவிடுமாயின் அது போதுமானதல்ல. ஒரு காவிய ஆக்ககர்த்தா இதற்கப்பாலும் மேலெழவல்ல ஆற்றல் உடையவனாய் இருத்தல் அவசியம்.

குண்டலத்தின் ஒளி, மாலையின் வாசம் ஆகிய இரண்டினுள்ளும் ஒளியின் விரைவு கருதி அதன் செயற்பாடு முன்னே வைக்கப்பட்டது. மேலும் அயனை அணைத்து அவன் மார்பைத் தழுவ முன்வரும் மகளிர்களை கொல்லுமளவுக்குக் கோபித்து கோபஒளி வீசும் குண்டலங்கள், இவ்வாறு கோபிப்பதற்கான அடிப்படை இதுநாள் வரை அவன் மார்பைச் சேரமுடியாது

நாம் தொங்கிக்கொண்டுள்ளோமே என்னும் ஆற்றாமையால் விளைந்தது. இங்கு ஒளியினதும் வாசத்தினதும் செயற்பாடுகளைக் கூறும் கொல்லப்போன, சொல்லப்போன என்பவற்றின் து விகுதியைக் கெடுத்துக் கவிஞர் பயன்படுத்தியிருப்பது, அவற்றின் பணி விரைவில் முடிந்து விடாதபடிக்கு முடிவிலியாய் மக்கள் தொடர்ந்து வந்தார்கள் என்பதையும், முன்னே விலக்கப்பட்டவர்கள் கூட இவற்றின் கட்டளையையும் மீறி, மீண்டும் மீண்டும் அயனை நெருங்கி வந்துகொண்டிருந்தார்கள் என்பதையும் சுட்டிநிற்கின்றது.

இவ்வாறான இரசனை வாசிப்புக்கும் மேலாக, இந்த உலாவியற் காட்சியூடு மனிதர் இயல்பையும் மறைமுகமாகக் கவிஞர் குறிப்பிட்டுச் செல்லும் பாங்கு பாராட்டுக்குரியது. பார்வைக்கு மட்டும் வெளித்தோற்றத்தால் மகிழ்ச்சி தரத்தக்க குண்டலத்தின் ஒளியையும், தோற்றத்தால் பார்வைக்கு மகிழ்ச்சியையும் நாற்றத்தால் வாசனையையும் தந்தவண்ணம் உள்ளீடாகத் தேனையும்கொண்டுள்ளமாலையின்வாசத்தையும்கூறவெனஎடுத்துக்கொண்டது மானுட இயல்பையும் சுட்டுவதற்காகத்தான். குண்டலத்தின் சோதியோ நெருங்கி வருவாரை அனைவர் முன்னிலையிலும் கொல்வதற்காகக் கடுங்கோபத்துடன் போகின்றது. அதன் செய்கையில் நனிநாகரிகம் வெளிப்படவில்லை. வெறுமே புறச்சிறப்புகளை மாத்திரம் கொண்டு அகவளர்ச்சி இல்லாதார் செய்கையும் இவ்வாறானதே. ஆனால் புறமும் அகமும் சிறந்திருக்கின்ற மாலையோ, நெருங்கி வருவார்களை அனைவர் முன்னிலையிலும் கொல்வதுபோலக் கோபிக்காது, தூர அழைத்துச்சென்று தன்மையாகச் சொல்லித் தடுக்கின்றன. இவ்வாறே அகமும் சிறக்கும் மானுடர்கள் மற்றவர்க்கு அறிவுறுத்தும்போது, தனிமையில் தண்மையாகச் சொல்வர் என்னும் குறிப்பும் கவிஞரால் பொதித்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, சித்திரிப்புத் திறன் கொண்டிருந்துள்ள அரசகேசரியாரது காவியம் பெரும் பிரபலம் உறாமைக்கும் பொதுமக்கள் அறிமுகத்திற்கு வாராமைக்கும் உரிய காரணம் காவியத்தின் நடையிறுக்கமேயாகும். கம்பராமாயணத்தை அடுத்தவரிசையில் இரகுவம்மிசத்தை வைக்கும் கணேசையர் கூட, 'கடினமான சொற்பிரயோகங்களை உடைமையானும் வடமொழி நூலைப் பெயர்த்துப் பாடினமையானும் கற்றோர்க்கன்றி மற்றோர்க்குணர்ந்து சுவைத்தல் கூடாதாயிற்று' எனக்கூறியிருக்கக் காணலாம். மூலநூலின் ஆசிரியரான மகாகவி காளிதாசர் சாதாரணரும் புரிந்துகொள்ளத்

தக்க வைதர்ப்பநடையைக் கையாளுவதிற் சிறந்திருந்தமை கண்டும், தாம் பெரிதும் பின்பற்றிய கம்பராமாயணத்தின் பல பாடல்கள் இறுக்கமின்றி எளியநடையில் அமைந்திருக்கக் கண்டும் தாமியற்றிய காவயத்தை எளிமையான நடையிலே அமைக்க அரசகேசரி தவறியுள்ளார். இவர் காவியம் மடக்கு முதலிய கடுமையான அணிகள் நிறைந்து புரிவதற்கு அரியநடையில் தோன்றியமைக்கு அக்காலத் தமிழக இலக்கியச்சூழலே முதற்காரணமாக அமைந்திருக்க வேண்டும். தமது நூல் அறிஞர்க்குரியதேயன்றி சாதாரண பொதுமக்களுக்கு உரித்தானதல்ல எனும் தெளிவோடேயே கவிஞர் காவியம் புனைந்திருப்பதை அவர் வாயிலாகவே அறியலாம். ‘அறி யகத்தை வெல் அற்புதர்ச் சேரின்,’ ‘கற்ற சிந்தையர்ச் சேரின்’ எனத் தொடங்கும் பாயிரப் பாடல்கள் இதனை நிரூபிக்கின்றன.

## VI

‘கற்றார் கவியின் பெரிதாம் தமிழ்க் கம்பநாடன்’ எனக் கம்பரைப் போற்றியுள்ள அரசகேசரி தமது காவியத்தின் பல பகுதிகளைக் கம்பர் காட்டியவழியில் நடாத்தியுள்ளாரென்பது தெளிவு. ஒருவகையில் இரகுவம்மிசக் காவியம் குட்டி இராமாயணம் எனக் கூறத்தக்கதாக ஆ.வேலுப்பிள்ளை குறிப்பிட்டிருப்பதாவது, அத்துணை தூரம் கம்பராமாயணச் செல்வாக்கு இரகுவம்மிசத்தில் பதிந்திருப்பதைக் காட்டுகிறது. மேலும், அரசகேசரியார் சிலப்பதிகாரப் பயிற்சியும் சங்கநூற் பயிற்சியும் மிக்கவர் என்பதும் காவியப் பகுதிகளாலே தெரியவருகிறது. பழந்தமிழ் நூல்களில் கவிஞருக்கு இருந்த ஈடுபட்டைஇரகுவம்மிச மேற்கோள்கள் மூலம் ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதத்தில் கணேசையர் எடுத்துக் காட்டியிருப்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

இவற்றோடு அரசகேசரியாரிடத்துப் பெரியபுராணப் பாதிப்பும் இருந்திருக்கலாமோவென எண்ணத் தோன்றுகிறது. செகராசசேகரன் பாடிய கைலாசபுராணத்தில் பெரியபுராணத்தின் செல்வாக்கு உண்டென்பதோடு கோணேசர் கல்வெட்டு முதலிய நூல்களும் பெரிய புராணத்தின் தாக்கத்திற்குச் சிறிதளவாவது உள்ளாகியிருந்தன என்பது இங்கே கருதத்தக்கது (பத்மநாதன், சி., ப.318). இவ்வாறு தமது குலத்து முன்னோரும், தமது நேர்முற்கால/ சமகால இலக்கியகர்த்தர்களும் பெரியபுராணத்தால் கவரப்பட்டிருந்தமை போலவே அரசகேசரியாரும் கவரப்பட்டிருக்கலாம். தனியொரு தன்னிகரில்லாத்

தலைவனைப் பாடாது பல தலைவர்களைப் பாடிய பெரியபுராணம் தமிழுலகத்தில் நிலைபேறடைந்து புகழ்பெற்று விளங்கியமையைக் கண்ணுற்ற அரசகேசரியார் தாமும் பல அரசர்களைக் கதை நாயகர்களாகப் போற்றும் காவியத்தைப் பாட முன்வந்தார் எனக்கொள்வதும் நேரியதே. இவர் பெரியபுராணத் தாக்கத்திற்கு ஆளானவர் என்பதற்கு தொடக்கக் காப்புச் செய்யுளே சான்றாக வல்லது. 'உலகம் யாவையும்' என கம்பராமாயணத்தைப் போன்று செய்யுளைத் தொடங்கும் அரசகேசரி, 'வாழ்த்தி வணங்குவாம்' எனும் பெரியபுராணக் காப்புச் செய்யுளைப் போன்று 'அருட்கடன் மூழ்குவாம்' என முடித்திருப்பது நினையத்தக்கது.

# இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் சிறுவர் பாடல்களின் செல்நெறி

## - வடபுலத்தை மையப்படுத்திய ஒரு பார்வை



ச. லலீசன்

தமிழ் இலக்கியப் பரப்பில் சிறுவர் இலக்கியத்திற்குக் காலம் குறிப்பிட்டுக் காட்டுவது கடினமானது. இலக்கியத் தோற்றத்திற்காகக் கூறப்படும் காரணங்களையே சிறுவர் இலக்கியத்தின் தோற்றத்திற்கான காரணங்களாகவும் குறிப்பிடுவர். வாய்மொழி மரபின் செல்வாக்கு சிறுவர் பாடல்களின் எழுச்சிக்கு அடிநாதமாகக் கொள்ளப்படுகின்றது.

சிறுவர்களுக்காகப் பெரியவர்கள் பாடும் வாய்மொழிப் பாடல்களையும் சிறுவர்கள் கூடிக்குலாவி விளையாடும் போது தாமாகப் பாடும் பாடல்களையும் நாட்டுப்புறப் பாடல்களில் தாராளமாகக் காணலாம். சமூக பொருளாதார பண்பாட்டு மாற்றங்களினால் சிறுவர் பாடல்களுள் பல மறைந்துவிட்டன எனப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா சுட்டிக்காட்டுகின்றார்.

தாய்மார்கள் குழந்தைகளை மகிழவைக்க

*'அம்புலி மாமா வா வா வா*
*அழகழ சொக்கா வா வா வா'*

என்று பாடும் வாய்மொழி மரபு இன்றும் யாழ்ப்பாணத்தில் காணமுடிகின்றது.

சிறுவர் இலக்கியம் என்ற எண்ணக்கரு சிறுவர்களுக்காக எழுதிய பாடல்கள், கதைகள் முதலியவற்றைக் குறிக்கும் இதே வேளை சிறுவர்கள் படைக்கும் இலக்கியங்களையும் குறிக்கும். பெரும்பாலும் சிறுவர்கள் கூடிக்குலாவி விளையாடும்போது பாடல்கள் பாடும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். இப்பாடல்களைப் பெரியவர்கள் இயற்றினார்களா? அல்லது சிறுவர்கள் இயற்றினார்களா? என்பது ஆய்விற்குரியது. இயல்பாக வாய்மொழியாக எழுந்து இவை வழக்கத்தில் உள்ளன.

குழுந்தை, மழலை, பிள்ளை, சிறுவர் என்ற சொற்களுக்கிடையே சிறுசிறு பேதங்கள் காணப்பட்டாலும் இக்கட்டுரையில் சிறுவர் பாடல்கள், குழுந்தைப் பாடல்கள் என்ற மொழிப பிரயோகங்கள் ஒரே பொருளிலேயே நோக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பிரதேசத்திலேயே பெருமளவான குழந்தைப்பாடல்கள் காணப்படுவதாகப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா குறிப்பிடுகின்றார். வகைமாதிரிக்காகப் பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

*ஒன்று இரண்டு மூன்று நாலு*
*ஐந்தாம் நம்ப ரெடி*
*ஐந்தாம் நம்பர் வீட்டுக்குள்ளே*
*றங்குப் பெட்டி யெடி*
*றங்குப் பெட்டியைத் திறக்கப் போனா*
*சிங்கக் குட்டி யெடி*
*சிங்கக் குட்டியைப் பிடிக்கப் போனா*
*சீறிப் பாயு தெடி*

இங்கு ஒருவித ஓசை ஒழுங்கு காணப்படுகின்றது. இங்கு இலக்கங்களை அறிமுகம் செய்யும் பண்பு பாடலுள் பொதிந்திருப்பதைக் காணமுடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் இன்றும் பிரபலமாகப் பாடப்படும் சிறுவர்பாடல்

*நெய் நெய் நெய்*
*அரைப் போத்தல் நெய்*
*அத்தான் வந்து*
*சொன்ன தெல்லாம்*
*பொய் பொய் பொய்*
*நெத்தியிலே நீலப்பொட்டு*
*வைய் வைய் வைய்*

இப்பாடலில் நெய், பொய், வைய் (வை) என்ற ஒத்த ஓசைச் சொற்கள் வழங்கப்படுவதைக் காணமுடிகின்றது.

சிறுவர்கள் விளையாடும் கிராமிய விளையாட்டுக்களில் ஒழித்து விளையாடுதல் முக்கியமானது. ஒருவருடைய கண்ணை மற்றையவர் பொத்திக் கொண்டு பின்வருமாறு பாடுவார்கள்

*இவடம் எவடம்?*
*புங்கடி புளியடி*
*புங்கடி புளியடி*
*எங்கடி போறாய்?*

இவ்வாறு வாய்மொழி மரபில் உலாவந்த பாடல்கள் எழுத்திலக்கிய மரபில் இணையும் வாய்ப்பு உருவானது. ஆயினும் வாய்மொழி மரபு எழுத்திலக்கியத்தினுள் புகுந்த மரபு மாற்றம் குறித்து விரிவான ஆய்வுகள் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

பொதுவாக ஒரு வயது தொடக்கம் ஐந்து வயது வரை பாலப்பருவம் என்றும் ஆறு வயது தொடக்கம் பன்னிரண்டு வயது வரை குழந்தைப் பருவம் என்றும் பதின்மூன்று வயதுக்கு மேல் இருபது வயது வரை குமரப் பருவம் என்றும் குறிப்பிடும் வழக்கம் உள்ளது. ஆயினும் இது குறித்த கருத்து வேற்றுமைகளும் உள்ளன.

சிறுவர் இலக்கிய வரலாற்றில் இலங்கைக்குச் சிறப்பானதோர் இடமுண்டு. சிறுவர் பாடல்கள் என்ற உணர்வோடு முதன்முதலில் குழந்தைப் பாடற்றொகுதி ஒன்று 1918 ஆம் ஆண்டு ச.வைத்தியநாதர் என்பவரால்

வெளியிடப்பட்டுள்ளது. ‘தமிழ்ப்பாலபோதினி’ என்ற பெயரில் இப்பாடற் தொகுதி வெளிவந்தது. இக்குழந்தைப் பாடற்றொகுதி பற்றிக் கனக. செந்திநாதன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

‘தமிழ்நாடு, குழந்தை இலக்கியம் – முக்கியமாகக் கவிதைகள் பற்றிச் சிந்திக்கும் முன்பே ஈழத்தில் இது தோன்றி வளரத் தொடங்கிவிட்டது. பல பாடல் தொகுதிகளை ஈழத்துச் சான்றோர் தொகுத்து வெளியிட்டு நமக்கு வழிகாட்டியிருக்கின்றார்கள். 1918 ஆம் ஆண்டிலே வித்தியாதிகாரிகளின் விருப்பத்தின்படியும் அனுமதிப்படியும் இலங்கை அரசாட்சியரின் பிரதான முதலியாராகிய ச.வைத்தியநாதரால் தமிழ்ப்பாலபோதினி என்ற குழந்தைப் பாடல்களின் அபிநயப் பாடல் தொகுதியொன்று தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு இத்துறையில் கால் எடுத்து வைக்க எத்தனையோ வருடங்களுக்கு முன்பே ஈழம் முயற்சித்துள்ளது பெருமைப்படத்தக்கதாகும்.’

1935 ஆம் ஆண்டு க.ச. அருணந்தி என்பவர் பிள்ளைப்பாட்டு என்னும் பாடற்றொகுதியை வெளியிட்டுள்ளார். இது வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்க வெளியீடாக வெளிவந்துள்ளது. தமிழாசிரியர்களிடையே குழந்தைப் பாடற் போட்டி ஒன்றை நடாத்தி பரிசுக்குரியவையாகத் தோந்தெடுக்கப்பட்ட பாடல்களே பிள்ளைப்பாட்டு என்ற நூலில் வெளியிடப்பட்டன.

குழந்தைகளின் இயல்புகள், சூழல், விருப்பு முதலியவற்றோடு அவர்களுக்கு நற்போதனையையும் வழங்க வேண்டும் என்ற கருத்தினை இதன் தொகுப்பாசிரியர் கொண்டிருந்தார். கல்வியாளனாகவும் உளவியல் கற்றவனாகவும் விஞ்ஞான அறிவுடையவராகவும் திகழ்ந்த அருணகிரி இப்பாடற் தொகுதி பற்றிக் குறிப்பிடுவது இலங்கையில் சிறுவர் பாடல்களின் செல்நெறியை அறிவதற்கு அவசியமானதாகும்.

‘யாம் பாலர்களைப் பயிற்றுங்கால் அவர்களது உளநிலை விருப்பு வெறுப்புக்கள் ஆற்றல்கள் ஆகியன பொருட்படுத்தப்படாது மழுங்கடிக்கப்படுகின்றன. பாலர்களது இயற்கைக்குப் பொருந்த அவர்களை நன்கு வளர்ச்சி பெறச் செய்யாததனால் அவர்களது இக்கால சீவியம் பங்கமுறுவதன்றி அவ்விதமே அவர் பிற்கால சீவியமும் பங்கமுறும் என்பது ஒளநூல் ஆராய்ச்சி வழியாகவும் அனுபவ வாயிலாகவும் யாம் அறிந்துள்ள பேருண்மையாகும். பாஷையையும் நற்போதனைகளையும் சிறுபராயத்தில்

கற்பிக்கும் ஆசிரியர்கள் தாளம், இராகம், அபிநயம் முதலியவற்றில் பாலர்களுக்குப் பெரிய விருப்பம் உண்டென்றும் தங்கள் சீவியத்தோடு சம்பந்தப்படாத விஷயங்களை அவர் மனம் நாடாதென்றும் உணர்ந்ததிலே அவ்வாசிரியரின் முயற்சியால் பெறப்படும் பயன், எதிர் நோக்குடைய இருவர் ஒரு வழிச் செல்ல முயல்வதனால் பெறப்படும் பயனை ஒக்கும் என்ப'

குழந்தைகளின் உளநிலைகளைக் கருத்திற்கொண்டு இப்பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

அருணந்தியின் பிள்ளைப்பாட்டுத் தொகுதியைத் தொடர்ந்து இலங்கையில் பல சிறுவர் பாடல்கள் வெளிவந்தன. சிறுவர் இலக்கியம் என்றாலே சிறுவர் பாடல்கள் தான் எனக் கருதும் மனப்பாங்கு சமூகத்தில் வேரூன்றத் தொடங்கியது. சிறுவர் பாடல்கள் எழுதியோருள் பலர் தொழில்சார் நிலையில் ஆசிரியர்களாக அல்லது கல்விப் புலத்துடன் தொடர்புடைய தொழில் ஆற்றுவர்களாக விளங்கினர். வேந்தனார், கவிஞர் மு. செல்லையா, யாழ்ப்பாணன், மயிலங்கூடலூர் பி.நடராஜன் (ஆடலிறை), பா.சத்தியசீலன், இ.நாகராஜன், கல்வயல் வே.குமாரசாமி, த.துரைசிங்கம் போன்றோர் இங்கு சுட்டிக்காட்டத் தக்கவர்கள்.

சிறுவர்களுக்கான பாடலை இயற்றுவது இலகுவான காரியமாகத் தென்படலாம். ஆனால் சிறுவர் உளவியலை அறிந்து அவர்களது உளவயதிற்கேற்ப எழுதப்படும் பாடல்களே சமூகத்தில் நிலைத்திருக்கின்றன. அந்த வகையில் சிறுவர்பாடல்கள் வெளிப்படுத்த முயலும் சில செய்திகளை நோக்குவோம்.

### கதைகளைக் கூறுதல்

உரைநடையில் கூறப்படும் கதைகளை கிதை வடிவிலே அமைத்துக் கூறும் மரபு ஒன்று சிறுவர் பாடல்களில் காணப்படுகின்றது. வகை மாதிரிக்காக பிள்ளைப்பாட்டு' தொகுப்பில் இடம்பெற்றுள்ள கரவெட்டி க.சின்னத்தம்பி இயற்றிய பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

*தேசஞ் சுற்றிப் பார்ப்பதற்கு*
*சென்ற தொரு சீமான்*
*சென்ற தொரு சீமான்*

*செத்தது போற் கிடந்த தொரு*
*சிறு குரங்கைக் கண்டான்*
*சிறு குரங்கைக் கண்டான்*

உறவுமுறைகளைக் கூறுவன

சிறுவர் பாடல்களில் உறவுமுறைகளைப் பற்றிய பாடல்கள் குழந்தைகளின் உளநிலையுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டவையாக அமைந்துள்ளன. அப்பா, அம்மா, மாமன், மாமி, பாட்டன், பாட்டி, அண்ணன், அக்கா முதலான உறவுகளைக் குறித்தனவாகவும் குடும்ப ஒற்றுமையை வலியுறுத்துவனவாகவும் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக கோப்பாய் சிவம் எழுதிய பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம்

*'எங்களது குடும்பம் ஒரு*
*இனிய குடும்பம்*
*தங்கமான குடும்பம் அது*
*நல்ல குடும்பம்*

*அப்பா தினமும் வேலை செய்து*
*உழைத்து வருகிறார்*
*அம்மா எம்மை அன்புடனே*
*வளர்த்து வருகிறார்*

*அண்ணா என்னைப் பலஇடமும்*
*அழைத்துச் செல்கிறார்*
*அக்கா என்னை அலங்கரித்து*
*ஆனந்தம் கொள்கிறாள்*

இப்பாடலில் உள்ள உழைத்து, அலங்கரித்து, ஆனந்தம் என்ற சொற்கள் பிள்ளைகளால் விளங்கிக் கொள்ளப்படுவதற்குக் கடினமானவையாக இருப்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

எளிமையான சந்தநயம்

குழந்தைப் பாடல்கள் எளிமையான சந்தநயம் கொண்டனவாக அமைக்கப்படுகின்றன. சொல், பொருள், என்பவற்றில் எளிமைத் தன்மையைக் கொண்டுள்ளன.

எடுத்துக் காட்டாக வித்துவான் வேந்தனாரின் 'அம்மா' என்ற பாடலைக் குறிப்பிடலாம்

*காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றி*
*கட்டிக் கொஞ்சும் அம்மா*
*பாலைக் காய்ச்சி சீனிபோட்டுப்*
*பருகத் தந்த அம்மா*

*புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்*
*பூவுஞ் சூட்டும் அம்மா*
*அழுது விழுந்த போதும் என்னை*
*அணைத்துத் தாங்கும் அம்மா*

*அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி*
*அழிவு செய்த போதும்*
*பிள்ளைக் குணத்தில் செய்தா னென்று*
*பொறுத்துக் கொள்ளும் அம்மா*

அறிவியல் சார்ந்த செய்திகளைக் கூறுவன

அறிவியல் சார்ந்த செய்திகளைக் கூறும் சிறுவர் பாடல்கள் பெரியவர்களால் வரவேற்கப்படுகின்றன. இவை சிறுவர்கள் விரும்பும் வகையில் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

எடுத்துக் காட்டாகத் தில்லைச் சிவனின் செய்ம்மதி என்ற கவிதை அறிவியற் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது.

*உலகம் சிறுபெட்டிக்குள்ளே*
*ஒடுங்கிப் போச்சுது*
*உருளு ஒரு 'சுவிட்சுப்' போட*
*உலகம் தெரியுது*

*சிங்கப் பூரின் கட்டிடங்கள்*
*எட்டிப் பார்க்குது*
*சிங்கம் புலி யானை எல்லாம்*
*வீட்டில் வருகுது*

*அண்ணன் சீமை நாட்டில்நின்று*
*நேரே பேசுறார்*
*வண்ணச் சோலை சின்னத்திரையில்*
*வந்து போகுது*

*செய்மதிகள் வானில் சுற்றி*
*வலம் வருகுதாம்*
*செய்திகளை உலகம் எங்கும்*
*ஒளி பரப்புதாம்*

சிறுவர் பாடல்களில் பேச்சு மொழி வெற்றி பெறும் திறத்தையும் மேற்கண்ட பாடலூடாக நோக்க முடிகின்றது.

சிறுவர் இலக்கியம் தொடர்பாக எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள்

சிறுவர் இலக்கியம் விசாலித்த பரப்பைக் கொண்டிருக்கின்றது. இலங்கையின் வெவ்வேறு பாகங்களுக்குச் சொந்தமான பாடல்கள் குறித்த மண்வாசத்துடன் வெளிவருவது இயல்பானதே. இன்று சிறுவர் பாடற் தொகுப்புக்கள் பல வெளிவந்துள்ள போதிலும் சில பாடல்களே சமூக அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. சிறுவர் இலக்கியங்கள் என்ற வரிசையில் சிறுவர் கதைகள், சிறுவர் நாடகங்கள் என்பன அமைந்துள்ள போதிலும் சிறுவர் பாடல்களே சிறுவர் இலக்கியம் என்ற துறையில் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

பெரும்பாலான சிறுவர் பாடல்கள் குழந்தை உளவியலுக்கு அமைவானவையாக அமைந்திருக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக் காணப்படுகின்றது. குழந்தை உளவியல் பற்றிய ஆழமான அறிவைப் பெற்றிருக்காவிடினும் சிறுவர் பாடல்களை எழுதுபவர்கள் ஓரளவுக்காவது குழந்தை உளவிலைத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறுவர் பாடல்களில் பெரும்பாலானவை மோனைச் சிறப்பையே முதன்மைப்படுததுகின்றன. எதுகைச் சிறப்புக் குறித்து இவை அதிகம் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. ஆயினும் சந்த நயங்கள் சிறப்பாக அமைவதற்கு எதுகைச் சிறப்பு அவசியமானது. பெரும்பாலான சிறுவர் பாடல்கள் இசையோடு பாடமுடியாதுள்ளமையை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

சிறுவர் பாடல்கள் புதிய புதிய உள்ளடக்கங்களை நோக்கிப் பயணிக்க வேண்டும். பாடலாசிரியர்களிற் பலர் கூறியது கூறல் முறைமையையே கையாண்டு வருகின்றனர். இதே போல வெளிப்பாட்டு முறைமையிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். பெரும்பாலான பாடல்கள் 'பச்சைக் கிளியே பறந்து வா', 'நிலா நிலா ஓடி வா' என்ற ஒழுங்கில் அமைந்த வெளிப்பாட்டு முறைமையைக் கொண்டிருக்கின்றன.

பாடல்களில் இலக்கண வழுக்கள் இடம்பெறுவது தவிர்க்கப்பட வேண்டும். கதைப் பாடல்கள் எழுதுவோர் பெரும்பாலும் பழைய கதைகளையே கையாண்டுள்ளனர். அறிவியல் கண்ணோட்டத்துடன் புதிய கதைகள் உள்வாங்கப்படுவது அவசியமானதாகும்.

தற்காலத்தில் காட்சித் தொகுப்புக்களுடன் பாடல்களை ஆக்கும் பண்பு மலிந்துவிட்டது. இலத்திரனியல் தொழினுட்பத்தின் பங்களிப்புடன் இவை முன்னெடுக்கப்படுகின்றன. எனவே அறிவியல் சார்ந்த தொழினுட்பம் சார்ந்த உணர்வுத் தொற்றுகையைச் சிறுவர் மனங்களில் விதைப்பது இன்று இலகுவாகியுள்ளது. இதற்கேற்றாற்போல் இன்றைய சிறுவர் பாடல்களின் உருவம் உள்ளடக்கம் என்பனவும் மாற்றங்களைக் காண்பது நலம் பயப்பதாக அமையும்.

உதவியன

01. அருட்சோதி ஆ., அருள் அமுதம் (நினைவு மலர்), வதிரி 2003

02. இரத்தினம். த., (தொகுப்பு) அம்மா தெய்வம் - குழந்தைப்பாடல்கள், இணுவில் 2005

03. குமாரசாமி வே., பாப்பாப்பா, அறிவழகு பதிப்பகம், சாவகச்சேரி, 1984

04. சிவலிங்கராஜா. எஸ். குழந்தை இலக்கிம், தமிழியற் கட்டுரைகள், சுப்பிரமணிம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், 1982

05. மனோன்மணி ச., ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் குழந்தைக் கவிதைகள், ஞானம் சஞ்சிகை, நூறாவது இதழ். 2008

06. யோகராஜா. செ., ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு 2007

# பின் காலனிய இலக்கியம்
# ரஞ்சித் தர்மகீர்த்தி யின்
# 'அஹஸ பொலவ லங்வெலா'
# சிங்கள இளைஞர் நாவலை முன்னிறுத்தி...



**மேமன்கவி**

பின் நவீனத்துவ கலை இலக்கியத்தை பற்றி இன்றைய தமிழ் கலை இலக்கியச் சூழலில் அடிக்கடி பேசப்படுகின்ற 'எதிர்க்கப்படுகின்ற நிலையில், பின்காலனிய கலை இலக்கியங்கள் பற்றிய ஆய்வுக்கான, விமர்சனத்திற்கான தேவை ஒன்று இருக்கிறது. ஏனெனில், தமிழக ஆய்வாளர் ந. முத்துமோகன் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவது போல், நமக்கு குறிப்பாக காலனியங்களின் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளுக்கு பின் நவீனத்துவத்தை விட, பின்காலனியமே பொருத்தப்பாடு உடையது என்பதற்கு இணங்க, பின்காலனிய கலை இலக்கியங்களை அடையாளப்படுத்தல் என்பது நமக்கு தேவையாகிறது.

பின் காலனிய கலை இலக்கியம் எனும் பொழுது, காலனியங்களின் ஆட்சிகளுக்கு பிறகான கலை இலக்கியங்கள் எல்லாமே பின்காலனிய கலை இலக்கியங்கள் தானே? பின் அக்கலை இலக்கியங்களுக்கு பின்காலனிய கலை

இலக்கியங்கள் என்ற அடைமொழி எதற்கு? என கேள்வியும் எழுப்பபடுவதுண்டு. ஆனால் பின்காலனிய கலை இலக்கியங்கள் என்று அடையாளப்படுவதுவதற்கு காலனியங்களின் ஆட்சிகளுக்கு பிறகான காலகட்டம் மட்டுமே பங்காற்றவில்லை. அதற்கு மேலாக, காலனிய ஆட்சிகள் நிலவிய காலகட்டத்தில் அவைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களை பற்றி பேசுகின்ற கலை இலக்கியங்களும் (ஏனெனில் பின்காலனியம் என்பது காலனிய காலத்திலே தொடங்கி விட்ட ஒரு கோட்பாட்டாக இருப்பதனால்) பின்காலனிய கலை இலக்கியங்கள் அடையாளப்படுத்தப்பட, மேலும் காலனிய ஆட்சிகளுக்கு பிறகான காலகட்டத்தில காலனியம் ஏற்படுத்தி சென்ற தாக்கம், செல்வாக்கு, பக்கவிளைவுகள், மற்றும் காலனிய மனோபாவத்தின் நீட்சி போன்ற அம்சங்களின் வழியாக சுதேசிய சமூகங்களில் அது ஏற்படுத்தி சென்ற பல்வேறு பிரச்சினைகளை பற்றி பேசுகின்ற, கலை இலக்கியங்களும் பின்காலனிய கலை இலக்கியங்களாக விசேடமாக அடையாளம் காணுவதே பின்காலனிய விமர்சன–ஆய்வுத் தளத்தின் பணியாக இருக்கிறது.

தமிழில் (தமிழகம்–ஈழம் இரண்டிலும்) கடந்த காலத்தில் பின்காலனிய இலக்கியம் என்பது சரியான முறையில் விமர்சனபூர்வமாக அடையாளப்படுத்தவில்லை எனத் தெரிகிறது.

உதாரணத்திற்கு தமிழ்ச் சூழலில் 60களில் தமிழ் வாசகர் மட்டத்தில் மிகவும் செல்வாக்கு செலுத்திய காந்தீய கோட்பாட்டின் அடிப்படையில் படைக்கப்பட்ட இலக்கியங்களை பின்காலனிய இலக்கியங்களாக நோக்கலாமா? என்ற கேள்விக்கு மத்தியில், மொழிபெயர்ப்பு வழியாக காலனித்துவங்களின் ஆட்சிகளுக்கு உட்பட்ட நாடுகளின் பின்காலனிய இலக்கியங்கள் தமிழில் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது.

அந்த வகையில் சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்ட இங்கு நாம் பேச எடுத்துக் கொண்ட சிங்கள எழுத்தாளர் ரஞ்சித் தர்மகீர்த்தி யின் ‘அஹஸ பொலவ லங்வெலா’ என்ற சிங்கள இளைஞர் நாவலை, சங்கமம் என்ற தலைப்பில் சிங்களத்திலலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ந்து தந்திருப்பவர் ஈழத்தில் சிங்கள–தமிழ் மொழிபெயர்ப்பு பணியில் காத்திரமான முறையில் பணியாற்றி வரும் எம். எச். முஹம்மது யாக்கூத் அவர்கள். இந்த தமிழ் மொழிபெயர்ப்பு நூலை ஆனமடுவ தோதென்ன நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இனி இந்த நாவலின் படைப்பாளியான ரஞ்சித் தர்மகீர்த்தி பற்றி சிறிது பார்ப்போம்.

ரஞ்சித் தர்மகீர்த்தி நாடறிந்த படைப்பாளி. நாவல், சிறுகதை, நாடகம், மொழிபெயர்ப்பு என்று நிறைவே எழுதி வருபவர். நாடக - வானொலி கலைஞரும் கூட, பல தடவை அரச விருது பெற்ற படைப்பாளி. சுற்றாடல், இளைஞர் இலக்கியங்கள் என பல நூல்களளை வெளியீட்டிள்ளார். இவரது படைப்புக்கள் சிங்கள மக்களின் மத்தியில் பெரும் கவனத்தை பெற்று வருபவை.

நவீன சிங்கள கலை இலக்கியப் பரப்பில் இளைஞர் இலக்கியம் என்ற இலக்கியத்துறை தனித்த அடையாளத்துடன் பெரும் வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. அவ்வாறான இலக்கிய வகை தமிழில் அடையாளப்படுத்தப்படாத நிலையில் இது வரை காலம் சிங்கள மொழிலிருந்து தமிழுக்கு கிடைந்திருக்கும் இளைஞர் இலக்கியங்களை படித்ததன் வழியாக, இளைஞர் இலக்கியம் என்பது, இளைஞர்களை மையப்படுத்தி அவர்களின் அனுபவங்களை, அவர் தம் பிரச்சினைகளை பற்றி பேசுகின்ற இலக்கியங்கள் என நம்மால் புரிந்துக் கொள்ளப்படுகிறது.

இளைஞர் இலக்கியம் என்று தனியாக அடையாளப்படுத்தப்பட வேண்டிய தேவை ஒன்று இந்த தேசம் கடந்த காலத்தில் எதிர்க்கொண்ட கசப்பான நிகழ்வுகளின் காரணமாக ஏற்பட்டது. ஏனெனில் அத்தகைய நிகழ்வுகளில் எல்லா தலை முறையினரும் பாதிக்கப்பட்டாலும், அந்த நிகழ்வுகளில் குறிப்பாக இளையத்தலை முறையினர் அந்த நிகழ்வுகளுடன் சம்பந்தப்பட்டு இருந்தமையும், அதிக அளவில் பாதிக்கப்பட்டமையும் காரணமாக, அந்தந்த காலகட்டத்தைப் பற்றி பேசிகின்ற இலக்கியங்களை இளைஞர் இலக்கியம் என்று தனியாக பேசுதல் என்பது ஓர் அவசியம் இருந்தது போலும். தமிழ் பேசும் சூழலிலும் அத்தகைய இலக்கியங்கள் தோன்றிய பொழுதும், ஏனோ அவை தமிழில் இளைஞர் இலக்கியங்கள் என்று தனியாக அடையாளப்படுத்தப்படவில்லை. இடைக்கிடையே அபூர்வமாக இளைஞர் இலக்கியம் என்ற அடையாளத்துடன் ஒரு சில இலக்கியங்கள் தமிழில் வெளியிடப்பட்டாலும், அதிக அளவில் கவனப்படுத்தப்படாதற்கான காரணத்தையும், ஒட்டு மொத்தமாக தமிழில் தோன்றிய இளைஞர்கள் சார்ந்த இலக்கியங்கள், தனியாக இளைஞர் இலக்கியங்களாக

அடையாளப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. இத்தகையச் சூழலில் சிங்கள மொழி இலக்கியத் துறையில், சுற்றாடல் சார் இளைஞர் நாவல் என்ற அடைமொழியுடன் வெளிவந்திருக்கும் ரஞ்சித் தர்மகீர்த்தி அவர்களின் 'அஹஸ பொலவ லங்வெலா' (சங்கமம்) என்ற இந்த நாவல் நமக்கு படிக்க கிடைத்திருக்கிறது.

இந்த நாவலை நாம் ஆழமாக படித்து முடிக்கும் பொழுது, இந்த நாவலுக்கு இளைஞர் நாவல் என்ற அடைமொழி எந்த அளவுக்கு பொருந்தும் என்ற கேள்வி எமக்குள் எழுகிறது. வேண்டுமானால் இந்த நாவலை சுற்றாடல் சார் சிறுவர் நாவல் என்ற சொல்வது பொருந்தும் என எமக்கு தோன்றியது.

இனி நாவலுக்கு வருவோம். காடுகள் அழிக்கப்பட்டு நகரங்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் (கிராமங்கள் மெல்ல மெல்லமாக நகரங்களாக மாறுவது என்பது அபிவிருத்தியின் ஓர் அம்சமாக சொல்லப்படுவது என்றால், காடுகள் அழிக்கப்பட்டு கிராமங்கள் உருவாகுவதற்கு பதிலாக உடனடியாக நகரங்கள் உருவாக்கப்படுதல் என்பது துரித அபிவிருத்தியின் நவீன வடிவம் எனலாம்.) சூழலில், பரம்பரை சொத்து வழியாக தனக்கு கிடைத்திருக்கும் வீட்டின், உள்ளக கட்டமைப்பையும் சரி, அந்த வீட்டின் சுற்றுபுறச் சூழலையையும் சரி, மாற்ற விரும்பாத, நடுத்தர வயதுமிக்க ஒரு ஓவியரான பியசேக்கர என்பவரின் ஐந்து வயது மகளான மாலிக்கு, பியசேக்கர மாற்ற விரும்பாத சுற்றுப்புறச் சூழலின் காரணமாக, அங்கு உலாவும் ஒரு பெண் அணிலுடன் ஏற்படும் உறவையும், பிணைப்பையும் இந்த நாவல் பிரதானமாக பேசுகிறது. அதேவேளை சமீப காலம் வரை சுற்றுப்புறச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், அம்மாற்றங்களின் காரணமாக ஏற்பட்டுள்ள அழிவுகளைப் பற்றியும், இழக்கப்பட்டுள்ள ரம்மியங்களையும் பற்றியும் இந்த நாவல் இடைக்கிடையே பேசிச் செல்கிறது.

இந்த நாவலின் சிறப்பு அம்சங்களில் ஒன்று எனச் சொல்வது என்றால், சுற்றுப்புறச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை பற்றி பேசும் பொழுதுதெலாம் வெறுமனே கட்டுரைப் பாங்கான (அதாவது கதை சொல்லியான படைப்பாளியின் கூற்றாக ஒரு சில இடங்களில் மட்டும் வந்தாலும்) சொல்லப்படாமல், அந்த நாவலில் வரும் மாலியின் பாட்டி சொல்லும் கதைகள் வழியாகவும், மாலியின் தந்தை பியசேக்கர வழியாகவும் சொல்லப்படுவது ரசிக்கதக்கதாக இருக்கிறது.

காடுகள் அழிப்பு என்பது வெறுமனே மரங்களின் அழிவாக இருப்பதில்லை. அக்காடுகள் சார்ந்து வாழும் நூற்றாக்கான ஜீவராசிகளின் அழிவாகவும் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். அத்தகைய ஜீவராசிகளை பற்றிய அதிக அளவிலான கரிசனையை இந்த நாவல் வெளிப்படுத்துகிறது.

நமக்கு மத்தியில் பொதுவாக பாட்டிமார்கள் சொல்லும் கதைகள், குழந்தைகளையும் சிறுவர்களையும் சில வேளை பாட்டிமார்கள் சொல்லும் கதைகள் பெரியவர்களையும் தூங்க வைத்து, விழிப்புணர்ச்சியற்ற நிலையை உருவாகுவது உண்டு. இன்றைய பெரியவர்களை விட, சிறுவர்கள், சிறுமியர்கள் புத்தசாலிகள். இன்றைய பாட்டிமார்கள் சொல்லும் கதைகள் புனைவுகள் என அவர்களுக்குத் தெரிந்து இருக்கிறது. அத்தகைய தெளிவுடன்தான் இந்த நாவலில் வரும் மாலி, அவளது பாட்டி சொல்லும் கதைகளை எதிர் கொள்கிறாள். ஒரு காலத்தில் அணில்களின் இராச்சியம் ஒன்று இருந்தது என ஆரம்பிக்கும் கதை புனைவு என தெரிந்திருந்தும், அக்கதை வழியாக, காடுகள் அழிக்கப்பட்டு நகரங்கள் ஆக்கப்பட்டதன் காரணமாக, அழிந்து போன ஜீவராசிகளை பற்றி அவள் கொள்ளும் கவலை நமது கவனத்தை கவர்கிறது.

மாலியின் இந்த விழிப்புணர்ச்சியும் ஜீவகாரூண்யமும், தன் தந்தை மாற்றம் செய்யாது இருந்திருக்கும் சுற்றுப்புறச் சூழலின் காரணமாக அணில் போன்ற ஜீவராசிகளுடன் அன்புச் செலுத்தவும் உறவாடவும் வழி வகுக்கிறது. அத்தோடு மாலியோடு இணைந்து அவளது தந்தை பியசேக்கர அத்தகைய உணர்வு உள்ளவராகவே இருப்பதை, மாலி அந்த அணிலுடன் கொள்ளும் உறவாடலுக்கும் துணை புரிவதின் மூலமும், இந்த நாவலின் உச்சகட்ட சம்பவம் ஒன்றில் அந்த அணிலுக்காக அவர் எடுத்துக் கொள்ளும் பிராயத்தனத்தின் மூலமும் நமக்கு எடுத்துக்காட்டப்படுகிறது.

மாலி பிணைப்பு கொண்டிருக்கும் அணில் கருவுற்றிருக்கும் ஒரு பெண் அணில். ஒருநாள் பியசேக்கர வைத்திருக்கும் 'பழைய' காரில் அவரது உறவினர் பையன் ஒருவனை அழைத்து வர விமான நிலையம் மாலியுடனும், அவரது உறவினர்களுடன் செல்லுகிறார். அந்த உறவுக்கார பையன் விமானத்திலிருந்து வரும் வரை அவர்கள் விமான நிலைய கார்களின் தரிப்பிடத்தில் காத்திருக்க, அப்பொழுது காரின் உள்பகுதியில் சில எலிக்குஞ்சுகள் இருப்பது போல் அவை எழுப்பும் வினோத சப்தத்தால் உணர்கிறார்கள். ஆனால் அந்த காருக்குள்

இருப்பதோ சில அணில் குஞ்சுகள். இப்பொழுது அவர்கள் இருவருக்கும் ஓர் உண்மை புரிகிறது. மாலியின் சிநேகியான அணில் அம்மா ஈன்றெடுத்த குஞ்சுகள் அவையென புரிகிறது. இருவருமே கலவரம் அடைகிறார்கள். தாய் அணிலிடமிருந்து குஞ்சுகள் பிரித்துக் கொண்டு வந்து விட்டோமே என்ற குற்றவுணர்வுக்கு ஆளாகிறார்கள். அதனால்தான் அந்த அணில் குஞ்சுகள் பசியினால் ஒலி எழுப்புகின்றன என நம்புகிறார்கள். ஆனால், அப்பொழுது அந்த நேரத்தில் வெளியே கடுமையான வெயில் வேறு அடிக்கிறது. அதன் கராணமாக காரின் கூரை சூடேறி இருப்பதனால் உஸ்ணம் தாங்காது ஒலி எழுப்புகின்றனவோ எனவும் ஐயம் கொள்கிறார்கள். அதற்காக அக்கூரை மீது நீரை ஊற்றி குளிர வைக்க முயற்சிக்கிறார்கள். இவர்களின் இச்செயல் கூட, அங்கு இருப்ப வர்கள் இவர்களை பைத்தியக்கார்கள் என்று கூட கருத வைத்து விடுகிறது. அத்துணை தூரம் அந்த ஜீவராசிகளுக்காக அவர் பிரயத்தனப்படுகிறார்கள். அது மட்டுல்லாமல் உடனடியாக அக்குஞ்சுகளை அணில் அம்மாவிடம் சேர்ந்து விட வேண்டும் துடிப்புடன், தான் ஓட்டும் கார் மிக பழைய கார் என்பதையும் மறந்து, பியசேக்கர அக்காரை மிக வேகமாக வீட்டுக்கு ஒட்டி, ஒரு வழியாக அக்குஞ்சுகளை அணில் அம்மாவிடம் சேர்ப்பிக்கிறார்.

சிங்கள் நாவல்களில் குறிப்பாக இளைஞர், மற்றும் சிறுவர் நாவல்களின் ஒவ்வொரு அத்தியாத்திற்கும் தலைப்பு இடுதல் சிற்சில நாவல்களில் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. தமிழ் சூழலில் நாவல்களில் அபூர்வமாக அந்த முறைமை பின்பற்றப்படுவதுணடு. 'அஹஸ பொலவ லங்வெலா' (சங்கமம்) என்ற இந்த நாவலின் ஒவ்வொரு அத்தியாயத்திற்கு தலைப்பிட்டு இருப்பது அந்த நாவலை படிப்பதில் சுவாரசியத்தை ஏற்படுத்துவதோடு, ஒவ்வொரு அத்தியாயம்கொண்டிருக்கும் உள்ளடக்கத்தின் அறிமுக வாசலாக இருக்கிறது.

அதேவேளை பாட்டி சொல்லும் கதை ஒன்றினை, ஒரு காலத்தில் அணில்களின் 'இராச்சியம்' ஒன்று இருந்தது என ஆரம்பிக்கும் பொழுது, நம் தேசத்து வரலாற்றில் 'அழிந்து போன இராசதானிகளை' பற்றி குறியீடாக அக்கதைகள் பேசுகின்றனவோ என்ற ஒரு ஐயமும் நமது வாசிப்பின் பொழுதும் தவிர்க்க முடியாமல் நமக்குள் எழுகிறது. இந்த ஐயத்திற்கு பலம் சேர்க்கிறது இந்த நாவலின் கடைசி அத்தியாயத்தின் தலைப்பான 'இராசதானியின் அரச குடும்பம்' எனும் தலைப்பு.

பாட்டிச் சொல்லும் அணில் இராச்சிய கதை புனைவு என அறிந்திருந்தும், ஒரு 'விழிப்புணர்ச்சி'யுடன் மாலி போன்ற சிறுவர் சிறுமியர்கள் அக்கதைகளை எதிர்கொள்ளும் பொழுது தான், இன்றைய நமது இன்றைய சமூக அரசியல் சூழலில் முன் வைக்கப்படும் இராச்சியங்கள் பற்றிய வரலாற்றுப் பிரதிகள் கொண்டிருக்கும் 'புனைவுகள்' பற்றிய பெரியவர்கள் நாம் எந்த அளவுக்கு கேள்விகளை எழுப்பி இருக்கிறோம் என்றொரு ஐயமும் எமக்கு ஏற்படத்தான் செய்கிறது.

இந்த நாவல் பிரதியின் ஊடாக இன்னொரு அனுபவத்தையும் பெறுகிறோம். மாலியின் பாட்டியின் வரலாறு சம்பந்தமான கதையாடல்களிலும் சரி, அவர் சொல்லும் கதைகளிலும் சரி ஒரு சுதேசிய மனோபாவம் வெளிப்படுவதை காணக் கூடியதாக இருக்கிறது. இங்கு நாட்டின் சுற்றுப்புறச் சூழல் மாற்றங்கள் என்பது, இந்த தேசத்தை ஆண்டு சென்ற, காலனியங்கள் ஏற்படுத்திச் சென்ற மாற்றங்கள் என்றும், அந்த மாற்றங்கள் வெறுமனே காடுகளின் அழிவாக மட்டுமே அமையாமல், இந்த நாட்டில் நிலவிய இராசதானிகளையும் அழித்து, ஒட்டு மொத்தமான இந்த தேசத்தின் புவியியல் அமைப்பை அதாவது இந்த தேசத்தின் வரைப்படத்தின் ஆதி நிலையையே மாற்றி அல்லது அழித்து சென்று இருக்கின்றன என்பதை பாட்டியின் வரலாறு சம்பந்தமான கதையாடல்களும், அவர் சொல்லும் கதைகளும் அழுத்திச் சொல்லுகின்றன.

இத்தோடு, பியசேக்கர என்ற மனிதரில் நிலவும் இரட்டைத் தன்மையையும் இந்த நாவல் பிரதி நமக்கு இனங்காட்டுகிறது. சித்திரக் கண்காட்சி ஒன்றுக்காக மேலேயத்தேய நாடு ஒன்றுக்கு சென்று வந்ததன் காரணமாகவும், ஏலவே காலனியங்களின் சிறப்புகளை போற்றும் மனோபாவத்தின் காரணமாகவும், ஏற்பட்டுள்ள சுற்றுப்புறச் சூழல் மாற்றங்களால் இழந்து விட்ட ரம்மியங்கள், ஜீவராசிகளின் அழிவு, சீதோஸண நிலை மாற்றங்கள் போன்ற இழப்புகளுடன் காலனியங்கள் இந்த தேசத்தை ஆட்சி செய்த காலத்தில் இருந்த சிறப்புகளையும் இழந்து விட்டோம் என்றொரு ஏக்கமும் அவரில் இருக் கிறது. அதேவேளை இன்றைய நம் தேசத்தின் அபிவிருத்தி நிர்வாக முறைமை மீதான (குறிப்பாக நகரமயமாக்கல் என்ற மாதிரியான பணிகள்) மேலைத்தேய பார்வையின் அடிப்படையிலான விமர்சனத்தை முன் வைக்கிறவராகவும் அவர் இருக்கிறார். அதேவேளை தன் வீட்டு சூழலை

இன்னும் காலனிய கால தன்மைகளுடன் வைப்பதில் பிடிவாதமாகவும் இருக்கிறார். இவ்வாறான இரட்டை மனோபாவமிக்க ஒரு மனிதராகவும் நாம் பியசேக்கரவை இனங்கண்டு கொள்கிறோம். இது அவரில் நிலவும் காலனிய மனோபாவத்தின் நீட்சியினை எடுத்து காட்டுவதன் மூலம் இந்த நாவலை ஒரு பின்காலனிய நாவலாக மாற்றுகிறது.

இந்த நாவலின் பிரிதியில் இத்தகைய செய்திகளையும் அனுபவங்களையும் ரஞ்சித் தர்மகீர்த்தி யின் சிறந்த ஆக்கத் திறனின் காரணமாக பெற்றுக் கொள்கிறோம். அதற்கு எம்.எச்.எம் யாக்கூத் அவர்களின் மொழிபெயர்பு திறன் மிகவும் நமக்கு உதவி இருக்கிறது எனச் சொல்லாம். அத்தோடு இந்த நாவலின் சிங்கள மொழி தலைப்பும் சரி, தமிழ் மொழிபெயர்ப்பு தலைப்பும் சரி மிக பொருத்தமாக அமைந்திருக்கின்றன என்பதை பின்வரும் கருத்து நிருபிக்கிறது.

மொத்தத்தில் ரஞ்சித் தர்மகீர்த்தியின் 'அஹஸ பொலவ லங்வெலா' (சங்கமம்)எனும் இந்த நாவல் முதல் வாசிப்பில் ஒரு சிறுமிக்கும் ஓர் அணிலுக்கும் இடையில் ஏற்படும் உறவையும் பிணைப்பையும் பற்றி பேசுகின்ற, சுற்றாடால் சார் சிறுவர் நாவல் (இளைஞர் நாவல் அல்ல) என நம்மால் புரிந்துக் கொள்ளப்பட்டாலும், ஆழ்ந்த வாசிப்புக்கு பின், பின்-காலனிய சூழலில், காலனிய மற்றும் தேசிய, சுதேசிய மனோபாவம் கொண்ட இரு தலைமுறையினரிடம் சுற்றப்புறச்சூழல் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமாக நிலவும் கருத்துகளின் சங்கமத்தை பதிவு செய்கின்ற ஒரு நாவலாகவும் தெரிகிறது, அதேவேளை ஆகாயமும் பூமியும் சங்கமிப்பதை போலான ஓர் உணர்வு நிலையை (நேர் எதிரான இரு தலைமுறையினர்களின் கருத்துகள் என்ற வகையில்) ஏற்படுத்தும் ஓர் ஆவணமாகவும் இந்த நாவல் திகழ்கிறது எனலாம்.

# புவியீர்ப்புக்கு வெளியே புறப்பட்டுப் போன பொருள்

# சாருமதியின் அறியப்படாத மூங்கில் சோலை: ஒரு விமர்சனக் குறிப்பு



**பெருமாள் சரவணகுமார்**

இலங்கைத் தமிழ்க் கவிதைத் தளத்தை அரசியல் மயப்படுத்தியதில் முற்போக்கு இயக்கத்துக்கு முதன்மையான இடம் உண்டு. இலக்கியம் சமூக இயக்கங்களுக்கான போராட்டக் கருவியாக அமைவுபெறுதல் வேண்டும் என்பது அவ்வியக்கத்தின் இலக்கியக் கோட்பாடாக இருந்தது. இந்தக் கோட்பாட்டுக் கருத்துநிலையை இலக்கியச் செயற்பாடாக உருமாற்றுவதற்குப் பலரும் பங்களிப்புச் செய்துள்ளனர். அவ்வகையில், சாருமதியின் பங்களிப்பு தனித்துவம் மிக்கது.

இலங்கைத் தமிழ்க் கவிதை வரலாற்றில் சாருமதியின் இலக்கிய முகத்தை வெளிப்படுத்தும் கவிதைத் தொகுப்பாக அவரது 'அறியப்படாத மூங்கில்சோலை' விளங்குகின்றது. இலக்கியப்பரப்பில் சாருமதி ஆசிரியராகவும், 'வயல்' என்ற சஞ்சிகையை நடத்தியவராகவும், சுபத்திரனின் கவிதைகளை நூலாக்கம் செய்தவராகவும், சமூகச் செயற்பாட்டாளராகவும் விளங்கியவர்.

இக்கட்டுரையில், சாருமதியின் இலக்கியக் கருத்துநிலை பற்றியும், அவரது கவிதைகளின் உள்ளடக்கம் பற்றியும், நவீன தமிழ்க் கவிதையில் சாருமதி ஏற்படுத்திய முக்கிய மாற்றங்கள் பற்றியும் நோக்கப்படுகின்றது.

க. யோகநாதன் என்ற புனைபெயரைக் கொண்ட சாருமதி (1947 – 1998) தீவிர இடதுசாரிக் கருத்துநிலைத் தளத்தில் நின்றுகொண்டு, சமூகப் பார்வையையும், இலக்கிய முயற்சிகளையும் வடிவமைத்துக் கொண்டவர். 1960 களின் பின்னர் இலங்கைச் சமூக அசைவியக்கத்தில் சிறப்பிடம் பெறத் தொடங்கிய முற்போக்குக் கருத்துக்களை கவிதைகளூடாக வெளிப்படுத்திய கவிஞர்கள் என்றவகையில், சுபத்திரன், சண்முகம் சிவலிங்கம், புதுவை இரத்தினதுரை, பசுபதி போன்றோர் மிக முக்கியமானவர்கள். இக்கவிஞர்களுள் ஒருசிலர், 1970 களுக்குப் பின்னர் குறுகிய சித்தாந்த வலைக்குள் சிக்கிக்கொண்டமையும் மனங்கொள்ளத்தக்கது. எனினும், சாருமதி தான் வரித்துக்கொண்ட கருத்துநிலையில் இருந்து தடம்புரளாதவராகவே இறுதி மூச்சு வரை வாழ்ந்தவர். இக்கருத்துநிலை உறுதிதான் சாருமதியின் பலம் என்றும் சொல்லமுடியும். சாருமதி பற்றி எம். ஏ. நுஃமான் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

'சுபத்திரன் வழி நின்ற ஒரு முற்போக்குக் கவிஞரே சாருமதி. இருவரும் மாஓ சித்தாந்தத்தை உறுதியோடு பற்றி நின்றவர். இந்தியாவின் நச்சல்பாரி இயக்கத் தலைவர் சாரு மஜூம்தாரை நினைவூட்டும் வகையிலேயே சாருமதி என்ற புனைபெயரை இவர் தனக்கு வைத்துக்கொண்டார் என நினைக்கின்றேன்.' [1]

மேலும், சாருமதி பற்றி எம். ஏ. நுஃமான் அவர்கள் கூறும்போது, 'சுபத்திரனைப் போல் முற்போக்குச் சட்டகத்துக்குள் கச்சிதமாய் அடங்குபவர்தான். பாரம்பரிய முற்போக்குச் சட்டகம் வெளி ஒதுக்கல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வர்க்க அரசியலைத் தவிர, பிற அக உலக அனுபவங்களைக் கவிதையின் பாடுபொருளாக அது அங்கீகரிக்கப்படவில்லை. அவ்வகையில் சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைகளில் காணப்படுவதுபோல சுபத்திரன், சாருமதி கவிதைகளில் ஒரு பன்முகப்பாட்டை நாம் காணமுடிவதில்லை'[2] எனவும் கூறியுள்ளார். எம். ஏ. நுஃமானின் இக்கருத்து சாருமதியின் கவிதைகள் தொகுப்பு வடிவம் பெறாத (2004) காலப்பகுதியில் முன்வைக்கப்பட்டது. சாருமதியின்

அறியப்படாத மூங்கில் சோலை தொகுப்பை பார்க்கும்போது, அவர் பிற அக உலக அனுபவங்களையும் கவிதைப் பரப்புக்குள் கொண்டுவந்துள்ளதைக் காணமுடிகின்றது.

சாருமதியின் அறியப்படாத மூங்கில் சோலை என்ற தொகுப்பில் அவர் எழுதிய நூறு கவிதைகள் காணப்படுகின்றன. சாதி, வர்க்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்ட குணத்தைச் சாருமதியின் கவிதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. 1960 களிலிருந்து இலங்கைத் தமிழ் இலக்கியங்களில் சிறப்பிடம் பெறத் தொடங்கிய தீண்டாமைக்கு எதிரான போராட்டமும், வர்க்க பேதத்துக்கு எதிரான போராட்டமும் சாருமதியின் கவிதைகளில் ஊடுபாவாக அமைந்துள்ளன.

1970 களில் மேற்கிளம்பிய சிங்கள பெருந்தேசியவாதமும், இடதுசாரி இயக்கங்களின் பிளவுகளும் இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் தேசிய இலக்கியக் கோட்பாட்டை கேள்விக்குறியாக்கின. பல இடதுசாரிக் கவிஞர்கள் குறுகிய சட்டகத்துக்குள் தமது கவிதைகளை வடிவமைத்துக்கொண்டனர். இதிலிருந்து வேறுபட்டு சாருமதி இயக்கம் பெற்றார். 'பழமைக்குள்ளும், குறுந்தேசிய வாதத்துக்குள்ளும் ஒடுங்காமல் 71 இன் ஜெவிபி முதல் அக்காலத்தைய தமிழ்த் தேசியவாதம் ஈராக தன்னைச் சுற்றி நடந்தேறிய நிகழ்வுகளுக்கான விமர்சனப் பார்வையைக் கொண்டிருந்த சாருமதி இன முரண், இந்நாட்டின் பிரதான முரணாக இடம்மாறிய காலப்பகுதியில் தன்னை இன ஒடுக்குமுறைக்கு எதிராகவும் கூடவே பல்வேறு இயக்கப் போக்குகளின் அராஜகத்தையும் கரிசனையுடன் சாடும் ஒரு கவிஞனாகவும் தோற்றம் கொள்வதில் பின் நிற்கவில்லை.'[13]

சாருமதியின் 'நாங்கள் இலங்கையர்கள்' என்ற கவிதை இனப் பிளவும், சுரண்டலும் அற்ற சமூகப் பொதுமையைக் கோடிட்டுக் காட்டுவதாக அமைகின்றது.

*அழுது வடியும் கண்ணீருடன்*
*ஒரு சரித்திரத்தையே ஒப்புவித்த*
*விழுந்துகிடந்த ஜீவன்*
*தன்பெயர் பொன்னம்மாவென்று*
*'அழகு மொழியில்'*

*பழகு தமிழில்*
*அழுத்தமாய்ச்*
*சொன்ன போது*
*எனது விழிகள் நிமிர்ந்தன*
*சைமனின் விழிகள்*
*கலங்கிச் சிவந்தன*
*கடைவிழி யோரம்*
*நீர் அரும்பை உதிர்த்தது.*
*அது அழுகையா?*
*அல்லது ஆத்திரமா?*
*அவன் சிங்களவனா?*
*இவள் தமிழச்சியா?*
*எனது இதயம்*
*நான்கு கரங்களின்*
*கண்ணீர்ப் பிறப்புக்கள்*
*இரண்டு கரங்களில்*
*ஒன்றாய் விழுந்து*
*ஓடி ஒழுகி*
*கீழ் இருந்த கண்ணீர்த் துளிகளுடன்*
*கலந்தபோது*
*மீண்டும் மீண்டும்*
*எங்கும் எங்கும்*
*எனக்குக் கேட்டது*
*நாங்கள் இலங்கையர்*
*என்ற குரலே.*[¼]

சாருமதி மக்கள் போராட்டத்தோடு இணைந்திருந்தவர். உழைக்கும் சமூகத்தின் மேன்மைக்கும், விடுதலைக்கும் தனது எழுத்தை ஆயுதமாகப் பயன்படுத்தியவர். அத்தோடு, சாதி, வர்க்க, இன ஒடுக்குமுறையிலிருந்து மக்கள் விடுதலை பெறுவர் என்ற நம்பிக்கையும் சாருமதியிடம் ஆழமாகவே இருந்தது. இந்த நம்பிக்கைதான் சாருமதியின் கருத்துநிலை உறுதிக்கும் அடித்தளமாகியது. சாருமதியின் 'இந்த நாட்கள்' என்ற கவிதை வீரார்ந்த போராட்ட உணர்வோடு பதிவாகியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

*எல்லா எலும்புகளும் ஒன்றாய்த் திரளும்*
*எல்லாத் தலைகளும் ஓர் நாள் நிமிரும்*
*கிழக்கின் வானில் செவ்வரி படரும்*
*தமிழன் தன் கால்களில் எழுவான்*
*உதய ஞாயிறை என் பூமி காணும்.*'[5]

இலங்கைச் சமூக அமைப்பில் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருந்த அனைத்து மக்களின் குரலாகவே சாருமதியின் கவிதைகள் ஒலித்தன. மட்டக்களப்பு, மலையகம், யாழ்ப்பாணம் என அவரது கவிதைகள் தளம்விரிந்து காணப்படுகின்றன. மலையகச் சமூகம் குறித்த சாருமதியின் கவிதைகள், ஒடுக்குமுறையிலிருந்து அம்மக்கள் விடுதலை அடையவேண்டும் என்பதையே அடிநாதமாகக் கொண்டுள்ளன.

*'ஓ எம்முயிர்த் தோழர்களே*
*எழுபத்தொன்றின் மரண கீதங்களே*
*உங்களது சமாதியின்*
*இந்தத்தாயின் மண்மீது நின்று*
*எங்கள் சபதங்கள்*
*இங்கு இது நடந்தே தீரும்*
*நாளையது இந்த மண்ணில்*
*நாங்கள் சிந்தும் வேர்வைத் துளிகள்*
*ஊழிப் பெரும் தீயைப்போல*
*ஊர்கள் தோறும் பற்றிப்பிடித்து*
*நாறுகின்ற இந்த சமூகத்தின்*
*நாசத்தின் சுரண்டல் கொடுமை*
*வேசத்தனங்களெல்லாம்*
*நீறுபட எரிக்கும் பொழுது.'* [6]

1980 களில் இலங்கைத் தமிழ்க் கவிதைப் பரப்பில் பெண்ணியம் பற்றிய சிந்தனைகள் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. பெண்களே தமது உணர்வுகளைக் கவிதைப் பொருளாக்கினர். இவ்வாறானதொரு காலப்பகுதியில் சாருமதியால் எழுதப்பட்ட கவிதைகளிலும் பெண்ணியம் பற்றிய கருத்துநிலைகள் சிறப்பிடம் பெற்றன. அவ்வகையில்,

‘எழுக தோழியரே எழுக’ என்ற கவிதையில் பெண்ணியம் பற்றிய சிந்தனை வீச்சோடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

*மனித குலத்தின்*
*ஒருபாதியை*
*இருளில் இடத்தி விட்டு*
*எந்த நாடாவது*
*உதயத்தை காணமுடியுமா?*
*சொத்துடைமை வர்க்கங்களின்*
*சித்தாந்தங்களினால்*
*சிறை வைக்கப்பட்டிருக்கும்*
*பெண்ணின் சிந்தனைகள்*
*எப்பொழுது*
*சுதந்திரத்தை தரிசிக்கும்?*
*வளையல்களினதும் கொலுசுகளினதும்*
*வடிவில் மதிமயங்கி*
*வாழ்வின்*
*துயரங்களைப் புதைக்கமுயன்ற*
*தோழியரே!*
*எழுக! இனி எழுக!* [7]

பெண்ணியம் குறித்த சாருமதியின் நோக்கு, சமூக விடுதலையுடன் இணைந்ததே எனலாம். சாருமதியின் என்னுடைய கடவுளர்கள், பெண்ணும் சிலுவையும் முதலான கவிதைகள் பெண்ணியம் பற்றிப் பேசுவன. பெண்ணியம் குறித்தான சாருமதியின் கருத்துக்கள் தமிழ் மரபோடும், பண்பாட்டோடும் இணைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

முற்போக்கு இலக்கியப் படைப்பாளிகள் அரசியலை மட்டுமே எழுதுகிறார்கள். அவர்கள் அக உலக அனுபவங்களை எழுதுவதில்லை என்ற கருத்து, இலங்கையில் மட்டுமல்லாது தமிழகத்திலும் ஓங்கி ஒலித்தது. இலங்கையின் நவீன தமிழ்க் கவிதை வரலாற்றில் கவிதைகளில் அரசியலை பேசிய அதேவேளை, அக உலக அனுபவங்களையும் தனது கவிதைகளூடாக வெளிப்படுத்திய கவிஞர் என்ற வகையிலும் சாருமதிக்கு முக்கிய இடமுண்டு. சாருமதி தொடங்கி வைத்த இம்மரபு கவிஞர் எம். ஏ. நுஃமானின் கவிதைகளில்

(அழியா நிழல்கள்) புதுப்பொலிவு பெறுகின்றது. சாருமதியின் குயிலே குயிலே நீ கூவு, நானொரு மனிதன், என்னைக் கொன்றவள் முதலான கவிதைகள் அக உலக அனுபவங்களை வெளிப்படுத்துகின்றன.

*நீண்ட நாட்கள் இருக்கும்*
*மிக நீண்ட நாட்கள் இருக்கும்*
*என்*
*முதல் காதல் தேவதையாய்*
*கனவில் உலா வந்தவளை*
*தெருவில் கண்டேன்*
*கன்னம் குழியும்*
*அவளின் பழைய சிரிப்பு*
*வெய்யிலில் வெடித்த*
*நிலம் போல*
*வரண்டு கிடந்தது !'* [8]

இவ்வகையான கவிதைகள், சாருமதி கவிதைகளின் பன்முகப்பாட்டை வெளிக்காட்டும் வகையில் அமைந்துள்ளன எனலாம்.

இலங்கையின் நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சியில் சாருமதியின் கவிதையாக்க முறையும் தனித்து நோக்கத்தக்கது. உழைக்கும் மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்ட அவரது கவிதைகள் நாட்டாரியல் பண்பு நிறைந்ததாகவே அமைந்துள்ளன. நவீன கவிதைக்குரிய பண்புகளையும், நாட்டாரியல் மெட்டுகளையும் ஒருங்கே லாவகமாகக் கையாண்டிருப்பது சாருமதியின் கவியாளுமையை வெளிப்படுத்துகின்றது.

வக்கடையால் தண்ணி பாய
விளைஞ்ச நெல்லு தலையை ஆட்ட
செக்கலுக்குப் போற மச்சாள்
சேதி நிண்டு கேட்டுப் போனால்
சாதி கெட்டு போமோ மச்சாள்! [9]

இத்தொகுப்பில் இடம்பெறும் உழைப்பவர்கள் வென்று விட்டால், காவலுக்கு நான் வாரன், ஊருக்க நியாயம் வேணும், வருங்கால ஏழையின் வாழ்வைத்தேடி, இருவர் பாடல் முதலான கவிதைகளில் நாட்டாரியல் பண்பு மிகுந்துள்ளது.

புதுவகையான உருவகங்கள், சொற்களைப் புதிய அர்த்தத்தில் பயன்படுத்தும் விதம், கவிதைகளில் இழையோடும் ஒத்திசைவு முதலானவை சாருமதியின் கவித்துவத்தைக் காட்டுகின்றன. அவ்வகையில், நாளை வரும், குயிலே குயிலே நீ கூவு, வெண்மணியே ரெத்தத்தால் பதிலிறு, அவரைக் கண்டால், எனது துணிவு, இந்த நாட்கள், உழைப்பும் படைப்பும் முதலான கவிதைகள் சிறப்பிடம் பெறுகின்றன. கவிஞரின் உணர்வு கவிதை முழுவதிலும் படர்ந்துள்ளமையும் முக்கியமானது. இது பற்றிய கா. சிவத்தம்பியின் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

'சாருமதியின் கவிதைகளை ஆராய முனையும் பொழுது, குறிப்பிட்ட சில கவிதை வரிகளை மாத்திரம் குறிப்பிடுவதன் மூலம், அந்த கவித்துவ வரிகளின் ஆற்றலை உணர்த்திவிட முடியாதுள்ளது. இது மிகமிக முக்கியமான அவரது கவித்துவ அம்சம் ஒன்றை எடுத்துக்காட்டுகின்றது. கவிதை ஒவ்வொன்றும் கூறுபடாத கவித்துவ முழுமையினை கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.' [10]

சாருமதியின் கவிதைகள் எளிமையும் வலிமையும் நிறைந்தவை. இலங்கையில் புதுக்கவிதை மரபை மிகச் சிறப்பாக உருமாற்றியவர்களுள் இவருக்கும் முக்கிய பங்கு உண்டு. இங்கு சில உதாரணங்களை நோக்கலாம்:

*குஞ்சமுதக் குரலுக்கு*
*தேடிவரும் தாய்ப்பறவை*
*நானழுத கண்ணீருக்கு*
*நானே தாயானேன்*
*நான் ஒரு பட்ட மரம்*
*நம்பிக்கையில்லாத் தோணி*
*புவியீர்ப்பிற்கு வெளியே*
*புறப்பட்டுப் போன பொருள்* *(ப. 39)*

*விதை விதைத்தாயிற்று*
*பயிர்கள் இனி முளைக்கும்*
*சிறுமழை பெரு மழை*
*சீராகவும் சீரற்றும்*

*வரைகள் நிறையும்*
*வக்கடைகள் உடையும்*
*வெள்ளம் வடிய*
*மண் வார்த்த பயிர்கள்*
*மெல்ல நிமிரும்* (ப. 96)

*உயரப் பறந்த குருவிகள்*
*நெல் மீன் தேடி*
*நிலத்தில் வீழும்* (ப. 98)

*இரும்பு எருமைகள் மறைந்தன*
*இயம தூதர்கள்*
*திரும்பவும் வரலாம்.*
*வில்லுக் குளத்தின் வெளியை வெறித்து*
*சொல்ல முடியா சோகமும் தாபமும்*
*எள்ளுள் உறையும் எண்ணையைப் போலே*
*என்னுள் ஊறித் தளம்பிக்கொதிக்க*
*அள்ளிக் குவிந்த மணல்போல் நான்*
*அந்தப் படியில் அமர்ந்து இருந்தேன்.* (ப. 163)

சாருமதி சமூக அக்கறையும் மனித விடுதலை நாட்டமும் கொண்ட கவிதைகளையே படைத்துள்ளார். இலக்கியம் சமூக மேன்மையை அடித்தளமாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்துநிலை அவரது கவிதைகளில் விரவி வந்துள்ளது. இலங்கையின் நவீன தமிழ்க் கவிதையை அரசியல் மயப்படுத்தியதிலும், முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்கு வளம்சேர்த்ததிலும் சாருமதிக்கும் சிறப்பான இடமுண்டு. அவ்வகையில், அனைத்து தளைகளிலிருந்தும் விடுபட்டு, புவியீர்ப்புக்கு வெளியே புறப்பட்டுப் போன ஒரு கவிஞனாகவே சாருமதி விளங்குகின்றார் எனலாம்.

அடிக்குறிப்புகள்

1. நுஃமான், எம். ஏ. (2004) கவிதையும் அரசியலும் (கட்டுரை) காலச்சுவடு, இதழ் 52. ப. 24
2. மேலது ப. 24

3. சாருமதி, (2010) அறியப்படாத மூங்கில் சோலை, ஹட்டன் : நந்தலாலா வெளியீடு, ப. XIII

4. மேலது பக். 7 / 8

5. மேலது ப. 171

6. மேலது பக். 3 / 4

7. மேலது ப. 88

8. மேலது ப. 137

9. மேலது ப. 91

10. சிவத்தம்பி, கா., கவனிக்கப்படாது போய்விட்ட கவிஞனொருவன் - சாருமதியின் கவித்துவம் பற்றிய ஓர் அறிமுகக் குறிப்பு (கட்டுரை) தினக்குரல், 27.02.2011.

# தேன் மொழி அல்லது இளம் பரிதி



**இரா. சடகோபன்**

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் இளம் பரிதியும் தேன் மொழியும் செங்கந்தன் கந்தையின் (செங்கடகல) அடுத்தடுத்த வீடுகளில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் அடுத்தடுத்த வீடுகளில் வாழ்ந்து வந்தாலும் இரண்டு வீடுகளும் உயர்ந்த கெட்டியான செங்கற் சுவர்களால் சுற்றுச் சுவர் கட்டி பிரிக்கப்பட்டிருந்தன. இளம்பரிதி உலகெங்கும் வியக்கும் கட்டிளங்காளையாவான். தேன் மொழி அழகுக்கே அரசியான யுவதியாவாள். அவர்கள் இருவரும் அயல் அயல் வீடுகளில் வசித்த படியால் ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்து கொண்டிருந்தனர். எனவே விரைவிலேயே காதல் வசப்பட்டு விட்டனர்.

அவர்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பினர். எனினும் அதற்கு அவர்களின் பெற்றோர் தடை விதித்து விட்டனர். அவர்களின்

காதலை யாராலும் தடை செய்ய முடியவில்லை. அது முன்னெப்போதும் இல்லாத படி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. அவர்கள் மனங்களின் இரகசிய காதலுக்கு உதவி புரிய யாரும் இருக்கவில்லை என்றாலும் அவர்கள் சைகைகளாலும் தலையசைப்புக்களாலும் கண்களின் பாசையாலும் மட்டுமே பேசிக் கொண்டனர். அவர்களின் உணர்வுகளைத் தடுக்கத் தடுக்க உள்ளுணர்வுகள் மேலும் மேலும் பீறிட்டு எழுந்ததால் எந்த சக்தியாலும் அவர்களைப் பிரிக்க முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர்.

அவர்கள் வீட்டைச்சுற்றி இறுக்கமான தடித்த சுவர்கள் கட்டப்பட்டிருந்த போதும் பின்புறத்தில் ஓரிடத்தில் சுவரில் ஒரு சிறு இடைவெளி அடைக்கப்படாமல் விடப்பட்டிருந்தது. இந்த இடைவெளி நீண்ட காலமாக அவ்விடத்தில் இருந்து வந்த போதும் அதனை யாரும் கவனித்திருக்கவில்லை. ஆனால் காதல் உறவைத் தேடிய அவ்விரு காதல் பறவைகளுக்கும் அந்த சிறு இடைவெளி பெரும் பாலமாகத் தெரிந்தது. அவர்கள் யாருக்கும் தெரியாமல் அவ்விடைவெளியூடாக காதல் மொழிகளைப் பேசிக் கொண்டனர். கனவுகளை ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டனர்.

அந்த சுவர் அவர்கள் காதல் உறவுக்கு புஷ்பக விமானமாக இருந்து தாலாட்டியது. சில நேரம் அவர்கள் அந்த சுவரை கோபித்துக் கொண்டனர். இன்னுங்கொஞ்சம் இடைவெளி விட்டிருந்தால் தாம் ஒருவரை ஒருவர் ஸ்பரிசித்துக்கொள்ளலாமே என்று அங்கலாய்த்தனர். ஒரு புறம் இளம்பரிதியும் மறுபுறம் தேன்மொழியும் அந்த சுவற்றில் ஒட்டி உரசி அந்த ஓட்டைக்கூடாக பேசிக் கொள்ளும் போது அவர்கள் மூச்சுக்காற்றுகள் அவர்கள் உதடுகளில் பட்டுத்தெறிக்கும். அப்போது அவர்கள் தம் இருவருக்கிடையில் பெருந்தடையாக இருந்த அச்சுவரை ராட்சசி என சபித்தனர். ஆனால் அந்தச்சுவரிடம் தாம் அதிகமாக எதிர்பார்த்தது சுவரே நீ விலகிக்கொள் என்று கேட்பது பேராசை என்று நினைத்தனர். இருந்தாலும் இன்னும் கொஞ்சம் விலகியிருந்தால் தாம் முத்தங்களையாவது பரிமாறிக் கொள்ளலாமே என்று ஆதங்கப்பட்டனர். ஆனால் உண்மையில் அந்த சுவருக்கு அவர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாக இருந்தனர். அந்தச் சுவரால் தானே தாம் காதல் மொழிகளை பேசிக் கொள்ள முடிகிறது என்று மகிழ்ந்தனர்.

இப்படி அந்த சுவருக்கருகில் அந்த இடைவெளியூடாக மணிக்கணக்கில் அவர்கள் பேசிக் கொள்வார்கள். பின்பு இரவு நெருங்கியதும் பிரிய மனமின்றி பிரிந்து செல்வார்கள். அவர்கள் பிரிந்து செல்லும் போது இறுதியாக ஒருவருக்கொருவர் முத்தமிடுவதாக நினைத்து அந்த சுவரில் தம் உதடுகளைப் பதித்துக் கொள்வர்.

இப்படி சந்திக்காமல் சந்தித்துப் பேசிப் பேசி அலுத்துப் போய் விட்ட அவர்கள், ஒரு நாள் சூரியன் மறைந்த பின்பு இரவு வந்ததும் வெண்நிலாவின் அரவணைப்பில் வீட்டுக்கு வெளியில் சந்திக்க நினைத்தனர். இதற்கென ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருந்த சிற்றோடைக்கரையைத் தேர்ந்தெடுத்தனர். அந்த ஓடைக்கரையில் யாரோ, எப்போதோ நட்டு வைத்த கொடி மல்லிகை பெரும் புதராக வளர்ந்து விசாலமான பந்தலாக விசாலித்திருந்தது. இந்த பந்தலுக்குள் யார் இருந்தாலும் வெளியில் தெரியாதபடி கொடி அடர்ந்து பரந்திருந்தது. தாம் சந்திப்பதற்கு இதுவே பொருத்தமான இடம் என அவர்கள் தீர்மானித்தனர். அன்றைய பகல் பொழுது அவர்களுக்கு மிக நீண்டதாக இருந்தது. இறுதியில் பகலவன் மெல்ல நீங்கி இரவுச் சாமத்தின் கதவுகளுக்கு அப்பால் ஒளிந்து கொண்டு விட்டான்.

இரவானதும் ஊரடங்கிய வேளையில் தேன்மொழி வீட்டின் பின் கதவு வழியாக மெல்ல வெளியேறிச் சென்றாள். நடந்து வந்த பாதையில் யாரும் அவளை பார்க்கா விட்டாலும் கூட தன்னை யார் பார்த்தாலும் அடையாளம் தெரியாதவாறு வெண்பட்டு சால்வை கொண்டு முக்காடு போட்டுக் கொண்டாள். அவள் விரைந்து நடந்து வந்து அவர்கள் திட்டமிட்டிருந்த படி ஓடைக்கரையோரம் விரிந்து பரந்திருந்த மல்லிகைப் பந்தலுக்குள் நுழைந்து அங்கிருந்த திட்டியில் அமர்ந்து கொண்டாள். அந்த நள்ளிரவில் அவள் அப்படிச் செய்வதற்கு அவள் கொஞ்சமும் அச்சம் கொள்ளவில்லை. இளம் பரிதியின் மேல் அவள் கொண்டிருந்த சொல்லவொண்ணாக் காதல் அவளுக்கு மிகுந்த துணிச்சலைக் கொடுத்திருந்தது.

அவள் அங்கு வந்த சில நொடிகளில் பந்தலுக்கு வெளியில் இலையுதிர்ந்து காய்ந்த சருகுகள் மிதிபடும் ஓசை கேட்டது. அவள் தன் காதலன் வந்து விட்டானோ என்று ஆவலுடன் வெளியில் எட்டிப்பார்த்தாள். அங்கே சற்று தூரத்தில் அவளுக்கு பேரச்சம் ஏற்படுத்தும் விதத்தில் ஒரு சிங்கம் நடந்து வந்து கொண்டிருந்தது. அதன் வாயில் ஆட்டையோ

மாட்டையோ கடித்துத் தின்றதால் செங்குருதி வடிந்து கொண்டிருந்தமையை அந்த பால் நிலவில் அவள் தெளிவாகப் பார்த்தாள். அச்சத்தால் அவளுக்கு தன் குருதியும் உறைந்து விடும் போல் தோன்றியது. அவள் பயத்தால் நடு நடுங்கி விரைந்தோடி அருகிலிருந்த இருளான குகை ஒன்றுக்குள் ஒளிந்து கொண்டாள். அவள் விரைந்தோடும் போது தான் போர்த்தியிருந்த வெண்பட்டுச் சால்வை கழுத்திலிருந்து விழுந்து போய் விட்டதை கவனிக்கவில்லை.

நன்கு கொழுத்து வளர்ந்திருந்த அந்த கொடூரத்தோற்றம் கொண்ட சிங்கம் மாமிசத்தை வயிறு நிறைய தின்றதால் ஏற்பட்ட தாகத்தை தீர்த்துக் கொள்ள நேராக ஓடைக்குச் சென்றது. அங்கே நீரைக் குடித்த பின் காட்டுக்குத் திரும்பும் வழியில் மல்லிகைப்பந்தல் அருகே தேன்மொழியின் வெண்பட்டுச் சால்வையைக் கண்டது. அதில் இருந்த மனித வாடையை நுகர்ந்த அச்சிங்கம் வெறியுடன் அச்சால்வையை தன் நகங்களாலும் பல்லாலும் நார் நாராகக் கிழித்துத் துண்டாக்கியது. சிங்கத்தின் வாயிலும் தாடையிலும் காணப்பட்ட இரத்தம் வெண் பட்டாடையில் தோய்ந்து அதனை சிவப்பாக்கியது.

சிறிது நேரத்தில் இளம்பரிதி அங்கு வந்து சேர்ந்தான்.மல்லிகைப் பந்தலை அண்மிய போது அங்கே மணற்தரையில் கொடுஞ்சிங்கத்தின் வலிய பாதத்தின் அடிச்சுவடுகளைக் கண்டான். அவன் நெஞ்சில் நடுக்கம் ஏற்பட்டது. முகம் வெளிறிப் போய் விட்டது. உடம்பின் இரத்த நாளங்கள் அனைத்தும் செயலற்றுப்போய் விட்டன. இரத்தம் தோய்ந்த தேன்மொழியின் வெண் பட்டாடைச் சால்வையை இனம் காண அவனுக்கு நீண்ட நேரம் தேவைப்படவில்லை.

'ஐயோ! நானே என் அன்பரசியின் சாவுக்கு காரணமாக இருந்து விட்டேனே" என்று அலறினான் பிதற்றினான். "எம் அருங்காதல் இப்படியா முடிவுற வேண்டும். உன்னை இந்த ஆபத்தான இடத்துக்கு நள்ளிரவு நேரத்தில் வரச் சொன்னது எவ்வளவு பெரிய தவறு. வரச் சொன்ன நான் அல்லவா முதலில் வந்திருக்க வேண்டும். அப்போது என்னையல்லவா அந்த கொடுஞ்சிங்கம் கொன்றிருக்கும். நீ நீண்ட காலம் வாழ்ந்திருப்பாயே நம் காதலுக்காக நான் என்னுயிரை ஈந்திருப்பேனே! ஓ இந்த காட்டில் வாழும் கொடுஞ்சிங்கங்களே! வாருங்கள் என்னுடலையும் குதறியெறியுங்கள் என்னுயிர் என் காதலி இருக்குமிடம் போய் விடட்டும். ஆனால் கோழைகள் அல்லவா

மரணத்தை தீர்வாகக் கேட்பார்கள் நான் என்ன செய்வேன்' என அவன் பைத்தியக்காரன் போல் அரற்றினான்.

பின்னர் அவன் இரத்தம் தோய்ந்த தேன்மொழியின் அந்த வெண்பட்டு சால்வையை மிகுந்த கவனமுடன் பட்டுப்போல் எடுத்தான். அதனை தன் தோளில் போட்டு தழுவிக் கொண்டான். கையால் தடவி முத்தங்கள் பொழிந்தான். பின் அவன் அந்த சால்வையைப் பார்த்துக்கூறினான் 'நீ என் காதலியின் இரத்ததைக் குடித்தது போல் என் இரத்தத்தையும் குடித்து விடு' அவன் தன் இடையில் கட்டி இருந்த உடை வாளை உருவியெடுத்தான். அதனை தன் நெஞ்சுக்கு நேரே உயர்த்தி வலுவுடன் நெஞ்சை ஊடுருவச் செருகி பின் மீண்டும் இதே வேகத்தில் வாளை உருவி எடுத்து அப்பால் எறிந்தான். அடுத்த கணத்தில் அவன் மல்லாந்தபடி வெற்றுடம்பாய் நிலத்தில் வீழ்ந்தான். அவன் உயிர் அவனைவிட்டு பிரிந்து விட்டது. அவன் நெஞ்சில் ஏற்பட்ட துளையில் இருந்து பீறிட்ட இரத்தம் உயர வீசி விசிறியடித்தது. சுற்றுப்புறம் எங்கும் சிவப்பானது. மல்லிகைப்பந்தலில் வெண்மையாகப்பூத்திருந்த பூக்களும் சிவப்பு நிறமாயின. மல்லிகைச் செடியின் வேர்களும் அவன் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டன.

இருண்ட குகைக்குள் அச்சம் மேலிட ஒளிந்து கொண்டிருந்த தேன்மொழிக்கு இப்போது மற்றுமொரு பயம் தோன்றியது. தன்னைத் தேடி வரும் தன் காதலன் சிங்கத்திடம் சிக்கி விட்டால்! அவனை எப்படி எச்சரிப்பது என்று நினைத்தாள். உடனே அங்கிருந்து வெளியேறி தான் அந்த பேராபத்தில் இருந்து எவ்வாறு தப்பினேன் என்று கூறி அவன் தோளில் சாய்ந்து ஆறுதல் தேட வேண்டும் என்று ஆவல் கொண்டாள். அவள் மெதுவாக மல்லிகைப்பந்தல் இருக்கும் இடத்துக்கு வந்தாள்.

அங்கே சூழ்நிலையில் ஏற்பட்டிருந்த மாற்றத்தை கண்டு துணுக்குற்றாள். அந்த மல்லிகைப்பந்தலை அவள் சிறு பருவம் முதல் நன்கறிவாள். அது எப்போ பார்த்தாலும் வெண் குடை விரித்திருப்பது போல் அடர்ந்து பரந்திருக்கும். இப்போது என்ன சிவப்பாக நிறம் மாறி இருக்கிறதே? ஒரு கணம் இடம்மாறி வந்து விட்டேனோ என்று சந்தேகம் கொண்டாள். அவள் சுற்றும் முற்றும் பார்த்த போது ஒரு மனிதனின் உடல் கீழே வீழ்ந்து கிடப்பதை நிலவொளியில் கண்டாள். அவள் மனம் பதைத்தது. அவள் கால்கள் இரண்டடிகள் பின் நோக்கி நகர்ந்தன. அவள் முகம் வெளுத்தாள். கண்கள் இருண்டன.

பின் நோக்கிச் செருகி இருண்டன. அங்கே வெற்றுடலாய் வீழ்ந்து கிடப்பவன் தன் காதலனே என்பதை புரிந்து கொள்ள அவளுக்கு கன நேரம் பிடிக்கவில்லை. அவள் பேதை மனம் அப்படியே துவண்டு போய் விட்டது.

'அன்பே! எந்த சக்தி உன்னை என்னிடம் இருந்து பிரித்தது? நீ எழுந்து வர மாட்டாயா? எழுந்திரு என் அன்பே! எழுந்திரு! நான் உன் அன்பான தேன்மொழி அழைக்கிறேன். உன் மூடிய கண்களை திறந்து ஒரு முறை பார்க்க மாட்டாயா?' அவள் ஏக்கத்துடன் பிதற்றினாள்.

தேன்மொழி மண்டியிட்டு அவனுடலைத் தழுவிக் கொண்டாள். அவள் வடித்த கண்ணீர் அவன் காயத்தை கழுவியது. அவள் அவன் கன்னங்களில் முத்தமிட்டாள். அவன் தன் நெஞ்சுடன் அவளின் பட்டுச் சால்வையை அணைத்துக் கொண்டிருப்பதை கண்ணுற்றாள். அவனது இடை வாள் அதன் உறையில் இல்லாததையும் கண்ணுற்றாள். இப்போது அவளுக்கு எல்லாம் புரிந்தது. எப்படி இளம்பரிதி தன் உயிரை மாய்த்துக் கொண்டான் என்பதும் தெரிந்தது. அவள் மீது அவன் கொண்ட மேலான காதலே அவனுக்கு எமனாக வந்து விட்டது.

என் மீது கொண்ட காதல் உன் உயிரைத் துறக்குமளவுக்கு சக்தியைத் தருமானால் அதே காதல் எனக்கும் அதே சக்தியை கொடுக்கட்டும் நானும் உன்னுடனேயே வந்து விடுகிறேன். நான் தான் உன் சாவுக்கு காரணமாக இருந்து விட்டேன் என்று மக்கள் தூற்றக்கூடாது நாம் சாவிலும் இணை பிரியாதிருந்துள்ளோம் என்று அவர்கள் கருதட்டும் நாம் ஒருவேளை ஒன்று சேர்ந்திருந்தால் சாவுக்கு மட்டுமே நம்மை பிரிக்கும் சக்தி இருந்திருக்கும். ஆனால் இப்போது அந்தச் சாவால் கூட நம்மைப் பிரிக்க முடியாது என்ற நிலை தோன்றி விட்டது. எங்களை பிரித்து வைக்கப்பார்த்த மகிழ்ச்சியற்ற உன் பெற்றோருக்கும் என் பெற்றோருக்கும் ஒன்று சொல்கிறேன். நாங்கள் மரணத்தில் ஒன்று சேர்ந்து விட்டோம் என்பதை உங்களால் மறுக்க முடியாது. அதே போல் எங்கள் உடல்களையும் பிரித்து விடாதீர்கள். அவை ஒரு கல்லறையில் உறங்கட்டும். இந்த மல்லிகைப்பந்தலில் வெண்மையாகப்பூத்திருந்த மல்லிகை மலர்கள் எங்கள் இரத்தத்தில் இனி சிவப்பாக பூக்கட்டும் அவை என்றென்றும் எங்களை உங்களுக்கு ஞாபகப்படுத்தட்டும்.

அவள் இதைக்கூறி விட்டு இளம் பரிதியின் இரத்தம் தோய்ந்திருந்த அந்த கூரான வாளை தன் மார்புக்குக்கீழே பொருத்தினாள். பின் வாளின்

பின்புறம் நிலத்தில் ஊன்றும் படி அதன் மீது வீழ்ந்து வாளை நெஞ்சில் ஊடுருவச் செய்தாள். அவளது உயிரற்ற உடல் இளம்பரிதியின் உடலுக்கு இடப்புறமாக வீழ்ந்தது.

தேன்மொழியின் இறுதிப் பிரார்த்தனைகள் உலகத்தோர் மனதைத் தொட்டது. அவர்களின் பெற்றோர்களும் மனமிளகி வருந்தினர். இப்போதும் கண்டிக்கருகாமையில் செங்கந்தன் கந்தை என்ற இடத்தில் அந்த ஓடைக்கருகாமையில் இருக்கும் அந்த மல்லிகைக் கொடியில் சிவப்பு நிறப்பூக்களே பூக்கின்றன. அங்கே அவர்களுக்கு ஒரு கல்லறையும் காணப்படுகின்றது.

# ஈழத்து இலக்கிய செல்நெறியில் முற்போக்குச் சிறுகதைகளின் சுவடுகள்



லெனின் மதிவானம்

சிறுகதை இலக்கியம் என்று கூறும் போது நவீன காலத்தே எழுந்த புதுத் துறை ஒன்றினை கருத்திற் கொண்டிருக்கின்றோம் என்பதை வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை. இன்றுள்ள தமிழ் இலக்கிய வடிவங்களில் காலத்தால் பிந்தியதும் அதே சமயம் நவீன காலத்தில் இலக்கியத்தில் பெரும் பகுதியை ஆக்கிரமித்து வருகின்ற வடிவமாகவும் சிறுகதை விளங்குகின்றது. இலக்கிய வரலாற்றாசிரியர்கள் கூறவது போல சிறுகதை என்ற இலக்கிய வடிவம் மேனாட்டாரின் இலக்கிய தொடர்பின் மூலம் தமிழில் வந்து புகுந்ததொன்றாகும்.

நிலமானிய சமூகவமைப்பின் சிதைவுடன் தோற்றம் பெற்ற முதலாளித்துவ சமூகவமைப்பும் அதனடியாக எழுந்த சமூகத்திற்கும் தனிமனிதனுக்கும் இடையிலான புடைப்பெயர்ப்பும் சிறுகதை இலக்கியம் தோன்றுவதற்கு சாதகமான சூழலை தோற்றுவித்தது.

அவ்விலக்கிய வடிவமானது மேனாட்டாரின் தொடர்பிலிருந்து தமிழுக்கு வந்ததொன்று என்ற போதினும் தமிழர் பண்பாட்டுச் சூழலில் காணப்பட்ட அகலுலகத் தொடர்பும் மற்றும் தமிழர் சமூதாயச் சூழலிலே உருவாகி வந்துள்ள சில சமூக சக்திகளும் சிந்தனைகளும் தமிழ் சிறுகதை தோன்றி வளர்வதற்குரிய உந்துதலாக அமைந்தன. அவ்வகையில் தமிழ் சிறுகதை வரலாறானது தமிழர் சமூதாயத்தின் தனித்துவங்களையும் சிறப்புகளையும் உள்வாங்கி தமிழ் சிறுகதை துறையாகவே வளர்ச்சியடைந்து வந்துள்ளது எனக் கூறின் தவறாகாது.

1930 களில் தமிழகத்திலே ஏற்பட்ட சத்தியாகிரக போராட்டமும் அதனையொட்டி யெழுந்த ஜனநாயக கருத்துக்களும் அமைப்புகளும் அங்கு சிறுகதை இலக்கியம் தோன்றுவதற்கான சூழலை ஏற்படுத்தியிருந்தது. இலங்கையில் டொனமூர் அரசியல் அமைப்பானது மத்திய தர வர்க்கத்தினரிடையே ஓர் சலசலப்பை ஏற்படுத்தியதோர் அரசியல் திட்டமாக காணப்படினும் அதனூடாக கொண்டு வரப்பட்ட சர்வசன வாக்குரிமையின் பிரதிப்பலிப்பாக அரசியல் அரங்கிலே மக்கள் நடமாட்டம் இடம் பெறத் தொடங்கியிருந்தன. பொது மக்களுக்கான கல்வி வாய்ப்புகள் விஸ்தரிக்கப்பட்டதன் விளைவாக மத்திய தர வர்க்கம் உருவாகியது. இந்த பின்னனியில் தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவு எடுத்துக் கூறப்பட வேண்டிய தேவை ஏற்பட்டதன் விளைவாக, சிறுகதை இலக்கிய வடிவமானது முக்கியமானதோர் இலக்கிய கூறாக போற்றப்பட்டது. அத்துடன் சிறுகதைகளை பிரசுரம் செய்வதற்கான பத்திரிகைகளும் சிறு சஞ்சிகைகளும் தோன்றி சிறுகதை வளர்ச்சிக்கு உந்துதலாக அமைந்தன.

இவ்வகையில் 1930 களிலேயே ஈழத்தில் சிறுகதைகள் தோன்றின என்ற போதிலும் ஆரம்பகால சிறுகதைகள் பெரும்பாலும் அதன் இலக்கிய வடிவத்தினை அறிமுகம் செய்கின்ற முயற்சியாகவே அமைந்துக் காணப்பட்டன். இச்சிறுகதை எழுத்தாளர்கள் பெரும்பாலும் என்ன எழுதப்படுகின்றது என்பதை விட எப்படி எழுதப்படுகின்றது எனும் விடயத்தினையே பிரதானப்படுத்தியிருந்தனர்.

1950 களுக்கு பின்னர் தான் ஈழத்துச் சிறுகதை துறையில் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியிருந்தன. இக்கால சூழலில் ஆசியா – ஐரோப்பா மற்றும் உலகலாவிய ரீதியிலே தொழிலாளர் வர்க்கம் சார்ந்த

உணர்வுகளும் போராட்டங்களும் வலிமை பெறத் தொடங்கின. பாஸிசத்திற்கு எதிராக பலமான மக்கள் இயக்கங்கள் தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்றிருந்தன. 1930 களில் ஸ்பானியர்கள் உள்நாட்டு யுத்தத்திற்கு எதிராக போராடியதுடன் கம்யூனிஸ்ட் கட்சியும் உருவாகி ஆயிரக் கணக்கான மக்கள் சமத்துவமான சமூதாய அமைப்பை உருவாக்குவதற்காக போராடிக் கொண்டிருந்தார்கள். இக்காலப்பின்னனியில் ஆஸ்திரியா, பிரான்ஸ் முதலிய நாடுகளிலும் பல விடுலை இயக்கங்கள் தோற்றம் பெற்றிருந்தன. இவ்வாறே ஆசியாவிலும் குறிப்பாக சீனா இந்தோசேயா முதலிய நாடுகளில் ஜப்பானிய பாஸியத்தை எதிர்த்து வீறு கொண்ட போராட்டங்கள் தோன்றி மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருந்தன. பல்லாயிரக் கணக்கான மக்கள் விடுதலை இயக்கங்களில் தம்மை இணைந்துச் செயற்பட்டனா். இலட்சிய பிடிப்பும் முற்போக்கு உணா்வும் மிக்க எழுத்தாளர் பலா் தோன்றிக் கொண்டிருந்தார்கள். சிலர் பாஸிச வெறியாளர்களாரல் ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கப்பட்டார்கள். தன் மரண வாயிலில் நின்றுக் கொண்டும் மனித குலத்தின் நாகரிகத்தை நம்பிக்கையுடன் மட்டுமல்ல கூடவே கர்வத்துடனும் தன் எழுத்துக்களின் ஊடாக பதிவு செய்த ஜீலியஸ் பூசிக்கின் பின்வரும் வாசகம் இக்காலத்தே எழுந்த மக்கள் இலக்கிய கர்த்தாக்களின் உணர்வுகளை அழகுற எடுத்துக் காட்டுகின்றது. ஃஃ இன்பத்திற்காகவே பிறந்தோம். இன்பத்திற்காகவே வாழ்நகிறாம். இன்பத்திற்காகவே போராடினோம். அதற்காகவே சாகின்றோம். துன்பத்தின் சாயலானது இறுதி வரை எம்மை அணுகாதிருக்கட்டும்! இவ்வகையான இலட்சிய பீடிப்பும் இலக்கிய தாகமும் கொண்ட எழுத்தாளர்கள் உலக இலக்கியத்தில் தோன்றிக் கொண்டிருந்தாரகள். இதன் பிரதிபலிப்பை நாம் ஈழத்து தமிழ் இலக்கிய செல்நெறியிலும் (குறிப்பாக சிறுகதைகளில்) காணக் கூடியதாக உள்ளன.

1950 களுக்கு பின்னர் ஈழத்து சிறுகதைகளில் புதியதோர் பரிமாணத்தை தரிசிக்க கூடியதாக அமைந்திருந்தது. ஈழத்தில் தேசிய இலக்கியம் எனும் குரல் எழுந்தது. தேசியம், தேசிய கோட்பாடு என்பன தத்துவார்த்த போராட்டங்களாக முனனெடுக்கப்பட்டன. அதன் விளைவாக ஈழ மண்ணுக்கே உரித்தான பிரச்சனைகள் சிறுகதைகளில் இடம் பெறத் தொடங்கின. இது குறித்து பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“தேசியப் பின்னணியில் வளரும் சமுதாயத்தின் போக்கை அனுசரித்து வாழ்க்கைக்கு கலைவடிவம் கொடுக்கவும் சரித்திரத்தின் தன்மையை உணர்ந்து அதற்கு ஈடுகொடுக்கவும் திறமையிருந்தால் சிறந்த – உலக இலக்கியத்தில் இடம்பெறத்தக்க உயர்ந்த சிறுகதைகளைப் படைக்க எமது எழுத்தாளரால் முடியும் என்றே நம்புகிறேன். பொழுதுபோக்கிற்காக எழுதுவதா அல்லது பொது நலத்திற்காக எழுதுவதா என்னும் முக்கியமான கேள்வி இன்றைய எழுத்தாளர் பலரையும் எதிர்நோக்கி நிற்கிறது. இது புதிய கேள்வியன்று. வெவ்வேறு வடிவத்திலும் உருவத்திலும் இலககிய சிருஷ்டி கர்த்தாக்களை விழித்துப் பார்த்த கேள்விதான். ஆனால் இன்று மிக நெருக்கடியான நிலையிலே இக்கேள்வி எழுத்தாளரை நோக்கிக் கேட்கப்படுகிறது. ஈழத்துச் சிறுகதையாசிரியர்கள் தமது கலாச்சாரப் பாரம்பரியத்தையுணர்ந்து நாட்டு மக்கள் நலமுற்று வாழவும் நானிலத்தவர் மேனிலையெய்தவும் மூட்டும் அன்புக் கனலோடு எழுத முடியுமா முடியாதா என்பதைப் பொறுத்திருக்கிறது எதிர்கால இலக்கிய வாழ்வும் தாழ்வும்”

ஒரு நாட்டின் பூலோக பண்பாடு பொருளாதாரம் அரசியல் முதலிய அம்சங்கள் சமூக வாழ்க்கையை உருவாக்குவதில் முக்கிய தாக்கம் செலுத்துகின்றன. அவ்வகையில் பிரதேசம் மண்வாசனை என்ற அடிப்படையில் எழுகின்ற இலக்கியங்களை மேலோட்டமாக அர்த்தப்படுத்திப் பாரக்கின்ற போது குறுகியபாதகமாக படலாம். சற்று ஆழமாக நோக்கினால் தான் அதன் பின்னனியில் அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தம் சாதனங்களாகவும் அவை அமைத்துக் காணப்படுகின்ன. மறுப்புறமாக அவை தேசிய எல்லைகளை கடந்து சென்று சர்வதேச இலக்கியமாகவும் திகழ்கின்றன. இவ்வாறுதான் ரசிய புரட்சியின் முன்னோடியாக திகழ்ந்த மாக்ஸிம் கோக்கியும் , இந்திய தேசியவிடுதலைப் போராட்டத்தில் முக்கிய பாத்திரம் வகித்த பாரதியும் இன்னும் இத்தகையோரும் எமக்கும் அரசியல் இலக்கிய முன்னோடிகளாக திகழ்கின்றனர்.

மறுப்பறமாக இலங்கை அரசியல் வரலாற்றினை பொறுத்தமட்டில் நாற்பதுகளின் இறுதியிலும் 50 களிலும் பொதுவுடமை இயக்கமானது வீரியத்துடன் செயற்படத் தொடங்கியது. அவவியக்கம் ஏற்படுத்திய கலாசார பண்பாட்டுத் சூழலில் தோற்றம் பெற்றதே முற்போக்கு எழுத்தாளர் சங்கம். முற்போக்கு கலை இலக்கியம் சார்ந்த செயற்பாடுகளையும் கொள்கைகளையும்

முன்னெடுப்பதில் இவ்வணியினருக்கு முக்கிய பங்குண்டு. அதன் நோக்கம் குறித்து இந்நூலின் முன்னுரையை பிரஸ்தாபிக்கும் நீர்வை பொன்னையன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'முற்போக்கு எண்ணம் கொண்ட சகல எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் ஓர் அணியில் திரட்டி தொழிலாளர்கள், விவசாயிகள், புரட்சிகர புத்திஜீவிகள் பரந்துபட்ட உழைக்கும் வெகுஜனங்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு மக்கள் கலாசாரத்தை உருவாக்குவதும், உன்னத மனித வர்க்கத்திற்கான கலை இலக்கியம் படைப்பதும், சமத்துவ அடிப்படையில் சகல தேசிய இனங்களினதும் மொழி கலாசார முன்னேற்றத்திற்காக உழைப்பதும், எழுத்தாளர்களது நலன்களுக்காகவும் மேம்பாட்டுக்காகவும் பாடுபடுவதுதான் இ.மு.எ.ச தின் நோக்கம்!

இவ்வகையில் செயற்பட்டுவந்த இ.மு.எ.ச மானது 1960 களின் ஆரம்பத்திலேயே அது சித்தாந்த ரீதியாகவும் இயக்க ரீதியாகவும் சிதைய தொடங்கியது என்பதனையும் கவனத்திலெடுக்க வேண்டும். இலங்கையின் பொதுவுடமை இயக்கத்தில் அறுபதுகளின் ஆரம்பத்தில் ஏற்பட்ட தத்துவார்த்த முரண்பாடுகளும் பொதுவுடமை இயக்கத்தை பிளவுக்குள்ளாக்கியது. மேற்படி பிளவும் அணி பிரிதலும் இ.மு.போ.எ.ச.த்தையும் பாதித்தது. அதன் ததலைமை பொறுப்பினை ஏற்றிருந்தவர்களின் போக்கு இவர்களை சித்தார்த்த ரீதியாக சிதைத்து பின் இயக்க ரீதியான சிதைவுகக் வழிவகுத்தது.

மனுக்குல விடுதலைக்கான பரந்துப்பட்ட இலக்கிய முன்னனிப் போராட்டத்தில் இவ்வியக்கத்தின் பலம் பல்வீனம் குறித்து ஆழமான ஆய்வொன்றினை காய்த்தல் உவத்ததலின்றி செய்தல் காலத்தில் தேவையாகும்.

இ. மு. போ. எ. ச வீறுக்கொண்டெழுந்த காலத்திலும், பின்னர் அதன் தளர்வுற்றக் காலத்திலும் இவ்வியக்க செயற்பாடுகளில் பங்கெடுத்த எழுத்தாளர்கள் படைப்புகளோ இத்தொகுப்பில் இடம் பெறுகின்றன. இச் சிறுகதைகள் யாவும் 1940 - 1970 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்டவையாகும். சில சிறுகதைகள் இறுதியில் அக் கதை பரவலாக கொண்ட ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. துரதிஸ்டவசமாக சில சிறுகதைகள் எழுதிய காலம் குறிப்பிடப்படவில்லை. இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள

கதைகள் யாவும் வெவ்வேறு அளவில் மனிதாபிமானம், இனவிடுதலை போன்ற விடயங்கள் குறித்து சித்தரிக்கின்றன. அவை அவ் அவ் பிரதேசத்திற்குரித்தான மண்வாசனையுடன் வெளிப்படப்பட்டுள்ளமை அதன் தனித்துவமான பண்புகளில் ஒன்று.பொதுவாக இலக்கியத்தின் உள்ளடக்கம், அது வெளிப்படுத்தி நிற்கின்ற அழகிய அம்சங்கள் என்ற வகையில் நோக்குகின்ற போது அதனை பின்வரும் வகைப்பட்டினுள் அடக்க கூடியதாக உள்ளன.

1. முற்போக்கு நோக்கிலான சிறுகதைகள்
2. மார்க்ஸிய நோக்கிலான சிறுகதைகள்
3. பிற்போக்கானவை

சாதிய ரீதியாக தாழ்த்தப்பட்ட ஒருவர் கோயிலுக்குள் செல்வதை அனுமதித்தல் முற்போக்கான பார்வையாகும். தாழ்த்தப்பட்ட ஒருவரின் கோயிலுக்குள் செல்ல முடியாத நிலையில் உள்ள ஒடுக்கு முறையை இனங்கண்டு அதற்கான மக்கள் போராட்டத்தை வர்க்க போராட்ட நோக்கில் அணுகுவது மார்க்ஸிய நிலைப்பட்ட பார்வையாகும். தாழ்த்தப்பட்ட ஒருவர் கோயிலுக்குள் செல்லும் உரிமையை மறுப்பது பிற்போக்கான பார்வையாகும். இத்தகைய பார்வை இத் தொகுதியில் அடங்கியுள்ள சிறுகதைகளில் எவ்வாறு வெளியீட்டு நிற்கின்றன என்பது பற்றி நோக்குவோம்.

இத்தொகுப்பில், முற்போக்கு நோக்கின் அடிப்படையில் எழுதப்பட்ட சிறுகதைகளாக இரத்த உறவு (அ. ந. கந்தசாமி), ஒரு புதிய ஆயுதம் (சி. வி. வேலுப்பிள்ளை), தண்ணீர் (மொஹிதீன்), வாய்க்கரிசி (டொமினிக் ஜீவா), பிரசாதம் (எஸ். அகஸ்தியர்), மண்பூனைகளும் எலி பிடிக்கும் (மருதூர்க்கனி), 47 வருடங்கள் (கே. விஜயன்), தேவ கிருபையை முன்னிட்டு வாழும்'. (காவலூர் ராசதுரை), ஊர் நம்புமா ? (நந்தி), ஒரு கிராமத்து பையன் கல்லூரிக்கு செல்கின்றான் (செ. கதிர்காமநாதன்), பெருமூச்சு (ஏ. இக்பால்), எப்படியம் பெரியவன் தான் (தெணியான்), மாறுசாதி (திக்குவல்லை கமால்), நிலவோநெருப்போ?(என்.சோமகாந்தன்),என் நண்பன் பெயர் நாணயக்கார" (சாந்தன்), அந்தக் கிழவன் (அ.ஸ. அப்துஸ் ஸமது), பகவானின் பாதங்களில் (மு. கனகராசன்) ஆகிய கதைகள் அமைந்துக் காணப்படுகின்றன.

மார்க்ஸிய நிலைப்பட பார்வையில் எழுதப்பட்ட சிறுகதைகளாக தண்ணீர்,(கே டானியல்), போர்வை (என். கே ரகுநாதன்), சங்கமம்(நீர்வை பொன்னையன்),

நேற்றைய அடிமைகள் (செ.யோகநாதன்)ஆகியோரின் சிறுகதைகள் அமைந்து காணப்படுகின்றன.

இதற்கு மாறாக சாயம் (செ. கணேசலிங்கம்), இங்கெவர் வாழவோ (யோ. பேனடிக் பாலன்) முதலானோரின் கதைகளில் கோட்பாட்டு தளம் வலிந்து புகுத்தப்பட்ட அளவிற்கு அழகியல் அம்சம் பேணப்படவில்லை.

டொமினிக் ஜீவின் சிறு கதைகள் பெரும்பாலும் வர்க்கம் கடந்த மனிதத்துவத்தை வலியுறுத்துவதாகவே அமைந்துக் காணப்படுகின்றன. இத் தொகுப்பில் இடம்பெறுகின்ற "வாய்க்கரிசி" என்ற சிறுகதையிலும் இப் பண்பு முனைப்புற்றிருந்ததை காணலாம்.

இதற்கு மாறாக டானியலின் சிறுகதைகளை பொறுத்தமட்டில் வர்க்க உணர்வு முதன்மைப்படுத்தப்பட்டிருப்பதுடன் வர்க்க போர்குணத்தை படைப்பாக்கி தந்ததில் முதன்மையான பங்களிப்பினை நல்கியுள்ளார். இத்தொகுதியில் இடம்பெறுகின்ற

"தண்ணீர்" என்ற சிறுகதை தலித் மக்களின் வாழ்வியலையும் உணர்வையும் வெளிக் கொணர்வது இச் சிறுகதையின் பலமான அம்சமாகும். ஆனால் கதையின் இறுதியில் கதையின் முக்கிய பாத்திரமான முப்பன் சின்னான் தண்ணீரில் நஞ்சி கலந்திருப்பதனை அறிந்த பின்னர் தமது மக்கள் தண்ணீரை குடித்து இறக்காமல் இருப்பதற்காகவும்

அவர்களுக்கு அறிவிப்பதற்காகவும் தனது விரலை கடித்து குருதியால் நஞ்சு எழுதி வைத்து விட்டு இறப்பது செயற்கைதனமாக உள்ளது. இவ்வம்சம் கதையின் யதார்த்த ஓட்டத்தை பாதிப்பதாக உள்ளது. இத்தகைய நிகழ்வு உண்மை சம்பவமாக இருப்பினும் அவை வகைமாதிரியான பாத்திரப்படைப்பாக அமையவில்லை.

இத்தொகுப்பில் அடங்கியுள்ள மிக சிறந்த கதைகளிலொன்றாக நீர்வை பொன்னயனின் "சங்கம்" சிறுகதை அமைந்துள்ளது. 1970 களில் சகல இடதுசாரி ஜனநாயக சக்திகளும் இணைந்து 21 அம்ச கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தை நடாத்தியமை இடதுசாரி இயக்க வரலாற்றில் முக்கிய திருப்புமுனையாக அமைந்திருந்தது. அப்போராட்டம் குறித்து அதனடியாக எழுந்த உணர்வுகளையும் கருத்தோட்டங்களையும் கலைத்துவம் குன்றாத வகையில் நீர்வை பொன்னையன் படைப்பாக்கி தந்துள்ளார்.

தத்துவ தெளிவும் சிருஷ்டிகர திறனும் ஒருங்கமைந்துள்ளமையே இதற்கான அடிப்படையாகும்.

இச் சிறுகதை கட்சி இலக்கியத்திற்கான அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. கட்சி இலக்கியம் என்பது பாட்டாளி வர்க்க கட்சியை முதன்மைபடுத்தியே படைப்பாக்கப்பட வேண்டும் என்பது அதன் நியதியாகும். கட்சியின் போராட்டங்களை சரியான திசை மார்க்கத்தில் முன்னெடுத்து செல்வதற்கான தளம் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். இத்தகைய மக்கள் எழுச்சிக்காகவும் புரட்சிகர பணிக்காகவும் பரந்துப்பட்ட மக்களை விழிப்பு கொள்ளச் செய்வதும் அணித்திரட்டுவதும் கட்சி இலக்கியத்தின் பிரதான இலட்சியமாகும். மாறாக கட்சியை மிகைப்படுத்தி, கட்சி உறுப்பினர்களை புனிதர்களாக காட்ட முனைவது கட்சி இலக்கியமாகாது. அதே சமயம் கட்சியில் உள்ள சிறு சிறு முரண்பாடுகளை பிரதானமாக்கி அதனை வெகுசன தளத்திற்கு கொணர்ந்து கட்சியை சிதைப்பது கட்சி இலக்கியமாகாது. மாக்ஸின் கோர்க்கியின் தாய், யங்கமோவின் "இளமையின் கீதம்" முதலிய படைப்புகள் கட்சி இலக்கியத்திற்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

இதற்கு மாறாக கட்சி இலக்கியம் என்பது மார்க்ஸியத்தை கற்காமல் அதன் உச்சாடனங்கள் கோசங்கள் முதலியவற்றால் கவரப்பட்டு, புரட்சியின் தளத்தில் மக்களையும் அதன் நேச சக்திகளையும் நிராகரித்து விட்டு தன்னை மாத்திரம் புரட்சியாளராக காட்டும் கோமாளி தனத்திற்கு எதிரானதாகும். புரட்சிகர சக்திகளை பிளவுப்படுத்த முனைவது எதிர் புரட்சிகரமானது. மக்கள் மத்தியில் முரண்பாடுகளை கையாளவது தொடர்பாகவும் கட்சி அமைப்பு தொடர்பாகவும் மாவோ தெளிவானோர் நிலைப்பாட்டினை முன் வைத்திருக்கின்றார். அந்த வகையில் பரந்துப்பட்ட ஐக்கிய முன்னனியைக் கட்டியெழுப்புவதை நோக்காக கொண்டே கட்சி இலக்கியம் படைக்கப்படுகின்றது. நீர்வை பொன்னையன் கட்சி இலக்கியம் குறித்து பல கதைகளை எழுதியுள்ளார்கள். அவற்றில் முக்கியமானதொரு கதையாக சங்கமம் சிறுகதை அமைந்துள்ளது.

1970 களில் தாயகம் சஞ்சிகையிலும் கட்சி இலக்கியம் தொடர்பான சிறுகதைகளை திரு. தணிகாசலம் எழுதியுள்ளார். அவரது சிறுகதை இத் தொகுப்பும் இடம்பெற்றுள்ளது.

என். கே. ரகுநாதன் எழுதிய போர்வை என்ற சிறுகதை கடினமான சிறுகதை வடிவத்திற்கு பெருமளவில் சவாலாக அமையக் கூடிய உரையாடல்கள் உறுத்தும் பாத்திர படைப்புகள் மூலமாக சிறுகதையாக்கித் தந்துள்ளமை சிறப்பானதாகும். இச்சிறுகதை சமுதாய

முரண்பாடுகளையும் பிரச்சனைகளையும் சமுதாய சூழலில் காணப்படும் குறியீடு, படிமம், இதிகாச புராண கதைகளின் துணைக் கொண்டு ஆக்கியுள்ளமை உள்ளடக்கமான உருவமா என்ற வீன்வாதத்தில் இறங்காமல் வரலாற்றுப் பார்வை,வர்க்கச் சார்பு, அழகியல் அக்கறை என்ற தத்துவ பின்புலத்தில் நின்று படைப்பாக்கியுள்ளார். இக் கதையின் ஊடாக என். கே. ரகுநாதன் வாழ்க்கை அனுபவத்தையும் கோட்டபாட்டு அணுகுமுறையும் இணைந்து வெளிப்படுத்தியிருக்கின்றார். தத்துவ தெளிவும் படைப்பாக்கத் திறனும் இதற்கான அடிப்பாக அமைந்துள்ளமையை இனங்காண முடிகின்றது. செ. கணேசலிங்கத்தின் "சாயம்" யோ. பெணடிக்பாலனின் இங்கெவர் வாழவோ, கே விஜயனின் 47 வருஷங்கள் முதலான கதைகள் மலையக சமூகம் தொடர்பானவையாகும்.

இக்கதைகளில் மலையக வாழ்வியலையும் அதனடியாக எழுகின்ற மனித உணர்வுகளையும் காணமுடியாதுள்ளது. மலையக சமூகத்தின் உற்பத்தி முறை உற்பத்தி உறவு என்பவற்றை சமூக பின்னணியோடு இணைந்து பார்ப்பதிலே இவ்வெழுத்தாளர்கள் இடருகின்றனர்.

எனவே இக்கதைகளில் கோட்பாட்டு தளம் வலிந்து புகுத்தப்பட்ட அளவிற்கு அதனை சமூகத்துடன் பொருத்திப் பார்க்க தவறிவிடுகின்றனர்.

கே. கணேஷின் சத்திய போதிமரம் என்ற சிறுகதை மனித தார்மிகம் தொடர்பான கதையாக அமைந்துள்ளது. கடவுள் சன்னிதானத்தில் செய்யப்படுகின்ற சத்தியமும் பின்னர் அது உண்மையாக பலிக்கின்ற நிகழ்வையும் அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டுள்ள கதையாகும். இச் சிறுகதையை வாசித்தபோது அண்மைக்காலத்தில் கே. கணேஷ் தொடர்பாக வெளிவந்துள்ள கருத்துக்களையும் இங்கொருமுறை குறித்துக்காட்ட வேண்டியது அவசியமானதாகின்றது. திரு.கே. கணேஷின் அந்திம காலத்தில் அவரது இலக்கிய சிந்தனைகள் குறித்த நேர்காணலை மேற்கொண்ட பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் அவர்கள் அவரது மதம் தொடர்பான கருத்துக்களை துருவி துருவி ஆராய்ந்து வெளிக் கொணர்வதில் ஓரளவு வெற்றியும்

கண்டுள்ளார். இந்நேர்காணலின் ஊடாக மார்க்ஸிய சிந்தனையாளர்கள் அனைவரும் இறுதியில் மதத்திலே சங்கமிக்கின்றார்கள் என்ற கருத்தை வெளிக் கொணர்ந்துள்ளனர். இதற்கு மாறாக நந்லாலா சஞ்சிகை குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட கே. கணேஷ் தொடர்பான நேர்காணலானது அவரது மதம் சார்ந்த நம்பிக்கைகளும் கருத்துக்களும் அந்திம காலத்தில் தோன்றியதொன்றல்ல.ஆரம்ப கால முதலே அவரிடத்தே இருந்து வந்துள்ள நம்பிக்கையாகும் என்ற விடயத்திற்கான வெளிக் கொணர்ந்துள்ளனர். கே. கணேஷ் எழுதிய 'சத்திய போதிமரம்' என்ற கதை அவரது மதம் நம்பிக்கை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதற்கு அப்பால் கே. கணேஷின் இத்தகைய மத சிந்தனைகளை வெளிப்படுத்திய அவராலும் எத்தகைய பங்களிப்பளிப்பினை வழங்க முடியும் என்பதை அவர் பொறுத்த ஆய்வுகளினூடாக வெளிக்கொணர வேண்டியது சமூகவியலாளர்களின் கடமையாகும்.

கே விஜயனின் 47 வருஷங்கள் என்ற சிறுகதை மலையக பெருந்தோட்ட உற்பத்தியுடன் இணைந்த முதியோர் (தொழிலாளி) ஒருவரின் வாழ்க்கை அனுபவத்தை குறிப்பதாக அமைந்துள்ளது. மலையக சமூகத்தின் வாழ்வியல் அம்சம் போதியளவாக காட்டப்படவில்லை.

சி.வி. வேலுப்பிள்ளையின் ஒரு புதிய ஆயுதம் என்ற மொழி பெயர்ப்பு கதை இடம்பெறுகின்றது. இக்கதையில் சிறுகதைக்கான பண்பினை விட விவரணத்தன்மையே மேலோங்கியிருக்கின்றது. தோட்டத துரைக்கு எதிரான போர்குணத்தை காட்டுவதற்காக சங்கத் தலைவர் தாடி வளர்ப்பதாக இக்கதை அமைந்துள்ளது. இந்த செயல் துரையை ஆத்திரம் ஊட்டச் செய்வதுடன் அதற்கு எதிரான நடவடிக்கைகளில் அவன் ஈடுபடுவதையும் காட்டுகின்றது.

துரை, பெரியாங்கங்கானி, மற்றும் தோட்டப்புற உத்தியோகத்தர்களுக்கான எதிர்ப்பை காட்டுவதற்காக இளைஞர்கள் சில தாடிவளர்த்தல், இட்லர் மீசை வைத்தல் முதலிய செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். இதற்காக இவர்கள் அவ்வப்போது தண்டிக்கப்பட்டதுடன் சிலர் வேலையிலிருந்தும் நீக்கப்பட்டனர். இருப்பினும் தமது எதிர்புணர்வை இத்தகைய செயல்களின் மூலமாகவும் காட்டி வந்துள்ளனர்.

மலையக தோட்டப்புற வாழ்க்கையை சிறப்பாக உணர்ந்த ஒருவருக்கு இக்கதை அந்நியப்பட்டிருக்காது. ஆனால் சி வியின் ஆங்கில படைப்பை வாசித்த ஏற்பட்ட உணர்வு மொழிப்பெயர்ப்பை வாசித்த போது ஏற்படவில்லை என்ற போதிலும் மொழிப் பெயர்ப்பு உள்ளடக்கம் – வடிவம் சிதையாதவகையில் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

இவ்வாறிருக்க,சி.வி. வேலுப்பிள்ளை இக்கதையை எழுதிய காலத்தில் மலையகத்தில் இடது சாரி இயக்கம் முனைப்பு பெற்று வீறுகொண்ட போராட்டங்களை நடாத்திக் கொண்டிருந்தது. ஒடுக்குமுறைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிரான மக்கள் போராட்டங்கள் உருப்பெற்று அவை வீறுகொண்ட போராட்டங்களாக முன்னெடுக்கப்பட்டன. மக்களுக்கு எதிராக செயற்பட்ட பல தோட்ட துரைமார்கள் தாக்கப்பட்டார்கள், சில கணக்கப்பிள்ளைகளின் கைகள் வெட்டப்பட்டன. இவ்வாறனதோர் சூழலில் இத்தகைய போக்குகளை சி. வியின் எழுத்துக்கள் வெளிக் கொணரத் தவறிவிடுகின்றது. மலையகத்தில் தோன்றிய இடது சாரி இலக்கியத்தின் எழுச்சி இன்னும் இலக்கியமாக்கப்படவில்லை. இனிமேல் தான் அவை இலக்கியமாக்கப்பட வேண்டும்.

திரு. எச்.எம்.பி மொஹிதீன் எழுதிய ‘தண்ணீர்’ என்ற சிறுகதை சேரியில் வாழ்கின்ற நகர்நிலை தொழிலாளர்களின் வாழ்க்கையை அழகியல் சிதையாதவகையில் உண்மையின் பக்கம் நின்று எழுதப்பட்டுள்ளமை இதன் சிறப்பான அம்சமாகும். நகர் நிலை தொழிலாளர்கள் வர்க்கத்தினரிடையே தொழிலாளவர்க்க அல்லது உதிரி தொழிலாளவர்க்க பண்புகள் எவ்வகையில் அம்மக்களின் வாழ்க்கையில் தாக்கம் செலுத்தியுள்ளன எனும்விடயம் கோட்பாடாக அல்லாமல் பாத்திர வார்ப்பின் அடிப்படையில் வெளிக்கொணரப்படுகின்றது.

தேசிய இலக்கியம், கோட்பாடு, என்பதன் அடுத்த கட்ட பரிணாமமான இலங்கையில் பண்ணையடிமைத் தனத்தின் ஒடுக்கு முறையை எதிர்க்கும் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கப்போராட்டம் சாதியத்தையும் தீண்டாமையையும் தகர்க்கும் தேசியமாக பரிணமித்தது. இக் காலச் சூழலின், எழுச்சியையும் அதனடியாக எழும் போர்குணத்தையும் செ. யோகநாதனின் நேற்றை அடிமைகள் என்ற சிறுகதை சித்தரிக்கின்றது. சாதிய ஒடுக்குமுறைக்கு

எதிரான போராட்டங்கள் நடந்த அறுபதுகளின் காலக்கட்டத்தில் எழுதப்பட்ட இக்கதை சின்னஞ்சிறு பிஞ்சு உள்ளங்களில் எப்படி சாதிய சமூகம் தனது ஒடுக்குமுறையை செலுத்துகின்றது என்பதை காட்டுகின்ற அதேசமயம் காலப்போக்கில் அடக்கியொடுக்கப்பட்ட மக்களிடையே ஏற்பட்டு வருகின்ற எழுச்சிகளையும், தாங்களும் மனிதப்பிறவிகள் என்ற அடிப்படையில் போராட முனைகின்ற போக்குணத்தையும் வெளிப்படுத்திக் காட்டுவதாக இக்கதை அமைந்துள்ளது இக்கதையில் முக்கிய பாத்திரமான தங்மணியின் வளர்ச்சி, தமது ஓடுக்கு முறைகளுக்கு எதிராக போராடுவதற்காக உருவாகியுள்ள மக்கள் இயக்கம் மற்றும் அக்காலக் கட்டத்தில் அவ்வியக்கத்தின் சுவாச காற்றாக விளங்கிய 'அடிமை குடிமை முறை ஒழியட்டும், ஆலயக் கதவுகள் திறக்கட்டும்' என ஆலமரத்தின் நெஞ்சியிலே ஒட்டப்பட்டிருந்த நோட்டீஸ் என்பன இதற்கு தக்க எடுத்துக்காட்டாகும். இக்கதை கட்சி இலக்கியத்திற்கான முனைப்பை காட்டி நிற்கின்றது என்பதில் இருநிலைப்பட்ட கருத்துகளுக்கு இடமில்லை.

இத்தொகுப்பினை முழுமையாக வாசித்த போது இத்தொகுதியில் அடங்கியுள்ள கதைகள் யாவும் முற்போக்கானவைகளாகவும், அதன் தர்க்க ரீதியான வளர்ச்சியான மார்க்ஸிய நிலைப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. மக்களின் விடுதலையை நோக்கிய சமூக மாற்ற போராட்டத்தை எதிர்க்கும் பழைமைவாதப் பார்வை இக்கதைகளில் இல்லாதிருப்பது இத் தொகுப்பின் சிறப்பான பண்பாகும். இச்சிறுகதைகள் யாவும் வெவ்வேறு வகையில் சமூகத்தில் அடித்தட்டில் வாழும் மக்களின் வாழ்க்கையையும் அதனடியாக எழுகின்ற உணர்வுகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இ. மு. எ. ச தேசிய இலக்கியம், இலக்கிய கோட்பாடு தொடர்பான போராட்டத்தில் ஏகாதிபத்திய நவ காலனித்துவத்திற்கு எதிராகவும் இந்திய விஸ்தரிப்பு வாதத்திற்கு எதிராவும் தமது பார்வையை முன்னிறுத்தி செயற்பட்டது. இதன் வெளிப்பாடாகவே இவர்கள் தமிழர், முஸ்லிமகள், மலையக மக்கள், சிங்கள மக்கள் என ஐக்கியப்பட்டு தமது இருப்பையும் தேசிய அடையாளங்களையும் நிலைநிறுத்துவதற்கான தத்துவார்த்த

போராட்டங்களை முன்னெடுத்தனர். இதன் பின்னணியிலே மண்வாசனை மிக்க படைப்புகள் தோன்றம் பெற்றன. இந்த போக்கை இத்தொகுதியில் அடங்கியுள்ள சிறுகதைகளில் காணக் கூடியதாக உள்ளது. அதே சமயம் இடதுசாரி இயக்கத்தில் ஏற்பட்ட தத்தவார்த்த முரண்பாடுகள் இ.மு.எ.சங்கத்தை பாதித்தது. இந்த பின்னனியில் இ.மு.எ.ச செயலற்றதாக மாறியது. இதன் தாக்கத்தினையும் இப்படைப்புகளில் இனங்காணக் கூடியதாக உள்ளது. இந்தவகையில் மு. போ. எ. ச குறித்த ஆழமான – நுட்பமான ஆய்வுகளை மேற்கொள்வது அறிஞர் கடன். மனுக்குல விடுதலைக்கான பரந்துப்பட்ட ஐக்கிய முன்னணி போராட்டத்தில் இ. மு. எ. ச. குறித்த ஆய்வு அவசியமானதாகும்.

இந்த இருபத்தைந்து கதைகளும் எழுதப்பட்ட காலத்தில் பிரசுரிக்கப்பட்ட எழுத்தாளர்களின் புகைப்படங்களும் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எழுத்தாளர்கள் குறித்த தகவல்கள் அவர்களது இலக்கிய பங்களிப்புகள் குறித்த தகவல்கள் இத் தொகுப்பிற்கு மேலும் பலம் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

இக்கால சூழலில் மலையக மண்வாசனையுடன் சிறப்பான சிறுகதைகளை எழுதியவர் என். எஸ். எம் இராமையா. அவ்வாறே எழுபதுகளில் கட்சி இலக்கியம் தொடர்பில் சிறுகதை உலகில் தனித்துவமான ஆளுமை சுவடுகளை பதித்தவர் தணிகாசலம் அவர்கள். தாயகம் சஞ்சிகையில் இவரது பெரும்பாலான கதைகள் பிரசுரமாகியிருந்தன. மேலும் இக்காலப்பகுதியில் முக்கிய படைப்பாளியாக வேர்கொண்டு கிளைப்பரப்பியவர் நந்தினி சேவியர், சிறுகதை இலக்கியத்திற்கு நம்பிக்கை ஒளியை பாய்ச்சியவர். இவர்களது படைபுகள் இத்தொகுப்பில் அடங்காமை துரதிஷ்டவசமான ஒன்றே.

அவ்வாறே தொகுப்பில் ஆங்காங்கே காணப்படும் எழுத்து பிழைகள் கருத்து பிழைகளாக காணப்படுகின்றன. அடுத்த பதிப்பில் அவை திருத்தப்பட வேண்டியவையாகும்.

காலத்தின் தேவையை நன்கறிந்து முற்போக்கு கலை இலக்கிய பேரவை பூபாலசிங்கம் பதிப்பகத்துடன் இணைந்து ஆழகான முறையில் இத்தொகுப்பினை வெளியிட்டுள்ளனர்.

# ஈழத்து முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் செந்தமிழ்ச் சொற்கள்

அல்ஹாஜ் எம்.எம். உவைஸ் எம்.ஏ.

1976 ஜூன் 8ஆம் 9ஆம் நாட்களில்
சென்னை புதுக்கல்லூரியில் நடைபெற்ற இரண்டாவது
அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக்
கருத்தரங்கு மாநாட்டில் வாசிக்கப்பட்டது.

பொதுவாகச் செய்யுள் வழக்கு பேச்சு வழக்குக்களிலிருந்து பெரிதும் வேறுபடுகிறது. செய்யுள் வழக்கில் உள்ள சில சொற்கள் பேச்சு வழக்கில் உருக்குலைந்தனவாய்ப்பயன்படுத்தபடுகின்றன. உருக்குலைந்தநிலைமையில் அத்தகைய சொற்களை மீண்டும் செய்யுள் நடையில் உபயோகிக்க முடியாது. செய்யுள் நடைக்கும் உரைநடைக்கும் வேறுபாடு இருக்கும்போது செய்யுள் வழக்குக்கும் பேச்சு வழக்குக்கும் வேறுபாடு இருக்காதா? முன்னையதை விடப் பின்னையதில் வேறுபாடு கூட இருக்கும். சொற்களைச் சிறந்ததொரு

ஒழுங்கு முறையில் அமைத்து எழுதுதலையே உரைநடை என்பர். சிறந்த சொற்களைச் சிறந்தொரு ஒழுங்குமுறையில் தன்னிடத்தே கொண்டதாகத் திகழ்கின்றது கவிதை. ஆனால் பேச்சு வழக்கினை உரைநடையிலோ செய்யுள் நடையிலோ புகுத்த முடியாத நிலையில் தமிழ் இருக்கிறது. சிங்களம் போன்ற மொழிகளிலே எழுதப்படும் நூல்களில் யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பேச்சுச் சிங்களம் இடம்பெறுகிறது. பாலர் வகுப்புக்கான சில சிங்களப் பாட நூல்களில் பேச்சுச் சிங்களத்தில் தயாரிக்கப்படும் பாடங்கள் இடம்பெறுகின்றன. ஆனால் தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் பேச்சுத் தமிழ் ஒன்றுக்கும் உதவாதது, இதனாலேயே செந்தமிழ் கொடுந் தமிழ் என இரு பிரிவுகளாக தமிழ் மொழி பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. பெரும்பாலும் செய்யுள் வழக்கில் உள்ள சொற்களைச் செந்தமிழ் சொற்கள் என்றும் உலக வழக்கில் இடம்பெறும் சொற்களைக் கொடுந்தமிழ் என்றும் கூறுவது உண்டு. முன்னையது இலக்கண அமைதி பெற்றிருக்கும். பின்னையது இலக்கண அமைதிக்கு உட்படாது உபயோகிக்கப்படும்.

உலக வழக்கொழிந்த சமஸ்கிருதம், வடமொழி போன்ற ஒரு மொழியிலும் வளர்ச்சி அடையாத லிபி அற்ற மொழியிலும் பேச்சு வழக்கு உலகவழக்கிலும் என்பதற்கு இடம்இராது. ஆனால் செய்யுள் வழக்கிலும் உள்ள ஒரு மொழியில் இத்தகைய வேறுபாடு இருக்கிறது. இத்தகைய வேறுபாட்டிற்குரிய காரணம் அந்த மொழியில் பாண்டித்தியம் பெற்றவரக்ள் செய்யுள் வழக்கில் ஈடுபட்டிருக்கும் அதே சமயத்தில் உலக வழக்கினை/ பேச்சு வழக்கினைப் பயன்படுத்துபவர்களுள் மிகப் பெரும்பாலோனோர் எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக இருத்தலே என்று கூறி விடலாம். மொழிப் பாண்டித்தியம் பெற்றவர்கள் கூட கல்வி மணம் பெறாதவர்களுடன் தொடர்புகொள்ளும் பொழுது பின்னையவர்கள் புரிந்துக்கொள்ளக்கூடிய பாணியிலேதான் பேச வேண்டி ஏற்படுகிறது. பண்டிதரின் மொழிவளத்தைப் பண்டிதரல்லாதோர் புரிந்துகொள்ள முடியாதவராவர். தமிழைப் பொறுத்தவரையில் இக்கூற்று உண்மையே.

ஈழத்திருநாட்டிலே வாழும் மக்களுள் சற்றேறக்குறைய நூற்றுக்கு இருபத்தைந்து வீதமானோர் தமிழ் பேசும் மக்களாக உள்ளனர். அவர்களுள் யாழ்ப்பணத்தில் வாழும் தமிழ் மக்கள் செந்தமிழோடு நெருங்கிய தொடர்புடைய பேச்சு வழக்கினைப் பயன்படுத்துகின்றனர். வடக்கு மாகாணத்தில்

உள்ளவர்களுடைய தமிழ்ப் பேச்சு வழக்கு யாழ்ப்பாணத் தமிழ்ப் பேச்சு வழக்கிலிருந்து வேறுபட்டபோதிலும் மேல்வாரியாக இரண்டும் ஒத்திருக்கிறது. ஈழத்தின் மலைநாட்டிலே பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையில் ஊழியம் புரியும் தமிழ் பேசும் மக்களின் பேச்சு வழக்கு உச்சரிப்பிலும் சொற் பிரயோகத்திலும் முன்னைய இரண்டையும் விட வேறுபட்டதாகும். ஈழத்து முஸ்லிம் மக்களின் தமிழ்ப்பேச்சு வழக்கு நான்காவது பிரிவாக அமைகிறது. வடமாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் வாழும் முஸ்லிம் மக்கள் அவ்வப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் பேச்சு வழக்கோடு ஒட்டியவிதத்திலே பேசி வருகின்றனர். ஆனால் அத்தகைய முஸ்லிம்களுடைய பேச்சு வழக்கிலே முஸ்லிம்களின் பேச்சு வழக்கின் சிறப்பு அம்சமாக அமையும் ஏராளமான அறபுச் சொற்கள் இடம்பெறுகின்றன. சிங்களம் பேசும் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக வசிக்கும் ஈழத்தின் ஏனைய பகுதிகளிலே வாழும் முஸ்லிம் மக்களுடைய தமிழ்ப் பேச்சு வழக்கு ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களின் பேச்சுகளிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றது. பெரும்பான்மையினராகச் சிங்களம் பேசும் மக்கள் வாழும் வடமேல் மாகாணத்தில் உள்ள புத்தளம், கற்பிட்டி போன்ற பகுதிகளில் வாழும் முஸ்லிம்களின் தமிழ்ப் பேச்சு வழக்கு யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பேச்சு வழக்கினை ஓரளவு ஒத்திருக்கின்றமைக்கரிய காரணம் அப்பகுதிகள் யாழ்ப்பாணத்துக்கு அணித்தாக அமைந்துள்ளமையேயாகும். முஸ்லிம் மக்கள் வாழையடி வாழையாக வாழும் பிரதேசங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து எவ்வளவுக்கெவ்வளவு தூரத்தில் அமைந்திருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களுடைய பேச்சுத் தமிழ் யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழிலிருந்து வேறுபடுகின்றது எனலாம். அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு மாநாட்டில்கூட இந்த நிலைமை ஆராயப்பட்டது. இலங்கையில் நான்கு அல்லது ஐந்து விதமான தமிழ்ப் பேச்சு வழக்குகளைக் காணலாம் என்னும் கருத்து அந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. இத்துறைகளில் ஆராய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் எனவும் வற்புறுத்தப்பட்டது.

ஈழத்து முஸ்லிம் மக்களின் தமிழ்ப்பேச்சு வழக்கினை எடுத்துக்கொண்டால் அவர்களுடைய செய்யுள் வழக்குக்கும் உலக வழக்குக்கும் செந்தமிழுக்கும் கொடுந்தமிழுக்கும் பெரிதும் வேற்றுமை இருக்கக் காணலாம். அவர்களின் செய்யுள் வழக்கிலும் உலக வழக்கிலும் அறபுச் சொற்கள் பயிலப்பட்டு வருவது அத்தகைய வேறுபாட்டிற்குரிய காரணமாகாது. மேல்வாரியாகப் பார்க்கும்

பொழுது முஸ்லிம்களின் தமிழ்ப் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் பல தமிழ்ச் சொற்கள் செய்யுள் வழக்கில் பயின்றுவரும் செந்தமிழ்ச் சொற்களிலிருந்தும் பெருமளவேறுபடுவதாகத் தோன்றும். எனினும் அவற்றை நுணுக்கமாக ஆராயப் புகுந்தால் நிலைமை அவ்வாறன்று என்பது எமக்குத் தோன்றும் சொற்கள் உண்மையிலேயே உருக்குலைந்து காட்சி அளிக்கும் செந்தமிழ்ச் சொற்களாகவே இருப்பதை நாம் காணலாம்.

இந்தக் கருத்தினை விளக்கவே ஒரு சில எடுத்துக்காட்டுக்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஈழத்து முஸ்லிம்களுடைய தமிழ்ப் பேச்சு வழக்கில் பழங்காலத் தமிழ் இலக்கியங்களில் ஆண்டுள்ள சொற்கள் அதே கருத்தில் உபயோகிக்கப்பட்டு வருவதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சில சமயங்களில் முஸ்லிம் தமிழ்ப்பேச்சு வழக்கில் சங்க கால இலக்கியத்துள் உள்ள சொற்கள் அதே உருவத்தில் அதே கருத்தில் உபயோகிக்கப்படுவதைக் காணலாம். மற்றும் சில சந்தர்ப்பங்களில் ஓரெழுத்து அல்லது இரண்டு எழுத்துக்கள் குறைந்து காணப்படலாம். வேறு சில சமங்களில் சிக்கனம் போன்ற காரணங்களால் அத்தகைய சொற்கள் உருக்குலைந்து அல்லது திரிந்து காணப்படும். இன்னும் சில இடங்களில் பழந்தமிழ்ச் சொற்கள் உருக்குலையாமல் கருத்துமாத்திரம் வேறுபட்டு உபயோகிக்கப்பட்டு உருவதைக் காணக் கூடியதாக இருக்கும்.

முதலில் உருக்குலையாமல் கருத்து வேறுபடாமல் முஸ்லிம் தமிழ்ப் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் பழங்காலத் தமிழ்ச் சொற்களை எடுத்துக்கொள்வோம். கீழ்ப்படிதல் என்னும் பொருளில் முஸ்லிம் மக்கள் அடங்குதல் என்னும் சொல்லை உபயோகிப்பர். இந்தச் சொல் திருக்குறளிலே கீழ்ப்படிதல் என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருக்குறளிலே (124) 'இல் வாழ்க்கையாகிய தன்நெறியின் வேறுபடாது நின்று அடங்கினவனது உயர்ச்சி மலையின் உயர்ச்சியிலும் மிகப் பெரிது' என்று பொருள்பட அமைந்த குறளில் உள்ளது போல முஸ்லிம்களும் தமது பேசசு வழக்கில் அடங்கி நடப்பதைக் குறிப்பிடுவர்.

'இவண்ட அலற்றி பெரிய அலற்றி' என்று முஸ்லிம்கள் சர்வசாதாரணமாகக் கூறுவர். இடைவிடாமலும் முறையின்றியும் பேசுதலை அலற்றி என்பர். நாலாயிரத்திவ்விய பிரபந்தத்திலே உள்ள நம்மாழ்வாரின் முதலாம் திருவாய் மொழியின் முதற் பந்தியில் இடம்பெற்றுள்ள மூன்றாம்

திருவாய் மொழியாகிய பத்துடை என்பதில் இடம்பெற்ற பத்தாம் செய்யுளில் அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன் வணங்குவன் அமர்ந்தே என அவற்றில் என்னும் சொல் அதே கருத்தில் இடம்பெற்றுள்ளமை யைக் காணலாம்.

கேடு என்றும் பொருளில் அவத்தம் என்னும் சொல் முஸ்லிம்களின் தமிழ்ப் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படுகிறது. ‘அவனுக்கு ஏற்பட்டது அவத்தச் சாவு’ என்று சாதாரணமாக உபயோகிக்கப்படுகிறது. நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் பத்தாம் பத்தில் உள்ள வேல்மருதோள் என்னும் மூன்றாம் திருவாய் மொழியின் ஒன்பதாம் செய்யுளில் ‘அவத்தம்’ என்னும் சொல் கேடு என்னும் பொருளில்

அகப்படில் அவரொடும் நின்னோடு ஆங்கே அவத்தங்கள் விளையும் என் சொற்கொள் அந்தோ என உபயோகிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

அவல் என்பது மற்றொரு சொல். நெற்பொறி இடியலை அவல் என்பர். அவல் சிற்றுண்டியாகப் பயன்படுகின்றது, ‘அவலெறியுலக்கை’ எனப் பெரும்பாணாற்றுப் படையிலும், (226) எனப் ‘தீங்கரும்போடவல் வகுத்தோர்’ (216) எனப்பொருநராற்றுப்படையிலும் வந்துள்ளது.

இடை என்னும் சொல் நடு அல்லது நடுவுநிலையைக் குறிக்கும். கட்சிச் சார்பற்ற நிலையைக் குறிக்க இச்சொல் உபயோகிக்கப்படுகிறது. இருசாரார் சண்டையிடும் பொழுது ‘நாங்க இடையிலே நின்று தகரத்தேவை இல்லை’. என்று கூறப்படுவதுண்டு. இதே கருத்தில் இடை என்னும் சொல் ‘இடை தெரிந்து உணரும் இருள் நிர்காட்சி’ எனப்பெரும் பாணாற்றுப்படையில் (445) உபயோகிக்கப்பட்டுள்ளது.

பணமற்றவனை முஸ்லிம்கள் தமது பேச்சு வழக்கில் ‘இல்லன்’ என்பர். பொருள் இல்லாதவன் என்ன செய்ய எனக் கேட்க வேண்டிய இடத்தில் இல்லன் என்ன செய்ய எனக் கேட்கப்படுகிறது. தரித்திரன் என்னும் பொருளில் இல்லன் என்னும் சொல் கலித்தொகையிலே (148) ‘இல் லவர் ஒழுக்கம் போல் இருங்கழி மலர் கூம்ப’ என ஆளப்பட்டுள்ளது.

இறுத்தல் இன்னொரு சொல். வரி கடன் முதலியவற்றைச் செலுத்துதலை இறுத்தல் என்பர். ‘கடனை இறுத்திட்டு மற்ற வேலை’ என்பர் முஸ்லிம்கள் : நாலாயிரத்திவ்விய பிரபந்தத்திலே நம்மாழ்வாரின் ஐந்தாம் பத்தில் உள்ள பொலிக பொலிக ‘என்னும் இரண்டாந்திருவாய் மொழியில் இடம்பெற்ற இறுக்கும் இறையிறந்துண்ண எவ்வுலகுக்கும் தன்மூர்த்தி, என

ஆரம்பிக்கும் எட்டாம் திருப்பாசுரத்தில் ‘இறு’ என்னும் சொல் அதே கருத்தில் ஆளப்பட்டுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது.

ஆடையைக் குறிக்கும் உடுப்பு என்னும் சொல் மணிமேகலையில் மணிக்கோவையுடுப்பொடு’ (3:140 என ஆளப்பட்டு அதே கருத்தில் முஸ்லிம் மக்கள்) தமது நாளாந்தப் பேச்சு வழக்கில் உபயோகிக்கின்றனர்.

ஊத்தை என்றால் அழுக்கு என்று பொருள். முஸ்லிம் மக்கள் அழுக்கு என்பதனை தமது நாளாந்தப் பேச்சு வழக்கில் உபயோகிப்பதில்லை. ஊத்தை என்பதனையே உபயோகிப்பர். ஊத்தைக் கமிசை, ஊத்தைப் பிடவை எனப் பலவாறு ஊத்தை என்னும் சொல்லைப் பயன்படுத்துவர். ஊத்தை என்னும் சொல் அழுக்கு என்று பொருள்பட ‘ஊத்தைக் குழியில் அமுதம் பாய்வது போல’ என்று ஆரம்பிக்கும் திருப்பாசுரம் நாலாயிரத் திவ்விவ பிரபந்தத்தில் பெரியாழ்வாரின் நான்காம் பத்தில் இடம்பெற்றுள்ள காசுங்கறையுடைய என்னும் ஆறாம் திருமொழியில் உள்ளது.

ஈழத்து முஸ்லிம் மக்களிடையே தொழுகை, நோன்பு போன்ற சொற்களைப் போன்று இணைபிரியாது வழங்கும் மற்றொரு சொல் ஒடுக்கம் என்பதாகும். ஒடுக்கம் என்ற சொல்லை அறபுச்சொல் போல் கண்ணியப்படுத்துபவரும் உளர். ஏனெனில் இச்சொல் இஸ்லாத்துடன் நெருங்கிய தொடர்புடையது. ஈமான் கொள்ளும் முஸ்லிம்கள் நம்பிக்கை கொள்ளவேண்டிய ஐந்தாவது அமிசம் யவ்முல் ஆஹிர் இறுதி நாளாகும். இது இஸ்லாமிக பரிபாஷையில் ஒடுக்கத்து நாளை விசுவாசித்தல் என வழங்குகிறது. தமிழிலே ஒடுக்கம் என்றால் முடிவு என்பது பொருள். முடிவு என்னும் பொருளில் ஒடுக்கம் என்னும் சொல் சிலப்பதிகாரத்திலே மங்கல வாழ்த்துப் பாடலில் ஒடுங்கங்கூறார் உயர்ந்தோர் உண்மையான முடித்த கேள்வி முழுதுணார்ந்தோரே.

(1:18) என உபயோகிக்கப்பட்டுள்ளது. இறுதிப் புதன் கிழமை என்னும் பொருளிலே ஒடுக்கத்துப்புதன் என்று ஒரு புதன்கிழமையை முஸ்லிம்கள் குறிப்பிடுவர். இஸ்லாமிய மாதங்களில் ஸபர் மாதம் வரும் கடைசிப் புதன்கிழமையையே இவ்வாறு குறிப்பிடுவர். இத்தகைய புதன்கிழமை ஒன்றில் தான் எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்டார்கள். என்பர். இத்தினத்தைச் சிவலர் கொண்டாடுவர். இது இஸ்லாத்துக்கு முரணான என்றும் கூறப்படுகிறது.

ஒருவன் என்னும் பொருளில் ஒத்தன் எனவும் ஒருத்தி என்னும் பொருளில் ஒத்தி எனவும் முஸ்லிம் மக்கள் தமது பேச்சு வழக்கில் உபயோகிப்பர். ‘ஒத்தனுக்கும் தெரியா’ ‘ஒத்தியும் வரில்ல’ என்பன அத்தகைய உபயோகங்களாகும். ஒத்தன், ஒத்தி என்பன இலக்கண அமைதி உடைய சொற்கள் என்பது கலித் தொகையிலிருந்து புலனாகின்றது. குறிஞ்சிக்கலியிலே (25/1) எல்லா இஃதொத்தன் என்பெறான் கேட்டை காண்’ என்று ஒத்தன் என்னும் சொல்லும் நெய்தற்கலியிலே (26/ 8-9)

‘அஞ்சா அழா அரற்றா இஃதொத்தி என் செய்தாள் கொல்லென்பிர் கேட்டீமீன் பொன் செய்தேன் என்று ஒத்தி என்னும் சொல்லும் ஆளப்பட்டுள்ளன.

ஓதுதல் என முஸ்லிம்கள் குறிப்பிட்டால் திருக்குர் ஆனையும் ஏனைய சமய கிரந்தங்களையும் தலைப்பாத் திஹா றசூல்மாலை போன்ற அறபு எழுத்துக்களில் எழுதப்பட்டவற்றையும் பாராயணம் செய்வதையே குறிக்கின்றது. திருக்குறளிலே மனமொழிமெய்கள் அடங்குவதற்கு ஏதுவாக நூல்களை ஓதியும் என்னும் கருத்துப்பட ஓதி என்னும் சொல்.

ஓதி உணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தான் அடங்காப் பேதையின் பேதையர் இல் (84/4) என ஆளப்பட்டுள்ளமையைக் காணலாம்.

கடுமையான கோபத்தை, வெகுளியைக் குறிக்க முஸ்லிம்கள் கடுப்பு என்னும் சொல்லை உபயோகிப்பர், இதே கருத்தில் இச்சொல் பரிபாடலில் ‘கடுநவை யணங்குங் கடுப்பும்’ (4:49) என்று உபயோகிக்கப்பட்டுள்ளது.

கடைதல் என்பது மற்றொரு சொல். ‘தயிர் முதலியவற்றை கடைதல், கஞ்சியை நன்றாகக் கடைய வேணும்’ என்றும் சிறுவர்களுக்குச் சோற்றை வீணாக்க வேண்டாம் என்பதனைக் குறிக்கக் கடைய வேணாம் என்றும் முஸ்லிம்கள் தமது பேச்சு வழக்கில் உபயோகிப்பர் மத்தாற கடைதலையே தமிழில் கடைதல் என்பர் சிலப்பதிகாரத்திலும் ‘பாம்பு கயிறாக் கடல் கடைந்த மாயவன்’ என இச்சொல் ஆளப்பட்டுள்ளதைக் காணலாம்.

கண்பார்வை குறைந்தவர்கள் வாசித்தல் போன்ற தேவைகளுக்காகவும் எழுத்துக்களைப் பெரிதாகக் காட்டும் பொருட்டும் கண்களில் அணியும் உபகரணத்தைப் பொதுவாகக் கண்ணாடி என்பர். கண்ணும் ஆடியும் சேர்ந்து கண்ணாடி ஆனது என்பர். ஆனால் முஸ்லிம்கள் தமது பேச்சு வழக்கில்

கண்ணடி என்று வழங்குவர். சீவகசிந்தாமணியிலே 'பரந்தொளி யுமிழும் பைம்பொற் கண்ணடி' (629/ கந்தருவதத்தையர் இலம்பகம் 137) என்று கண்ணாடி என்பது கண்ணடி என வந்துள்ளது.

முஸ்லிம்கள் விருந்துபசார வைபவங்களில் கூட்டாக இருக்கச் செய்து உணவு உண்ணச் செய்வர். உணவு பரிமாறும் பொழுது அதனை 'கலம் வைத்தல்' என்றே கூறுவர். கலம் என்னும் சொல் உணவுப் பண்டங்கள் பரிமாறப்படும் பாத்திரங்களைக் குறிக்கவே உபயோகப்படுத்தப்படுகிறது. கலம் என்னும் சொல் நாலடியாரிலும் பாத்திரம் என்னும் பொருளில்

'பொறகலத்து ஊட்டிப் புறந்தரினும்.' (3/55) என உபயோகிக்கப் பட்டுள்ளது.

காறை என்பது விவாக நிகழ்ச்சியுடன் தொடர்புடைய ஒரு சொல். மணமகன் வீட்டு முக்கியமான பெண் உறவினர்கள் மணமகனுடன் மணமகள் வீடு சென்று மணமகனால் தாலி கட்டப்பட்ட பின்னர் மணமகளுக்குரிய அணிகலன்களை அணிவிப்பர். இந் நிகழ்ச்சி சர்வசாதாரணமாகக் 'காறை கட்டுதல்' என்று முஸ்லிம்களால் அழைக்கப்படுகிறது. பெண்களும் குழந்தைகளும் கழுத்தில் அணிந்துகொள்ளும் ஒருவகை அணியையே தமிழில் காறை என்பர். முஸ்லிம்களும் மணமகளுக்குரிய அணிகலன்களுள் இரண்டாவது முக்கியத்துவம் பெற்ற கழுத்தணியையே இச்சொல்லால் அழைக்கின்றனர். நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் இச்சொல் இடம்பெற்றுள்ளது. இக்கருத்திலே காறை என்னும் சொல் பெரியாழ்வாரின் திருமொழி முதற் பத்தில் உள்ள சங்கிலிகை என்னும் ஏழாம் திருமொழியில் இடம்பெற்றருக்கும் மூன்றாம் பாசுரத்தில், 'மின்னில் பொலிந்த தோர்கார் முகில்போலக் கழுத்தினில் காறையொடும்.

என உபயோகிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

குத்துவிளக்கு என்பதனை ஆண்டாள் தமது திருப்பாவையில் 'குத்துவிளக் கெரிய கோட்டுக்கால் கட்டில்மேல்' (19) என அமைத்துள்ளார். இதனை முஸ்லிம் மக்கள் தமது பேச்சு வழக்கில் அதே கருத்தில் உபயோகிக்கின்றனர்.

குளிர், முஸ்லிம் தமிழ்ப்பேச்சு வழக்கில் கூதல் எனப்படுகிறது. 'இண்டைக்குச் சரியான கூதல்' என ஒரு முஸ்லிம் கூறும்பொழுது அக்கூற்று

கடுமையான குளிரையே குறிப்பிடுகிறது. நாலாயிரத்திவ்விய பிரபந்தத்திலும் கூதல் என்னும் சொல் குளிர் என்னும் பொருளில் உபயோகிக்கப்பட்டுள்ளது. பெருமாள் திருமொழியில் உள்ள முதலாம் பாசுரத்தில்.

*'கூர்மழை போல்பனிக் கூதல் எய்திக்*
*கூசி நடுங்கி யமுனை யாற்றில்'*
*கூதல் என்னும் சொல் இடம்பெற்றுள்ளமையைக் காணலாம்.*

நித்திரை செய்வதற்கு முன்னர் கொட்டாவி விடுவது வழக்கம். வாயைத் திறந்து வெளியிடும் நெட்டுயிர்ப்பையே கொட்டாவி என்பர். கொட்டாவி என்னும் இந்தச் சொல்லை முஸ்லிம்கள் தாராளமாகத் தமது பேச்சு வழக்கில் பயன்படுத்துவர். இந்தக் கொட்டாவி என்னும் சொல்லும் நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் இடம்பெற்றுள்ளது.

'கண்துயில் கொள்ளக் கருதிக் கொட்டாவிகொள்கின்றான்.

எனத் தமது முதற்பத்தில் உள்ள நன்முகத்து என்னும் நான்காம் திருமொழியில் இடம்பெற்ற ஆறாம் பாசுரத்தில் பெரியாழ்வார் பாடியுள்ளார்.

தாலி என்பது மணமகன் மணமகளின் கழுத்தில் கட்டும் கழுத்தணி என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் இதனை முஸ்லிம் மக்கள் பெரும்பாலும் சவடி என்றே அழைப்பர். முஸ்லிம்களிடையே தாலி என்னும் சொல் இதனைக் குறிப்பிட அருமையாகவே உபயோகிக்கப்படுகிறது. இந்த உபயோகத்தைச் சிலப்பதிகாரத்துக்கு எழுதப்பட்ட உரையில் (6/100) காணலாம்.

காலை மிதித்தலை சவட்டுதல் என்பர். 'அவன் காலைச் சவட்டின' என்ற ஒரு முஸ்லிம் கூறும் பொழுது தனது கால் மிதிக்கப்பட்டமையையே அக்கூற்றுப் புலப்படுத்துகின்றது. சவட்டி என்னும் சொல் மிதிக்கப்பட்டமையைக் குறிக்கம் முகமாகப் பெருங்கதையில் உபயோகிக்கப்பட்டுள்ளது. மகதகாண்டத்தில் உள்ள மகா நாடு புக்கது படலத்தில்,

*தோகைச் செந்நெல் சவட்டிப் பாசிலை ஒண்கேழ்த்*
*தாமரை யுழக்கி வண்டுகள்*
*ஆம்ப லக லிலை முடுக்கி...* (18-20)

எனச் சவட்டி என்னும் சொல் இடம்பெற்றுள்ளமையைக் காணலாம்.

மூக்காலமுதல் பொதுவாகச் சிணுங்குதல் எனப்படும். முஸ்லிம்களும் இதே கருத்தில் சிணுங்குதல் என்னும் சொல்லைத் தமது பேச்சு வழக்கில் 'இவன் ஒரே சிணுங்கிக் கொண்டேதான்' என பெரும்பாலும் உபயோகிப்பர். திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழியில் உள்ள பத்தாம் பத்தில் இடம்பெற்றிருக்கும் பூங்கோதை என்னும் ஐந்தாம் பத்தில் உள்ள முதலாம் பாசுரத்தில் 'ஏங்கியிருந்து சிணுங்கி விளையாடும்' என சிணுங்கி என்னும் சொல் உபயோகிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

சிறுவனைச் சிறுக்கன் என்றும் சிறுமியைச் சிறுக்கி என்றும் ஈழத்தின் சில பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் தமது தமிழ்ப் பேச்சு வழக்கில் சர்வசாதாரணமாக உயோகிப்பர். பெரியாழ்வார் தமது முதற்பத்தில் உள்ள தன்முகத்து என்னும் நான்காம் திருமொழியில் உள்ள ஏழாம் பாசுரத்தில்

................ பண்டொருநாள்
ஆலினிலை வளர்ந்த சிறுக்கனவன்

எனச் சிறுக்கன் என்னும் சொல்லை அதே கருத்தில் ஆண்டுள்ளார். 'சிறுக்கிகளுக்குறவாமோ' என அருணகிரிநாதர் தமது திருப்புகழில் (145) சிறுக்கி என்னும் சொல்லை சிறுமி என்னும் பொருளில் உபயோகித்துள்ளமை ஈண்டு நோக்கற்பாலது.

தகுதி உடையவர் தக்கார் எனப்படுவர். திருக்குறளிலே அறிவு ஒழுக்கங்களால் தகுதி உடையோரே தக்கார் என அழைக்கப்பட்டுள்ளனர். தக்கார் என்னும் சொல் முஸ்லிம்களின் தமிழ்ப் பேச்சுவழக்கில் தகுதி உடையோர், உயர்ந்தோர், மதிப்பிற்குரியவர் என்னும் பொருள்களில் உபயோகிக்கப்படுகிறது. தக்காராகிய இனத்தை உடையனாய்த் தானும் அறிந்து ஒழுகவல்ல அரசனைப் பகைவர் செய்யக் கிடைத்ததொரு துன்பமும் என்னும் பொருளில்

*தக்கார் இனத்தனாய்த் தான் ஒழுக வல்லானைச்*
*செற்றார் செய்யக்கிடந்து இல்* (45/6)

என்னும் குறள் அமைந்துள்ளது. இந்தக் குறளில் தக்கார் என்னும் சொல் உபயோகிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

தூபம் இடுவதற்குப் பயன்படுவது தணல். கனிந்த நெருப்புத் தணல் எனபடும். முஸ்லிம்களின் இல்லங்களிலும் பள்ளிவாசல்களிலும் நடத்தப்படும்

கந்தூரி விழாக்களில் சாம்பிராணி, குந்துருக்கம் முதலியன இட்டு தூபம் உண்டாக்கி மணம் கமழச்செய்ய ஒரு பாத்திரத்திலே தணல் இடப்படும். தணல் என்ற சொல்லையே முஸ்லிம்கள் உபயோகிப்பர். தணல் என்னும் சொல் தேவாரத்திலே ஆளப்பட்டுள்ளது. 'தணல் முழுகு பொடியாடுஞ் செக்கர் மேனி' என்று தேவாரம் கூறுகிறது.

மேல்வாய் மயிர் தாடி எனப்படும். அழகுறத் தாடி வைத்தல் இன்றியமையாதது என்பர். முஸ்லிம்கள் இச்சொல்லை உபயோகிப்பர். தாடியும் வைப்பர். இஸ்லாத்தின் சிறப்பியல்பு அது என்றும் கூறுவர். கலித்தொகையிலும் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. வலிய மானுடைய கொம்பு போன்று நேர்போகாமல் திருகி முறுக்குண்டு தாழ்ந்த தாடியை உடையவனாகப் பாலை நில மனிதன் காட்சியளித்தான் என

'இரலை, மருப்பிற்றிரிந்து வீழ்தாடி'

எனப் பாலைக்கலியில் (15) வந்துள்ளமையைக் காணலாம்.

உணவு உண் என்று சாதாரணமாக முஸ்லிம்கள் கூறுவதில்லை. தின் என்றே கூறுவர். தின் என்றால் சாப்பிடு என்பதே பொருள். புறநானூறு என்னும் நூலில் தின் என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. புறநாநூற்றில் உள்ள 150 ஆம் பாட்டில்

'மிகப்பெற்றிய சுற்றத்தோடு தின்மின்' என்று பொருள் பட 'இடும்பே ரொக்கலொடு தின்மென்' என்று ஆளப்பட்டுள்ளது.

புறநானூற்றில் இடம்பெற்றுள்ள மற்றொரு சொல் துடுப்பு. இதன் பொருள் அகப்பை என்பது. துடுப்பால் துழாவிச் சமைக்கப்பட்ட உணவு என்னும் பொருள்தர புறநானூற்றில் துடுப்பிற்றுழந்த வல்சி (26) என இடம்பெற்றுள்ளது. முஸ்லிம் மக்கள் பெரிய அளவினதான சமையலிலே மேற்கொள்ளும் பெரிய அகப்பையைத் துடுப்பு என்றே அழைப்பர்.

வைணவ அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியத்தில் முதன்முதலாக ஆளப்பட்டுள்ளதாகத் தென்படும் ஒரு சொல் தொட்டில் என்பது. தொட்டில் என்னும் சொல்லை குழந்தைகளைப் படுக்க வைத்து ஆட்டற்குரிய மஞ்சம் அல்லது தூளி என விளக்குவர். இச்சொல்லும் முஸ்லிம் பெருவழக்கில் உள்ளது. நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் தொட்டில் என்னும் சொல் இடம்பெற்றுள்ளது.

‘கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்’ எனப் பெரியாழ்வார் தமது திருமொழி முதற் பத்தில் உள்ள வண்ண மாடங்கள் என்னம் முதலாம் திருமொழியில் இடம்பெற்றிருக்கும் ஒன்பதாம் பாசுரத்தில் பாடியிருக்கிறார்.

துன்பப்பட்டுச் சுய நிலைமையை இழந்த ஒருவனை நாம் நொந்து கெட்டவன் என்கிறோம். நொந்து என்னும் சொல் வருந்து என்னும் பொருளில் நற்றிணையில் (211) ‘யார்க்கு நொந்துரைக்கோயானே’ என ஆளப்பட்டுள்ளது.

‘எனக்குச் சரியான பாடு’ என்னும் சொற்றொடர் நிதமும் முஸ்லிம்களிடையே நாம் கேட்கும் ஒரு சொற்றொடராகும். தான் அனுபவிக்கும் மிகுந்த வருத்தத்தைக் குறிக்கவே ‘சரியான பாடு’ என்னும் சொற்றொடர் உபயோகிக்கப்படுகிறது. ‘பட்டபாடு’ என்று கூறும் பொழுதும் அனுபவித்த வருத்தமே குறிக்கப்படுகிறது. பாடு என்னும் சொல் வருத்தம் என்னும் பொருளில் நாலடியாரில் உள்ள ஒரு செய்யுளில் இரண்டு முறை உபயோகிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். மானமுடையவர்கள் நல்லவர்கள். தாம் எலும்பாகி எலும்பு உருகி உடல் கெட்டாலும் நற்குணமில்லாதவர்களிடத்துச் செல்லமாட்டார்கள். அத்தகையோரின் பின்னே போய் தமது வருத்தத்தைக் கூறுவார்களா? கூறமாட்டார்கள். மானமுடையவர்கள் தமது வருத்தத்தை சொல்லாமலிருக்கையிலே முன்கூட்டியே அதனைக் குறிப்பினால் உணர்ந்து உதவி செய்பவர்களிடத்தில் தாமடைந்து இருக்கின்ற வறுமை என்னும் நோயை அத்தகையோர்களிடம் கூறமாட்டார்களா? கூறுவார்கள். இக்கருத்தினை விளக்குவதற்காகவே நாலடியாரில் உள்ள மானம் என்னும் அதிகாரத்திலே பாடு என்னும் சொல் வருத்தம் என்னும் பொருளில் இரண்டுமுறை உபயோகிக்கப்பட்டுள்ளது.

*என்பாய் உகினும் இயல்பிலார் பின்சென்று*
*தம்பாடு உரைப்பரோ தம்முடையார் – தம்பாடு*
*உரையாமை முன்னுணரும் ஒண்மை உடையார்க்கு*
*உரையாரோ தாமுற்ற நோய்* (30/2)

மாய்தல் என்பது முஸ்லிம் பெருவழக்கில் உள்ள மற்றொரு சொல். ஒருவன் தற்கொலை புரிந்தான் என்பதை ‘அவன் உசிர மாய்ச்சிக் கொண்ட’ என்று முஸ்லிம் கூறுவர். மாய்தல் என்பது இறத்தல் என்னும் பொருளில் உபயோகிக்கப்பட்டுள்ளது. மலைபடுகடாம் என்னும் பாட்டிலும் இச்சொல், ‘தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாயந்தோர், (553) என ஆளப்பட்டுள்ளதைக் காணலாம்.

மாயம் என்றால் வஞ்சனை என்பது பொருள். ஒரு பெண்ணைப் பற்றிக் குறிப்பிடுகையில் ‘அவள் ஒரு மாயக்காரி’ என்று கூறுவர். இந்த உபயோகம் முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் இடம்பெறுகிறது. சங்ககாலச் செய்யுளிலே இச் சொல் ஆளப்பட்டுள்ளது. ஒரு தலைவன் தான் பரத்தையை அறியேன்’ என்று கூறுகிறனர். இதைக் கேட்ட தோழி வஞ்சனை பொருந்த சொற்களைக் கூறாதே. நான் அவற்றை உண்மை என்று கொள்ளமாட்டேன் என்று விடை பகருகிறாள். தலைவனின் கூற்று மாயமானது வஞ்சனை உடையது என்று தோழி கூறுகிறாள். இதனையே அகநானூற்றில் உள்ள மருதம்பற்றிய ஒரு பாடலில் பரணர் இவ்வாறு மாயம் என்றும் சொல்லை அமைத்துப் பாடியுள்ளார்.

உணர்குலெனல்லேன் உரையல்நின் மாயம் (226/1) திருக்குறளிலும் இச்சொல் இதே கருத்தில் ஆளப்பட்டுள்ளமையைக் காணலாம். (92/18)

முக்கு என்பது மற்றொரு சங்ககாலச் சொல், முக்குதல் என்றால் நிரம்ப வாய்விட்டு உண்ணுதலாகும். புறநானூற்றில் அவல் உண்ணியமையைக் கறிப்பட ‘பாசவன் முக்கி’ (63) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நற்றிணையில் ’ஆண் குரங்கு பெண் குரங்குடன் மலையின் மீதேறி பெருங்கதிர்களைக் கொய்து அவற்றை அங்கை நிறைய கயக்கித் தூய்மை செய்து வாய் நிறைய உண்டு என்பதனை

மந்தி, கல்லாக் கடுவனோடு நல்லவரை யேறி
அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டுதன்
நிறையணற் கொடுங்கவுள் நிறையமுக்கி (22)

என்று வருணக்கும் பொழுது முக்கி என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது. வயிறு நிறையச் சாப்பிடுவதை முஸ்லிம்களும் தமது பேச்சு வழக்கில் இதே கருத்தில் முக்கி என்னும் சொல்லை உபயொகிக்கின்றனர்.

குறிப்பிடத்தக்க மற்றொரு சொல் முழுத்தம். முஸ்லிம்களின் தமிழ்ப் பேச்சு பெருவழக்கில் முழுத்தம் என்னும் சொல் முகூர்த்தம், சுபவேளை, சுபகாலம் என்னும் கருத்துக்களில் உபயோகிக்கப் பட்டுள்ளன. முகூர்த்தம் என அவர்கள் வழங்குவதில்லை. முழுத்தம் என்னும் சொல் சுபவேளை என்னும் பொருளில் சிலப்பதிகாரதில் உபயோகிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். வஞ்சிக் காண்டத்தில் உள்ள கால்கோட்காதையில்

*இருநில மருங்கின் மன்னரெல்லாநின்*
*திருமலர்த் தாமரைச் சேவடி பணியும்*
*முழுத்த மீங்கிது (26/28 – 30)*

வாக்கு என்பது மற்றொரு சொல். கலித்தொகையில் வாக்கு என்பது திருந்திய வடிவு என்னும் பொருளில் உபயோகிக்கப்பட்டுள்ளது. 'வல்லவன் தைஇயவாக்கமை கடுவிசைவில்லினான் (நெய்தற்கலி 20/10 – 11) என வாக்கு என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்கள் தமது பேச்சு வழக்கில் அதே கருத்தில் வாக்கு என்னும் சொல்லை உபயோகிப்பர். 'அவன் நல்ல வாக்கு' என்று கூறும்பொழுது அவன் நல்ல தோற்றமுடையவன் என்று கருத்தில் வைத்தே அச்சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மிகக் சூட்டினைக் குறிப்பிட முஸ்லிம் மக்கள் 'இன்டைக்குச் சரியான வெம்பல்' என்று கூறுவார்கள். வெம்புதல் என்றால் மிகச் சூடாதல் என்பதைக் குறிக்கின்றது. கலித்தொகையில் உள்ள பாலைக்கலியில் 'மரங்காய மலைவெம்ப மந்தியுயங்க' (12/5) என்று இதே கருத்தில் வெம்ப என்னும் சொல் ஆளப்பட்டுள்ளமையைக் காணலாம்.

இனி ஓரெழுத்து அல்லது இரண்டெழுத்துக்கள் குறைந்தனவாய்ச் செந்தமிழ்ச் சொற்கள் முஸ்லிம்களில் தமிழ்ப்பேச்சு வழக்கில் பயின்றுவருவதைக் காணலாம். எழுத்துக்கள் குறைந்தாலும் கருத்து மாறுபடாமல் இருப்பதைக் காணலாம்.

அருமருந்தன்ன என்பது அருமையான என்னும் பொருளில் தேவாரத்தில் (1214/21) இடம்பெற்றுள்ளது. இதே சொற்றொடர் மற்றொரு தேவாரத்திருநாமோ எமது பேச்சு வழக்கில் அதனை அருமாந்த என்று உபயோகிக்கிறோம்.

முதற்பிள்ளை என்பதைத் 'தலைப்பிள்ளை' என்றும் முதல் நோன்பை தல நோன்பு என்றும், முதற் பிறையைத் தலைப்பொறை என்றும் முதல் என்னும் கருத்தில் தலை என்னும் சொல் தல என்று இறுதி ஐகாரம் அகரமாகி வருவதை முஸ்லிம் பேச்சு வழக்கில் வழங்குவதைக் காணலாம். 'தலையே தவமுயன்ற வாழ்தல் ஒருவர்க்கு' என முதன்மை என்னும் கருத்தில் தலை என்னும் சொல் நாலடியாரில் (37/5) பயின்று வருகின்றது.

நீம் என்பது முன்னிலைப் பன்மைப் பெயர். நும் என்பது மகரம் நிற்கத்திரிந்து நிம் என நிற்கும். நிம் என்பதும் முன்னிலைப் பன்மைப்

பெயராகவே உபயோகிக்கப்படுகிறது. சீவகசிந்தாமணியில் நீம் என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது.

*அன்றைப் பகலே அடியேன்வந் தடைவனீமே*
*வென்றிக் களிற்றான் உழைச்செல்வது*
*வேண்டும் என்றான்*
*விமலையாரிலம்பகம் 44 (1932)*

என நீமே என ஆளப்பட்டுள்ளமையைக் காணலாம்.

நீமே என்பதில் உள்ள ஏகாரம் பிரிநிலை. நீம் என்று ஒரு திசைச் சொல்லும் உண்டு என்பர். நீம் என்பது அ என்னும் அசைவைப்பெற்று நீம் என்றும் அர் என்னும் கௌரவப் பன்மையைப் பெற்று நீமர் என்றும் முஸ்லிம்களின் தமிழ்ப் பேச்சு வழக்கில் பயிலப்படுவதைக் காணலாம். 'நீமபோம்' என்று கோபப்டும் வேளைகளில் கூறுவாரும் உளர்.

பல்குதல், பலவாதல் எனப்படும் ஞாயிறு பல்கிய மாயமொடு எனப் பதிற்றுப் பத்தில் இச்சொல் அக்கருத்தில் ஆளப்பட்டுள்ளது. பலுகிய நோய் என்று முஸ்லிம்கள் பல்குதலை உபயோகிக்கும் பொழுது பலவாகிய பரவுந் தன்மையையே குறிப்பிடுவர்.

புலால் என்றால் தசை, மீன் என்று பொருள்படும். ஊன் முதலியவற்றைக் குறிக்கும் ஊன் வகைகளை உண்ணக் கூடாது என்னும் கருத்தில் 'உண்ணாமை வேண்டும் புலாஅல்' என்கிறது திருக்குறள். (257) முஸ்லிம்களின் தமிழ்ப் பேச்சு வழக்கில் புலால் என்னும் இச்சொல் பிலால் என மாறுகிறது. முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் பிலால் சாப்பாடு அல்லது பிலால் விருந்து என்று கூறும் பொழுது அது பிரதானமான ஒரு விருந்தைக் குறிப்பிடுகின்றது. முஸ்லிம்களின் பழக்கவழக்கங்களுக்கு இணங்க ஒரு திருமணம் நிகழ்ந்து ஏழாவது நாள் அல்லது தத்தம் வசதிக்கேற்ப எழு நாட்களுக்குள் ஒருநாள் மணமகன் உற்றார் உறவினருக்கு மணமகள் வீட்டில் ஒரு விருந்தளிப்பார். வலிமா போன்றது அந்த விருந்து. மணமகன் அளிக்கும் விருந்துபசாரம் வலிமா என இஸ்லாமிய பரி பாஷையில் வழங்கப்படுகிறது. மணமகனுக்கோ மணமகளுக்கோ அத்தகைய விருந்து நடைபெறும் வரை மீன் கறி பரிமாறப்படுவதில்லை. திருமணம் முடிந்து மணமக்கள் அத்தகைய மணமகன் அளிக்கும் விருந்திலேதான் முதன் முதலாக மின் கறியை உட்கொள்வர்.

எனவே தான் முதலாக மின் கறியை உட்கொள்வர். எனவேதான் அத்தகைய விருந்து பிலால் சாப்பாடு என வழங்கப்படுகிறது. ஐங்குறு நூறு என்னும் நூலில் மருதம்பற்றிய பத்தாவது பாடலில்

*பூத்தமாகத்துப் புலாலஞ் சிறு மீன்*
*றண்டுமுறை யூரான். (4 –5)*

எனப் புலால் என்பது ஆளப்பட்டுள்ளமை ஈண்டுநோக்கற்பாலது.

பைய என்று 83ஆம், 113ஆம் பாடல்களிலும் பைய என்று 74ஆம் பாடலிலும் மெல்ல என்னும் பொருளில் ஐங்குநுறூற்றில் இடம் பெற்றுள்ளன. பைய என சீவகசிந்தாமணியில் உள்ள முத்தியிலம்பகத்தில் 62 (2760) மெல்ல மெல்ல என்னும் பொருளில் அச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் தமது பேச்சு வழக்கில் பையப்பைய என்பதனை மெல்ல மெல்ல அல்லது மெதுவாக என்னும் பொருளில் உபயோகிப்பர்.

மறுகால் என்பது மற்றொரு முக்கியமான சொல். இரண்டாம் முறை அல்லது மறுபடி என்னும் பொருளைக் கொண்டது இச்சொல்.

பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால் கொழுங்கொடி அவரை பூக்கும். (82)

என்றுகநற்தொகைப்பாடலில்மறுகால்என்பதுஉபயோகிக்கப்பட்டுள்ளது. நாமோ இச்சொல்லை பேச்சு வழக்கில் மறுகா என லகரத்தைக் குறைத்தும் மறுகா என்பதனை மறுவா என மீண்டும் அல்லது மறுபடி என்னும் கருத்தில் உபயோகிக்கின்றோம். கால் என்னும் சொல் தடவை என்னும் பொருளில் நாலடியாரில்

*சென்றே எறிப ஒருகால் சிறுவரை*
*நின்றே எறி பறையினை/ நன்றே காண்*
*முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்டெழுவர்*
*செந்தாரைச் சாவார் சுமந்து (3/24)*

என ஒரு தடைவ, மூன்று தடைவ என்னும் பொருளில் கால் என்னும் சொல் ஒரு கால், முக்கால் என உபயோகிக்கப்பட்டுள்ளது. ஏல விற்பனைகளின்போது ஒருக்கால் இருக்கால், முக்கால் என முஸ்லிம்களிடையே சர்வ சாதாரணமாக வழங்குவதை நாம் காணலாம். சில சமயங்களில் ஒருக்கால் என லகரம்

குறைந்தும் பயன்படுத்தப்படுவதுண்டு. தடைவ என்னும் பொருளில் வரும் தரம், கால் என்னும் சொல்லும் இரண்டையும் ஒன்றாக உபயோகித்து ஒரு தடவையைக் குறிக்க ஒரு தரக்கா என்றும் இரண்டு தடவையைக் குறிக்க இரண்டு தரக்கா என்றும் பயன்படுத்துவர். ஆயிரந்தடைவ ஆயிரந்தரக்கா என்று பலதடவை என்பதனைக் குறிக்க உபயோகிப்பர். இரண்டாம் முறை என்பதனைக் குறிக்க'மறுவல்' என்னும் சொல்லைத் திருத்தக்கதேவர் தமது சீவக சிந்தாமணியில் 'மகண்மனங் குளிர்ப்பக் கூறி மறுவலும் பல்லிக் கொண்டாங்கு என குணமாலையாரிலம்பகத்தில் உள்ள 202ஆம் விருத்தத்தில் (1/42) உபயோகிக்கப்பட்டுள்ளமை ஈண்ட நோக்கற்பாலது.

மிக்கார் என்பது மேம்பட்டவர் எனப்பொருள்படும். தகுதி உடையவர்களைக் குறிப்பிட உபயோகப்படுத்தப்பட்ட தக்கார் என்பதனைப் பற்றி முன்னர் அறிந்தோம். இந்த மிக்கார் என்பது முக்கார் எனத் திரிந்து முஸ்லிம் மக்களிடையே வழங்கப்படுகிறது. தக்கார் மிக்கார் என்று கூறாமல் தக்கார் முக்கார் என்பர். தக்கார் முக்கார் என்னும் சொற்றொடரினால் பெரியவர்கள் தகுதி உடையவர்கள், மேம்பட்டவர்கள், முக்கியஸ்தர்கள் என்பவர்களையே குறிக்கப்படுகின்றது. முக்கார் என முஸ்லிம் பேச்சு வழக்கில் திரிந்துள்ள மிக்கார் என்பது திருவாசகத்தில் 'மிக்கார ராரடியானெனில்' (6/48) எனவும் நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் நம்மாழ்வார் திருவாய் மொழியின் இரண்டாம் பத்தில் உள்ள ஊனில்வாழ் என்னும் திருவாய் மொழியில் உள்ள இரண்டாம் பாசுரத்தில் 'ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா' என்றும் இடம்பெற்றுள்ளது.

முஸ்லிம்களின் தமிழ்ப் பேச்சு வழக்கிலே பயிலப்படும் செந்தமிழ்ச் சொற்கள் உருக்குலையாமலும் கருத்து வேறுபட்டு பயன்பட்டு வருவதையும் நாம் காணலாம். சருவ சாதாரணமாக முஸ்லிம் மக்கள் என்பித்தல் என்று கூறும் பொழுது உறுதிப்படுத்துதல், நிரூபித்தல் ருகப்படுத்தல் என்பனவற்றையே குறிக்கின்றது. தமிழ் இலக்கியத்திலே என்பித்தல் என்னும் இச்சொல் பிரசித்தியாக்குதல், பகிரங்கமாக்குதல் என்னும் பொருள்களின் உபயோகப்படுத்தப் பட்டுள்ளமையைக் காணலாம். இத்தகைய கருத்தில் என்பித்தல் நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. நம்மாழ்வார் எட்டாம் பத்தில் 'என்றைக்கும்' என்னம் தலைப்பினை உடைய ஒன்பதாம் திருவாய்மொழியில் உள்ள இரண்டாம் பாசுரத்தில்.

‘என்சொல்லால் யான் சொன்ன இன்கவி யென்பித்து’ என என்பித்து என்பதனை ஆண்டுள்ளார்.

நற்றிணையில் களரி என்பது ‘கருங்களி ஈந்தின் வெண்புறக் களரி’ (126) என்று களர் நிலத்தைக் குறிப்பிட உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் தமது விருந்து வைபவங்களை நடத்தும் பொழுது உணவு பரிமாறப்படும் இடங்களைக் குறிக்க கலரி என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

பண்டு உபயோகித்த கருத்திலிருந்து அதற்கு முற்றும் மாறுபட்ட பொருளில் பயன்படுத்தப்படும் மற்றொரு சங்ககாலச் சொல் ‘பொழுதுபட’ என்பதாகும். பொழுதுபட என்னும் சொல் அகநானூற்றிலே ஆளப்பட்டுள்ளது. அகநானூற்றில் உள்ள 31ஆம் பாடலில் ‘நெறித்த கோட்டினையும் மிக்க குளிச்சியுற்ற முதுகினையுடைய முதிய எருமைக் கடா மிக்க சேற்றின் குழம்பிலே கிடந்து இரவெல்லாம் துயின்று சூரியன் தோன்றிய காலையில் வெளிப்படுவதை’

.................. நெறிமருப்பு

ஈர்ந்தன் ஒருமைச் சுவல்படு முதுபோத்துத் தூங்குசேஏ றள்ளல் துஞ்சிப் பொழுதுபடப் பைந்நிண வராஅல் குறையப் பெயர் தந்து (2 – 5)

என ஓரம்போகியார் வருணித்துள்ளார், இங்கே ஞாயிறு தோன்றிய காலை என்பதனைக் குறிப்பிட ‘பொழுதுபட’ என்றும் சொற்றொடர் உபயோகிக்கப்பட்டுள்ளது. அக நாநூற்றுப் பிரயோகத்துக் கிணங்கப் பொழுதுபடுதல் ஞாயிறு தோன்றுதலாகும். ஆனால் சீவக சிந்தாமணியில் ‘பொழுது போயப்பட்ட பின்றை’ (1747) எனக் கனக மாலையாரிலம்பகம் 191வது விருத்த்தில் ஞாயிறுபட்ட பின்பு’ என்பதனைக் குறிப்பிடவே உப யோகிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். முஸ்லிம் மக்கள் தமது பேச்சு வழக்கில் பொழுதுபட என்னம் சொற்றொடர் சூரியஸ்தமனத்தைக் குறிக்கவே உபயோகிக்கின்றனர். முஸ்லிம் மக்களின் தமிழ்ப் பேச்சு வழக்கில் இச் சொற்றொடரின் தற்கால உபயோகம் சங்ககாலத்தில் உபயோகிக்கப்பட்ட கருத்துக்கு முற்றும் முரணான வகையில் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். இவ்வாறு பழங்காலத்துக்குரிய பல சொற்கள் ஈழத்துவாழ் முஸ்லிம் மக்களின் தமிழ்ப் பேச்சு வழக்கிலே பெரியதும் உபயோகிக்கப்பட்டிருப்பது முஸ்லிம்களின் தமிழ்ப் பேச்சு வழக்கின் ஒரு சிறப்பியல்பாக்க கணிக்கலாம். அல்லவா?

இத்தகைய உபயோகங்களும் பிறவும் முஸ்லிம் மக்கள் தமிழ் மொழியைத் தம் பேச்சு மொழியாகக் கொண்டு வாழும் எல்லாப் பகுதிகளிலும் எல்லா நாடுகளிலும் இருக்கலாம். இலங்கையின் சில பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களின் பேச்சு வழக்கில் எனக்குப் பரிச்சியமான சிலவற்றைப் பற்றிய எனது கருத்துக்களை நான் உங்கள் முன்னிலையில் சமர்ப்பித்தேன். தமிழ் கூறும் ஏனைய பகுதிகளிலும் நாடுகளிலும் மாவட்டங்களிலும் பெருவழக்கிலுள்ள முஸ்லிம் மக்களின் பேச்சு வழக்கினை ஆராய எனது இக்கட்டுரை துணை புரியுமெனின் எனது குறிக்கோள் வீண் போகவில்லை என்று நான் மகிழ்ச்சி அடைவேன். இத்தகைய கருத்தரங்குகள் நடாத்தி இத்தகைய ஆராய்ச்சிகள் மேற்கொள்வதை இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம் அதன் பணிகளுள் ஒன்றாகக் கொள்ளுதல் வேண்டும். இத்துறையில் எல்லாம் வல்ல அல்லாகுத்தா ஆலா எம் அனைவருக்கும் அருள்பாலிப்பானாக ஆமீன்.

# சிங்கள நாவல் இலக்கியத்தில் வரலாற்றுப் பதிவுகள் - ஓர் அறிமுகம்



எஸ். முரளிதரன்

இருபதாம் நூற்றாண்டின் முதற் தசாப்தம் 19ம் நூற்றாண்டில் நிலவிய ஓரளவு அமைதியான அரசியலின் தொடர்சியாக இருந்தாலும் 1920களில் ஊழியர்கள் சிறந்த வேலைத்தள வசதிக்கும் வேதன அதிகரிப்புக்குமான போராட்டத்தை ஆரம்பித்தனர். இதற்கு அரசியல் தலைவர்களின் ஆதரவும் கிடைக்கப்பெறலாயிற்று. 'சூரிய மல்' இயக்கம் என்பதாகவே மார்க்சியம் 1926ம் ஆண்டு அளவில் இலங்கைக்கு அறிமுகமாகியாகியது. முப்பதுகளில் இயக்கம் வளர்ந்து தொடர்ச்சியாக 1936ல் லங்கா சமசமாஜ கட்சியாக அங்குரார்ப்பணம் பெற்றது.

இலங்கைக்கு சுதந்திரம் 1948ம் ஆண்டு அமைதியாக தேர்தல் முறையிலே கிடைத்தாலும் சுதந்திரத்துக்கு பிற்பட்ட இலங்கை இரண களங்களுக்கு தயாராகிவிட்டது. 1956ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தனிச்சிங்கள சட்டம் தமிழ் சிங்கள இனமுறுகலுக்கு ஆழமான வேர் பாய்ச்சியது.

1960ம் ஆண்டு பொருளாதார தாராளவாதம் தலையெடுக்கையில் சிங்களவர்கள் தமது தொழில் வாய்ப்புகள் தொடர்பில் அஞ்சத்தொடங்கினர். தமிழர்களின் ஆங்கில மிசனரிகளோடு கொண்டிருந்த அதிக தொடர்பு தமிழர்களை ஆங்கில பரிச்சமுள்ளதாக்கியுள்ளதால் ஒப்பளவில் சிங்களவர்களின் ஆங்கில ஆற்றல் குறைபாடு அவர்களின் வேலைவாய்ப்பு அந்தஸ்த்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. இதனின் ஒரு விளைவாக வேலையில்லா இளைஞர்களின் ஆசீர்வாதத்தோடு ஆரம்பிக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி சிங்கள இளைஞர்களின் அமைதியின்மையை 1971ம் ஏற்படுத்தி இலங்கையின் பிற்காலனித்துவ நிலைப்பாட்டில் அதிர்வுகளை ஏற்படுத்தியது.

சிங்கள இளைஞர்கள் பால் தீவிர கவனம் செலுத்திய அதன் பின்னதாக உருவாகிய அரசுகளின் செயற்பாடுகள் தமிழ் இளைஞர்களை ஓரங்கட்டியதன் வெளிப்பாடு கடந்த 2009ம் ஆண்டு வரையான மூன்று தசாப்தங்களில் இலங்கையில் துலாம்பரமாக வெளிப்பட்டது குறித்து உலகறியும். இந்த கால பகுதிக்குள் எண்பதுகளில் தென்னிலங்கையில் மறுபடியும் ஏற்பட்ட இளைஞர் கிளர்ச்சியும் ஞாபகத்தில் கொள்ளத்தக்கது.

இன்று இலங்கையில் சமாதானம் நிலவி இரத்த ஆறுகளின் ஓட்டம் தடைப்பட்டுள்ளதாக கருதப்படுகின்றது. அமைதியில்லாத காலப்பகுதிகளில் தோன்றிய தமிழ் புனைவு இலக்கியங்கள் குறிப்பாக நாவல்கள் தமிழ் மக்களின் இருப்பு குறித்து விசாரத்தோடு வெளிப்பாடுகளை மேற்கொணடிருந்த வேளை, சிங்கள நாவல் இலக்கியங்களின் வரலாற்றை உள்வாங்கும் செயற்பாடுகள் குறித்து தமிழ் ஆய்வாளர்கள் தேடுதல்கள் செய்ய வேண்டியதன் முயற்சியின் முன்னோட்டமாக இச்சிறு அறிமுகம் அமைகிறது.

சிங்கள நாவல் இலக்கியத்தின் வரலாறு தொடர்பான ஊற்றுமூலங்கள் தேசத்தின் கலாசார, அரசியல், பொருளாதார துறைகள் வாழ்வில் ஏற்படுத்திய சமநிலைத் தளம்பல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஏதாவது ஒரு துறையில் ஏற்பட்ட விரிசல்கள் மற்றய துறைகளில் மேலோச்சும் தாக்கங்களை வரலாற்று பதிவுகளாக்கும் கோலம் 1960களிலிருந்து முனைப்படைந்துள்ளது.

வாசனாவந்த பவுல ஹா காலகன்னி பவுல (அதிஸ்டமான குடும்பமும் துரதிஸ்ட குடும்பமும் 1866) எனும் ஐசக் சில்வா (1844 – 1907) படைத்த

நாவலே முன்னோடி நாவலாக சிங்களத்தில் கருதப்படுகின்றது. இதை நாவலென்பதை விட கதை கூறும் விவரணமாக கருதவேண்டுமென்ற வாதமும் காணப்படுகின்றது. அதன் பின் தோன்றிய பெந்தொட்ட அல்பிரட் சில்வா (1866 – 1919) எழுதிய விமலா (1892) மற்றும் ஆதர ஹசுன (காதற் கடிதம், 1894) எனும் நாவல்களும் கற்பனாவாதத்தை மிகையாக கொண்ட விவரணப்பாங்கிலேயே ஆக்கப்பட்டிருந்தன. எனவே நாவல்கள் தாங்கியிருக்க வேண்டிய அம்சங்களில் விலகல்கள் காரணமாக இவைகள் நாவல்கள் பட்டியலில் அடக்குவது சர்ச்சையாக இருக்கின்றது.

என்றாலும் சைமன் சில்வா (1874 – 1920) எழுதிய எளிமையான காதல் கதையான மீனா(1905) சிங்கள இலக்கியத்தில் முதல் நாவலாக கொள்ளப்படுகின்றது. ஏனெனில் இக்கதையின் நாயகியின் மனப்போராட்டம் மற்றும் அகசிந்தனைகள் ஊடாக பாத்திர வார்ப்பு மேற்கொள்ளப்படும் பாங்கானது நாவலுக்குரிய தன்மையை நிலைநிறுத்துகின்றது என்பர்.

மதசார்பற்ற பொருள்மையவாத உரைநடை எழுத்துக்கள் தொடர்பில் பியதாச சிறிசேன (1875 –1946) கவனத்தில் கொள்ளப்படுகின்றார். இவரே வரலாற்று அம்சத்தை முன்வைத்து முதலில் எழுத முனைப்புற்றவராவர். இவரது எழுத்துக்கள் எவ்வாறு சமூக பாரம்பரிய விழுமியங்களை சுதந்திரத்துக்கு முன்னான காலகட்டத்தில் ஆங்கிலயமாதலின் அச்சுறுத்தலிருந்து எவ்வாறு தற்காத்துக்கொள்ளலாம் என்பது குறித்து வினையாற்றியது. அபட்ட வெச்ச தே (எங்களுக்கேற்பட்ட கதி) மற்றும் யாந்நங் கலவுனா (ஒருவாறாக தப்பினோம்) போன்ற அவரின் உரைநடை ஆக்கங்கள் அக்கால கலாசார சூழ்நிலையில் அவர் எவ்வாறாக ஒரு தேர்ந்த தேசிய சிந்தனையாளராக மிளிர்ந்தார் என்பதைக் காட்டுவதாக உள்ளது.

மார்ட்டின் விக்கிரமசிங்க (1890 – 1976) 20ம் நூற்றாண்டின் எழுத்துலக ஜாம்பவனாக பிரகாசித்தவராவார். அவரின் மூன்று தொடர் நவீனங்களான கம்பெறலிய (கிராமப்பிறழ்வு, 1944), யுகாந்தய (யுகத்தின் நிறைவு, 1949), கலியுகய (கலியுகம் , 1957) இலங்கை வரலாறு குறித்த இன்றியமையாத நாவல்களாகும். இவற்றினூடாக நிலப்பிரபுத்துவத்தின் சுவடுகளிலிருந்து நகரமய வர்த்தக முதலாளித்துவமாக இலங்கை சமூக அமைப்பு நிலைமாற்றம் பெறுவதும் அதற்கெதிராக சோஸலிசம் தோற்றமுறுவதையும் காட்டுகின்றது. விக்கிரமசிங்கவின் இந்நாவல்கள் வர்க்க பேதங்கள் பற்றியும் பேசுகின்றன.

மிக சிறந்த படைப்பாகக் கொள்ளப்படும் கம்பெறலிய முதன்மையான பூரணத்துவமான நாவலாகும். இந்நாவல் தென்னிங்கையின் விவசாயிகளின் நிலப்பிரபுத்துவசார் கிராம வாழ்வின் அனுபவங்களுடாக எவ்வாறு இலங்கையில் முதலாளித்துவம் தோற்றமுறுகின்றதென்பதை விபரிக்கின்றது. இந்நாவல் நிலபிரபுவின் மகளான நந்தாவுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பியால் எனும் ஆசிரியனுக்குமிடையே அரும்பும் காதலையொட்டி சமூக மாற்றம் இழையோட்டமாக கொண்டமைந்துள்ளது. இவ்விருவர் திருமணம் அவர்களின் சமூக அந்தஸ்த்தில் ஏற்படுத்தும் மாற்றம் குறித்து கதையாடல் செய்கின்றது.

அடுத்த இரு நாவல்களும் கம்பெறலியவின் தொடர்ச்சியாக இவர்களின் குடும்பம் குறித்து கதையோட்டங்களில் கவனம் செலுத்துகின்றன. சுதந்திரத்துக்கு பின்னர் உடனடியாக எழுதப்பட்ட யுகாந்தய நாவலானது கதையை பின்வலமாக நகர்த்துகிறது. நந்தா – பியால் தம்பதிகளின் பேரனாகிய மாலின் கபலான இங்கிலாந்து சென்று கற்று வந்து புரட்சிகரமான சிந்தனையாளனாகவும் சமூக அமைப்பை மாற்ற போராடுபவனாகவும் சித்திரிக்கப்படுகின்றான். கதாசிரியரின் இந்த அணுகுமுறையானது உழைக்கும் வர்க்கம் முதலாளித்துவத்துக்கு எதிராக செயற்பட்ட (குறிப்பாக 1947ம் ஆண்டு) அம்சத்தை அவர் உள்வாங்கியமைக்கு உதாரணமாகும். கலியுகய நாவல் சுதந்திரத்துக்கு பின்னரான ஒரு தசாப்தங் கடந்து எழுதப்பட்டது. இந்நாவலில் மார்டின் விக்கிரமசிங்க நகர்மய முதலாளித்துவத்தை அரவணைத்தவர்கள் சபலநிலைக்களாவதை பாத்திரங்கள் ஊடாக காட்டமுனைகின்றார். நந்தா – பியால் தம்பதிகள் தத்தமது குடும்பங்களினின்று விடுபட்டமையும் சுதந்திரத்துக்கு பின்னான முதற்கால கட்டங்களில் கொழும்பு நகரையொட்டிய உயர் சமூகத்தினரையும் குறித்து அகதரிசனம் செய்கின்றது. இந்த மூன்று நாவல்களும் அது எழுதப்பட்ட காலகட்டம் தொடர்பான சமூக அரசியல் பரிணாமத்தை சுட்டுவதால் வரலாற்று பெறுமதி தாங்கியவைகளாக போற்றப்படுகின்றன. இதே நாவலாசிரியரின் விராகய (பற்றற்ற வாழ்வு, 1956) 1956ம் ஆண்டு சிங்கள இலக்கியத்தின் திருப்புமுனையாக கருதக்கூடிய அதி உன்னதமான படைப்பாகும்.

கே.ஜயதிலக்கவின் பராஜித்தியோ (தோக்கடிக்கப்பட்டவர்கள், 1960) 50களின் அரசியல் சமூக யதார்த்தங்கள் குறித்து படம்பிடிக்கின்றது.

உதயன எனும் கிராமிய இளைஞன் கொழும்பில் கல்வி கற்க செல்லும் அவன் முன்னேற்றத்துக்கெதிராக முகங்கொண்ட சவால்கள் இந்நாவலின் அடிநாதம். ஜயதிலகவின் மற்றுமொரு நாவலான தெவலோகட நெதியாய (இரு உலகத்தையும் சாராதோர், 1963) சுதந்திரத்துக்கு பின் மக்களின் இரண்டும் கெட்டநிலையும் 1956க்கு பின் அரசியல் நிலைமைகளில் மாற்றமின்மையும் குறித்து சொல்லத் தலைப்படுகின்றது.

டி.பி.இலங்கரத்னவின் பெரலிய (கிளர்ச்சி, 1972) நாவலும் ஈ.ஆர். சரத்சந்திரவின் ஹெட எச்சர கலுவர நே (நாளை அவ்வளவு இருண்டதல்ல, 1975) நாவலும் 1971ம் ஆண்டின் இளைஞர் அமைதியின்மையை இன்றும் ஞாகமூட்டும் படைப்புகளாகும். குணதாச அமரசேகரவின் அசத்திய கதாவக் (உண்மை அற்ற கதை, 1977) பின் அதனை தொடர்ந்த பிரேமயன சத்திய கத்தாவ (காதலின் உண்மைக் கதை, 1978) எனும் இரு நாவல்களும் இளைஞர்களின் புரட்சிகரத்தோடு தொடர்பானவை. சுமித்ரா ராஹுபத்தகேவின் இடிபந்தங் (மெழுகுவர்த்தி, 1998) நாவலானது 70களின் இளைஞர் எழுச்சியையும் எண்பதுகளின் அதன் தொடர்ச்சியின் வெளிப்பாடுகளையும் கதையூடாக செல்ல வந்த முயற்சியாகும்.

குணதாச அமரசேகர எணபதுகளின் தொடக்கத்தில் ஆறு நாவல்களை தொடர்ச்சியாக தந்தார். இந்நாவல்கள் வரலாற்றின் மைக்கற்களை தொட்டுக்காட்டுபவையாக கருதப்படுகின்றன. அவரின் கதைகளின் தொனியாக கிராமப்புற நடுதர வர்க்க மக்கள் நகர் புறங்களுக்கு புலம் பெயர்வது குறித்து எடுத்தாளப்படுகின்றது. கமனக முல (பயணத்தின் ஆரம்பம்), கமங்க் எலியட (கிராமத்துக்கு வெளியே), ஹினிமககின ஹிஹலட (ஏணியின் மேலே), வங்ககரிலய (சிக்கல் பாதை), மக வேத (பாதை மீதே), துர ரடக்க துகட்ட கிரியக (தூர நிலத்தே துயர்) முதலிய இவரின் நாவல்கள் சதந்திரத்துக்கு பின்னான இலங்கையின் அரசியல் மற்றும் சமூக செல்நெறிகளை அலசுகின்றன.

மற்றுமொரு வரலாற்று நாவலாக கருதப்படக்கூடியது சரத தர்மசிறியின் சட சுலங்க (கடுங்காற்று, 1991) 1830ம் ஆண்டு கோல்புறுக் ஆணைக்குழுவின் தரிசு நில மறுசீராக்கம் தொடர்பாகவும் அது தொடர்பில் 1848யில் கிராம பொருளாதாரத்தின் தாக்கம் காரணமாக ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சியையும் எடுத்தாள்கிறது.

பியதாச வெலிகன்னகேயின் சுது செவனெளி (வெள்ளை நிழல், 1986) 1848 ஆண்டு மலைநாட்டுப்பகுதியில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக உருவாகிய தேசிய இயக்கத்தின் காரணமாக 19ம் நூற்றாண்டின் மையப்பகுதியில் எற்பட்ட கலாசார, பொருளாதார சமூக நிலைகளையொட்டி பேசுகிறது.

அண்மைக்கால சமூக அரசியல் நிலைமைகளை அலசுவதாக கருதப்படக்கூடிய நாவல்களான மேரவின் திலகரத்னவின் துருஸ்னாபரண (ஆபரண ஆசை, 1991) மற்றும் சுனந்த மகேந்திரவின் உனு அலு பல்ல(எரியும் கரி மேலே, 1993) போன்ற நாவல்களைக் குறிப்பிடலாம்.

போர்க்கால சிங்கள இலக்கியங்கள் குறித்து எம்.சி.ரஸ்மினின் தமிழாய்வு நூல் வெளிவரவிருக்கின்றது. அது தரம் தகவல்கள் நம் ஆய்வாளர்களை வளப்படுத்துவதாக அமையும்.

உசாத்துணை: Monouri K.Jayasinghe, Rendering history through the Sinhala novel

# இரவிற்குள் ஓர் பயணம்
(பங்களாதேஷ் சிறுகதை)





**மூலம்:**
*** ஷப்னம் நதியா**
**Shabnam Nadiya**

**தமிழாக்கம்:**
**எம். ஹிருஷாலினி**

விடியற்காலை ஒரு மணி, கோக்ஸ் பசாரை நோக்கிய பஸ் பயணத்தில் ஒரு சிறிய இடைவேளை. நீண்ட நேர பயணத்தின் பின் ஒரு வேளை உணவை எடுக்கவும், தேநீர் அருந்தவும் கொஞ்சம் கால்களை தளர்த்தி உடலை சறுசுறுப்பாக்குவதற்குமாக பயணிகளுக்காக நிறுத்தப்பட்டது. அஞ்சோனாவிற்கும் அது தேவைப்பட்டது. அப்போது தான் அவள் பெண் ஒருத்தி பஸ் கதவை நோக்கி செல்வதை அவதானித்தாள்.

அவர்களது பஸ் பெரிய சொகுசு பஸ் ஆகும். ஆனாலும் பிரயாணம் முழுவதும் அவளது மகள் தோளில் சாய்ந்து படுத்திருந்தாள். அதனால் அவள் மகளின் சௌகரியத்திற்காக தன்னை அசையாமல் வைத்து கொண்டே பயணித்தாள். சிறு குழந்தையல்லவா? சரியாக கவனிக்காவிட்டால் தனது சொந்த இடமான டாக்காவை அடையும் வரை அவளுக்கு நோய் எதுவும் ஏற்பட்டுவிட கூடாது என்பதனாலாகும். ஏற்கனவே அஞ்சோனாவின் அத்தை அஞ்சோனா ஒரு சிறந்த தாய் அல்ல என மறைமுகமாக கூறியிருந்தாள்.

அவள் பஸ்ஸை விட்டு இறங்கும் போது அவளது கணவன் கேட்டான், 'எங்கே உனது பை?'

அவள் 'எனது இருக்கையில் இருக்கிறது' என பதிலளித்தாள்.

'நல்லது, அதை அங்கேயே வைத்துவிட்டு வராதே போய் எடு, உனக்கு எல்லாவற்றையும் சொல்லி கொண்டே இருக்க வேண்டுமா?' என்று எச்சரித்தான். அஞ்சோனா நாக்கை வெளியே தள்ளி பலித்து காட்டுவதை போல் அவளது கணவனை நோக்கினால், குழந்தைகளும் அதை பார்த்து சிரித்தனர். அஞ்சோனா பையை எடுக்க மீண்டும் உள்ளே ஏறினாள், அவளால் இன்னும் அவள் பார்த்த பெண்ணை அடையாளம் காண முடியவில்லை. (அவள் கொஞ்ச நாட்களாக தனது சுற்றத்தார் பற்றி அவ்வளவாக கண்டு கொண்டிருக்கவில்லை), பஸ்ஸில் பின் கடைசி ஓர் இருக்கையை அவள் கண் நோட்டமிட்ட அந்த தருணத்தை கூட அவள் பெரிதாக எண்ணவில்லை. பாதி இருள் சூழ்ந்த அந்த நேரத்தில், அவள் நெருங்கி அமர்ந்து கொண்டிருந்த இருவரை கண்டாள். ஒரு பெண்ணும், அவள் பக்கத்தில் ஓர் ஆணும் திரும்பி உட்கார்ந்திருந்தனர். அந்த ஆண் ஏதோ பேசி சிரித்து கொண்டு அவள் மேல் வளைந்து பேசி கொண்டிருந்தான். ஒரு பார்வையின் அவர்கள் கைகோர்த்து உட்கார்த்திருப்பதை பார்த்தாள். அந்த சந்தோஷ சப்தம் அவளை தொட்டுவிட்டது. புதிதாக மணம் முடித்தவர்களோ? என எண்ணியவாறு அவர்களை கடந்து தனது பையை எடுக்க சென்றாள். 'அவர்கள் தேனிலவுக்காக வந்திருப்பார்கள்,' என எண்ணி கொண்டாள். அவர்களது நடவடிக்கை அப்படிதான் இருந்தது.

அஞ்சோனா தேனிலவுக்காக இதுவரை எங்கும் சென்றதில்லை. இதுவே தனது கணவனுடன் முதல் தடவை வெளியே செல்வது. பையை எடுத்து கொண்டு இறங்க வரும் போது அவள் மீண்டும் அப்பெண்ணை பார்க்க எத்தனித்தாள். அவளது முகத்தை தெளிவாக பார்ப்பதற்காகவே தவிர வேறெதற்கும் இல்லை. அதற்குள் அவளது கணவன். 'என்ன எடுத்து விட்டாயா?' என வெளியே அழைத்தான். 'ஆம்' என்று கூறி விரைவாக அவனை நோக்கி நடந்தாள். பிள்ளைகள் பொறுமை இழந்து பஸ்ஸின் படிக்கருகில் நின்றுகொண்டிருந்தனர்.

'சீக்கிரம் வாங்க அம்மா!, நீங்கள் எப்போதும் எங்களை தாமதப்படுத்துவீர்கள்!' என்றனர் பிள்ளைகள். அப்பா அவர்களை பார்த்து சிரித்து கொண்டே 'எதாவது சாப்பிட்டு விட்டு வருவோம்' என்றார்.

அவர்களது மகனும் மகளும் தமக்கிடையே பெரிய பேச்சுவார்த்தையில் இருந்தனர். அவர்களுக்கு இந்த பயணம் புதுமையானதொன்றாக இருந்தது. ஓர் இரவு முழுவதும் பஸ்ஸில் கழித்ததும், குட்டி தூக்கங்களை போட்டு கொண்டு அவர்களது பயணம் கடற்கரையை பார்க்க போகும் ஆர்வம் கொண்டதாக இருந்தது. நிறைய மின்குமிழ்களால் ஒளிர்ந்த ஒரு உணவுசாலையை நோக்கி நடந்தனர்.

அஞ்சோனா தனது மகளை கழிவறைக்கு அழைத்துச் சென்றாள். தனது கணவனிடம் தனது 7 வயது மகனையும் கழிவறைக்கு கூட்டிச்செல்ல சொன்னாள். அங்கு செல்வது ஒன்றே அவர்களுக்கு பெரிய விடுதலையாக இருந்தது.

அம்மா, நீங்கள் இங்கேயே நில்லுங்க நா போய் வரும் வரை என்று மகள் சொன்னாள். அவளது கண்கள் இன்னும் அரை தூக்கத்தில் இருந்தன. அவளால் சரியாக கண்ணை சிமிட்ட கூட முடியவில்லை, இதுவரை அவர்கள் பாதி இரவில் இப்படி எழும்பியதே இல்லை. அவள் கழிவறைக்கு செல்லும் வரை கண் இமைக்காமல் அஞ்சோனா அவளை நோக்கினாள். அப்போது அவளுக்கு பழைய நினைவுகள் வர தொடங்கின. அவளது முதல் குழந்தையை நினைத்து அவள் எப்படி அதிருப்தி அடைந்தாள். அவள் கர்ப்பிணியாக இருக்கும் போது முதல் குழந்தை ஆண் தான் என்று எல்லோரும் எதிர்ப்பார்த்தார்கள். அப்போது குணங்குறிகளும் ஆண் மகவு ஒன்றை பிரசவிப்பது போல் தான் இருந்தது. அவளது நீட்டப்பட்ட தொப்புள், கால் வியாதி, அவளது நடை கனவுகள் கூட அப்படி தான் இருந்தது.

பிரசவ நேரம் நெருங்கியது பெரும் கஷ்டப்பட்டு குழந்தையை ஈன்றாள். பிறகு தான் தெரியும் அவள் பிரசவித்தது ஓர் பெண் குழந்தையை என்று. ஆனாலும் யாரும் குழந்தையை வெறுக்கவில்லை. அவளுடைய பாட்டிக்கு முதல் பேரப்பிள்ளையல்லவா. ஓர் இளவரசிக்கான அங்கீகாரத்தை பெற்றாள். அஞ்சோனாவுக்கு வேறு வழியில்லை அவளும் ஏற்றுக் கொண்டாள்.

மகள் வெளியே வந்தாள். அவளிடம் பையை கொடுத்து 'நான் வரும் வரை வைத்திரு சரியா?' என்றாள். மகளோ முகத்தை சீரியஸாக வைத்து கொண்டு 'அம்மா Flash செய்யவில்லை' என்றாள். அஞ்சோனா பெருமூச்சொன்றை விட்டுக்கொண்டு உள்ளே சென்றாள்.

அஞ்சோனாவின் அப்பா அவற் சிறுபிள்ளையாக இருக்கும் போது இறந்து விட்டார். அதன் பின் பெரும் கஷ்டகாலம் அவளுடைய வாழ்வில் நுழைந்தது. அது அவளது வாழ்வில் எங்கு வெகுவாக கற்று கொண்டாள் என்றால் அவளுக்கு மாப்பிள்ளை தேடும் போது தான். அவளை எங்கேயாவது கட்டி கொடுத்து விடுவது அவளது குடும்பத்தின் எண்ணமாக இருந்தது. அவள் நிறைய தடவைகள் நிராகரிக்கப்பட்டாள். அதற்கு காரணம் தந்தை இல்லாமல் வளர்ந்த பெண் சரியான வழிகாட்டல் இல்லாமல் வளர்ந்திருப்பாள் என்ற அனுமானம் தான். ஆனால் எப்படியோ அவளது கணவனுடன் சமாளித்து வாழ பழகினாள். அவளை அப்படி கூறுவதே அவளுக்கு பெரிய மனக்குறையாக இருந்தது.

எப்படியோ தனது மகளுக்கு அவளுடைய வெள்ளை தோலை உரித்தாக்கி விட்டாள். மகளுக்கு திருமணம் ஆகும் போது எப்படியோ நிறம் தடையாக இருக்காது.

அஞ்சோனா வெளியே வந்து கைகளை கழுவினாள். 'நீ கைகளை கழுவினாயா?' என்று மகளை கேட்டாள். 'இல்லை' என வெட்கித்து கைகளை கழுவ வந்தாள். கொஞ்ச நேரம் அமைதி நிலவியது.

'அம்மா, நாங்கள் கடற்கரையை பார்க்க வந்தது அப்பாவுக்கு கோபமா?' என்று மகள் கேட்டாள்.

அஞ்சனோவின் கைகள் ஓடும் நீருக்கடியில் அசையாமல் நின்றது. 'ஏன் அப்படி கேட்கிறாய்?'

'நான் நினைக்கிறேன்' அப்பம்மா கோபம் கொண்டிருக்கார் என்று,

அஞ்சனோ கைகளை உதறினாள், தண்ணீர் குழாயிலிருந்து நீர் நிற்காமல் வெளியேறியது.

'உன்னிடம் அவர் ஏதும் சொன்னாரா?' என்றாள்.

அப்பம்மா கூறினார்.... நீங்கள் சிறந்த கவனிப்புடனும், நல்ல குடும்பத்திலிருந்து வந்திருந்தாள் இப்படி முதல் கிடைத்தவாய்ப்பிலேயே ஆடி கொண்டு சென்றிருக்க மாட்டீர்களாம்.

அஞ்சனோ கைதுடைக்கும் கடதாசியை எடுத்து அவளிடம் கொடுத்து அவளை அவளது அப்பம்மாவை பற்றி ரொம்ப மோசமாக நினைத்து விட கூடாது என்பதற்காக விரைவாக ஏதோ செயற்படுவது போல் காட்டினாள்.

அவர் உன்னிடம் எதும் கூறினாரா?

'இல்லை' அவர் நான் அறையில் விளையாடி கொண்டிருக்கும் போது, அசமாபூவிடம் கூறினார்.

நல்லது! அஞ்சனோ நினைத்து கொண்டாள். அந்த மனுஷி எப்படி வேலைகாரியிடம் அப்படி கூறியிருக்க முடியும்... ஒரு வேளை வேலைகாரர்கள் ஒழுங்காக வேலைகளை செய்யாமல் அவருக்கு மரியாதையும் கொடுப்பதில்லை என்ற கோபத்தில் பேசியிருக்கலாம். அவளது மகளும் அவளை பார்த்து கொண்டிருந்தால் ஏதாவது அம்மா பதில் கூறுவாளென்று.

வயது சென்ற பின் வயதானவர்கள் இப்படிதான் திடீரென நடந்து கொள்வார்கள்... தனது மருமகளை போல் நடந்து கொள்ளுங்கள் என கூற வந்திருப்பார் என மகளிடம் சொல்ல எண்ணினாள். ஆனால் சொல்லவில்லை. இல்லை நான் அவர் கூறியது போலவே இருக்கட்டும், ஆனால் வயது சென்ற அவர் அப்படி தான் கிழட்டு மனுஷி என்று அதுவரை அவள் எதுவுமே மகளிடம் கூறவில்லை. அவளுக்கு தேவை தனது மாமியார் எது கூறினாலும் மகளை கண்டு கொள்ள வேண்டாம் என கூறவேண்டும் என்பது தான்.

ஆனால் எதுவுமே கூறாது, இங்கே வா என அருகில் இழுத்து தலையை பார் நன்றாக களைந்து போய் கிடக்கின்றது. வா சீவுவோம் என்றாள்.

'அம்மா ஆ... ஆ... ஆ...' என கத்தி திரும்பினாள். 'இப்போ சீவ வேண்டாம் எனக்கு கேக் வேண்டும்.' என்றாள்.

அவளது மகள் பின்னே அவளும் தொடர்ந்தாள். அவளது சிறு வயது முதல் அவளுக்கு ஏற்பட்ட விரும்பதகாத நினைவுகள் அவளுக்கு மீண்டும் நினைவுக்கு வந்தது.

அந்த கிழவிக்கு எவ்வளவு ஏத்தம்? இப்போது அவள் இரண்டு குழந்தைகளுக்கு தாய். திருமணமாகி 12 ஆண்களாகின்றது. இன்னும் தகப்பன் சரியில்லை, வளர்ப்பு சரியில்லை என குறை கூறுகின்றார். அவருடைய வீட்டிலும் தான் அவளுடைய மச்சாள் மகளை நல்லது கூறாமல் வளர்த்தார். இப்போது அவருடைய கணவன் வீட்டில் அவளும் எல்லாவற்றிலும் குறைந்து இருக்கிறாள்.

அஞ்சோனாவின் மாமியார் அவளை எப்படியோ மட்டந்தட்டி கொண்டே இருந்தார். அதனால் அஞ்சனோ அவளை வசதியில்லாதவள், அழகில்லாதவள், மரியாதை தெரியாதவள், குற்றம் புரிந்தவள், பொறுப்பற்றவள் போல அவளே ஆகிவிட்டாள். ஏன் கடவுள் அவளை அப்படி ஒரு குடும்பத்தில் இணையவிட்டார். எதுவுமே புரியாத புதிராக உள்ளது.

அஞ்சனோவின் கணவனும் மகனும் மகளும் ஒரு மேசையில் அமர்ந்திருந்தனர். அவள் சிரித்து பேசுவதையும் (அவர்கள் சாப்பிட்டு கொண்டு) மெல்ல மெல்ல தேநீரை அருந்தி கொண்டு பார்த்து கொண்டிருந்தாள்.

அவள் குடும்பத்துடன் கடற்புறத்தை பார்க்க போகின்றாள். இது நல்ல விடயம். ஏனென்றால் இன்னும் கொஞ்சநாட்களுக்கு மாமியாரைப் பற்றி நாத்தனாரை பற்றி சிந்திக்கவே தேவையில்லை. 'சிக்கலான பெண்' பற்றியும் தான் இனி கவலையில்லை (அவளது கணவனிடம் அம்மா மருமகளை பற்றிய பிரச்சினைகளை பேசிகொண்டே இருப்பார்) இன்னும் கொஞ்ச நாட்களுக்கு உயிர்ப்பாக இருப்பாள். அதற்கு பிறகு எப்படி உயிர்ப்பாக இருப்பது என்று உணர்வாள்.

ஆனாலும் எப்படி அவர் ஒரு வேலைகாரி முன், அவளது பேர்த்திக்கு முன் இப்படி பேசியிருக்கலாம்? அஞ்சோனாவால் இந்த மோசமான செயலை ஏற்க முடியவில்லை.

'நீ ஒன்றும் சாப்பிடவில்லையா?' கணவன் கேட்டாள். சாப்பிட்டு முடிந்து விட்டார்கள்.

அவள் வேண்டாம் என தலையை மட்டும் அசைத்தாள். அவன் சர்வரிடம் பில்லை கொண்டு வருமாறு கேட்டுகொண்டான். பஸ் நடத்துனர் அவர்களை நோக்கி நடந்து வந்தார். ஒரு மெல்லிய புன்னகையுடன் 'நீங்கள் ப்ளூபிண்ட் பஸ்ஸில் வந்த பயணி தானே? பஸ் இன்னும் 15 நிமிடத்தில் கிளம்பும்' என்றான். அஞ்சனோவின் கணவன் 'இன்னும் 10 நிமிடங்களில் வெளியே வருவோம்' என்றான்.

நடத்துனர் சென்று விட்டார். மகன் தன் அக்காவுடன் இடம்மாறி உட்காருவதற்காக சண்டை போட்டு கொண்டிருந்தான். அவனுக்கு அம்மாவோடு உட்கார வேண்டும் என கேட்டான். அக்காவோ நாக்கை வெளியே போட்டு ஏலாவது என அவனை தடுத்தாள். தந்தை அவர்களது

சண்டையை இடைமறித்து - உங்களுக்கு ஒப்பந்தம் நினைவிருக்கிறது தானே? என்றார். இவை எல்லாமே அஞ்சோனாவை சுற்றி தான் நடந்து கொண்டிருந்தது. ஆனால் அவளோ சிறிய புன்னகையை மட்டும் உதட்டோரம் தழுவவிட்டு எதுவும் கேட்காதவளாய் பார்த்து கொண்டிருந்தாள். அவளது எண்ணம் எல்லாம் திருமணமாகி தனது கணவனுக்கு நல்ல மனைவியாக, அத்தனை வலிகளையும் பொறுத்து இரு பிள்ளைகளையும் ஈன்று தாயாகவும் இருக்கின்றேன். எப்படியிருந்தாலும், அவள் நல்லவளாக இருந்தாலும், எவ்வளவு தூரம் நல்லவளாக இருக்க முயற்சி செய்தாலும், அவளது மாமியாரை அத்தனை அக்கறையுடன் கவனித்து கொண்டாலும், அஞ்சோனா சரியாக வளர்க்கப்படவில்லை, அவளது அம்மா எதையும் அவளுக்கு கற்று கொடுக்கவில்லை என்றே அவளது மாமி கூறுவாள். ஏனென்றால் ஒரு முறை மாமி அவளிடம் தனது இரவுக்கையை தைக்க கொடுத்தாள். அவளால் அதை சரியாக தைக்க முடியவில்லை. அவளோ தகப்பனில்லாதவள். அவளது சகோதரர்கள் சரியில்லாத இடங்களில் வாழ்க்கைப்பட்டு விட்டார்கள், சிறு வயதிலிருந்து சரியான வழிகாட்டலோ, நெறிபடுத்தலோ இன்றி கால ஓட்டத்தில் விரக்தியுடன் பெரிய மனுஷியாக வளர்ந்தவள் அவள்.

அஞ்சோனா அவளது குடும்பமும் அந்த உணவுசாலையை விட்டு வெளியே வந்து பஸ்ஸில் ஏறி கொண்டனர். பிறகு அவளுக்கு தான் கண்ட அந்த தேன்நிலவு ஜோடி பற்றிய நினைவு வந்தது. அவள் பஸ்ஸினுள் ஏறும் போது அந்த ஆண் அமர்ந்த இருக்கை காலியாக இருந்தது. பெண்ணோ இருக்கையிலிருந்து எழும்பி பொதிகள் வைக்கும் மேல்தட்டில் தனது பையை வைத்து கொண்டிருந்தாள். அப்பெண் நிறைய நெய்யப்பட்ட வேலைபாடுகள் உடைய ஒரு சிவப்பு துப்பட்டாவைக் கொண்டு தனது தலையை போர்த்தியிருந்தாள்.

அஞ்சோனா இம்முறை அவளை கவனிக்காதவளாக தான் ஏறினாள். ஆனாலும் அவளது மெல்லிய உடல் வளைந்து அஞ்சோனாவிற்கு இடம் கொடுத்தவிதம் அவளிடம் ஏதோ தனக்கு ஓர் உறவு இருப்பது போல் உணர்வை ஏற்படுத்தியது. அஞ்சோனா முன்னேறி சென்றதும் அப்பெண் அந்த அரை இருட்டு நேரத்தில் இருக்கையில் அமர்ந்தாள். அவளை பார்க்க முடியவில்லை நிழல் மட்டுமே தெரிந்தது.

கொஞ்சம் குழம்பியவளாய், அஞ்சோனா தனது கணவன் பிள்ளைகளை தொடர்ந்தாள். ஆனாலும் அவளுக்கு அப்பெண் தனக்கு தெரிந்தவள் போல் இருக்கிறாள் என்று எண்ணம் ஓடிக்கொண்டிருந்தது.

இந்த தடவை அஞ்சோனாவின் மகன் அவளருகில் அமர்ந்து கொள்ள தனது அக்காவை பார்த்து பலத்து சிரித்தான். அஞ்சோனா தனது பையிலிருந்து மகளின் கழுத்தை சுற்றி கொள்வதற்கு கம்பளி ஒன்றை தனது கணவனிடம் கொடுத்தாள். பஸ் பயணத்தை தொடர்ந்தது. மகனும் அவளிடம் பேச்சு கொடுத்தான். அவன் கடற்கரைக்கு சென்று எப்படி நண்டு பிடிப்பது, சிப்பிகளை பொறுக்குவது, இந்த பஸ் அவர்களது பயணம் பற்றி அவன் மிக ஆர்வமாக கதைத்து கொண்டு வந்தான். அவளது மகளை போல் அல்லாது அவன் அம்மாவிடம் தனது கேள்விகளுக்கான பதிலை எதிர்பார்த்தான். அவளோ ஆஆ... அப்படியா என்ற வார்த்தைகளை மட்டுமே உரைத்தாள். அது மட்டுமே அவனை சந்தோஷப்படுத்தியது. கொஞ்ச நேரத்திலேயே அவனுக்கு தூக்க கலக்கம் ஏற்பட்டது. மெல்ல அப்படியே தனது தாயின் தோளில் சாய்ந்தான். யாரோ தூக்கத்தில் அவள் பின்னிருந்து குறட்டை விட்டனர். எது எப்படியோ இரவு முழுவதும் அவள் சிந்தித்து கொண்டே இருந்தாள்.

பஸ் ஜன்னல் திரைகளை கிழித்து கொண்டு விடியல் வெளிச்சம் வந்தது. இன்னும் ஒரு மணி நேரத்தில் அவர்களது இடத்தை அடைந்து விடுவார்கள். மக்கள் அனைவரும் சோம்பலை முறித்து கொண்டு விடியல் வெளிச்சத்தை இன்னும் வாங்காமல் எழுந்தனர். அஞ்சோனா தனது மகனது கன்னத்தில் விழுந்து தெரிக்கும் ஒளியை பார்த்தாள். அவன் இன்னும் உறங்கிக் கொண்டிருந்தான். திடீரென அவனது பிஞ்சு முகம் தாடி முளைத்தாற் போல் அவனது தந்தையை போன்ற முக அமைப்பு பயங்கரமாக இருந்தது. எப்படியிருந்தாலும் அவன் நல்ல மனிதன், அவர் நல்ல தகப்பனும் கூட, ஆனாலும் அஞ்சோனாவின் வாழ்க்கையில் அவன் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கவில்லை.

அஞ்சோனா வீடு திரும்பியதும் தனது மாமியிடம் 'காலம்' பற்றி கதைக்க வேண்டும் என தீர்மானித்தாள். அவர்கள் எப்படி அவளை நடத்தினாரோ அதே போல் அவர்களையும் நடத்த வேண்டும். அவள் யார் என அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும் என நினைத்தாள்.

அவளது கணவன் அவள் பக்கமாக திரும்பி 'நீ இன்னும் தூங்கவில்லையா?' என்றான்.

'இல்லை' என சுருக்கமாக சொல்லி முடித்தாள்.

'நான் நல்லா தூங்கினேன்', கொட்டாவி விட்டபடி

'இன்னும் தூக்கமாக வருகிறது' என்றான்.

அஞ்சோனா எதுவும் பேசாது ஜன்னல் திரையை விலக்கி பார்த்தாள். அவளது மகள் எழுந்து கண்ணை கசக்கி கொண்டு 'இன்னும் நாம் வந்து சேரவில்லையா அம்மா?' என கேட்டாள்.

அஞ்சோனா அதற்கும் பதிலளிக்கவில்லை. முன்னே இருந்த யாரோ ஒருவர் நடத்துனரை அழைத்து 'அண்ணா இன்னும் எவ்வளவு நேரத்தில் நாம் சென்றடைவோம் என கேட்டார். அவர் இருக்கைகளை பிடித்து கொண்டு முன்னே நடந்து வந்து 'இன்னும் ஒன்றரை மணித்தியாலத்தில் சென்று விடலாம்' என்றார்.

'விரைவாக செல்லலாம்', என்றான் அஞ்சோனாவின் கணவன்.

'ஆமாம், சேர், பாதைகள் சீராக உள்ளது. ஓட்டுனர்களும் சிறந்தவர் தான்,' என்று கூறிவிட்டு மீண்டும் முன்னே சென்றார்.

'நாம் சீக்கிரம் வந்து விட்டோமா?' என்றாள் அஞ்சோனா.

'ஒ... ஆம். நாம் இப்போதே சித்தகொன் வந்து விட்டோம். அரை மணியித்தியாலத்துக்கு முன்னே வந்து விட்டோம்.'

அவன் மகனுக்கு அருகில் சென்று அவனை ஆட்டி எழுப்பினான். 'எழும்படா, தூங்கு மூஞ்சி உனக்கு கடற்கரையை பார்க்க வேண்டாமா?' அவன் எழும்பி மிக ஆவலுடன் தனது பெற்றோரை பார்த்தான். 'எங்கே? எங்கே? நாம் வந்து விட்டோமா?' என்றான்.

ஆமாம், ஆனால் இன்னும் இல்லை. முட்டாள், இன்னும் அரை மணித்தியாலத்தில் சென்று விடுவோம். என அவனது அக்கா கூறினாள். தந்தை சிரித்தார். 'அப்பா, நான் இப்போது தம்பியோடு உட்காரட்டுமா?' என கேட்டாள்.

'ஆ... சரி ஆனால் சண்டை போடக் கூடாது!'

அஞ்சோனாவின் கணவன் இருக்கையை விட்டு எழுந்து அக்காவையும் தம்பியையும் சேர்ந்து அமர செய்தான். அவள் ஜன்னலோரமாக இருந்த இருக்கைக்கு நகர்ந்தாள், அவன் அவள் பக்கத்தில் அமர்ந்தான். அவன் மீண்டும் தூங்கி வழிந்தான். திடீரென மெல்லிய குரலில் பக்கத்து இருக்கையிலிருந்து கதைப்பது கேட்டது. கொஞ்ச நேரத்தில் 'நீ கோபமாக இருக்கின்றாயா? நீ இரவும் எதுவுமே உண்ணவில்லை.'

'அப்படியா தெரிகிறது?' சுருக்கமாக பதில் சொன்னாள்.

'ஏதும் பிரச்சினையா?' அவன் கேட்டான்.

'பிரச்சினை' என்று நீங்கள் எதை கேட்கின்றீர்கள்?

'நல்லது, நீ கத்துகிறாய்....'

'நான் கத்துகின்றேனா?' அவள் அவனை பேச விடவில்லை.

அவன் அவளை நோக்கி திரும்பி 'இங்கே பார்', மீண்டும் தொடர்ந்தான் 'என்னால் முடிந்தால்...'

உங்களது அம்மா வேலைகாரியிடம் நான் நல்ல குடும்பத்திலிருந்து வந்திருந்தால் இப்படி எனக்கு கிடைத்த முதல் வாய்ப்பில் ஆடி கொண்டு வந்திருக்க மாட்டேன் என சொல்லியிருக்கின்றார். அவன் எதுவுமே கூறாது அவளை பார்த்தான்.

'அதை வேலைகாரியிடம் சொல்லியிருக்கின்றார்.'

மீண்டும் அவள் கூறினாள். 'நமது மகளுக்கு முன்னால் கூறியிருக்கின்றார். மூச்சை விட்டபடி அவன் 'இதை அம்மா கூறியிருந்தால்...'

'ஆமாம், ஆமாம் உங்களுக்கு பெண்கள் பிரச்சினை பற்றி எந்த அக்கறையும் இல்லை, நீங்கள் அக்கறை படவும் மாட்டீர்கள்' அச்சோனா டக்கென கணவனிடமிருந்து விலகி ஜன்னல் பக்கமாக திரும்பி கொண்டாள். அவனது கணவனோ எதுவும் பேசாது மௌனமாக இருந்தான்.

வெகு சீக்கிரமாக அவர்கள் Cox's பசாரை அடைந்தனர். கடற்கரையை அவர்கள் பார்க்க கூடியதாக இருந்தது. அது படம் வருவதற்கு முன் அப்பட துணுக்குகளை வெளியிட்டு ஆர்வத்தை தூண்டுவது போல் அக்காட்சி அவர்களை கவர்ந்தது. அவர்களது மகன் ஆர்வத்தில் துள்ளி குதித்தான்.

ஆனால் மகளோ தன்னை அக்கா என்ற அந்தஸ்தை காப்பாற்றி கொள்ளதான் ஆர்வத்தை கட்டுப்படுத்தி கொண்டிருந்தாள். ஆனாலும் கடலை பார்த்ததும் இனம் புரியாத புன்னகை முகத்தில். அம்மா அங்கே பாருங்க. அங்கே பார்த்தீர்களா? என இருவரும் அங்கலாய்த்தனர். அஞ்சோனாவிற்கும் இது முதல் தடவை தான். ஆனாலும் அவளுக்கு அது புதிதாக தோன்றவில்லை.

பஸ் நிறுத்தப்பட்டது. எல்லா பயணிகளும் அவசர அவசரமாக கதவை நோக்கி இறங்க தயாராகினர். அத்தனை பேரும் அந்த அரை தூக்கத்திலும் மிக நிதானமாக பொருட்களை சரிபார்த்து தான் கிளம்பினார்கள். அஞ்சோனா இருக்கையில் இருந்த அனைத்து பொருட்களையும் எடுத்து கொண்டேனா என பார்த்து கொண்டாள். அப்படியே தனது பிள்ளைகளை பின் தொடர்ந்தாள். பஸ்ஸை விட்டிறங்கி பாதையோரமாக தனது பிள்ளைகளை பிடித்து கொண்டு நின்று கொண்டாள். அவனது கணவன் பொதிகளை இறக்குவதற்கு பஸ்ஸில் பின்புறம் சென்றான். அவர்களுக்கு முன் இறங்கியவர்கள் தங்கள் பொதிகளை ஏற்கனவே எடுத்து கொண்டனர். தங்களது பயணங்களை மேற்கொள்வதற்காக வாடகை கார்களை பேரம் பேசி கொண்டிருந்தார்கள், சிலர் நடந்தே பயணத்தை தொடங்கினார்கள்.

அவளது கணவன் அவளை பொதிகளை இறக்குவதற்கு உதவுமாறு அழைத்தான். அஞ்சோனா தனது பிள்ளைகளை அங்கேயே இருக்குமாறு கூறிவிட்டு கணவனுக்கு உதவ சென்று விட்டாள். அவள் அவனை நோக்கி நடந்து செல்லும் போது, மீண்டும் அந்த தேன்நிலவு ஜோடிகளை பார்த்தாள். அவர்கள் கையிலும் ஒரு பை இருந்தது. அந்த பெண் இன்னும் அந்த சிவப்பு துப்பட்டாவை அணிந்திருந்தாள்.

அவர்கள் நடந்து வரும் போது அஞ்சோனா அந்த பெண் முகத்தை பார்த்து விட்டாள். திடீரென நின்றுவிட்டு யோசித்தாள். அவள் பெயர் sheila. அவளது மாமியாரின் மருமகள். அதுதான் அப்பெண்ணை இருட்டில் பார்த்தும் அவளுக்கு எங்கேயோ பார்த்த உணர்வு. திருமணமாகி 12 வருடங்களுக்கு முன்பே அவளை அஞ்சோனாவிற்கு தெரியும்.

சஹீலா பல்கலைகழகத்தில் வரலாறு படித்து கொண்டிருப்பதாக தான் அவளது அம்மா கூறினாள். அவளது அம்மா தான் அஞ்சோனாவை தமது வீட்டு பிள்ளை மணப்பதை பிடிக்காதவளாக இருந்தாள். அப்போது சஹீலா மணமாகாதவள். ஆனால் இப்போது அவள் பக்கத்தில் இருந்த ஆணோடு அவள் கைகோர்த்து நின்று கொண்டிருக்கின்றாள்.

அஞ்சோனா தான் தனித்துவமானவளாக உணர்ந்தாள். ஒரு திருப்தி மனதில் உண்டானது. ஒரு தந்திரமான நோக்கத்தோடு அவள் காணப்பட்டாள்.

நல்லது, நல்லது. இப்போது எங்கோ போனது குடும்பத்தினுடைய நல்ல பெயர்? இந்த குடும்பத்து பிள்ளைகளும் தான் தனக்கு கொடுத்த முதல் வாய்ப்பில் இப்படி ஆண்களோடு பழகி சுற்றுகிறார்கள். சஹீலா படிப்பதற்காக பல்கலைக்கழகம் சென்றிருக்கின்றாள் என கூறினார்கள். ஆனால் அவள் நண்பர்களோடு காலத்தை போக்குகிறாள். இப்போது sheila வின் அம்மா என்ன கூற முடியும்? என சிந்தித்தாள். எப்படி என்னை ஒழுக்கமற்ற வழிகாட்டல் இல்லாத நல்ல குடும்பத்தில் இருந்து வராதவள் என கூறமுடியும்?

இவ்வாறு எண்ணங்கள் அவளது தலைக்குள் ஓட்டமெடுத்தன. அவை அனைத்தும் திருப்தியாகவே அவளுக்கு காணப்பட்டது. அவர்களது கண்கள் பார்த்து கொண்டன. அஞ்சோனா சஹீலா வின் முகத்தை பார்த்தாள். ஒரு நொடியில் அவளது கண்ணில் அஞ்சோனா யாரென்று அறிந்து கொண்டதை அவளது கண்கள் காட்டி கொடுத்தன. அவளை பார்த்த சந்தோஷத்துடன் இதயம் நின்று விடுமளவிற்கு பயமும் அவளிடம் தெரிந்தது. பயத்தில் அவளின் முகம் இருள் சூழ்ந்தது, அவளுக்கு எதிர்காலத்தில் நடக்க போவது அனைத்தும் கண்முண் தோன்றி மறைந்தன. அவளது துணை சஹீலாவை ஏதோ குழப்பத்தோடு பார்த்தான். அவளிடம் அக்கறையாய் என்ன பிரச்சனை என கேட்டான். 2 நொடிகளில் சஹீலா அஞ்சோனாவை வைத்த கண் வாங்காமல் பார்ப்பதை அவனும் நோக்கினான். அஞ்சோனாவை பார்த்தான்.

அந்த நேரத்தில் அஞ்சோனா தனது மகளது கண்ணை தெளிவாக தான் செய்வது சரியா தவறா என்று தெரியாமல் பார்த்தாள். பிறகு அவளை பார்த்து சிரித்து தனது மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டாள். அவளையும் அதில் இணைத்து கொண்டாள். ஏனென்றால் அவளுக்கு மட்டும் தான் அந்த மகிழ்வின் இரகசியம் தெரியும்.

சூரிய வெளிச்சம் புகமுடியாத அளவு ஒரு சிறிய இடம் உலகில் இருக்கும். அது இருள் சூழ்ந்திருக்கும். அப்படி ஒரு பகுதியைத் தான் அஞ்சோனா தனது இதயத்தில் இதுவரை சுமந்து கொண்டிருந்தாள்.

அஞ்சோனா உறைந்திருந்த sheila வின் முகத்தை பார்த்து சிரித்தாள். அந்த சிரிப்பில் - அவள் அடைந்த அதிருப்தி, சந்தோஷம், அவளது ஏளன சிரிப்பு எல்லாம் கலந்து வெளிப்பட்டது. அடி வயிற்றிலிருந்து தீ கழுத்து வரை வந்து அணைந்தது போல் இருந்தது. அஞ்சோனா எதுவும் பேசவில்லை. அவள் பேசுவதற்கு அங்கு வார்த்தைகளும் இல்லை அவசியமும் இல்லை.

அஞ்சோனா எல்லோரையும் கடந்து செல்வதை போலவே சஹீலா வையும் கடந்து சென்றாள். அவள் தன் கணவனை பார்த்து சிரித்தாள். அச்சிரிப்பில் அவ்வளவு தெளிவு தெரிந்தது. அவளது மகள் எப்படி சிரிப்பாளோ அதை போன்று அச்சிரிப்பு எல்லா குழப்பத்தையும் சரி செய்வது போன்றது. சந்தோஷமாக அவளது கணவனை பார்த்து 'சீக்கிரம் சீக்கிரம் வாங்க ஆமை மாதிரி இல்லாம, பிள்ளைகள் காத்து கொண்டிருக்கிறார்கள்.'

*Shabnam Nadiya is a writer and translator from Bangladesh. She completed her MFA from the Iowa Writers' Workshop in 2012 where she received a Truman Capote Fellowship and a Teaching Writing Fellowship as a graduate student. She was also awarded a post-graduate fellowship for 2012-13 in the form of an Adjunct position at the University of Iowa and the Schulze Fellowship (2013-14). Currently she is working on her collection of linked stories titled Pariah Dog.

# எமது வரலாறு எழுதுமுறைக்கான புதிய பார்வை



ந. இரவீந்திரன்

தேசியம் என்பதை எமது வரலாற்றுச் சூழலில் எவ்வாறு புரிந்துகொள்வது என்பதிலே அடிப்படையான பிரச்சனை உள்ளது. முதலாளித்துவம் தோன்றிய நிலையில் அதற்கான சந்தைத் தேவையில் இருந்தே தேசியம் தோற்றம் பெற்றது என்ற கருத்தில் எனக்கு மாறுபட்டகருத்து இல்லை. சாதியச் சமூகமான எமக்கு சாதியிலேயே தேசியத்தின் முந்திய வடிவம் இருந்துள்ளது என்றதும், அப்படியென்றால் நிலப்பிரபுத்துவ அமைப்பிலேயே தேசியம் இருந்ததாகக் கூறுகிறீர்களா எனக் கேள்வி எழுப்பப் படுகிறது. சாதிமுறை நிலப்பிரபுத்துவத்துக்கானது என்ற புரிதலிலிருந்து எழும் இக்கேள்வி இன்னுமொரு அடிப்படையான பிரச்சனை குறித்தும் பேசுவது அவசியம் என உணர்த்தியது. இவைதவிர உப விடயங்களாக விவாதிக்கவேண்டிய அம்சங்களும் உள்ளதால் தொடர்ந்து உரையாடுவோம்.

சாதிமுறையை உச்சமாகப் பயன்படுத்தி அதீதமான ஆடம்பர வளர்ச்சிகளில் நிலப்பிரபுத்துவம் திழைத்தது மெய்யாயினும், சாதி நிலப்பிரபுத்துவத்தினால் தோற்றுவிக்கபட்ட அமைப்பு அல்ல என்பதை மார்க்ஸிய ஆய்வியல் ஏற்கனவே வெளிப்படுத்திவிட்டது. சாதியம் குறித்த ஆய்வில் கேசவனின் பங்களிப்பு கவனிப்புக்குரியது. இனமரபுக் குழுக்கள் சாதிகளானது குறித்து அவர் பேசியுள்ளார் ஆயினும், அவரும் நிலப்பிரபுத்துவதுக்குரிய சாதியக் கருத்தியலை மட்டுமே கவனத்தில் எடுத்ததால், ஏற்றத்தாழ்வு முறை தோன்றி நிலப்புரபுத்துவத்துக்கு முன்னதாக இருந்ததைச் சாதியத்துக்கான முன் வடிவமாயே கருதினார். இதன்பேறாக, முழுமையான முதலாளித்துவ வளர்ச்சியில் சாதிமுறை ஒழியும் எனக்கூறினார். இன்று அரை-நிலப்பிரபுத்துவம் மற்றும் நிலப்பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சம் காணப்படுவதாலேயே சாதியுணர்வு நீடிக்கிறது என்பார்.

அவர்சரியாக எடுத்துக்காட்டியது போன்றும், முன்னதாகக் கார்ல் மார்க்சே கூறியிருந்தவாறும் இனமரபுக் குழு சாதியானது என்றவகையில் விவசாய வாய்ப்புடன் முன்னேறிய மருதத்திணை கிழார்களாகிப் பின்னாலே நிலப்பிரபுத்துவ வளர்ச்சியை எட்டத்தக்க சாதியான போது ஏனைய வென்றடக்கப்பட்ட திணைகளுக்குரிய இனமரபுக்குழுக்கள் இடைநிலை மற்றும் ஒடுக்கப்பட்ட சாதிகளாக்கப்பட்டன. இவ்வாறு ஆன ஆரம்ப காலத்திலேயே சாதியத்துக்கான முதல் கருத்தியல் வடிவம் தோன்றிவிட்டது. அதுவே ரிக்வேத இறுதிக் கட்டத்தில் தோன்றிய வருணக் கோட்பாடு(பிரஹஸ்பதியின் தலையிலிருந்து பிராமணனும், தோள்களிலிருந்து சத்திரியனும், தொடையிலிருந்து வைசியனும், பாதத்திலிருந்து சூத்திரனும் தோன்றினர் என்பது) தொடர்ந்த வளர்ச்சியில் பின்னர் வென்றடக்கப்பட்டவர்கள் தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்படுத்தப்பட்ட அவர்ணர்களான ஒடுக்கப்பட்ட மக்கள் (தலித் சாதிகள்) எமது வரலாற்று அரங்கில் பிரவேசித்தனர். கிழார்களின் இந்த முதல் வெற்றிக்கட்டத்துடன் இந்த ஏற்றத்தாழ்வு வாழ்முறையை ஏற்புடையதாக்கும் பிராமணரும் விவசாயச் சாதியுடன் சொத்துகளுக்குரிய ஆளும் சாதியாக்கப்பட்டனர். இதனூடு வளர்ச்சியுற்ற வணிக ஆதிக்கம் அரசு ஏற்புக்குரியதாக இருக்கவேண்டியிருந்தபோது பிரமணர் ஆதிக்கம் தகர்க்கப்படவேண்டியிருந்த வரலாற்றுக் கட்டம் தோன்றியத் அத்தேவையை நிறைவாக்கும் வண்ணம் சமண பௌத்த எழுச்சி சாத்தியமானது. இப்புதிய மதங்கள் பிராமணர் புனிதமான சாதியினர் என்பதை அகற்றிய அதேவேளை

சாதி வாழ்முறையை அங்கீகரிக்க வேண்டியிருந்தது. சாதி எனும் சொல்லே பௌத்தத்துக்குரிய பாளிச் சொல் என்பது தற்செயலானது அல்ல. தொடர் வளர்ச்சியில் இந்துமதம் ஊடாக மீண்டும் பிராமணர் ஆதிக்கம்பெற்ற நிலப்பிர புத்துவக்கட்டத்தில் உண்மையில் வர்ணக் கோட்பாடு விளக்கக் கடுமையான நிலையில் சாதி என்பதே நிலைபேறடைந்தது(ஆயினும், வர்ணக் கோட்பாடு வாயிலாக சாதியை விளக்க மனு ஸ்மிருதி முயன்றது கவனிப்புக்குரியது).

இந்த மாற்றக்கட்டமான கி.பி.நாலாம் நூற்றாண்டு முக்கியத்துவம் மிக்க ஒரு காலப் பகுதி. இந்த எல்லையில் முன்னர் வணிக ஆதிக்கம் நிலவியது பின்னர் நிலப்பிரபுத்துவம் மேலாண்மைபெற்று, கி.பி.ஏழாம் நூற்றாண்டில் நிலப்பிரபுத்துவ சமூகம் நிலைபேறான ஆதிக்க அமைப்பாகியிருந்தது. இந்தமாற்றத்தில் மதங்களின் கருத்தியலில் ஏற்படும் மாற்றம் மாறுகின்ற அமைப்புக்கான ஏற்பினை சமூகத்தில் சாத்தியப்படுத்துவதாக அமையும். மனுதர்ம சாஸ்திரம், வாத்ஸாயனரின் காமசூத்திரம், பகவத்கீதை ஆகியன இத்தகைய நிலப்பிரபுத்துவ மாற்றத்துக்கான பண்பாட்டுப் புரட்சியின் கருத்தியல் வெளிப்பாட்டுப் படைப்பாக்கங்கங்களாகும். இவற்றின் வாயிலாகவே பிராமண மதம் புதிய இனக் குழுக்களை உள்ளீர்த்து, முழுமுதற் கடவுள் கோட்பாட்டுடனான இந்துமதம் தோற்றம்பெற ஏதுவாயிற்று. இதற்குமுன்னர் எந்தக் கடவுளும் இத்தகைய பரம்பொருள் அல்ல. பௌத்தத்திலும் இக்கட்டத்தில் மாற்றம் ஏற்பட்டது. நிலப்பிரபுத்துவத்துக்கு ஏற்றதாக அதன் கருத்தியல் மாற்றம் ஏற்பட்டபோது மகாயான பௌத்தம் தோன்றி, புத்தரை ஒரு முழுமுதற் கடவுள் ஆக்கிக் கொண்டது.

இவ்வகையில் இந்துமத வடிவம்போல புத்தர் முழுமுதற்கடவுளாக ஏனைய பரிவாரத் தெய்வங்களோடு பவனிவரும் காட்சிகளை சீன, யப்பான் போன்ற நாடுகளின் பௌத்ததில் காணவியலும் ஆம், சமகாலத்தில் தோன்றிய இந்து மதத்துக்குப் பல கருத்தியல்களை வழங்கிய மகாயான பௌத்தமே கிழக்காசியாவில் பரவியது என்பது கவனிப்புக்குரியது. முன்னதாக இலங்கையில் தேரவாத(புத்தரின் மூலக் கோட்பாட்டைப் பேணி வைத்திருக்கிறோம் எனும் பிரிவு) பௌத்தம் சிங்கள மன்னரின் செல்வாக்கைப் பெற்றிருந்த போதிலும் இக்கட்டத்தில் மகாயான பௌத்தம் இலங்கையில் செல்வாக்குப் பெற்றிருந்தது. பின்னர் மீண்டும் ஆதிக்கத்தைப் பெற்ற தேரவாத பௌத்தம் மகாவம்சத்தினூடாக மகாயான பௌத்தத்திற்கெதிரான வலிய கருத்தியல்

போராட்டத்தை நடாத்தியது. மகாயான பௌத்தப் பரவுகையில் தமிழ்ப் பௌத்தத்துக்கு கணிசமான பங்குண்டு. தமிழகதிலிருந்து அவ்வாறு மகாயான பௌத்தத்தைச் சீனாவுக்குக் கொண்டுபோய்ப் பரப்பியதன் பேரில் நம்ம தமிழர் சீனா, யப்பான் போன்ற நாடுகளில் வழிபடப்படுவது பற்றி இன்று விசேடமாக சொல்லத்தேவையில்லைசினிமாவிலும் ஏழாம் அறிவாகிவிட்டாரே!

இவ்வாறு இலங்கை மக்களிடம் செல்வாக்குப் பெற வைத்ததில்(முன்னர் தேரவாத பௌத்தம் ஏற்கனவே சொன்னவாறு அரசரிடமும் ஆதிக்கத்தரப்பினரிடமுமே மட்டுப்பட்டிருந்தது) மகாயான பௌத்தம் ஏற்படுத்திய தாக்கத்தை மறுக்கும் தேவை மகாவம்சத்துக்கிருந்தது தமிழகத்தினூடாக பௌத்தம் பரவியதைச் சொன்னால் மாகாயான பௌத்தத்தின் பங்களிப்பை ஏற்றதாகிவிடும் என்பதால், தமிழ் நாட்டினூடாக வந்து யாழ்ப்பாணத்தின் கரையில் இறங்கி நடைபவனியாக வந்த மகிந்த தேரரை பறந்துவந்து மிகிந்தலையில் இறங்கியதாகக் காட்டவேண்டியதாக உள்ளது. என்னதான் மகாயான பௌத்தத்துக்கு எதிராக ‘விட்டுக்கொடுக்காத‘ போராட்டத்தை தேரவாத பௌத்தம் மேற்கொண்டபோதிலும், அதனால் முழுமுதற்கடவுளாக்கப்பட்ட புத்தரைப் பாடிப் பரவுவதன்றி வேறு மார்க்கம் இருக்கவில்லை இவ்வகையில் நிலப்பிரபுத்துவ மதமாக வேண்டிய நிர்ப்பந்தம் தேரவாத பௌத்தத்துக்கு மாறிய சமூகச் சூழலில் இருந்தது என்பது கவனிப்புக்குரியது.

இந்தப் பௌத்தம் மற்றப்பல விடயங்களில் மகாயான பௌத்தத்தை நிராகரித்தபோதிலும், முழுமுதட் கடவுளாக நடைமுறையில் புத்தரை ஏற்கவேண்டியிருந்தது ஏன்? இலங்கையில் ஆதிக்கச் சாதியான கொவியா ஏனைய சாதிகளைத் தனது ஆளுகைக்குள் கட்டுப்படுத்தும் வகையிலேயே இவ்வாறு முழுமுதற்கடவுள் கோட்பாட்டை வரிக்க வேண்டியிருந்தது . பதினைந்து நூற்றாண்டுகளின் பின் வணிகத்தில் முதன் முதலாக சிங்களச் சமூகம் நுழைவதில் கரவா சாதி முன்கை எடுப்பதுவரை இந்தக் கருத்தியல் சோதனைக்குள்ளாகாது இருக்க முடிந்தது பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்த மாற்றம் உட்பட அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை வேண்டிய நிலையும் இருந்த போது இலங்கையின் பௌத்தம் மறுமலர்ச்சி இயக்கத்தை முன்னெடுக்க வேண்டியிருந்தது.

இந்து மதமும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவ்வகையில் கருத்தியல் மாற்றத்துக்குள்ளாகும் மறுமலர்ச்சி இயக்கத்தை முன்னெடுத்தது. தயானந்த சரஸ்வதி, ராஜா ராம் மோகன் ராய், இராமகிருஸ்ண பரமகம்சர், விவேகானந்தர் என வட இந்திய ஆளுமைகள் போல இராமலிங்க வள்ளலார், நாராயணகுரு, ஐயங்காளி போன்றோர் தமிழக மறுமலர்ச்சியில் தாக்கம் செலுத்தினர். ஆதிக்க சாதி மேலாண்மையை நிலைநிறுத்த முன்னிறுத்தப்பட்ட பரம்பொருளுக்கு மாறாக வெவ்வேறுவகையில் தமக்கேயான வழி முறைகளில் இவர்கள் தமக்கான இயக்கத்தை முன்னெடுத்தனர். அரம்பத்தில் பெருங்கடவுளரைப் புதிய உள்ளடக்கத்துடன் பாடிய வள்ளலார் பின்னர் கடவுள் என்பதை அத்தகைய வடிவங்களிலிருந்து முற்றிலும் விடுவித்துக்கொண்டு சுத்த சமரச சன்மார்க்க அடிப்படையிலேயே அருட்பெருஞ்சோதியை வழிபாட்டுக்குரியதாய் முன்வைத்தார். நாராயண குருவின் போராட்டம் இன்னொருவகையில் அமைந்து ஆதிக்கசாதிக் கடவுள் என்பதைத் தகர்த்தது.

தீண்டாமைக் கொடுமையை அப்போது அனுபவித்த நாடார் சாதியினர் பல்வேறு போராட்டங்கள் வாயிலாக வர்ணத்தளத்தில் அசைவியக்கம் பெற்று வளர்ச்சியை எட்டுவதில் நாராயண குருவின் போராட்டம் வலுமைமிக்க ஆன்மீகத்தளப் பங்களிப்பாயிருந்தது. ஆதிக்க சாதியினர் பிரதிட்டை செய்ய முடிந்த சிவனைத் தீண்டாமைக்குட்பட்டிருந்த தான் வழிபடுவதை எவர் தடுக்க இயலும் என்ற துணிவோடு சிவனைப் பிரதிட்டை செய்தார் எதிர்ப்புத் தெரிவித்த ஆதிக்க சாதியினருக்கு, 'நீங்கள் உங்கள் சாதிச் சிவனை வழிபடலாம், நான் என் சாதிச் சிவனைப் பிரதிட்டை செய்திருக்கிறேன்' எனப் பதிலிறுத்தார் நாராயணகுரு. சிவன் ஆதிக்கப்பீடத்தைத் தகர்த்துக்கொண்டு ஜனநாயகப் பண்பைப் பெறவேண்டி இருந்த சமூக மாற்றக் காலகட்டத்தின் ஆன்மீக ஆளுமையாக இவ்வகையில் நாராயணகுரு திகழ்ந்தார்.

முன்னதாக பிராமணரும் வெள்ளாளரும் மட்டுமே பிரதிஸ்டை செய்ய வல்லவராக இருந்த சிவன் ஆதிக்க சாதிப் பரம்பொருளாவர். இவரின் ஆளுகைக்குட்பட்ட சிறுதெய்வங்கள் அடுத்தநிலைக்கான சாதிகளின் இருப்பை உணர்த்துவர். 'சிறு தெய்வம்' என்பதில் குழப்பம் உள்ளது. நாட்டார் தெய்வங்களை அவ்வாறு கருதுவது கோட்பாட்டு ரீதியில் தவறு. பெருந்தெய்வங்கள் எனப்படுவோரையே எவர் பரம்பொருள் எவரெல்லாம் சிறுதெய்வங்கள் எனப்பகுக்க இயலும் சைவருக்கு சிவன் பரம்பொருளாக

இருக்கும்போது, விஸ்ணு – சக்தி – முருகன் என்போர் சிறு தெய்வங்களாவர். வைணவர்களுக்கு விஸ்ணு முழுமுதற் கடவுளாக இருக்கும்போது சிவன் – சக்தி – முருகன் ஆகியோர் அவரால் இயக்க வல்ல அடுத்த நிலைச் சிறுதெய்வங்களாவர். நாட்டார்வழிபாட்டுக்கான கிராமியத் தெய்வகள் இந்தப் போட்டிக்குள் வர அவசியமற்ற முந்திய வழிபாட்டின் தொடர்ச்சியாக இருப்பர். பரம்பொருள் – சிறுதெய்வங்கள் என்ற 'பெருந்தெய்வங்கள்' எல்லாம் நிலப்பிரபுத்துவ விழுமியங்களுக்கு ஆட்பட்டு பிராமணப் பூசை புனஸ்காரங்களையும் 'சைவப் படையல்கள்' உட்பட்ட புனிதங்களையும் கோருவன் கிராமியத் தெய்வங்களோ முந்திய இனமரபு வாழ்முறையின் தொடர்ச்சியான நெருக்கத்தை வழிபடும் மக்களோடு கொண்டிருப்பன. தான் உண்ணும் இறைச்சி, மீன் மற்றும் குடித்து மகிழும் கள்ளுச் சாராயம், சுருட்டு என்பவற்றைப் படையலாக வைப்பதில் இந்தக் குல தெய்வங்கள் மகிழும் என்ற நெருக்கத்துடன் கிராமியத் தெய்வ வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. இந்தக் கிராமியக் கடவுளர்கள் சாதிகளுக்கானது, சாதிகளுக்குள்ளும் குலத் தொடர்ச்சியினருக்கானது எனத்தனித்துவத்துடன் அமைவன 'பெருந்தெய்வம்' என்பவரும் சாதி அடையாளம் கடந்தவரல்ல் அதுதான் ஆதிக்க சாதியினர் மட்டுமே பரம்பொருளைப் பிரதிஸ்டை செய்ய இயலும் என்பதிலேயே வெளிப்பட்டதே).

ஆக, இந்து சமயம் என்பது சாதிகளின் சமயம் ஆகும். ஒவ்வொரு சாதிக்குமான தனிச் சமயப்பின்பற்றலோடு, ஆதிக்க சாதிப் பரம்பொருளுக்கு ஆட்பட்டு அவை இயங்கின. இந்த சமாதான – சகவாழ்வு செமிட்டிக் மதங்களான யூத – கிருஸ்தவம் – இஸ்லாம் என்பவற்றிலிருந்து அடிப்படையான வேறுபாட்டை உடையது. செமிட்டிக் மதங்கள் வர்க்க சமூக வாழ் முறையின் வெளிப்பாடு என்கிறவகையில், இனமரபுக்குழுக்களுக்கான கடவுளர்கள் இல்லாதாக்கப்பட்டன. எமது சாதியச் சமூகத்தில் சாதிகளின் சமயமாக இந்து சமயம் அமைந்தமை பிரத்தியேக வரலாற்றுப் போக்கின் வெளிப்பாடு.

வர்க்கப் பிளவுறாது, இனமரபுக்குழு மேலாண்மையோடு சுரண்டல் சாத்தியப்பட்ட எமது வரலாறு எழுது முறையை வர்க்கபிளவுற்ற ஐரோப்பியப் பாணியில் எழுதுவதின் பேறாக தோற்ற மயக்கங்கள் மலிந்துபோயுள்ளன. எமது சமூகத்தைப் புரிந்து கொள்வதிலும், மாற்றத்துக்கான மார்க்கத்தை

வகுப்பதிலும் இடர்ப்பட வேண்டியுள்ளது. இகருத்தை எந்தத் தயக்கத்துக்கும் இடமளிக்காமலே நிராகரித்து விடுகிற நண்பர்களும் உள்ளனர். எம்மிடம்தான் முழுமையான விஞ்ஞானபூர்வமான மார்க்சியக் கண்ணோட்டம் இருக்கிறதே – அதன் வழி வர்க்கங்களை ஆய்வதும், பாட்டாளி வர்க்கத் தலைமையில் அணிசேர்க்கக்கூடிய வர்க்கங்களை ஐக்கியப்படுத்த வேண்டியதுந்தானே உடனடிப் பணி! அதற்கு அமைவாக இன்றைய ஜனநாயக வாய்ப்பு ஆளும் சாதிக்கு இருந்த முழுமுதற்கடவுளின் அனுக்கிரகத்தைத் தகர்த்து, அனைத்து சாதிகளிலிருந்தும் முதலாளிகள் உட்பட அனைத்து வர்க்கங்களையும் சாத்தியப்படுத்தி விட்டதே, இனிச் சாதிபற்றிப் பார்க்க என்ன இருக்கிறது,வர்க்கத்தைப் பார்த்தால் போதாதா எனக் கேள்விகளை அடுக்குவர். இனி சாதி பற்றிப் பேசினால் தலித்தியவாதம் தானா? மார்க்சியப் பார்வையில் இன்றைய சாதி இயங்குமாறினைக் காண இயலாதா? முதலாளித்துவ ஜனநாயகம் பூரணப்பட்டாலும் சாதி இருக்கத்தான் போகிறது, சாதி அரசியல் இயங்கத்தான் போகிறது என்றால், அது பின் நவீனத்துவக் கண்ணோட்டமாகுமா?

இந்திய மதங்களின் சிறப்புப் பண்பினால் அவை சமூக மாற்றக் கருவிகளாயிருக்கவில்லை சமூக அமைப்பில் இருந்த வேறுபட்ட பண்புக்கூறே அதன் அமைப்பு வேறுபாடுகளை மதச்சிந்தனை மாற்றங்களூடாக நிகழ்த்தியாக வேண்டிய இயக்கப் போக்கை வலியுறுத்தியது. வேறு வார்த்தைகளில் கூறின், சாதிய ரீதியிலான சமூக ஒடுக்குமுறையை உடைய இந்தியச் சமூக முறை, அத்தகைய சமூகக் குழுக்களின் அதிகார மாற்றியமைத்தலை அவற்றின் பண்பாட்டுத்தளத்தில் தாக்குதலை நிகழ்த்துவதன் வாயிலாகவே சாத்தியப்படுத்த வல்லதாக இருந்தது. வர்க்கப் பிளவுறாத, தேசிய ஒடுக்குமுறையை ஒத்த சமூக ஒடுக்குமுறையான சாதிச் சுரண்டலையுடைய எமது சமூக அமைப்பு மாற்றங்கள் பண்பாட்டுப் புரட்சி வடிவங்கொண்டவை என்ற புரிதலின்மையால் மார்க்சிய இயக்க வளர்ச்சியில் இடர்ப்பாடு இன்னமும் நிலவுகின்றது. எமது சமூக அமைப்பின் பிரத்தியேகத் தன்மைகுறித்த புரிதலுக்கான தொடக்கத்தை மார்க்ஸ் தொட்டுக்காட்டியபோதிலும் அன்றைய ஐரோப்பியப் புரட்சி குறித்த ஆய்வுக்கு தனது உழைப்பை செலுத்த வேண்டியிருந்ததால் அடுத்த கட்ட வளர்ச்சியை அவரால் முன்னெடுக்க இயலாது போயிற்று. மார்க்ஸ் சொல்லாத

எந்தப் பாதையிலும் போகப் போவதில்லை என்பதற்கு மார்க்சியம் ஒன்றும் மதப் புனித நூலல்ல. மார்க்சியச் சிந்தனை முறை கால – தேச நிலைகளை அவற்றுக்குரிய வகையில் புரிதல் கொள்ள வழிப்படுத்தி, அதை மக்கள் விடுதலைத் திசையில் மாற்ற ஆற்றுப்படுத்துவதாகும். மாற்றங்களை அதன் திசை வழியே புரிதல்கொள்ள முயல்வோம் எமது அர்த்தங்கொள்ளலுக்கு ஏற்றதாக புறநிலை அமைவதில்லை. அது எவ்வகையில் உள்ளது என்பதை விளக்குவதாயும், எவ்வாறு மாற்றுவது சாத்தியம் என்பதையுமே மார்க்சியம் கற்றுத்தருகிறது. மதம் வகித்த பங்குப் பாத்திரம் குறித்த மார்க்சின் தேடல் பண்பாட்டுப் புரட்சி பற்றிய ஆய்வுக்கு எம்மை இட்டுச்செல்லும்.

# சி. பன்னீர்செல்வத்தின் கவிதைகளில் ஜென்ம பூமியும் ஜீவித பூமியும்



**சாரல்நாடன்**

எங்கெங்கும் அந்நியமானவர்கள் என்று தமிழிலும். யுடயையெவநன நுளநசல றாநசந என்றும் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பையும் கொடைக்கானலில் உள்ள 'செராக்' வெளியிட்டபோது, அந்த வெளியீட்டுப் பணிகளை வெற்றிகரமாக்குவதற்காக உழைத்தவர்களில் அ.சிவானந்தன், சி. பன்னீர்செல்வம், டி.எஸ். இராஜீ முக்கியமானவர்கள். இம்மூவரும் இலங்கையிலிருக்கும் போதே எழுத்துலகில் பரிமளித்தவர்கள். சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட போது இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டவர்கள்.

இந்தியாவில் புதிய சூழ்நிலையில் தம்வாழ்வை அமைத்துக்கொண்ட இம் மூவரும், இலக்கியத்தை மறந்துவிடாது நூல்களை ஆக்கித்தருவது மகிழ்ச்சிக்குரிய செயற்பாடுகளே.

குறிப்பாக திறந்த வெளிச் சிறையிலே' என்ற ஒரு சிறுகதைத் தொகுப்பைத் தந்திருக்கும் சின்னசாமி பன்னீர் செல்வம் தந்திருக்கும் கவிதைத் தொகுதியின் தலைப்புதான் 'ஒரு சாலையின் சரிதம் என்பது

மக்கள் கண்காணிப்பகம் என்ற மனித உரிமை நிறுவனம் இந்த பாரிய பணியைச் செய்திருக்கிறது. இப்பதிப்புக்கென்று சி.பன்னீர்செல்வம் இக்கவிதைகளை எழுதவில்லை. மாறாக அவ்வப்பொழுது அவரது எழுத்துக்களில் வெடித்துக் கிளம்பிய கவிதைச் சிதறல்கள் தனக்குப் பரிச்சயமான ஊடக வழியாக மனித உரிமைகளைப் பற்றிய இவரது வேட்கை இவைகளில் வெளிப்படுகிறது.

மலையக தமிழ்க் கவிதையுலகோடு பரிச்சயம் மிகுந்தவர்கள் சி. பன்னீர் செல்வத்தை அடையாளம் கண்டு தூக்கிப்பிடிப்பதற்கு அவரது படைப்புகளில் முனைப்பாகத் தெரியும் முற்போக்குப்பார்வை காரணமாய் அமைந்துள்ளது. 1948இல் பிறந்த பன்னீர் செல்வம், இலங்கை சாகித்திய மண்டலம் நடாத்திய சிறுகதைப்போட்டியில் 1965ம் ஆண்டு தங்கப் பதக்கம் பெற்றதிலிருந்து இலக்கிய உலகின் கவனிப்புக்கு உள்ளானார்.

இலங்கையிலிருக்கும் பொழுது முற்போக்கு பத்திரிகைகளில் இவரது கவிதைகள் வெளியாயின. செய்தி, தேசமானி, வீரகேசரி முதலிய பத்திரிகைகளில் வெளியான எட்டு கவிதைகளை இந்நூலில் தொகுத்து அளித்திருக்கிறார்.

இலங்கை படைப்பாளிகள் ஒரு தொகுதியை அச்சில் கொண்டு வரும்போது என்னுடைய படைப்புகள் பல 83 இனக்கலவரத்தில் தீக்கு இரையாகிவிட்டன என்பதை கூறிச் சமாதானம் தேடும் போது, இந்தியாவுக்கு குடிபெயர்ந்து போன பன்னீர் இலங்கையில் தானெழுதிய உயிர்ப்பு மிகுந்த கவிதைகளை இத்தொகுதியில் இணைத்திருப்பது உள்ளத்தை நெகிழ வைக்கிறது. இவ்விதம் வெளியாகியுள்ள கவிதைகள் 1969 லிருந்து 1973 வரையான ஐந்தாண்டுக் காலத்துக்கான கவிதைகள்,

வீரகேசரி ஏட்டில் 16-05-1969 இல் 'எந்தன் தேசம் எது?' என்ற கவிதை இடம்பெற்றுள்ளது. சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம் தன் கோரப் பற்களை விரித்த நேரமது இலங்கையில் ஆண்டாண்டு காலமாக உழைத்து உருக்குலைந்து எலும்புந்தோளுமாகிவிட்டது எழுபது வயதுடைய ஒருவருக்கு

பிரஜாவுரிமைக் கிடைக்கிறது. அதை வைத்துக்கொண்டு தன் தள்ளாத வயதில் அவர் என்னத்தைச் சாதிக்க முடியும்?

*ஆறாத மனப் புண்ணும்*
*அழிவற்ற வேதனையும்*
*அடுக்கடுக்காய தந்ததன்றி*
*வேறெதனைத் தந்தார்கள்?*
*'இந்தியாக்காரன்' என்றே*
*இகழ்வதில் மகிழ்வு கண்டார்!*
*எனை*
*'நாடற்ற மனிதனாக்கி*
*நாடெல்லாம் சிரிக்க வைத்தார்!*
*வீடற்ற மனிதனாக்கி*
*வீதியில் திரிய வைத்தார் !*
*நாடற்ற கள்ளத் தோணி*
*நினக்கெதற்கு நாட்டுரிமை?*
*என்றெல்லாம் இகழ்ந்துரைத்து*
*எரிதணலில் வேக வைத்தார்'*

என்று மனம் குமுறும் கவிஞர், என்னால் இலங்கைக்கு இனி ஆகப் போவது ஒன்றுமில்லை என்பதை தெரிந்துகொண்டவர்கள், இவனது செத்த உடல் மலைநாட்டிலே புதையுண்டு தேயிலைக்கு உரமாகட்டும் என்று எண்ணினரோ? என்கிறார்.

*மரணத்தின் போதெனிலும்*
*முத்தமொன்று வேண்டுந்தான் !*
*இறக்கின்ற போதேனும்*
*ஓர் முத்தம் தந்தாரே !*
*ஓ ! போதும் ! போதும் ! என்று முடித்திருப்பது*
*கவிதையின் உச்சம்*

இக்கவிதை வெளியாகி இரண்டு மாதத்துக்குள்ளாக மீண்டும் வீரகேசரி ஏட்டில் 6-7-1969 இல் 'நாங்களும் பெண்கள் தான்' என்ற தலைப்பில் பெண்களுக்காகக் குரல் ஒலிக்கிறது.

*'நாங்கள்*
*நான் தவறாதுழைத்துழைத்து*
*நல்லிளமை, அழகனைத்தும்*
*நாட்டுக்குத் தேட்டம் தரும்*
*தேயிலைக்குப் பலியிட்டோம் !*

ஆயினும் தேயிலைக்குப் பலியாகி தேம்பியழுததன்றி தேடியவை ஒன்றுமில்லை, உண்ணுவதோ அரை வயிறு, உடுப்பதற்கோ மாற்று இல்லை, பத்தடி வீட்டுக்குள்ளே பலபேர்கள், இல்லறை இன்பமெல்லாம் இதற்குள்ளே அடங்க வேண்டும். இத்தனை கொடுமைக்கும் காரணங்கள் நாங்கள் செய்த பாவங்களென்று கூறுவதை இன்னும் எத்தனை நாளுக்கு பொறுப்பது?

*'இதுதான் நியதியென்றால்*
*இறைவனென்பான் எங்குள்ளான் ? என்று சீறும்*
*கவிஞர் 'தேயிலைக்கு ரத்தம் சிந்தி*
*தினமுந்தான் சாகின்றோம் !*
*நாவாற டீ குடிக்க*

நல்ல 'தூள்' நமக்கில்லை என்று நாளாந்தம் தம் வாழ்வு போராட்ட மயமாக இருப்பதைக் கூறும் கவிஞர்

*'கடலைக் கடந்து இங்கே*
*காவோ கொடுக்க வந்தோம் ?*
*உடலைக் பிழிந்து நிதம்*
*உருக்குலையவோ வந்தோம்?* என்று முடிக்கிறோம்.

திரௌபதியாள் துகிலுரிந்த கதையை வரலாற்றில் படித்திருக்கிறோம். இறங்கலையில் ஒரு தோட்டம் நஷ்டம் கண்டு மூடப்பட்டது. அத்தோட்டத்தை விலை கொடுத்து வாங்கிய புதிய துறை புதிய புதிய நடவடிக்கைகளை கொண்டு வந்தார். அது பிடிக்காத இளைஞன் ஒருவன் தன் மாமியுடன் வேறொரு தோட்டத்தில் பெயர் பதிய முயன்றான். கேள்விப்பட்ட துரை இளைஞனையும் மாமியையும் இழுத்து வரச் செய்தான். அவர்களின் உடையை களைந்தெறிந்தான். கூடியிருந்த மக்கள் கூட்டத்தின் முன்னே மாமியையும் இளைஞனையும் கணவன் மனைவிபோல உடலுறவு வைக்கப் பணித்தான்.

*‘இந்தக் கொடுமை தனை எப்படித்தான் சொல்லிடுவேன்?*
*இந்தக் கொடுமைகளை*
*மனிதரென்போர் சகிப்போரோ?*
*இக்கயவர் தலைகளிலே வெள்ளிடிகள் வீழாதோ?*
*அதிகார வர்க்கத்தின்*
*அடிமுடியை நொறுக்காதோ?*
*எம்முடைய வர்க்கத்தின்*
*இதயத்தில் நெருப்பெரிய*
*எம்முடைய ஆண் பெண்ணின்*
*சேலைகளை உரித்த பின்னும்*
*பிதற்றுவதோ சாத்வீகம் ?*
*ஆங்காங்கே சிறுகுடிலில்*
*எரிகின்ற சிறு நெருப்பே !*
*ஒன்றாகிப் பெரிதாகி*

உலுத்தர்களை பற்றியெரி ! என்று ‘தேசாபிமானி’ ஏட்டில் 27-02-1970 எழுதுகிறார். இன்னும் பிரபஞ்ச பொருளனைத்தும் (வீரகேசரி) சிருஷ டிகர்த்தர்களே (செய்தி) அழைப்புகள் (வீரகேசரி) உன்னுடைய காலினால் (செய்தி) என்றெல்லாம் கவிதைகள் எழுதியவர் இந்தியா போவதற்கான கடைசி நாள் வந்த போது, 1973 இல் துயர நதி சங்கமத்தில் என்றொரு பிரியாவிடை கவிதை எழுதியுள்ளார். இக்கவிதை 1973 வீரகேசரியில் வெளிவந்தது.

இதைப்போன்றே ‘சென்று வருகிறேன் ஜென்ம பூமியே’ என்ற நெஞ்சை உலுக்கும் கவிதையொன்றை 1976 ‘நதி’ ஏட்டில் அரு. சிவானந்தன் எழுதியுள்ளதையும் இவ்விடத்தில் நினைத்துப் பார்ககத் தோன்றுகிறது. நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர்பார்த்து, வாழுகின்ற பூமியை விட்டு விலக நேர்கையில், எவ்வளவு தான் இடைஞ்சல் நிறைந்ததாயிருந்தாலும் பழகிய தேசத்தை விட்டுப் பிரிவது துக்ககரமானது என்பதை இக்கவிதைகள் வெளிக்காட்டி நிற்கின்றன.

*‘வர்க்கமென்றும்’ பேருணர்வை வளர்த்துவிட்ட தேசங்கள்!*
*நினைவெல்லாம் பெருமைதரும் நட்புரிமை இதயங்கள்,*
*தாய்மையெனும் பேரன்பால் துயர்துடைத்த பாக்கியங்கள்,*
*புனிதவிரு சகோதரத்தின் பெருமமிகு புஷ்பங்கள்,*

*இறம்புவரை இனிமைதரும் உயர்க்காதல் வசந்தங்கள்,*
*அத்தனையும் இதயத்தில் இறக்காமல் காத்திருப்பேன்.*
*இறப்பதற்கு முன்னாலே இங்கொருநாள் வருவேன் !*
*இன்றைக்குத் துயர் சுமந்து அழுகைக் குரலுடன்*
*கரம் கூப்பி வணங்குகிறேன். கடைசி விடை தாருங்கள் !* என்று
சி. பன்னீர்ச் செல்வம் கவிதைகளால் விடைபெறுகிறார்.

ஒரு கலைப்படைப்பு வாழ்தலுக்கான நியாயம் அது படிப்பவர் மனதில் வெளிச்சத்தைத்தரவேண்டும், இவரதுகவிதைகள்துன்பத்துயரங்களுக்கூடாக, போராட்டம் நிறைந்த வாழ்க்கைக் கூடாக இடுக்கண் நிறைந்த எரிச்சல் தருகிற இயலாமை மிகுந்த வாழ்க்கைக்கூடாக நம்பிக்கை கீற்று முளை விடுகிறதைக் காண்கிறோம்.

தமிழகம் சென்ற இவர் 'முத்திரை' என்றொரு கவிதை எழுதியுள்ளார். தன் முகத்துக்கு இடும் முத்திரையாக இக்கவிதைகயில் 'இலங்கையர் எம்மை இந்தியனெனவும், இந்தியர் எம்மை இலங்கையனெனவும், உரைத்திடும் காலம் ஒழிவது எப்போ? உண்மையில் எங்கள் தேசம் எதுவோ? என்று கேள்வி எழுப்புகிறார்.

'இரண்டு தளிர்கள் ஒரு மொட்டு' என்பது மலைநாட்ல் கொழுந்தாயும் பெண்களுக்கான தொழில் நியதி. இதையெ தன் கவிதைக்கொன்றுக்கு தலைப்பாய் வைத்து 'நூறு ஆண்டு உழைத்ததுமே கல்லறையும் கூட இல்லையே ! காலம் கதையை மாற்றுமோ? கண்ணீர் ஈரம் காயுமோ?' என்று மக்கள் மறு வாழ்வு ஆண்டு மலரில் 1987 இல் கவிதையாக்கியுள்ளார்.

இந்த மனிதர்களின் கனவுகளிலும் கூட புல், கூடை நிறையக் கொழுந்து' என்று எழுதுகிறார் இவர்கள் என்ற கவிதையில் 1994 இல் எழுதிய இக்கவிதையில் – இருபதாண்டுகளுக்குப் பின்னரும் இவர் நெஞ்சில் ஆறாத வடுவாயமைந்திருக்கும் இலங்கையை விட்டு வந்த நிகழ்ச்சி பதிந்திருப்பதைக் காணலாம்.

*'ஜென்ம பூமியும்*
*ஜீவித பூமியும்*
*இரண்டே நபர்களால்*
*தீர்மானிக்கப்பட்டுவிட்டன'* என்ற வரிகள் எத்தனை
*வலியைச் சுமந்து இருக்கின்றன?*

‘குறுநதிக்கு ஒரு கடிதம்’ என்ற கவிதையும், நக்கில்ஸ் மலைத் தொடரின் நினைவுகளை தீண்டிச் செல்வதைக் காணலாம்.

இவ்விதம் தானெழுதும் கவிதைகளிலெல்லாம் இலங்கை மலைத் தோட்ட வாழ்க்கை தான் மனக் கண் முன் வார்த்தைகளாய் வருகின்றது.

*‘தாய் மடியில் தலைசாய்ந்த நேரங்களும்*
*தந்தையர் தோளேறி விளையாடிய நாட்களும்*

சொற்பத்திலும் சொற்பம்!’ என்ற வரிகள், பிஞ்சு நெஞ்சங்களின் வஞ்சமற்ற வரிகளை உங்களுக்கு நினைவூட்டவில்லையா?

# இலக்கியம்

விசேட மலர் 2013



அரச இலக்கிய குழு
இலங்கை கலைக் கழகம்
கலாசார அலுவல்கள் திணைக்களம்
கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு

ISBN 978-955-0213-06-1